ஜெய் ஹிந்த்

[நேத்தாஜியின் வாழ்க்கை வரலாறு, இ. தே. ரா. சரித்திரம்,
நேத்தாஜியின் பிரசங்கங்கள் முதலியன]

(8OCT 194

கே. அருணாசலம்
எழுதியது

லெப். கர்னல் லக்ஷ்மி
முகவுரை

No- 16935

புத்தக நிலையம்
ராயவரம், (புதுக்கோட்டை ஸ்டேட்)

முதல் வெளியீடு ஆகஸ்ட் 1946
உரிமை பதிவு செய்யப்பெற்றது

V2:5197M97
N46

109257

ரூபாய் ஐந்து

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள்.

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும்
மு. பா. எ.
கையொப்பம்.

ஆராய்ச்சி
உதவியாளர்
கையொப்பம்

Salem Lakshmi Vilas Press. 5[illegible] Walajah Rd., Mount Road, Madras,
Q.H. M.S. 28[illegible] [illegible]2000—7—46.

பொருளடக்கம்

பக்கம்

	பதிப்புரை	...
	முகவுரை	... 1
	முன்னுரை	... 4
	தேசீய கீதம்	... 9
1,	கிழக்கு ஆசியாவில் இந்திய சுயராஜ்ய இயக்கம்	... 25
2.	சுபாஷ் சந்திரர்	... 37
3.	ஐரோப்பாவில் இ. தே. ரா.	... 50
4.	சுதந்திர சர்க்கார்	...
	ஜான்ஸி ராணி படை அமைப்பு, பால சேனை அமைப்பு, சுதந்திர சர்க்கார் பிரகடனம் (பக்கம் 62), பிரகடனம் பற்றி போஸ் பிரசங்கம், சுதந்திரப் போர் விவரம்	... 54
5.	இ. தே. ரா. விசாரணைகள்	... 91

அனுபந்தங்கள் :

1. ஆகஸ்ட் தீர்மான வாசகம், 2. சுதந்திரம்பெற போர்வழி, 3. இந்திய சுதந்திரக் கழக மகாநாட்டு நடவடிக்கைகள், 4. அரசாங்க அமைப்பு பற்றி நேத்தாஜி அறிக்கை, 5. மலாய் தனவந்தர் மகாநாட்டில் நேத்தாஜி பிரசங்கம், 6. உணர்ச்சி மிகுதியால் நேத்தாஜி கண்ணீர், 7. இறுதிப் போருக்கு எல்லாம் தயார், 8. இந்தியாவிலுள்ள இந்தியருக்கு நேத்தாஜி செய்தி, 9. நமது ஆக்க வேலைகள்: நேத்தாஜி பிரசங்கம், 10. ஐரோப்பிய 2-ம் முனையால் இந்தியாவுக்கு நல்லது : போஸ் பிரசங்கம், 11. எதிர்கால வேலைத்திட்டம்: போஸ் அறிக்கை, 12. இந்திய தேசிய ராணுவம்: முதல் வருஷவிழாவில் நேத்தாஜி பிரசங்கம், 13. கிழக்கு ஆசியப் போர் இன்று நமதே: போஸ் பிரசங்கம், 14. மகாத்மாவுக்கு நேத்தாஜியின் வானொலிச் செய்தி, 15. ஐரோப்பிய நிலைமை: நேத்தாஜி பிரசங்கம், 16. கிழக்காசியநிலைமை : நேத்தாஜி பிரசங்கம், 17. இந்திய நிலைமை : நேத்தாஜி பிரசங்கம், 18. தேசீயப் புரட்சித் தலைவன் பகதூர் ஷா : நேத்தாஜி பிரசங்கம், 19. எதிரிகளின் பிரசாரம் : நேத்தாஜி பிரசங்கம், 20. மகாத்மாஜிக்கு நேத்தாஜி புகழ்மாலை, 21. நேத்தாஜிக்கு மகாத்மாஜி புகழ்மாலை ... 106—266

பதிப்புரை

நேத்தாஜி சுபாஷ் போஸின் பராக்கிரமச் செயல்கள், குறிப்பாக இப்போதைய இளைஞருக்கும் வருங்கால இந்திய மக்கள் அனைவருக்கும் பிரமாதமான தேசீய உணர்ச்சியை ஊட்டக் கூடியவை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். எனவே, அந்தச்செயல்களை தமிழ்நாடு நன்கு அறிந்திருக்க ஒரு புத்தகத்தை வெளியிடுவதென்று நான் தீர்மானித்தேன். தியாகத்திலும் எழுத்துத் திறமையிலும், உணர்ச்சியிலும் தமிழ் நாட்டு இளைஞர் குழுவில் முன்னணியில் நிற்பவர்களில் ஒருவரான ஸ்ரீ. கே. அருணாசலத்தை அணுகினேன். அவர் ஏற்கனவே "ஜெய் ஹிந்த்"தை எழுத ஆரம்பித்து, முடிக்கும் தருவாயிலிருந்தார். அதை பிரசுரிக்கவும் போட்டிகள் இருந்தன. அதிருஷ்ட வசமாக அந்தப் போட்டியில் நாங்கள் வெற்றி பெற்றோம். பலன், இதோ இந்த அருமையான புத்தகம். சுமார் 100 வருஷ கால அரசியல் நிகழ்ச்சிகளை பகைப்புலனுகக்கொண்டு, தற்கால அரசியல் நிலைமை இங்கே சீர்தூக்கிக் காண்பிக்கப்பட்டிருப்பதை வாசகர்களே படித்து, அனுபவித்து, உணர்ச்சி பெற்று, தாய்நாட்டின் விடுதலைக்காக சேவையும், தியாகமும் செய்ய முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

புத்தகத்தை அச்சடித்துக்கொடுத்த சேலம் லக்ஷ்மிவிலாஸ் அச்சுக்கூடத்தாருக்கும், படங்களையும் அட்டையையும் அச்சடித்துத் தந்த "சக்தி" அச்சுக்கூடத்தாருக்கும் எங்கள் நன்றி உரித்தாக.

ராயவரம்,
20—7—46

எஸ். எம். பழநியப்பா
(புத்தக நிலயத்துக்காக)

முகவுரை

இந்திய தேசிய ராணுவ அதிகாரிகள் மீது செங்கோட்டையில் சரித்திரப் பிரசித்தமான விசாரணை நடந்ததிலிருந்து நம் தேசமெங்கும் பிரமாத உற்சாகம் காணப்படுகிறது. அந்த ராணுவத்தின் சுப்ரீம் கமாண்டர் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ், அவரது அபூர்வத் தலைமையின்கீழ் ஊக்கத்துடன் திரண்ட தைர்யமிக்க ஆண்கள், பெண்கள் ஆகியவர்கள் சாதித்தவை இந்திய சுதந்திர யுத்த சரிதையில் மற்றொரு மகோன்னத அத்தியாயத்தை சேர்த்துவிட்டன. செங்கோட்டை விசாரணைகள் ஆரம்பமாகுமுன் கிழக்கு ஆசியாவில் நேத்தாஜி, அவரது தேசிய ராணுவத்தினர் ஆகியவர்களின் நடவடிக்கைகள் பற்றி இந்தியாவிலுள்ள இந்தியருக்கு ஏதும் தெரியாதிருந்தது. ஆனால் விசாரணைகளின்போது உண்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியாயின. நேத்தாஜியால் காண்பிக்கப்பட்டதும், இந்திய தேசிய ராணுவ ஆண், பெண்களால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதுமான தைர்யம், துணிச்சல், தீர்க்க தரிசனம் ஆகியவற்றைக் கேட்டு இந்திய மக்கள் மயிர் சிலிர்த்தனர். இ. தே. ரா; கிழக்கு ஆசியாவில் இந்திய சுதந்திர இயக்கம் ஆகியவை பற்றி அநேகர் எழுதியுள்ள போதிலும், அவற்றில் எதுவும் பூரணமாக எழுதப்பட்டில்லை. சில கட்டுரைகளில், எழுத்தாளரின் அளவுக்கு மிஞ்சிய உற்சாகமானது, இ. தே. ரா. அதிகாரிகள், ஸோல்ஜர்கள் ஆகியவர்களுடைய நடவடிக்கைகளை மிகைப்படுத்தியும், திருத்தியும் வர்ணித்திருக்கிறது. அவற்றைப் படிக்கிறவர்கள் எல்லாரும், 'இந்திய தேசிய ராணுவ அதிகாரிகளும் ஸோல்ஜர்களும் ஏதோ அதிசயப் பிறவிகள்; மனுஷ்யப் பிறவிகளல்ல; மாஜிக் மனிதர்கள்' என்ற கருத்தைக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் உண்மையில், இ. தே. ரா. வைச் சேர்ந்த நாங்கள், சாதாரண இந்திய ஆண்களும் பெண்களும்தான். சாதாரண இந்தியரும் சரியான தலைமையில், ஊக்கம் உண்டாக்கப்பட்டால், இந்துஸ்தானத்தின் கௌரவத்தையும் அந்தஸ்தையும் மீட்க, கனவில்கூட நினைக்க முடியாத பராக்ரமத்தின் உச்சத்தையும், தியாகத்தின் எல்லையையும் எட்ட முடியும்.

இ. தே. ரா. சரித்திரம் பற்றி இதுவரை வந்துள்ள பிரசுரக் குவியலையும் பார்த்த நான், ஸ்ரீ. கே அருணாசலம் எழுதியுள்ள இந்தப் புஸ்தகத்தைப் படித்தேன். இந்த புஸ்தகத்தில் இ. தே. ரா; கிழக்கு ஆசிய இந்திய சுதந்திரக் கழகம் ஆகிய வற்றின் சரித்திரம் சரியாக பதிவாகியிருக்கிறது. உண்மைகள் எல்லாவற்றையும் ஸ்ரீ. அருணாசலம் நன்கு ஆராய்ந்து, எல்லா வற்றையும் கோர்வையாகவும் விரிவான முறையிலும் தந்திருக் கிறார் என்பதில் சந்தேகமில்லை. மேலும், அவர் இப் புஸ்த கத்தை எழுத ஆரம்பிக்குமுன் இ. தே. ரா. வைச் சேர்ந்த அநேக ஆண்களையும் பெண்களையும், கிழக்கு ஆசிய இந்திய சுதந்திர இயக்கத்துடன் சம்பந்தமுள்ளவர்களையும், இந்தியாவின் கதியை நிர்ணயிக்கத்தக்க மிகவும் பரபரப்பு மிகுந்த வருஷங் களில் அந்தப் பிரதேசங்களில் வசித்த ஸிவிலியன்களையும் சந்தித்து, சம்பாஷித்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரி கிறது. அவர் இ. தே. ரா. வின் உயர்தர அதிகாரிகளையும், உத்யோகஸ்தர்களையும் மாத்திரமின்றி, ஸோல்ஜர்களையும் சந் தித்து, தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதால், இ. தே. ரா.வின் உணர்ச்சியையும், அனுபவங்களையும் கிரஹித்துக் கொண்டிருக் கிறார்; கிழக்காசியாவின் 30 லட்சம் இந்தியர்கள் ஒருமுகமாக நேத்தாஜியை பின்பற்றியதற்குக் காரணமான உற்சாகத்தை யும் அறிந்திருக்கிறார். இந்த புஸ்தகத்தை ஸ்ரீ. அருணாசலம் எழுத அவருக்கு மிகவும் உபயோகமாக மற்றொன்று இருந் திருக்கிறதென்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது; அதுதான் நேத்தாஜியை அவர் நேரில் அறிந்திருப்பது. எனவே அவர் கற்பனைச் சித்திரம் எதையும் பற்றி எழுதவில்லை; ஆனால் யாருடைய தலைமை அவரை ஆகர்ஷித்ததோ அவரைப் பற்றியே எழுதியிருக்கிறார்.

இந்திய தேசிய ராணுவத்தின் ஜெர்மன் கிளை பற்றி ஸ்ரீ. அருணாசலம் ஒரு முழு அத்தியாயம் எழுதியிருப்பதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இ. தே. ரா.வின் இந்த கிளை பற்றி இதுவரை போதிய பிரசாரம் நடக்கவில்லை. புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஜெர்மனியில் இ. தே. ரா. கிளை இருந்ததென்பதே அநேக இந்தியருக்குத் தெரியாது. இது பெரிய குறைபாடாகும். இந்தியாவின் முதல் விடுதலை ராணு வம் ஜெர்மனியில்தான் நிறுவப்பட்டது என்பதை கவனிக்குங் கால் குறைபாடு எவ்வளவு பெரிது என்பதை அறிந்து கொள்ள

லாம். யுத்தப்போக்கை முன்னிட்டும், இந்தியாவைப் பொறுத்தவரை இந்திய—பர்மா முனையே யுத்தக் கொந்தளிப்புப் பிராந்திய மாகிவிட்டதாலும், கிழக்கு ஆசியாவில் அமைக்கப்பட்டு அந்த முனையில் போர்புரிந்த இந்திய தேசீய ராணுவம் பிராபல்யத்திற்கு வந்தது இயற்கையே. ஆனால் இ. தே. ரா. வின் ஜெர்மன் கிளையும் அதே பொது விரோதியை — அதாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை — எதிர்த்து, அதே தலைமையின் கீழ்—அதாவதுநேத்தாஜியின் தலைமையின்கீழ்—அதேலட்சியத்திற்காக — அதாவது பரிபூர்ண சுதந்திரத்திற்காக — போர் புரிந்திருக்கிறதென்பதை யாரும் மறந்துவிடலாகாது.

நேத்தாஜி இப்பொழுது எங்கிருக்கிறார் என்ற பிரச்னையை ஸ்ரீ. கே. அருணாசலம் இந்த புஸ்தகத்தில் எழுப்பி, இதுவரை கிடைத்துள்ள தகவல்களை ஆராய்ந்த பிறகு, தமது சொந்த முடிவுக்கு வந்திருப்பதை கவனித்தேன். நேத்தாஜி சீனாவில் இருக்கக் கூடும் என்று நான் சொன்னதாக அவர் மேற்கோள் காண்பித்திருக்கிறார். அவ்வாறு நான் இந்தியாவுக்கு வந்தவுடனே சொன்னேன். எந்த உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு நான் அப்படிச் சொல்லவில்லை. விமான விபத்துப் பற்றி டோக்கியோ ரேடியோ செய்த ஒலிபரப்புகளின் முரண்பாடுகளிலிருந்து என் மனதுக்குப் பட்டதையே சொன்னேன். ஆனால் அதற்குப் பிறகு கர்னல் ஹபிபுர் ரஹ்மான் உள்பட இந்திய தேசீய ராணுவத்தின் ஸீனியர் அதிகாரிகள், விமான விபத்து நடந்தது உண்மைதான் என்று அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை தள்ளி விடுவதற்கில்லை.

இன்று நாம், நம் நாட்டின் விதியையே நிர்ணயிக்கக் கூடிய மாறுதல்கள் நடக்கப்போகும் தருவாயில் இருக்கிறோம். சுதந்திரத்தை அடையும் தருவாயில் இந்தியா இருக்கிறது. இந்தியாவுக்கு சுதந்திரம் என்றால், 40 கோடி மக்களுக்கு மாத்திரம் சுதந்திரம் என்று அர்த்தமல்ல; ஆசியா பூராவுக்கும் சுதந்திரம் என்றே பொருள். சட்ட திட்டத்திற்குட்பட்ட வகைகளினால் இறுதி அதிகார மாற்றம் நடை பெறலாம். ஆனால் அந்த கடைசி கட்டத்திற்குப்போகும் வழியானது இந்திய தேசீய காங்கிரஸ், ஆகஸ்ட் புரட்சி, இந்திய தேசீய ராணுவம் ஆகியவற்றின் தியாகிகளுடைய ரத்தத்தால் சீர்ப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஜேய் ஹிந்த்

நேத்தாஜி—ஜிந்தாபாத்

ஆஜாத் ஹிந்த்—ஜிந்தாபாத்

சென்னை
16—7—'46.

லெப். கர்னல் லக்ஷ்மி
ஸ்வாமிநாதன்
(I. N. A.)

முன்னுரை

"ஜெய் ஹிந்த்!" "சலோ டில்லி!", "நேத்தாஜிக்கு ஜே!" (வெற்றி இந்தியாவுக்கு! டில்லிக்குச் செல்லுக! தலைவருக்கு—சுபாஷ் சந்திர போஸுக்கு—ஜே!) இந்தியாவெங்கும் இதே கோஷங்கள் தான் இப்பொழுது. "ஜெய்ஹிந்த்"துக்கு சக்தி நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இந்த கோஷங்களுடன் தான் ஜாம், ஜாம் என்று இந்திய தேசிய ராணுவ ஸோல்ஜர்கள் தற்காலிக சுதந்திர சர்க்காரின் தலைவர் (நேத்தாஜி) சுபாஷ் போஸின் கட்டளைப்படி பிரிட்டிஷ் இந்தியாவின் ராணுவ பலத்தைத் தாக்கி, 1944-ம் வருஷம் மார்ச் மாதம் 18-ந் தேதியன்று இந்தியாவுக்குள் பிரவேசித்தனர். இதே கோஷத்துடன் தான் கொஹிமா, மோராய், மற்றும் பல கிராமங்களில் யூனியன் ஜாக்குக்கு பதிலாக மூவர்ண தேசீயக் கொடியை கம்பீரமாகப் பறக்க விட்டார்கள். அன்று அவர்கள் மீது அக்பரும், அசோகரும், ஜான்ஸி ராணியும், பகதூர் ஷாவும், ராஜாராம் மோகன் ராயும், கோகலேயும், திலகரும், சிதம்பரம் பிள்ளையும், பாரதியும் வீர சொர்க்கத்திலிருந்து புஷ்ப மாரி பெய்ததை நாற்பது கோடி இந்தியரும் தங்களுடைய மனக்கண்களால் பார்த்தார்கள்.

ஆனால் சந்தோஷம் சொற்ப காலத்திற்கே இருந்தது. "சலோ டில்லி" உடனே முடியவில்லை. பண்டித நேரு சொல்லுவதைப் போல இன்னும் இரண்டு, அல்லது ஜாஸ்தியாகப் போனால் மூன்று வருஷங்களுக்குள் 'சலோ டில்லி' சாத்தியமாகும் போலிருக்கிறது.

விமான உதவி போதிய அளவுக்கு இல்லாததாலும், மழையின் காரணமாக சப்ளைகள் குறைந்ததாலும் தேசிய ராணுவம் வாபஸாக வேண்டியதாயிற்று. ஆனால், அந்த ராணுவம் 40 கோடி மக்களுடைய உள்ளத்திலே ஏற்படுத்திய உறுதி வாபஸாகவில்லை; தூண்டிய உற்சாகம் குன்றவில்லை. உறுதி பலப்படுகிறது; உற்சாகம் அதிகமாகிறது.

டன்கர்க் வாபஸ்கூட இறுதி வெற்றியில் முடிவடைந்ததென்றால், இம்பால் வாபஸ் இறுதி வெற்றியில் முடிவடை

யார்தா, என்ன? அதைப்பற்றிச் சந்தேகமில்லை. 'அடிமையாக இந்தியாவில் கால் வைக்க மாட்டேன்' என்று வைராக்கியம் பூண்டிருக்கிறார் நேத்தாஜி. அந்நிய ஆட்சி அவரை எப்படி எப்படியோ வர்ணித்தது. 'துரோகி' என்றது—தாய் நாட்டை விடுவிக்கவேண்டும் என்று அவர் போர் புரிந்ததற்காக! 'குஸ்லிங்' என்றது—இந்தியாவை ஆக்ரமித்துள்ள அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு குலாமியாக இல்லாமல், அதை விரட்டியடிக்க ராணுவத்தைத் திரட்டி, முன்னேறித் தாக்கியதற்காக! நமது நாட்டுத் தலைவர்களை மதிப்பிட வெள்ளை எஜமானர்களின் தராசு வேண்டியதில்லை என்று இந்திய மகாஜனங்கள் இன்று சுபாஷ் பாபுவை போற்றிப் புகழுகிறார்கள். மூன்றே வருஷங்களில் இந்தியாவை சுதந்திரப் பாதையில் முன்னூறு வருஷ முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்து, சுதந்திரக் கோவிலின் வாசலில் நிறுத்தியுள்ள 'சுபாஷ் சந்திர போஸ்கி ஜே' என்று கோஷமிட்டு, நெஞ்சு உரம் பெறுகிறார்கள். 'சலோ டில்லி' 'செங்கோட்டையில் சுதந்திரக்கொடியை நாட்டுக' என்ற கோஷங்கள் காரிய ரூபமாக வெற்றி பெற்றிருந்தால் என்னவாகி யிருக்கும்? இதே பிரிடிஷ் சர்க்கார், இதே செங்கோட்டைக்கு, 'சாம்ராஜ்யத்திற்கு தலை முழுகவா நான் முதல் மந்திரியாக இருக்கிறேன்' என்று மார் தட்டிய சர்ச்சிலை அனுப்பி யிருக்கும். அவரும் போஸுடன் சரி சமமாக—ஏன், ஒரு அடி மட்டமாகக் கூட உட்கார்ந்து, நேச உறவு வேண்டுமென்று கெஞ்சியிருப்பார். பருத்தி முதலிய மூலப்பொருள் சப்ளைகளை நிறுத்தி விடவேண்டாமென்று முறையிட்டிருப்பார். 'முதுகில் வேண்டுமானாலும் அடியுங்கள், வயிற்றில் அடிக்க வேண்டாம்; ஜவுளிகளை இறக்குமதி செய்ய அனுமதியுங்கள்' என்று மூன்றும் பேஸ்து முகத்துடன் நயமாகக் கேட்டிருப்பார். வந்த காரியம் ஜெயித்தாலும் ஜெயிக்கா விட்டாலும், 'ஜேய் ஹிந்த்' ஸெல்யூட்டை மும்முறை தந்து, மூன்று தப்படி பின்னால் சென்று, நேத்தாஜியின் ராஜதந்திர சம்பாஷணை அறையிலிருந்து வெளியே போயிருப்பார். போஸ் ஜெயிக்கவில்லை. அதனால் அவரது பராக்கிரமச் செயல்களெல்லாம் குற்றங்களாகி விட்டன! ரஷ்ய மக்களின் உறுதியையும் தேசீய வெறியையும் கொண்டும், அமெரிக்க பொருள் பலம், தளவாட பலம், ஆள் பலம், விஞ்ஞான பலம் ஆகியவற்றைக் கொண்டும் இரண்டாவது மகா யுத்தத்தில் ஜெயித்த பிரிட்டன், இந்திய சுதந்திரப்போர்

வீரர்களை விசாரிக்க தன்னைத்தானே நீதிபதியாக்கிக் கொண்டது. நாடு கடந்த இந்தியரும், நாடு கடத்தப்பட்ட இந்தியரும் சேர்ந்து, சொந்த சர்க்காரை அமைத்து, பல அந்நிய வல்லரசுகளின் அங்கீகாரத்தைப் பெற்று, சொந்தப் பணத்தால் (கடன், குத்தகைப்படி அல்ல) ஆயுதங்களை விலைக்கு வாங்கி, தாய் நாட்டை ஆக்ரமித்திருக்கும் அந்நியர் மீது யுத்தப் பிரகடனம் விடுத்து, போதிய அளவுக்கு விமான பலமோ அல்லது இதர தளவாட சப்ளையோ இல்லாத போதிலும், 'ஜேய்ஹிந்த்!' 'ஜேய்ஹிந்த்!', 'ஜேய்ஹிந்த்!', என்ற கோஷங்களால் முக்கால் வாசி பலம் பெற்று, அன்னையை 150 வருஷங்களுக்கு மேலாக அடக்கி ஒடுக்கி வைத்துள்ள அடிமைத் தலைகளைத் தகர்த்துத் தூக்கி எரிவதற்காக போர் புரிந்த பலர் செங்கோட்டையில் கைதிக் கூண்டில் வைக்கப்பட்டார்கள். உண்மையில் இந்திய தேசியம்—40 கோடி மக்களின் அபிலாஷை—உண்மை ஜனநாயகம்—சத்தியம்—தர்மம்—அந்தக் கூண்டில், சண்டையிட்ட இரு சாரரில் ஒரு சாராரால் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டன. உண்மையில் அந்தக் கூண்டில் ஏற்றப்பட வேண்டியவர்கள் யார் என்பதை அடுத்த தலைமுறை பிரிட்டிஷாரே சரித்திரத்தில் எழுதுவார்கள்.

டாக்டர் கே. என். கட்ஜு சொல்லுவது போல, ராஜாங்கத் துரோகம் என்றால், முன் கூட்டி தேசிய அரசாங்கமும், தேசிய ராணுவமும் இருந்தாக வேண்டும் என்பது தான் நியதி. அந்நிய அரசாங்கத்தையும், அந்நிய ராணுவத்தையும், அந்நிய நலன்களை பாதுகாக்க உள்ள துருப்புகளையும் எதிர்த்து தேச விடுதலைக்காக போர் புரிவது ராஜாங்கத் துரோகமாகுமா?

டாக்டர் கட்ஜு சொன்னார் :

"தேசிய அரசாங்கமும் தேசிய ராணுவமும் இருந்தால் தான் ராஜாங்கத் துரோகமோ அல்லது ராஜத்துவேஷமோ ஏற்பட முடியும். அடிமை மக்களைப் பொறுத்த வரை ராஜாங்கத் துரோக அல்லது ராஜத்துவேஷ சட்டத்திற்கு தார்மீக ஆதாரம் கிடையாது. அது அந்நிய அதிகாரத்தால் திணிக்கப்படுவதாகும்; அது நியாய மற்ற சட்டம்; அதை தகர்ப்பது அடிக்கடி மக்களின் கடமையாகக் கூடும். இந்த திருஷ்டியில் படுமோசமான ராஜாங்கத் துரோகியே, உண்மையில் துளிக்கூட சுயநலமில்லாத தேசபக்தனாக,

இருப்பான். தூக்கு மேடையிலுள்ள இந்திய ராஜாங்கத் துரோகி, உயிருடன் சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதரைப்போல, தனது நாட்டு மக்கள் தங்கள் தாயகத்தில் சுதந்திர புருஷர்களாக வாழ்ந்து நடமாடுவதற்காக, தனது உயிரைக் கொடுப்பவனுவான்.''

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே, அமெரிக்காவை விட்டு வெளியேறு'' என்று கோஷமிட்டு, ஆயுத பலத்தால் பிரிட்டிஷாரைத் தாக்கி வெளியேற்றி தனது நாட்டு சுதந்திரத்தை ஸ்தாபித்த ஜார்ஜ் வாஷிங்டன், சண்டையில் தோற்ற பிரிட்டிஷாரால் போற்றப்படுகிருன். அதே போல இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுவதற்காக் ஸ்ரீ சுபாஷ் போஸ் தாக்கினுர். ஆனுல் வெற்றி பெறவில்லை. அதற்காகத் தான் அவரை துரோகி என்று அந்நிய ஆட்சி அழைக்கத் துணிந்துள்ளது! வாஷிங்டனும், டிவேலராவும், டிகாலேயும்' டிட்டோவும், பினேஷும் தேசபக்தர்கள் என்றுல், சுபாஷ் சந்திர போஸும் தேச பக்தர் தான். அவருக்கு தற்காலிக் தோல்வி கிடைத்ததால், தேசத் துரோகி யாகிவிடமாட்டார். அந்தப் பட்டத்தை மாஜி இந்தியா மந்திரி லெபர்ல்டு அமெரியின் மகனைப் போன்றவர்களுக்கு ரிஸர்வ் செய்து வைப்போமாக.

நேத்தாஜி நடத்திய இரண்டாவது இந்திய சுதந்திர யுத்தம் வெளிப்பார்வைக்கு தோல்வியுற்றதாகத் தோன்றுகிறதே யொழிய, உண்மையில் தோல்வியுற்றில்லை. 1942-ம் வருஷத்திற்கு முன் இந்தியாவில் இருந்த அரசியல் விழிப்பு என்ன, இப்போதுள்ள அரசியல் விழிப்பு என்ன வென்பதை சீர்தூக்கிப் பார்த்தால், இ. தே. ரா. வின் மகோன்னதப்போரின் பலனையும் ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ் போன்றவர்கள் நடத்திய உள்நாட்டுப் புரட்சியின் பலனையும் சரியாக நாம் மதிப்பிட முடியும். இந்த திருஷ்டியில் மாஜி ராஷ்டிரபதியின் வீரச் செயல்களை சீர்தூக்கிக் காண்பிக்கவே இந்தப் புஸ்தகத்தை எழுதலானேன். இதைப் படிக்கிறவர்கள் அனைவருமே, அவசியமானுல் நடக்கப்போகும் அடுத்த, இறுதி சுதந்திரப் போரில் கலந்து கொள்ள முன் வந்தாலே நான் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு சரியான சன்மானம் கிடைத்ததாகக் கருதுவேன். இதைப் படிக்கிறவர்கள் இதிலுள்ள கருத்துக்களை பரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீயுத மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியிடம் மகாத்மியம் இருக்கிறதென்பதை முதல்முதலாக உலகம் அறிந்துகொள்ள, ஆப்ரிக்காவில் அரும்பாடு பட்டு, தியாகங்களைச் செய்தவர்கள் தமிழர்கள். அவருடைய சிஷ்யர்களில் ஒருவர், இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரிட்டன் மீது ஆயுதப் போரை நடத்தி கதி கலங்க வைத்ததற்கு துணையாகவும் தூணாகவும் இருந்து உடல், பொருள், ஆவி சகலத்தையும் தியாகம் செய்ய முன்வந்தவர்களும் தமிழர்கள்தான்—கிழக்கு ஆசியாவிலே வசிக்கிறவர்கள். நாம் நன்றாக பெருமை கொள்ளலாம்.

இந்த புஸ்தகத்தில் வெளியாகியுள்ள படங்களில் அநேகமாக எல்லாம் இதற்கு முன் வெளிவராதவை. இவற்றில் பெரும்பாலானவற்றை எனக்குக் கொடுத்துதவிய நேதாஜி சர்க்காரின் மந்திரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் ஏ. டி. லோகநாதனுக்கு எனது நன்றி உரித்தாகுக.

சென்னை
20—7—46

—கே. அருணாசலம்.

தேசீய கீதம்

(நேத்தாஜி அங்கீகரித்தது)

ஸுப்ஸுக் க்ஷய்ன் கி பர்க்ஹா பர்ஸே பாரத் பாக் ஹே ஜாகா
பஞ்ஜாப் ஸிந்த் குஜராத் மராட்டா திராவிட உட்கல பங்கா
க்ஷன்க்ஷல் ஸாகர் விந்த் ஹிமாலா நீலா ஜமுனா கங்கா
தேரே நித் குண் காயே
துஜ்ஸே ஜீவன் பாயே
ஸப் தன் பாயே ஆஷா

ஸுராஜ் பன் கர் ஜக் பர் க்ஷம்க்கே பாரத் நாம் ஸுபாகா
ஜய-ஹோ ஜய-ஹோ ஜய-ஹோ
ஜய ஜய ஜய ஜய-ஹோ

ஸப் கே தில் மே ப்ரீத் பஸாயே தேரி மீட்டி பானி
ஹர் ஸுபே கே ரஹ்னே வாலே ஹர் மஸ்ஹப் கே ப்ரானி
ஸப் பே-தோ பரக் மிட்டாக்கே
ஸப் கோத் மெ தேரி ஆக்கே
கூந்தேன் ப்ரேம்கி மாலா

ஸுராஜ் பன் கர் ஜக் பர் க்ஷம்ககே பாரத் நாம் ஸுபாகா
ஜய-ஹோ ஜய-ஹோ ஜய-ஹோ
ஜய ஜய ஜய ஜய-ஹோ

ஸுபா ஸவேரே பன்க்க பக்கேரு தேரே ஹி குண் காயேன்
பாஸ் பரீ பரபூர் ஹவாயேன் ஜீவன் மே ருத லாயேன்
ஸப் மில் கர் ஹிந்த் புக்காரே
ஜய ஆஸாத் ஹிந்த் கே நாரே
ப்யாரா தேஷ் ஹமாரா

ஸுராஜ் பன் கர் ஜக் பர் க்ஷம்க்கே பாரத் நாம் ஸுபாகா
ஜய-ஹோ ஜய-ஹோ ஜய-ஹோ
ஜய ஜய ஜய ஜய-ஹோ
பாரத் நாம் ஸுபாகா



சிங்கப்பூரில் தியாகிகள் ஞாபகச் சின்னம். பிரிட்டிஷார் திரும்ப வந்ததும் தகர்த்து விட்டனர்

ஐரோப்பாவில் இந்திய
தேசிய ராணுவவீரர்கள்
அணிந்திருந்த பாட்ஜி

ஹிட்லர் போஸ் சந்திப்பு

தேசிய இந்திய ராணுவத்திற்காக ஜெர்மனியில் அச்சான ஸ்டாம்புகள். ஆனால் அந்த ராணுவத்தினிடம் போய்ச் சேரவில்லை. ஜெர்மனி வீழ்ச்சியுற்றவுடன் இந்த ஸ்டாம்புகளை அமெரிக்க ராணுவம் கைப்பற்றியது. இப்பொழுது அவை நியூயார்க்கில் நிறைய விலைக்கு விற்கப்படுகின்றன

10

நேத்தாஜியும் கியானியும்
சிங்கப்பூரில் செல்யூட்
ஏற்கிருர்கள்

ஜான்ஸி ரிஜிமென்டை நேத்தாஜி பார்வையிடுகிருர்



ஜெனரல் மோகன் சிங்

முதல் இ. தே. ரா. சிருஷ்டிகர்த்தர்



லெப்டினன்ட் P.L. பெருமாள்

(நாட்டுக்கோட்டை நகர வணிக மரபினர்)

தேசீய ராணுவ அதிகாரிகள் பயிற்சிப் பள்ளியில் முதன்மையாகத் தேறியதற்காக நேத்தாஜியால் வீர வாள் அளிக்கப்பட்டவர்



சிங்கப்பூரில் நேத்தாஜி பிரசங்கம் செய்கிறார். பக்கத்தில் இருப்பவர் ஜப்பானிய கூட்டுறவு அதிகாரி

ஜான்ஸிப் படை பெண்களின் சங்கீதத்தை நேத்தாஜி கேட்கிறார்



இடைக்கால இந்திய தேசிய சர்க்கார் அமைப்பை நேத்தாஜி போஸ் பிரகடனம் செய்யும் காட்சி
(சிங்கப்பூர், அக்டோபர் 22, 1943)

நேத்தாஜி சர்க்காரின் மந்திரிகள்



முதல் வரிசை: சாட்டர்ஜி, பான்ஸ்லே, நேத்தாஜி, லக்ஷ்மி, ஸஹாய். எஸ். ஏ. அய்யர்
2-வது வரிசை: லோகனுதன், இஷான் குவாதிர், பகத், கியானி, அஜீஸ், ஷாநவாஸ், குல்ஸாரா சிங்



மேலே: இ. தே. ரா. வீரர்கள் (1) காப்டன் ஷாநாவாஸ்; (2) காப்டன் ஸெகால்; (3) காப்டன் தில்லான். வலது பக்கம்: டில்லி விசாரணைக் கோர்ட் தலைவர் மேஜர் ஜெனரல் எ. பிளாக்ஸ்லாண்டு. இடது பக்கம்: இந்திய எல்லையில் இ. தே. ரா. வீரர் ஒருவர் சுபாஷின் படத்தைத் தாங்கிச் செல்கிறார். கீழே: டில்லி ராணுவக் கோர்ட் விசாரணை.



அகில மலாய் நாட்டுக்கோட்டை நகர வணிக மரபினர், மற்றும் இதர தனவந்தர்கள் மகாநாட்டுக்கு வந்தவர்கள்.
இந்த மகாநாட்டில் போஸ் செய்த பிரசங்கத்தை அனுபந்தத்தில் பார்க்கவும்

அந்தமான் கடற்கரையிலிருந்து நேத்தாஜி இந்தியாவைப் பார்க்கிறார்

போர்ட் பிளயரில் "கல்கத்தா சிறை"யை பார்க்கிறார் ஸ்ரீ சுபாஷ் போஸ்.
(அந்தமான், டிசம்பர் 1943)

சிங்கப்பூரில் ஆஸ்பத்திரி யொன்றை நேத்தாஜி பார்வையிடுகிறார்

அந்தமான் பிரதம கமிஷனர் மேஜர் ஜெனரல் லோகநாதன்



இந்திய - பர்மா முனையில் போஸ். இம்பால் முனைப் படத்தைப் பார்க்கிறார்



ஜெய் ஹிந்த்

1

கிழக்கு ஆசியாவில் இந்திய சுயராஜ்ய இயக்கம்

இந்தியாவில் இந்தியரிடையே உள்ள ஒற்றுமையைக் காட்டிலும் வெளிநாடுகளில் இந்தியரிடையே ஒற்றுமை அதிகம். அடிமை நாட்டிலிருந்து வெளியே சென்று, சுதந்திர நாடுகளில் சுயேச்சையை அனுபவிக்கிற இந்தியர்கள், தங்களுடைய நாடும் சுதந்திரமாக இல்லையே என்று மனம் நொந்துபோகிறார்கள். தாய்நாட்டு விடுதலை இயக்கத்திற்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்கிறார்கள். ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறார்கள். பிரசாரத்தைச் செய்கிறார்கள். பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இதையெல்லாம் நாம் இப்பொழுது காண்கிறோம். யுத்த ஆரம்பத்திற்கு முன்பு அநேகமாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலுமே இந்தியரின் சங்கங்கள் இந்திய விடுதலைக்காக உழைத்து வந்திருக்கின்றன. ஜெர்மனி, இதாலி, ஆஸ்திரியா, அயர் முதலிய நாடுகளில் இதைப் போலச் சங்கங்கள் இருந்திருக்கின்றன. இந்தியாவை மகா மட்டமாக உலகுக்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வர்ணித்து வந்ததற்கெல்லாம் அந்தச் சங்கங்கள் உடனடியாகப் பதிலளித்து, உண்மையைச் சொல்லி, அந்த அந்த நாட்டின் அறிவாளிகள், பல்வேறு அரசியல் கட்சியினர், ராஜாங்கத் தலைவர்கள் முதலியவர்களுடன் தொடர்பை ஸ்தாபித்து, இந்திய விடுதலைக்கு ஆதரவு தேடி வந்திருக்கின்றன. ஸர்தார் வல்லபபாய் பட்டேலின் சகோதரர் காலஞ்சென்ற ஸ்ரீ விட்டல்பாய் பட்டேலும், ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸும் இந்தத் துறையில் செய்த சேவை அபாரமாகும். முஸோலினி, ஹிட்லர் ஆகியவர்களைச் சுபாஷ் பாபு சந்தித்ததும், "இந்திய இளைஞர்களின் தலைவர் ஸ்ரீ சுபாஷ் போஸ்" என்று இதாலிய, ஜெர்மன் பத்திரிகைகள் போற்றிப் புகழ்ந்ததும் இன்று சரித்திரமாகிவிட்டன.

இந்திய விடுதலை இயக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தீவிரமாக ஆரம்பமாகு முன்பே கீழ்க் கோடியில் ஜனூராகத் துவங்கிவிட்டது. இதற்கு வேரூன்றியவர்கள், ஜப்பானில் அஞ்ஞாத வாசம் செய்துவந்த ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸ் போன்றவர்கள். கீழ்நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவின் அபிலாஷையை, மேல்நாட்டினரை விட அதிகமாக இதர கீழ் நாட்டினர் ஆர்வத்துடன் ஆதரிப்பது இயற்கைதானே? எனவே, இந்திய விடுதலைப் பிரசாரம் கிழக்கு ஆசியாவில் பலப்பட்டது. ஏற்கனவே சுய பலத்துடன் இருந்த இந்தக் கிளர்ச்சி, இரண்டாவது மகா யுத்தத்தில் ஜப்பான் பிரவேசித்ததன் விளைவாக, சந்தர்ப்ப சாதகத்தால் பன்மடங்கு வீறுகொண்டு, இயக்கமாக மாறி, செயலில் இறங்கத் தலைப்பட்டது.

மலாய் நாட்டில் பிரிட்டிஷாரை ஜப்பானியர் தாக்கியபோது அங்கிருந்த ஏழு லக்ஷம் இந்தியரிடையே பரபரப்பும் பெரு விழிப்பும் ஏற்பட்டன. பலர் 'இவாக்குவேஷன்' முயற்சியில் தீவிரமாக இறங்கினார்கள். அங்கேயும் பர்மாவிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியர்களை அவர்களது தலைவிதிக்கே விட்டுத் தாங்கள் மாத்திரம் அவசர அவசரமாக வாபஸானார்கள். பர்மா, மலாய் ஆகிய இரு நாடுகளிலிருந்தும் ஜனங்கள் வெளியேறுவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் நிறவேற்றுமை காண்பிக்கப்பட்டது. இந்தியர்களுக்குக் கப்பல்களில் இடம் கிடைக்கவில்லை. அவர்கள் காடுகள் வழியாகவும் மேடுகள் வழியாகவும் கஷ்டப்பட்டு இந்தியாவுக்கு வர ஆரம்பித்ததையும், வழியில் ஆயிரக் கணக்கான ஆண் பெண் சிசுக்கள் பட்டினியாலும் வியாதிகளாலும் மடிந்து போனதையும் இதற்குள் இந்தியாவில் யாரும் மறந்திருக்க முடியாது. தரை மார்க்கத்திலும் வெள்ளையருக்குச் சௌகரியமான தனிப்பாதையும், வழியில் தங்க வசதிகளும், போஜன வசதிகளும் பிரிட்டிஷ் அதிகாரிகளால் செய்து கொடுக்கப்பட்டதையும் யாராவது மறக்க முடியுமா? இந்த நிறத்திமிர் நடத்தைகளையும் கஷ்டங்களையும் அறிந்து பெரும்பாலான இந்தியர் மலாய் நாட்டிலிருந்தோ பர்மாவிலிருந்தோ வெளியேறவில்லை. காட்டுப்பாதையில் சென்றால் வீடு போய்ச் சேருவோமோ என்னவோ என்று அந்த அந்த நாட்டிலேயே தங்கிவிட்டார்கள். பட்சபாத நடத்தையால் இவர்கள் மனக் கசப்படைந்தனர். மலாயில் அதற்கு முந்திய சில வருஷங்களில் பிரிட்டிஷ் ஆட்சி படுமோசமாகவும் இருந்திருக்கிறது. விலை

வாசிகள் உயர்ந்துவிட்டதால் சம்பளத்தை ஜாஸ்தியாக்குமாறு கேட்டு ஸ்ட்ரைக் செய்த எஸ்டேட் தொழிலாளர் மீது துப்பாக்கிப்பிரயோகங்கள் நடந்தன. இந்தியருக்குச் சொந்தமான பத்திரிகைகளுக்கு மாத்திரம் தணிக்கை; வெள்ளைக்காரர்களின் பத்திரிகைகளுக்குத் தணிக்கை இல்லை என்பது போன்ற பல இந்திய-விரோதச் செய்கைகள் இந்தியரின் மனத்திலே துவேஷத்தை உண்டாக்கின. இந்தியத் துருப்புகளிடையே, குறிப்பாக இந்திய ராணுவ அதிகாரிகளிடையே பிரிட்டிஷ்-பகைமை உணர்ச்சி இருந்தது. இதற்குக் காரணம், இவர்கள் மட்டமாக நடத்தப்பட்டதும், பிரிட்டிஷ் துருப்புகளும் அதிகாரிகளும் நன்ருக நடத்தப்பட்டதுமே. சிங்கப்பூர் நீச்சல் சங்கத்திற்குச் சொந்தமான குளத்தில் இந்திய அதிகாரிகள் நீந்தக் கூடாதென்ற தடையுத்தரவு இருந்தது. ஆனல் அந்தச் சங்கத்தில் மெம்பர்களாக மாத்திரம் அந்த அதிகாரிகள் சேரலாம்! குளத்தில் குளித்து, நீந்தக் கூடாது! இந்தியத் துருப்புகளிடையேயும் பிரிட்டிஷார்மீது அதிருப்தி இருந்தது. போதிய பாதுகாப்பின்றியும், குறிப்பாகப் போதிய விமான பலமும் ஆயுத சப்ளையுமின்றியும் தாங்கள் போர்முனைக்கு அனுப்பப்படுவதாக அவர்கள் நினைத்தார்கள்.

1942-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15-ந்தேதியன்று சிங்கப்பூர் வீழ்ச்சியுற்றது. பிப்ரவரி மாதம் 17-ந்தேதியன்று ஜப்பானிய ராணுவத் தலைமைக் காரியாலய மேஜர் பூஜிவாரா சில இந்தியத் தலைவர்களை அழைத்தார். "இங்கிலாந்தின் சக்தி துவம்சமாகிறது; சுயராஜ்யத்திற்காகத் தாக்க இந்தியாவுக்கு இதுவே சரியான சந்தர்ப்பம்" என்று அந்த மேஜர் கூறினர். "இந்தியா சுதந்திரமடைவதற்காக இந்தியருக்குச் சகல உதவிகளையும் செய்ய ஜப்பான் தயார். இந்தியர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளாதலால் சட்டப்படி ஜப்பானியருக்கு எதிரி தேசப் பிரஜைகளாக இருக்கிறபோதிலும், கிரியாம்சத்தில் அவர்களைப் பகைவர்களாக ஜப்பானியர் தங்கள் வசமுள்ள பிரதேசங்களில் பாவிக்க மாட்டார்கள், நடத்தமாட்டார்கள். ஏனெனில், இந்தியர் மனமொப்பிப் பிரிட்டிஷ் பிரஜைகளாக இல்லை என்பதை ஜப்பானியர் அறிவர். இந்திய சுதந்திரத்திற்காகப் போர் புரிய எல்லா இந்தியர்களையும் ஒன்று திரட்டவும், லட்சியத்தையடைய அவர்களின் சகல சாதனங்களைத் திரட்டவும் இந்திய சுதந்திர சங்கம் ஒன்றை அமைத்துக்கொள்ளுங்கள்" என்றும் அந்த மேஜர் சொன்னர்.

இந்த யோசனையை ஆலோசித்து, நாலைந்து நாட்களில் பதிலளிப்பதாக இந்தியத் தலைவர்கள் பதில் கூறினர்.

மலாயின் பல்வேறு பகுதிகளில் வசித்துவந்த இந்தியர்களின் பிரதிநிதிகள் கூட்டமொன்று 1942-ம் வருஷம் மார்ச் மாதம் 9, 10 தேதிகளில் சிங்கப்பூரில் நடைபெற்றது. இதற்குள்ளாக டோக்கியோவிலிருந்து ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸின் அழைப்பு ஒன்று வந்தது. மலாய், தாய்லாந்து (ஸயாம்) ஆகியவற்றிலுள்ள இந்தியரின் பிரதிநிதிகளை டோக்கியோ மகாநாடு ஒன்றுக்கு வருமாறு ஸ்ரீ ராஷ் பிஹாரி கேட்டிருந்தார். எனவே, மலாயில் நடைபெற்ற இந்தியத் தலைவர்கள் கூட்டம்—இதற்குத் தாய்லாந்து இந்தியப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள்—டோக்கியோவுக்கு நல்லெண்ணத் தூதுகோஷ்டி ஒன்றை அனுப்புவதென்று தீர்மானித்தது.

> இந்த முடிவு, ஜப்பானிய அதிகாரியின் விருப்பத்திற்கு மாருகச் செய்யப்பட்டது. திட்டமான நடவடிக்கையில் இறங்குவதென்று முடிவு செய்த பிறகு, அந்தத் தீர்மானத்தை அமலுக்குக் கொண்டுவருவது எப்படி என்பதை ஆலோசிப்பதற்காக அதிகார பூர்வமான தூது கோஷ்டியொன்றை டோக்கியோவுக்கு அனுப்பலாம் என்பதே மேஜர் பூஜிவாராவின் யோசனை.

டோக்கியோ மகாநாடு 1942-ம் வருஷம் மார்ச் மாதம் 28-ந் தேதியிலிருந்து 30-ம் தேதி வரை ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸ் தலைமையில் நடைபெற்றது. மலாயிலிருந்து வந்த நல்லெண்ணத் தூது கோஷ்டியினர் மாத்திரமன்றி, ஹாங்காங், ஷாங்ஹாய், ஜப்பான் ஆகியவற்றிலிருந்த இந்தியர்களின் பிரதிநிதிகளும் மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள். தாய்லாந்திலிருந்து புறப்பட்ட இந்தியப் பிரதிநிதிகள் அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவர்களை ஏற்றிய விமானம் டோக்கியோவுக்கு வரும் மார்க்கத்தில் விபத்துக்குள்ளானதால், அந்தப் பிரதிநிதிகள் மாண்டார்கள்.

கிழக்கு ஆசியாவில் இந்திய சுதந்திர இயக்கத்தை ஆரம்பிக்கப் பக்குவமான தருணம் வந்துவிட்டது என்று மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

> "பூர்ண சுதந்திரம்—அந்நிய ஆதிக்கமோ, எவ்விதத் தலையீடோ அல்லது கட்டுப்பாடோ இல்லாத பூர்ண சுதந்

திரந்தான்—இயக்கத்தின் நோக்கம் என்று முடிவு செய்யப்பட்டது.

இதர தீர்மானங்களாவன:

"இந்திய தேசியராணுவத்தால் மாத்திரமே, இந்தியரின் கட்டளைப்படி, இந்தியா மீது ராணுவ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். சிருஷ்டியாகப் போகிற இந்திய சுதந்திர லீகின் யுத்தசபை வேண்டுகோளின்படி ஜப்பானிய அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் ராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் ஒத்துழைப்பும் உதவியும் உபயோகித்துக்கொள்ளப்படும்."

"இந்தியாவின் எதிர்கால அரசியலமைப்பைத் தயாரிக்கும் பொறுப்பு முழுமையும் இந்திய மக்களின் பிரதிநிதிகளிடம் விடப்படும்."

மற்றொரு மகாநாட்டைப் பாங்காக்கில் (தாய்லாந்தின் தலைநகரம்) ஜூன் மாதத்தில் கூட்டுவதென்றும், அது இன்னும் பூர்ணப் பிரதிநிதித்வம் வாய்ந்ததாக இருப்பதற்காகக் கிழக்கு ஆசியப் பிரதேசங்கள் யாவற்றிலிருந்தும் இந்தியப் பிரதிநிதிகளை அழைப்பதென்றும் இந்த டோக்கியோ மகாநாடு தீர்மானித்தது.

கிழக்கு ஆசிய இந்தியரின் மகாநாடு ஒன்று 1942-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ந் தேதியிலிருந்து 23-ந் தேதி வரை பாங்காக்கில் நடைபெற்றது. ஜப்பான், மஞ்சுகோ, ஹாங்காங், பர்மா, போர்னியோ, ஜாவா, மலாய், தாய்லாந்து ஆகியவற்றில் வசித்த இந்தியர்களின் 100க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், மலாய், ஹாங்காங் இரண்டிலுமிருந்த இந்திய ராணுவத்தின் (யுத்தக் கைதிகள்) பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். எல்லாப் பிரதேசங்களிலும் இந்திய சுதந்திர இயக்கத்தை எந்த எந்த அடிப்படைக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்பதை இந்த மகாநாட்டுத் தீர்மானங்கள் பிரகடனப்படுத்தின.

பாங்காக் மகாநாட்டின் முக்கியமான முடிவுகளாவன:

(1) இந்திய சுதந்திரத்தைப் பெறுவதற்காகக் கிழக்கு ஆசிய இந்தியர்களை இந்திய சுதந்திர லீக் என்ற ஸ்தாபனத்தின்கீழ் ஒன்று திரட்டுவது.

(2) கிழக்கு ஆசியாவிலுள்ள இந்தியத் துருப்புகள், இந்திய ஸிவிலியன்கள் ஆகியவர்களிலிருந்து இந்திய தேசிய ராணுவம் ஒன்றைத் திரட்டுவது.

(3) சுயராஜ்ய இயக்கத்தின் வேலைத்திட்டம், போர்த் திட்டம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடு அதிகாரம் செலுத்தி, அவற்றை அமலுக்குக் கொண்டு வரும் வழி காண்பித்து, அவற்றை இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கங்கள், லட்சியங்கள் ஆகியவற்றைப்போல ஆக்கப் பாடு படுதல்.

(4) இந்த இயக்கம், இந்தியா ஆகிய இரண்டின்பாலும் மேற்கொண்டு கொள்கையை விளக்குமாறு ஜப்பானிய சர்க்காரைக் கோருவது.

இவ்வாருக இந்திய சுதந்திர லீக் பாங்காக் மகாநாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் தலைமைக் காரியாலயம் சிங்கப்பூரில் ஸ்தாபிதமாயிற்று. லீகின் தலைவராக ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய யுத்த சபை ஒன்று அமைக்கப்பட்டது. கிழக்கு ஆசியப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய 'க்விட்-இந்தியா' தீர்மானம்,* இந்தியத் தலைவர்கள் கைதி ஆகிய இரண்டும் உற்சாகத்தையும் உறுதியையும் உச்ச நிலைக்குக் கொண்டுவந்தன. காப்டன் மோகன் சிங்கைப் பிரதம தளபதியாகக் கொண்ட தேசிய ராணுவத்தை, மலாயில் சரணுகதி யடைந்த இந்திய ராணுவத்தினரைக் கொண்டு சிருஷ்டிக்க முயற்சிகள் ஆரம்பமாயின. மலாயிலுள்ள இந்திய ஸிவிலியன்கள் மனமொப்பி இந்த ராணுவத்தில் சேரலாம் என்று விடப்பட்ட வேண்டுகோளுக்கும் நல்ல பலன் கிடைத்தது.

இதற்குள்ளாகச் சுதந்திர லீகின் யுத்த சபைக்கும் ஜப்பானியருக்குமிடையே உறவு சீர்குலைய ஆரம்பித்தது. இதற்கு முக்கிய காரணங்கள் :

(1) பாங்காக் தீர்மானங்களுக்கு ஜப்பானிய சர்க்காரிடமிருந்து திட்டமான பதில் எதுவும் வராதது. வந்த

---

* முதல் அனுபந்தம் பார்க்க.

பொதுப்படையான பதிலில், இந்தியா பரிபூர்ண சுதந்திரம் பெறுவதற்காக அதற்கு உதவ ஜப்பானியர் கொண்டிருந்த உறுதி மறுபடியும் தெரிவிக்கப்பட்டிருந்தது; இந்தியாவிடமிருந்து பிரதேசங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையோ அல்லது இந்தியாவிடமிருந்து வேறு எதையும் அடைய வேண்டுமென்ற ஆசையோ ஜப்பானியருக்கு இல்லை என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் யுத்த சபை இதைக் கொண்டு திருப்தியடையவில்லை.

(2) இந்திய சுதந்திர லீகுக்கும், ஜப்பானிய ராணுவ அதிகாரிகள், ஜப்பானிய அரசாங்கம் ஆகிய இரண்டுக்குமிடையே தொடர்பு ஸ்தாபிக்கும் ஸ்தாபனமாக இருந்து வேலை செய்வதற்காக ஜப்பானியரால் அமைக்கப்பட்ட "இவாக்குரோ கிகான்" என்ற ஸ்தாபனத்தின் மனப்பான்மை, சுதந்திர லீகின் யுத்தசபை - ஜப்பானியர் உறவு சிதைந்ததற்கு மற்றொரு காரணமாகும். சுதந்திர லீகின் வேலைகள், இந்திய தேசிய ராணுவத்தின் வேலைகள் ஆகியவற்றில் தலையிட இவாக்குரோ கிகானின் அதிகாரிகள் செய்த முயற்சியை யுத்த சபை வெறுத்தது.

"தீரவேண்டிய பிரச்னைகளெல்லாம் தீர்க்கப்பட வேண்டும். ஜப்பானிய சர்க்காரின் விளக்கங்கள் வரவேண்டும். இவை நடப்பதற்கு முன்னால் மலாயிலிருந்து இந்திய தேசிய ராணுவத்தைப் பர்மாவுக்கு நீங்கள் மாற்றுவதை அனுமதிக்க முடியாது" என்று ஜப்பானியரிடம் சுதந்திர லீகின் யுத்த சபை கூறிவிட்டது. இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த கர்னல் என். எல். கில் என்பவரைப் பிரிட்டிஷாரின் உளவன் என்று ஜப்பானியர் சந்தேகித்து, யுத்த சபையை முன்கூட்டிக் கலந்துகொள்ளாமல், 1943-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 8-ந் தேதி கைது செய்ததால் நிலைமை மேலும் நெருக்கடியாயிற்று. யுத்த சபை மெம்பர்கள் ராஜிநாமாச் செய்தார்கள்.

சுதந்திர லீகின் தலைவர் ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸ், தாம் டோக்கியோவுக்குச் சென்று அவசியமான விளக்கங்களைப் பெற்று வர முயலுவதாகவும், அதுவரை சுதந்திர லீகின் கிளைகள் தங்களுடைய வேலையைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இது ஒப்புக்கொள்ளப்பட்டது. மலாய்க் கிளை சம்மதித்ததோடு கீழ்க்காணும் குறிப்பையும் சேர்த்தது:

"நமது சுதந்திர இயக்கத்தைப்பறறிய விவகாரங்கள் எல்லாவற்றிற்கும் டோக்கியோ சர்க்காரிடமிருந்து பிரகட்னங்கள், அறிக்கைகள், மற்றும் இதர வழிகள் மூலம் கூடிய சீக்கிரத்தில் விளக்கத்தைப் பெற முயலுமாறு ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸை இந்தக் கிளைக் கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது. சுதந்திர இயக்கம் வழக்கம் போல நடப்பதுடன், அதைப் போலப் பிரகடனங்கள், அறிக்கைகள் மூலம் விளக்கம் வந்தபிறகே மேற்கொண்டு முன்னேற்ற நடவடிக்கைபற்றித் தீர்மானிக்க வேண்டும்."

இதைப்போன்ற சுயேச்சைப் போக்கை மலாயிலிருந்த இவாக்குரோ கிகான் ஸ்தாபனம் விரும்பவில்லை. அந்த ஸ்தாபனத்தினர் இந்திய சுதந்திர லீகைப் பலவீனப்படுத்துவதற்காகப் போட்டி ஸ்தாபனங்களை ஆரம்பிக்க முயன்றூர்கள். அவர்கள் ரகசியமாக இளைஞர் இயக்கமொன்றை ஆரம்பித்து, இந்திய சுதந்திர லீக் தலைவர்கள் மீது கடுமையான பிரசாரத்தைத் தொடங்கினர். 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில், சுதந்திர லீகின் மலாய்க் கிளைக் கமிட்டி, மூன்று நாள் கூடி விவாதித்த பிறகு, நிலைமையிலுள்ள சிக்கல்களையும் கஷ்டங்களையும் விளக்கி ஒரு மகஜரை இந்திய சுதந்திர லீக் தலைவர் ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸிடம் சமர்ப்பிப்பதென்று முடிவு செய்தது. நிலைமையில் அபிவிருத்தி எதுவும் காணப்படவில்லையென்றால்தான் (கமிட்டி) ராஜீநாமாச் செய்துவிட் வேண்டும் என்பதே கமிட்டியின் தீர்மானமாகும்.

இந்த மகஜர் விஷயம் ஜப்பானியருக்கு எப்படியோ தெரிந்தது. மகஜர் ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸின் கைக்குச் சேருமுன், ஜப்பானியர் அவரை அணுகி, மலாய்க் கிளையின் தலைமைப் பதவியை ராஜீநாமாச் செய்யத்தான் வேண்டுமென்று அந்தப் பதவியிலுள்ள ஸ்ரீ ராகவனைக் கேளுங்கள் என நிர்ப்பந்தித்தார்கள். இதன் விளைவாக ஸ்ரீ ராகவன் ராஜீநாமாச் செய்தார். ஜப்பானியர் தங்களுடைய விருப்பத்திற்குப் பணியக்கூடியவர்களையே முக்கியப் பதவிகளில் வைக்க விரும்பினுர்கள். எனவே மலாய்க் கிளைக் கமிட்டியின் இதர மெம்பர்கள் ராஜீநாமாச் செய்திருந்தால், அந்தச் செய்கை ஜப்பானியரின் சுயநலத்திற்கு உதவியதாக இருந்திருக்கும். ஜப்பானியர் தங்கள் ஆட்களைப் பதவிகளில் உட்கார்த்தி வைத்திருப்பார்கள். புதிய ஸ்தாபனம், ஜப்பானியரின் வெறும் தலையாட்டியாக இருக்கக்கூடிய

ஸ்தாபனமாகியிருக்கும். எனவே அப்பேர்ப்பட்ட விபரீதப் போக்கைத் தடுக்க வேண்டுமென்பதற்காக மலாய்க் கிளைக் கமிட்டியின் இதர மெம்பர்கள் ஸ்ரீ ராகவனுடன் சேர்ந்து ராஜீநாமாச் செய்யவில்லை.

சுமார் 1000 இந்திய ஸோல்ஜர்கள் கொண்ட படை ஒன்றைக் கிழக்கோடியில் ஏதோ ஓர் இடத்திற்கு ஜப்பானியர் மாற்ற விரும்பினார்கள். இவ்வாறு ஜப்பானிய ஏகாதிபத்திய ஆசையைப் பூர்த்தி செய்ய இந்திய வீரர்கள் தயாராக இல்லை என்று இந்திய தேசிய ராணுவப் பிரதம தளபதி மோகன சிங் கூறினார். இந்திய விடுதலை ஒன்றுக்காகத்தான் இந்திய ஸோல்ஜர்கள் போராட வேண்டும் என்பது சுதந்திர லீகின் அடிப்படை லட்சியங்களில் ஒன்று என்பது எடுத்துக் காட்டப்பட்ட பிறகு கூட, மலாயிலிருந்த ஜப்பானியத் தளபதி பிடிவாதம் செய்தார். மோகன சிங் இந்த விடாமுண்டன் விவகாரத்தைக் காலக்கிரமத்தில் சுதந்திர லீக் கமிட்டிக்கும் தெரிவித்தார். ஜப்பானியர் அதிகமாக நெருக்க ஆரம்பித்தார்கள். ஆனால் என்ன நடந்தாலும் சரி, ஜப்பானிய ஏகாதிபத்திய ஆசைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவின் ரத்தத்தைச் சிந்த முடியாது என்று மோகன சிங் திட உறுதி கொண்டிருந்தார். இந்தியத் தலைவர்களுடைய உதவி இவருக்கு இருந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? ஜப்பானியர் ஒரு நாள் தங்கள் கப்பலையும் கொண்டுவந்து, 1000 இந்திய ஸோல்ஜர்களை அவற்றில் ஏற்றுங்கள் என்றனராம். இதற்கும் மோகன சிங் மறுத்தார்.

தாய்நாட்டின் கௌரவத்தை நிலைநாட்டுவதென்றும், கீழ்ப்படியும் அந்தஸ்தை இந்தியர் ஏற்கமாட்டார்கள் என்பதை ஜப்பானியர் மனததில் பதிய வைக்க வேண்டுமென்றும் அவர் தீர்மானித்தார். இதன் விளைவாக அவரும் மலாய், பர்மா ஆகியவற்றிலிருந்த இதர இந்தியத்தலைவர்களும் ஜப்பானியரின் ஏகாதிபத்திய ஆசைகளைப் பகிரங்கமாகக் கண்டிக்க ஆரம்பித்தனர். சாத்தியமான போது ஜப்பானியரை ஜெனரல் மோகன சிங் மட்டந்தட்டியும் வந்தார். முன் கூட்டி அலுவலை நிர்ணயித்து வராத ஜப்பானிய ஜெனரல்களைத் தம் பங்களா வாசலில் மணிக் கணக்கில் காக்க வைத்திருக்கிறார். ஜப்பானிய ஸோல்ஜர்கள் இந்திய அதிகாரிகளைக் கண்டால் ஸெல்யூட் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினர். போர்க்களத்தில் நம்மால்

தோற்கடிக்கப்பட்ட யுத்தக் கைதிகளுக்கு ஸெல்யூட் செய்வது கௌரவக் குறைவு என்று ஜப்பானியர் நினைத்தார்கள்.

ஜப்பானியர் தங்கள் சொந்த உபயோகத்திற்காக இந்திய தேசிய ராணுவத்தினரை உபயோகிக்க முயன்றால், இந்தியாவிலிருந்து ஏகாதிபத்திய எஜமானர்களை விரட்டப்போகும் துப்பாக்கிகளால் ஜப்பானியரையும் தாக்குவோம் என்று மோகன சிங் பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறார். ஆனால் ஜப்பானியரோ, இந்தியர்களுக்கு எஜமானர்கள் போல நடந்து கொள்ள ஆரம்பித்து, இந்திய சுதந்திர இயக்கத்திற்குத் தாங்களே தலைவர்களாக விரும்பினார்கள்! பர்மாவிலும் மலாயிலும் இந்தியரின் தேசீய முயற்சிகளில் ஜப்பானிய ரகசியப் போலீஸ் அதிகாரிகள் தலையிட்டனர். இந்திய ராணுவப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களை ஜப்பானியர் தங்கள் சுயநலத்திற்காக உபயோகிக்க ஆரம்பித்தார்கள்; இதையெல்லாம் கண்டித்த பர்மா பிராந்தியக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ பி. பரிஷத்தைப் 'பிரிட்டிஷாரின் ஏஜெண்டு' என அழைத்தனர். இந்தியரைக் கேவலமாகப் பேசிய ஜப்பானிய அதிகாரி காப்டன் அவாடா என்பவரை ஒரு சமயத்தில் ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸின் காரியதரிசி ஸ்ரீ தேஷ்பாண்டே அடிக்கப் போய்விட்டார்.

மலாயில் ஸ்ரீ ராகவனின் பினங் சுயராஜ்யப் பள்ளிக்கூட விவகாரங்களிலும் ஜப்பானியர் தலையிட்டனர். அந்தப் பள்ளிக்கூடம் சமதர்ம முறைப்படி நடந்ததால் ஜப்பானியருக்குப் பிடிக்கவில்லை. அந்நியரின் தலையீடு ஜாஸ்தியாகி வந்ததால் கிழக்கு ஆசிய இந்தியரிடையே இந்திய சுதந்திர லீகின் மதிப்பு குறையத் துவங்கியது. ஜப்பானியரும் யதேச்சாதிகாரப் போக்கை விடவில்லை. இந்திய யுத்தக் கைதிகளையெல்லாம் தங்கள் வசமே ஒப்படைத்து விடுமாறு கோரினார்கள். இது பிரதம தளபதி மோகன சிங்குக்கு மேஜர் பூஜிவாராவால் தரப்பட்ட வாக்குறுதிக்கு விரோதமாகும். எனவே, இதற்கு இணங்க மோகன சிங் மறுத்தார். ஜப்பானியர் இந்திய விமான எதிர்ப்புப் படைகளைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகித்ததை அந்தப் படைகளிலிருந்த இந்தியர்களே கண்டித்து, இந்திய தேசீய ராணுவத்தில் சேரத் தங்களை அனுமதிக்குமாறு கோரினர். அவர்களைத் தம் வசம் ஒப்படைக்குமாறு மோகன சிங் கேட்டதற்குப் பலன் கிடைக்கவில்லை.

ஜப்பானியருடைய ஏகாதிபத்தியப் பேராசைகளை அவர்களுடைய ராணுவ, கடற்படை கீதங்கள் பிரதிபலித்தன. இந்திய அதிகாரிகளுக்காக விருந்தளித்த ஜப்பானியர், விருந்தின் போதே தங்கள் தேசிய கீதங்களைப் பாடினர். அவற்றில் ஒரு பாட்டில்,

"ஜப்பானிய ராணுவம் மெல்போர்னில் பவனிவரும்
"டோஜோ நியூயார்க்கில் செல்யூட் ஏற்பார்
"என் தாத்தா கங்கையில் மீன் பிடிப்பார்"

என்று இருந்தது. இதைக் கேட்ட ஆஜாத் ஹிந்த் அதிகாரி ஸ்ரீ பால்டா என்பவர்,

"உன் பாட்டன்களில் யாருமல்ல. என் பாட்டன்தான்"

என்றார்.

இதெல்லாம் நடந்த நாலைந்து நாட்களுக்குள், ஜப்பானிய சர்க்காருக்கு இவாக்குரோ கிகான் அதிகாரி ஒருவர் மூலம் இந்திய அதிகாரிகள், "எங்கள் நேசக் கட்சியினராகிய ஜப்பானியருக்கு" என்ற தலைப்பில் ஒரு கடிதத்தை அனுப்பினார்கள். அதில் காணப்பட்ட முக்கியக் கோரிக்கைகளாவன :

1. இந்தியாவுக்குள் பிரதானமாக இந்திய தேசிய ராணுவம் தான் பிரவேசிக்கவேண்டும்.

2. இ. தே. ரா. வுக்கு ஜப்பானிய விமானங்கள், டாங்கிகள் ஆகியவற்றின் உதவி மாத்திரமே வேண்டும். இந்திய ஸிவிலியன்களைக் கொண்ட தொண்டர்கள்ராணுவத்திற்கு ஆயுத சப்ளை செய்வதற்காக இந்திய சுதந்திர லீகுக்கு ஆயுதங்களைத் தர வேண்டும்.

3. இ. தே. ரா.வை நேச ராணுவமாகப் பாவித்து, யுத்த சபைக்குச் சுதந்திரச் சர்க்காருக்கொத்த அந்தஸ்தைத் தர வேண்டும்.

4. இ. தே. ரா. வுடன் இந்தியாவுக்குள் ஜப்பானியர் பிரவேசிக்கையில் ஹிந்து, முஸ்லிம்களுடைய மத உணர்ச்சிகளைக் கௌரவிக்கவேண்டும்.

5. இந்தியாவில் இந்திய சர்க்காரின் கரன்ஸி இருக்க வேண்டுமேயொழிய ஜப்பானிய சர்க்காரின் கரன்ஸி இருக்கலாகாது.

ஜப்பானிய அதிகாரிகளுக்குக் கோபம் வந்தது. "ஏன் இ. தே. ரா. வே பிரதானமாக இந்தியாவில் பிரவேசிக்க வேண்டு மென்று சொல்லுகிறீர்கள்?" என்று ஜப்பானியக் கர்னல் ஒருவர் கேட்டார். இதற்கு இந்திய அதிகாரிகள், "இந்தியர் ஜப்பானிய எதிர்ப்பு மனப்பான்மையுடன் இருக்கிறார்கள்" எனப் பதிலளித்தனர். ஆனால் அந்தக் கர்னலோ, இந்தியாவில் தமக்கு ஆதரவு இருக்கிறது என்று சொன்னார்! இந்தியாவில் ஜப்பானிய ராணுவம் ஜப்பானியக் கரன்ஸியையே உபயோகிக்கும் என்றும் அந்தக் கர்னல் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டார். "நீங்கள் இவ்வாறு நடப்பதென்றால் எங்கள் நாட்டில் நாங்கள் எதிர் பார்க்கும் புரட்சி நடக்காது" என்று இந்திய அதிகாரிகள் சொல்லிவிட்டனர். இதைக் கேட்ட கர்னல், ஒரே முறைப்பாக அறையிலிருந்து வெளியே போய்விட்டார். இதற்குப்பின் ஜப் பானியரின் சூழ்ச்சிகளை வர்ணித்து ராஷ் பிஹாரி போஸுக்கு லெப். கர்னல் கில் மூலம் இந்திய அதிகாரிகள் அனுப்பிய கடிதம் கில் கைதியானதும் ஜப்பானியர் கையில் சிக்கிவிட்டது. ஜப்பானியர் கோபம் கொண்டனர். மோகன சிங்கும் மற்றும் சில அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் மோகன சிங் மகா கெட்டிக்காரராகையால், தாம் கைது செய்யப்பட்டால் இந்திய தேசிய ராணுவத்தையே கலைத்து விடுமாறும், ஜப்பானியரின் இஷ்டத்திற்காக ராணுவம் இருக்க லாகாதென்றும் முன் கூட்டியே உத்தரவு எழுதித் தம் ராணுவ சகாக்களிடம் கொடுத்திருந்தார். எனவே, மோகன சிங் கைதி யானவுடன் முதல் இந்திய தேசிய ராணுவம் கலைந்துவிட்டது.

நிலைமை இவ்வாறு சீர்குலைந்திருந்தபோதுதான் மாஜி காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் மலாய் வந்து சேர்ந்தார்.

2

ஸ்ரீ சுபாஷ் சந்திரர்

சுமார் ஆறரை அடி உயரம். உயரத்துக்கேற்ற பருமன். செக்கச்செவேலென்ற நிறம். சூதுவாது அறியாத, பச்சைக் குழந்தை போன்ற முகம். குழைந்த கன்னங்கள்; கூர்மையான கண்கள்! நெஞ்சின் உறுதியைப் பிரகாசமான அந்தக் கண்கள் பிரதிபலிக்கின்றன. இரண்டு நேத்திரங்களும் தேசாபிமானிகளைக் கவ்வி அழைக்கும்; தேசத் துரோகிகளை எட்டி நிறுத்தி வைக்கும். தியாகம் என்ற காட்டாற்றில் எதிர் மார்பு போட்டு நீந்துகிறார். 'என் மனச்சாட்சியே எனக்கு வழி காட்டி. அதன்படியே நான் நடப்பேன். பிறரிடம் அதை அடைமானம் வைக்கமாட்டேன்' என்றுரைத்து, கடைசிவரை அந்த வாக்குப்படியே விடாப்பிடியாக நடந்துகொள்பவர். இப்பேர்ப்பட்ட தலைவரிடம்—ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸிடம்—இந்நாட்டு மக்களுக்கு அபார அபிமானம் இருப்பதில் ஆச்சரியம் என்ன? விளையும் பயிர் முளையிலே தெரியும் என்று சொல்லுவார்கள். அதைப்போல, ஸ்ரீ சுபாஷ் பள்ளிப்பருவத்திலேயே, தம்மிட்முள்ள தலைமைச் சாமர்த்தியத்தைக் காண்பிக்க ஆரம்பித்தார். அவர் கல்கத்தா பிரஸிடென்ஸி சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருக்கையில், ஓட்டன் என்ற வெள்ளைக்காரப் புரொபஸர் ஒருவர், ஒரு மாணவனை 'ராஸ்கல்' என்று தூஷித்துவிட்டார். உடனே வகுப்பில் களேபரம். "வாபஸ் வாங்குகிறீர்களா, இல்லையா?" என்று அதிகார தோரணையில் கேட்டார் ஸ்ரீ போஸ். போஸுடன் எல்லாரும் சேர்ந்து கூச்சல் போட்டார்கள். புரொபஸரோ மகா கிண்டன். பிடிவாத குணமுள்ளவர். "முடியாது" என்றார். உடனே ஸ்ரீ போஸ், அந்தப் புரொபஸரை அடித்துவிட்டார். இதற்காகவும், மாணவர் ஸ்ட்ரைக் ஒன்றுக்குத் தலைமை வகித்ததற்காகவும் அவர் மீது காலேஜ் நிர்வாகிகள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார்கள். இன்னும் இரு வருஷங்களுக்கு ஸ்ரீ சுபாஷை எந்தக் காலேஜிலும் யாரும் சேர்த்துக்கொள்ளக்கூடாது—இதுதான் அவருக்குக் கிடைத்த 'சர்ட்டிபிகேட்'. அதற்காக அவர் கொஞ்சமேனும் வருந்தினாரா என்ன? இல்லவே இல்லை.

30 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ போஸ் திடீரென மறைந்து விட்டார். பெற்றோர்களும் பந்துக்களும் திகைத்துப் போனார்கள். கவலைப்பட்டார்கள். பல இடங்களுக்கு ஆட்களை அனுப்பித் தேடச் சொன்னார்கள். போஸை யாரும் கண்டுபிடிக்கவில்லை. போஸோ தம் குருவைத் தேடிக்கொண்டு போனார். ஹிமாலயம் சென்றார். ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் ஆகியவர்களின் உபதேசங்கள் அவர் மனத்தில் வேரூன்றிப் போயிருந்ததாலேயே அவர் 'குரு மந்திரம்' பெற ஊர் ஊராகவும் மலை மலையாகவும் அலைந்தார். ஆனால் பயனில்லை. எண்ணம் சித்தியாகவில்லை. மனமுடைந்து, உடல் கட்டுத் தளர்ந்து, ஒவ்வொரு புண்ணிய க்ஷேத்திரமாக விஜயஞ் செய்து திரும்புகையில், அவருடைய அடையாளத்தைக் கண்டுபிடித்த ஒருவர், ஸ்ரீ சுபாஷின் தகப்பனாராகிய ஜானகிநாத் போஸுக்குத் தந்தியடித்தார். உடனே உறவினர்கள் ஸ்ரீ சுபாஷை வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

ஸ்ரீ போஸ் மீண்டும் தமது படிப்பைத் துவக்கினார். வகுப்பில் முதல் மாணவராய் விளங்கி, பி.ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் பாஸ் செய்தார். பெற்றோர்கள் அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் படிக்க வைத்தார்கள். அங்கும் வகுப்பில் முதன்மையாக விளங்கினார். அதற்குப்பின் ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு உட்கார்ந்து, தேறினார். இது சம்பந்தமாகச் சில பிரபல வங்காளிகளைப் பிரஸ்தாபிப்பது இந்த இடத்தில் பொருந்துமென நினைக்கிறேன். ஸ்ரீ அரவிந்த கோஷ் ஐ.ஸி.எஸ். பரீட்சைக்கு உட்காரப் பிரியப்பட்டார். ஆனால் அவருக்குக் குதிரைச் சவாரி தெரியாதென்ற காரணத்தால் பரீட்சை அதிகாரி அவரை அழைக்கவில்லை. ஸர் சுரேந்திரநாத் பானர்ஜியும் அதே பரீட்சைக்கு உட்கார மனுச் செய்தார். ஆனால் மனுவில் பிறந்த தேதியைக் குறிக்கவில்லை என்ற நொண்டிச் சாக்கின் பேரில், மனு நிராகரிக்கப்பட்டது.

பல வெள்ளைக்காரர்களை விட அதிக மார்க்குகள் வாங்கி ஐ.ஸி.எஸ். பரீட்சை பாஸ் செய்து இந்தியாவுக்குத் திரும்பினார் ஸ்ரீ போஸ். அந்தச் சமயத்தில்தான் இந்திய தேசிய காங்கிரஸில் மிதவாதிகளுக்கும், காந்திஜியைத் தலைவராகக் கொண்டிருந்த தீவிரவாதிகளுக்கும் (அப்பொழுது தீவிரவாதிகளென்று இவர்கள் அழைக்கப்பட்டனர்) பலத்த சர்ச்சை நடந்துகொண்டிருந்தது. அதில் காந்திஜியின் கை ஓங்கிற்று. 1920-ம்

வருஷம் ஒத்துழையாமை இயக்கத்தையும் அவர் ஆரம்பித்து விட்டார். 1857-ம் வருஷம் நடைபெற்ற முதல் சுதந்திர யுத்தத்துக்குப் பின் இப்பேர்ப்பட்ட இயக்கம் நடந்ததில்லை. இது நாட்டிலே ஒரு பெரும் தேசீய வெறியைக் கிளப்பியது. காந்திஜியின் ஆக்ஞைப்படி ஆயிரக்கணக்கான வக்கீல்கள், வக்கீல் தொழிலை விட்டனர்; பிரிட்டிஷாரிடம் பட்டம் பெற்றவர்கள் அவற்றைத் துறந்தார்கள்; காலேஜ் மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளிவந்தார்கள். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் ஸ்ரீ போஸ், ஐ. ஸி. எஸ்.காரராக—காங்கிரஸ்காரர்களைச் சிறையில் போடுகிற வர்க்கத்தினராக—இருப்பது சாத்தியமா? தமது ஐ. ஸி. எஸ். பதவியைத் துச்சமாகக் கருதி வாபஸ் செய்தார். அந்தச் சமயத்தில்தான் கவியரசர் ரவீந்திரநாத் டாகுர், 'ஸர்' பட்டத்தைப் பிரிட்டிஷ் சர்க்காருக்குத்திருப்பியனுப்பினர். ஸி. ஆர். தாஸ், தம் வக்கீல் தொழிலைத் துறந்ததும் அப்போது தான். அந்தக் காலத்தில் ஸி. ஆர். தாஸுக்கு ஸ்ரீ சுபாஷ் போஸும், ஸ்ரீ சென் குப்தாவும் பிரதம சிஷ்யர்களாய் விளங்கினார்கள். ஆனால் தாஸ் காலமான பின், இந்தச் சிஷ்யர்களுக்குள் நான் பெரியவனா, நீ பெரியவனா என்ற தகராறு கிளம்பியதால், வங்கக் காங்கிரஸில் இரு பிளவுகள் ஏற்பட்டன. ஸ்ரீ சென் குப்தா காலமான பின் தாற்காலிகமாக அங்கே சர்ச்சை தீர்ந்த போதிலும், திரிபுரி காங்கிரசுக்கு ஸ்ரீ போஸ் அக்கிராசனராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதும் பழைய கட்சிப் பிரதிகட்சிகள் தலை காண்பித்து, நல்ல பக்கபலத்துடன் உக்கிரமாகச் சண்டை போட ஆரம்பித்துவிட்டன.

ஸி. ஆர். தாஸின் வலது கையாக விளங்கி, இளைஞர்களை நூற்றுக் கணக்கில் தேசியப் போரில் சேர்த்த ஸ்ரீ போஸ்மீது போலீஸின் விசேஷப் பார்வை அப்பொழுதே விழுந்தது. அவரைச் சர்க்கார் கைது செய்து மாண்டலே சிறையில் வைத்து விட்டார்கள். அங்கு அவருடைய உடல் குன்றிப் போனதும், நிபந்தனையின் பேரில் விடுதலை செய்வதாகச் சர்க்கார் அவரிடம் கூறினர். நிபந்தனை என்ற வார்த்தையையே வெறுத்த போஸ், அந்த யோசனையை நிராகரித்தார். இப்படியாகச் சிறையில் கால வரையறையின்றி வைக்கப்படுவதும், பொது மக்களின் கிளர்ச்சியின் விளைவாக விடுவிக்கப்படுவதும் அவர் வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகிவிட்டது. அடிக்கடி அவர் ஏதாவது ஒரு வியாதியால் கஷ்டப்பட்டு வந்தார். மேல்நாட்டுச் சிகிச்சையும்,

நல்ல சிதோஷ்ண நிலையுள்ள இடத்தில் சில மாதங்களுக்கு வாசமும் உடலுக்குப் பயனளிக்கும் என்று டாக்டர்கள் சொல்லியதின் பேரில் அவர் வியன்னுவுக்குப் புறப்பட்டார். அங்கேதான் விட்டல்பாய் பட்டேலுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. போஸின் தேசீய ஆர்வத்தை அவர் மிகவும் மெச்சினுர். வெளிநாடுகளில் இந்தியர்களை இழிவாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிரசாரம் சித்திரித்துக் காட்டியிருந்ததால் அதற்கு எதிர்ப்பிரசாரம் நடத்தவும், இந்தியாவிலுள்ள உண்மை நிலைமையை உலகெங்கும் பரப்பி, உலக அனுதாபத்தை இந்திய விடுதலைப் போருக்குச் சாதகமாகப் பெறவும் உழைப்பதென அந்த இரு தலைவர்களும் கங்கணங் கட்டிக்கொண்டனர். அதன்படி ஐரோப்பிய நாடுகளின் தலைநகர்களிலும், அமெரிக்காவிலும் பல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. சுதந்திரத்தைப் பெற, பிரசாரமும் ஒரு சக்தி வாய்ந்த சாதனம் என்பதில் அந்த இருவருக்கும் நம்பிக்கை உண்டு. அப்பொழுது தேசீய காங்கிரஸ், வெளிநாடுகளில் செய்ய வேண்டிய பிரசாரத்தில் அவ்வளவாகச் சிரத்தை காண்பிக்கவில்லை. (ஆனுல் இப்பொழுது அந்தக் குறைபாடு உணரப்படுகிறது.) ஸ்ரீ போஸ் இத்தாலி, ஹங்கேரி, பிரிட்டன் இன்னும் பல நாடுகளுக்குச் சென்று, இந்தியாவின் சுதந்திரச் சங்கை ஊதினுர். முஸோலினியைப் பேட்டி கண்டிருக்கிருர். பண்டித நேருவைப் போல, பேட்டி காண வர முடியாது என்று சொல்லவில்லை. இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும. பண்டித ஜவாஹர்லால் நேரு, முதலில் முஸோலினியின் அழைப்பை ஏற்றுக்கொள்ளத்தான் செய்தார். ஆனுல் பிரிட்டனில் இருந்த ஸோஷலிஸ்ட் நண்பர்கள், 'நீங்கள் இப்படிப் பாஸிஸ்ட் தலைவரைச் சந்தித்தால் உலகம் சிரிக்காதா ?' என்று கேட்டனர். உடனே நேரு, பேட்டி காண வருவதற்கில்லை என்று லண்டனிலிருந்து ரோமுக்குத் தகவல் கொடுத்தார். மகாத்மாஜி வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்ற போது, முஸோலினியின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். பாஸிஸ்ட் படைகள் அணிவகுத்து நின்று, மகாத்மாவுக்குப் பிரமாத வரவேற்பளித்தன. லெனினையும் இங்கே பிரஸ்தாபிக்க வேண்டும. முதல் மகாயுத்தத்தின் போது, ஜெர்மனியும், ஜாரின் ரஷியாவும் சண்டை போட்டுக்கொண்டிருக்கையில், கம்யூனிஸ்ட் லெனின், ஜெர்மனியின் கவச மோட்டாரில், ஜெர்மனியிலிருந்து ரஷிய எல்லைக்குள் ரகஸ்யமாக நுழைந்தார்

அப்படித் தம் நாட்டின்—முதலாளித்துவ ஜார் நாட்டின்—விரோதியின் உதவியில், ரஷியாவுக்கு வந்து, தமது லட்சியமாகிய பொதுவுடைமைச் சமுதாயத்தை ஸ்தாபிக்க முயலுவது பாவ காரியமல்ல என்பது அவரது உறுதியான அபிப்பிராயம். பெரிய பட்டாளத்தை அனுப்புவதை விட இந்த ஓர் ஆளை உள்ளே நுழைத்துவிடுவதால் எதிரி சீக்கிரம் சீர்குலைவான் என்றே ஜெர்மனியர் எண்ணினர். பரஸ்பர உதவி. அவ்வளவுதான்.

ஸ்ரீ போஸ், நிர்வாகத்தில் மகா கெட்டிக்காரர். கல்கத்தா கார்ப்பரேஷன் இப்பொழுதுள்ள உயரிய நிலைக்கு அவர் பெரும் அளவுக்கு ஜவாப்தாரியாவர். ஐ. ஸி. எஸ். பதவியை ராஜீநாமாச் செய்ததும் அவர் சித்தரஞ்சன் தாஸின் விருப்பத்திற்கிணங்கி, நாஷனல் காலேஜின் பிரின்ஸிபால் பதவியை ஏற்று, கல்லூரியை வெகு திறமையாக நடத்தினர். 1924-ம் வருஷம் கல்கத்தா மேயர் தேர்தல் போட்டியில் ஸி. ஆர். தாஸ் வெற்றி பெற்றதும் ஸ்ரீ போஸ் கார்ப்பரேஷனின் பிரதம நிர்வாக அதிகாரியாக வந்து, நகர பரிபாலனங்களில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

ஊழியர்களிடத்தில் போஸுக்கு இருந்த நேரிடையான தொடர்பே, அவருடைய குணவிசேஷங்களில் முதல் ஸ்தானம் வகிக்கிறது. தலைவர்களுக்கு இந்த அம்சம் இருப்பது மிக அவசியம். இதில் காந்திஜியையும் ஸ்ரீ சுபாஷையும் ஒரே படியில் வைக்கலாம். ஊழியர்கள்பால் போஸுக்கு இருந்த அன்புக்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன். அவர் 1932ஸு சத்தியாக்கிரக இயக்கத்தின் போது சென்னைச் சிறையில் ராஜாங்கக் கைதியாக இருந்தார். அவருக்கெனப் பிரத்தியேகமாக வங்காளத்திலிருந்து ஒரு சமையற்காரர் தருவிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது 'ஸி' வகுப்பில் ஏராளமான சத்தியாக்கிரகக் கைதிகள் இருந்தனர். போஸ், சிறைச் சூப்ரெண்டின் அனுமதி பெற்று, அந்த விடுதலை வீரர்கள் அனைவரையும் தம் பிளாக்குக்குத் தினசரி அழைப்பது உண்டு. எல்லாருடனும் சற்று நேரம் பேசிக்கொண்டிருப்பார். பிறகு, தாமே செய்துவைத்திருந்த பக்ஷணம் முதலியவற்றைத் தொண்டர்களுக்கு விநியோகிப்பார். அவருக்கு அதில் எவ்வளவு ஆனந்தம் உண்டு தெரியுமா? இதெல்லாம் சிறிய விஷயமாகத் தோன்றலாம். ஆனல் இது, தேசத்

தொண்டர்களிடம் தலைவர் எவ்வளவு தோழமையாகவும், அன்பாகவும், எல்லாரும் ஒரே தோணியில்தான் போகிறோமென்ற மனோபாவத்துடனும் இருக்கிறார் என்பதற்கு ஓர் அடையாளமாகும்.

தொழிலாளர் இயக்கத்தில் ஸ்ரீ போஸுக்குச் சிரத்தை உண்டு. அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரசுக்கு அவர் தலைவராக இருந்திருப்பது, இதற்கு ஒரு சான்றாகும்.

வியன்னாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வரப் போவதாக ஸ்ரீ போஸ் அறிவித்ததும், சர்க்கார், "வரக்கூடாது, வந்தால் சிறைதான்" என்று எச்சரித்தார்கள். "வெளிநாட்டில் சுதந்திர புருஷனாக இருப்பதைவிட நான் பிறந்த புண்யபூமியில் சிறைக் கூண்டில் இருப்பதே உத்தமம்" என்று கூறி, ஸ்ரீ போஸ் பகிரங்கமாக இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார். சொன்னால் சொன்னபடி, சர்க்காரும் ஸ்ரீ போஸைச் சிறையில் அடைத்தார்கள். உடனே அவரை விடுதலை செய்யவேண்டுமென நாடெங்கும் கிளர்ச்சி நடந்தது. அதில் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டவர் மகாத்மா காந்தி! ஸ்ரீ போஸ் விடுதலையாவதிலும், அவரை ராஷ்டிரபதி பீடத்தில் அமர்த்துவதிலும் காந்திஜியை விட அதிக சிரத்தை இந்நாட்டில் யாருக்கும் அந்தச் சமயத்தில் இருந்ததில்லை. அவர் விடுதலையாகாதவரை, மகாத்மாவின் மனத்துக்குச் சாந்தி ஏற்படாதுபோல் தோன்றிற்று. அதற்குக் காரணம் என்ன?

ஸ்ரீ போஸ் பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ளவர்; அதற்காக இளைஞர்களைத் தயார்ப்படுத்துகிறார்; அஹிம்ஸையை மேற்கொண்டிருப்பது வெறும் வேஷம் என்று யாரோ காந்திஜியிடம் புகார் செய்திருக்கிறார்கள். உடனே காந்திஜியும் தம் ஆசிரமவாசி ஒருவரை வங்காளத்துக்கு அனுப்பி அந்தப் புகார் வாஸ்தவந்தானா என்று கண்டுபிடிக்கச் சொன்னார். அந்த மனுஷ்யர் - அவரைக் கெட்டிக்காரரென்று நான் சொல்லுவதற்கில்லை - ஸ்ரீ போஸ் பலாத்காரத்தை ஆதரிப்பது வாஸ்தவந்தான் என்ற பொருள்படும்படியான கடிதமொன்றைக் காந்திஜியின் விலாசத்துக்கு எழுதித் தபாலில் போட்டார்! போலீஸார் அந்தக் கவரை உடைத்து, கடிதத்தைப் போட்டோ எடுத்து வைத்துக் கொண்டு, பிறகு கவரை வந்தபடியே காந்திஜிக்கு அனுப்பிவிட்டனர். ஸ்ரீ போஸை ராஜாங்கக்

கைதியாக வைக்க இதையும் ஓர் அத்தாட்சியாக, சர்க்கார் சொல்ல ஆரம்பித்தார்கள். அந்தப் பேச்சு காந்திஜிக்கு மன வேதனையை உண்டாக்கியது. மனச் சஞ்சலம், உள்ளத்தை அரித்துத் தின்றது. போஸை விடுவிக்கப் படாத பாடுபட்டார். கவர்னரைப் பேட்டி கண்டார். வைசிராயைப் பேட்டி கண்டார். காங்கிரசும் அகில இந்தியக் கிளர்ச்சி நடத்தியது. சர்க்கார் இறுதியில் பணிந்தார்கள். ஸ்ரீ போஸ் விடுதலையானதும், பெயிஸ்பூர் காங்கிரசுக்கு அக்கிராசனராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்த வருஷம் பூராவிலும் காங்கிரஸ் வேலைகள் வெகு விமரிசையாக நடந்து வந்தன. ஆனால் காங்கிரஸ் மந்திரி சபைகள், இந்தியா சட்டத்தின் கீழ் ஜனங்களுக்கு என்ன என்ன செய்ய முடியுமோ அதை யெல்லாம் செய்துவிட்டு, மேலும் எதுவும் செய்ய அதிகாரமின்றி இருந்தன. ஒரு பக்கம் சர்க்காரால் வரையறுக்கப்பட்டுள்ள இந்தியா சட்டம்; மறுபக்கம் நாட்டிலுள்ள சோஷலிஸ்டுகளும் இதர தீவிரவாதிகளும்,மேலும் புரட்சிகரமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நடத்தி வந்த கிளர்ச்சி. ஸ்ரீ போஸோ, "இந்தச் சட்டம் உதவாக்கரையானது. யுத்தமும் விரைவில் வரப்போகிறது. மகாஜனப் போராட்டத்துக்குக் காங்கிரஸைத் தயாராக்க வேண்டும். எப்பேர்ப்பட்ட சமரச யோசனையையும் எதிர்க்க வேண்டும்" என்று முழக்கம் செய்ய ஆரம்பித்தார். நாட்டிலிருந்த நெருக்கடியான இப்பேர்ப்பட்ட சமயத்தில், தாமே மீண்டும் அக்கிராசனராக இருந்தால், வரப்போகிற சந்தர்ப்பத்தை நன்றாக உபயோகித்து நாட்டை விடுவித்துவிடலாம் என்று உண்மையாகவே கருதி, மீண்டும் அக்கிராசனப் பதவித் தேர்தலுக்கும் தாம் அபேட்சகராய் நிற்கப்போவதாகப் போஸ் அறிவித்தார். காந்தீய கோஷ்டிக்கு இது பிடிக்கவில்லை. நெருக்கடி வரப்போகிறது என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனால் இவ்வளவு சீக்கிரமாக வருமென அவர்கள் நினைக்கவில்லை. இருந்த போதிலும் இப்பேர்ப்பட்ட நிலைமையில், தங்கள் கோஷ்டியைச் சேர்ந்த யாரேனும் ஒருவர் அக்கிராசனராக இருப்பதே நல்லதெனக் கருதி அவர்கள் டாக்டர் பட்டாபியை அபேட்சை மனு தாக்கல் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். காந்திஜியைத் தவிர இதர வலது சாரிப் பிரமுகர்கள் அனைவரும்,பட்டாபியை ஆதரித்து அறிக்கையும் வெளியிட்டார்கள். இத்துடன் நிறுத்தினாலே போதும்,

வெற்றி நிச்சயம் கிடைத்துவிடும் என்பது அவர்கள் நினைப்பு ஆனல் போஸுக்காக இடது சாரிகள் அனைவரும் உழைத்தார்கள்; காந்தியர்கள் என்று சொல்லப்பட்டவர்களில் பிளவை உண்டாக்கி, பல மாகாணங்களில் போஸுக்கு மெஜாரிட்டி கிடைக்கும்படி செய்துவிட்டனர். உதாரணமாகத் தமிழ்நாட்டை எடுத்துக்கொள்வோம். தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவிக்கு இரண்டு மூன்று பேர்கள் போட்டியிட முன் வந்தார்கள். அபேதவாதிகள், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருடனும், அவரை ஆதரித்தவர்களுடனும் பேரம் பேசி, அதில் வெற்றியும் அடைந்தார்கள். அதாவது ஓமந்தூர் வகையரா ராஷ்டிரபதி தேர்தலில் போஸுக்கு வோட் செய்யவேண்டும்; இந்த உதவிக்காக ஸோஷலிஸ்டுகள் மாகாணக்கமிட்டித் தலைவர் தேர்தலில் ஓமந்தூருக்கு வோட் செய்யவேண்டும்.

போஸின் வெற்றி காந்தியர்களுக்கு ஒரு பெரும் வெடி குண்டாக விளங்கியது. 'பட்டாபியின் தோல்வி என் தோல்வி; உண்மையான காங்கிரஸ்வாதிகளெல்லாம் உடனே காங்கிரஸிலிருந்து விலகிவிட வேண்டும்' என்றார் காந்திஜி. இப்படிச் சொன்னரேயொழிய,உடனே தம்முடைய சகாக்களைச் சந்தித்துப் பேசியதும் அவர்களுடைய வாதங்களின் விளைவாக, காந்திஜி தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு, ஸ்ரீ போஸை ராஷ்டிரபதி பீடத்திலிருந்து கிளப்பத் திட்டம்போட்டுவிட்டார். புத்வாக்கள் பறந்தன. திரிபுரி காங்கிரஸில் போஸை வீழ்த்திவிட வேண்டும். ஜனநாயகம் ஓங்க வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் இப்படிச் செய்யலாமா என்று நியாய புத்தியுள்ள பலர் மன வருத்தமடைந்தார்கள். ஸ்ரீ போஸோ அப்பொழுது படுத்த படுக்கையாக இருந்தார். இந்த நெருக்கடியையெல்லாம் விட்ப் பெரும் நெருக்கடியாக, மகாத்மா காந்தியே ராஜக்கோட்டையில் உண்ணுவிரதம் ஆரம்பித்துவிட்டார்.அவ்வளவுதான். "மகாத்மா காந்தி கீ ஜே"—"வந்தே மாதரம்". காந்திஜி கட்சி ஜயித்தது. போஸ் கட்சி தோற்றது.'காந்திஜியின் விருப்பப்படியே ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு அங்கத்தினர்களைப் பொறுக்கியெடுக்க வேண்டும்' என்று கூறிய கோவிந்த வல்லப பந்தின் தீர்மானம் அ. இ. கா. கமிட்டியில் நிறைவேறியது. 'நான் காந்திஜியின் வெறும் கைகாட்டியாக இருக்க முடியாது' என்று ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், அக்கிராசனப் பதவியை உதறித் தள்ளினர். தமது கொள்கையையும் தத்துவத்

த்தையும் பரப்பவும் இறுதி லட்சியத்தை யடையவும் 'பார்வர்டு பிளாக்' என்ற புதுக் கட்சியை ஸ்தாபித்தார். ஆரம்பத்தில் அதில் பல பிரமுகர்கள் சேர்ந்தார்கள். ஸ்ரீ காமத் என்ற ஐ. ஸி. எஸ். காரர் ஒருவர் தமது பதவியையே ராஜிநாமாச் செய்து, போஸின் தலைமையை ஏற்றுத் தேச சேவையில் ஈடு பட்டார். போஸ் கட்சி சில மாகாணங்களில் நன்ருக வேரூன்றி யது. அதற்குள்ளாக, ஸ்ரீ போஸ், ஹால்வெல் ஞாபகச்சின்னக் கிளர்ச்சி சம்பந்தமாக 1940-வரு ஜூலை மாதம் 2-ந் தேதி சிறைப்படுத்தப்பட்டு, விசாரணையின்றிக் காவலில் வைக்கப் பட்டார். 8 மாதங்களுக்கு முன்னதாகச் செய்த பிரசங்கங் களுக்காக அவர் மீது இரு வழக்குகள் தொடரப்பட்டன. அதில் ஒரு வழக்கில், ஸ்ரீ போஸ் சார்பாக ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஜாமீனில் விடுவிக்க மாஜிஸ்டி ரேட்டும் சம்மதித்தார். ஆனல் சர்க்காரோ, விசாரணையின்றிக் காவலிலுள்ள கைதியை ஜாமீனில் கூட விடுவிக்க முடியாதெனக் கூறினர். இந்த அநீதியை எதிர்த்து, ஸ்ரீ போஸ், முன்னெச் சரிக்கை கொடுத்த பிறகு, 1940-ம் வருஷம் நவம்பர் மாதம் 28-ந் தேதி உபவாஸம் ஆரம்பித்தார். ஆனல் ஆரம்பித்த ஏழாவது நாளில், சர்க்கார், ஸ்ரீ போஸின் உடல் நிலையைக் குறித்துக் கவலைப்பட்டு, காவலில் வைக்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத் தரவை வாபஸ் வாங்கி டிஸம்பர் 5-ந் தேதி அவரை விடுதலை செய்தனர். அந்த விடுதலைக்குப் பிறகு 1941-ம் வருஷம் ஜனவரி 26-ந் தேதி ஸ்ரீ சுபாஷ் போஸ் காணமற் போன செய்தி வெளி வந்தது.

ஸ்ரீ போஸ், தமது வீட்டிலிருந்து புறப்படுமுன் இந் நாட்டு மக்களுக்கு அளித்த உபதேசம் வருமாறு :

"அடிமையாக இருப்பதே மனிதனின் பெரும் சாபக் கேடு. அநியாயத்தோடும் அக்கிரமத்தோடும் சமரசம் செய்து கொள்வதே மிகப் பெரிய குற்றமென்பதை மறக்காதீர்கள். எவ்வளவு தியாகம் செய்யவேண்டியிருந்த போதிலும் சரி, அதர்மத்தை எதிர்த்துப் போர் புரிவதே, மனிதனின் மகோன்னதமான புனித காரியம்.

"துணிந்து காரியத்தில் இறங்குகிற மக்களுக்கே சுதந் திரம் கிடைக்கிறது."

சுபாஷ் போஸ் ஹிமாசலத்திற்குப் போயிருக்கலாம்; அல்லது கல்கத்தாவிலேயே ஒளிந்து இருக்கலாம்; அல்லது

இந்தியாவில் வேறு எங்கேயாவது இருக்கலாம்; ரமணாசிரமத்திற்குப் போயிருக்கலாம் அல்லது ஐரோப்பாவுக்குப் போயிருக்கலாம்; அங்கே ஜெர்மனிக்குப் போயிருக்கலாம்; அல்லது தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்றெல்லாம் ஹேஷ்யங்களும் வதந்திகளும் கிளம்பின. இந்திய-ஆப்கன் எல்லையில் அவர் தாடியுடன் போனார் என்றும் வதந்தி வந்தது. பிற்பாடு அவர் இல்லை, அவரைப் போன்ற வேறு ஒருவரே போனார் என்று செய்தி வந்தது. ஆனால் 1946-ம் வருஷம் ஆரம்பத்தில்தான் ஸ்ரீ உத்தமசந்த் மூலம் உண்மை தெரியலாயிற்று. ஆப்கனிஸ்தானத்தில் அவர் தாடியுடன் காணப்பட்டார் என்ற வதந்தி ஊர்ஜிதமாயிற்று.

ஸ்ரீ சுபாஷ் போஸ் சிறையிலிருந்து விடுதலையானவுடனேயே இந்நாட்டிலிருந்து கிளம்பி, வெளிநாடுகளிலிருந்து இந்திய விடுதலைக்காகப் போராடுவதென்று உறுதி கொண்டுவிட்டார் எனவே எப்படி வெளிக்கிளம்புவதென்று அவரது மூளை வேலை செய்யலாயிற்று. மாறு வேஷத்தில்தான் போக வேண்டும். அதற்காக ஏற்பாடுகள் நடந்தன. தாடி வளர்த்துக்கொண்டு அந்த வளர்ச்சிக் காலத்தில் யாரும் தம்மைப் பார்ப்பதை அவர் அனுமதிக்கவில்லை. பூர்ண ஓய்வு வேண்டுமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார் என்ற சால்ஜாப்பில் யாரையும் சந்திப்பதை அவர் தவிர்த்துவிட்டார். யார் வேண்டுமானாலும் டெலிபோனில் பேசிக்கொள்ளலாம். தாடியும் வளர்ந்தது. 1941-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந் தேதியன்று இரவில் சுபாஷ் போஸ், தமது வீட்டைக் காத்து வந்த ஸி. ஐ. டி. களுக்குத் தெரியாமல் வீட்டிலிருந்து கிளம்பிவிட்டார். கல்கத்தா ரெயில்வே ஸ்டேஷனுக்கு நேராகச் செல்லாமல் நாற்பது மைல் தூரத்தில் உள்ள ரெயில்வே ஸ்டேஷனுக்கு மோட்டாரில் சென்றார். அங்கிருந்து பீஷாவருக்கு இரண்டாவது வகுப்பில் பயணம். சுபாஷ் போஸ், மௌல்வி வேஷத்தில் காணப்பட்டார். பெயர் ஜியாவுதீனாக மாறியது. இந்தியாவிலிருந்து தப்பிச் செல்ல இவருக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றவர்கள், பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் செய்துவைத்திருந்தார்கள். பிஷாவரில் இரண்டு நாள் வாசம். பிறகு அங்கிருந்து காபூலுக்குப் புறப்பாடு. மௌல்வி வேஷத்திலிருந்தவர், பட்டாணியன் வேஷம் போட்டுக்கொண்டார். ஊமையாகவும் செவிடாகவும் ஆகிவிட்டார். தாய்நாட்டின் விடுதலைக்காக வெளிநாடுகளில்

பலம் தேட 1941-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 20-ந் தேதி, மாஜி ராஷ்டிரபதி ஸ்ரீ சுபாஷ் போஸ் இந்தியாவின் எல்லையைத் தாண்டினார். ஆப்கானிஸ்தானத்தில் பிரவேசம். போஸும் அவருக்குத் துணையாக வந்த ரஹ்மத் கானும் (இவர் உண்மைப் பெயர் பகத்ராம்) காபூலில் படுமோசமான ஒரு சத்திரத்தில் தங்கினர். அங்கே பதின்மூன்று நாட்களுக்குத் தங்கி, போஸ் பட்ட அவஸ்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆப்கன் ஸி. ஐ. டி. போலீஸ்காரன் ஒருவன், இவர்களிடம் பாஸ்போர்ட்டுகள் இல்லை என்பதை அறிந்து, கிடைத்தவரை பிடுங்கித் தின்ன ஆரம்பித்தான். வாய்க்கரிசியாக அவனுக்குப் பணத்தையும், கையில் கட்டியிருந்த கடிகாரத்தையும் போஸ் கொடுத்தார்.

காபூலில் அந்நிய ஸ்தானாதிபதிகளுடன், குறிப்பாக ரஷ்ய ஸ்தானாதிபதியுடன் தொடர்பை ஸ்தாபித்துக்கொண்டு ரஷ்யாவுக்குச் செல்லவேண்டும் என்று போஸ் விரும்பினார். இந்தியாவிலிருந்து சற்றுச் சீக்கிரம் கிளம்புவதென்று அவர் முடிவு செய்திருந்தால், நல்ல துணையுடன் ரஷ்யா சென்றிருக்க முடியும். ஆனால் அழைத்துச் செல்வதாகக் கூறியவர், அதிக நாட்களுக்குக் கல்கத்தாவில் காத்திருக்க முடியாமல், ரஷ்யாவுக்குச் சென்றுவிட்டார். எனவே, காபூலில் ரஷ்யப் பிரதிநிதியின் உதவியை போஸ் நாடியது, தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாகிவிட்டது. ஒரு நாள் ரஹ்மத் கான், தெருவில் ரஷ்யக் கொடியுடன் போய்க்கொண்டிருந்த மோட்டாரை நிறுத்தி, அதிலிருந்தவரிடம் ஸ்ரீ சுபாஷ் பாபுவைப்பற்றிச் சொன்னார். அப்போது சற்றுத் தூரத்தில் போஸ் நின்றுகொண்டிருந்தார். "போஸ் எங்கே?" என்று ஸ்தானாதிபதி கேட்டதும், 'அதோ' என்று சுட்டிக் காட்டினார் ரஹ்மத் கான். "அவர்தாம் போஸ் என்பது எப்படி எனக்குத் தெரியும்?" என்று சந்தேகத்துடன் அந்த ரஷ்யர் கேட்டு, மோட்டாரை ஓட்டச் சொல்லிக் கிளம்பி விட்டார்.

அடுத்தபடியாக இதாலிய ஸ்தானாதிபதியுடன் போஸ் தொடர்பு ஸ்தாபித்துக்கொண்டார். மாஸ்கோ வழியாகத்தான் ஐரோப்பாவுக்குச் செல்ல வேண்டுமாதலால், இதாலியர் உதவியுடன் மாஸ்கோவுக்குப் போகலாம்; இல்லையென்றால் மாஸ்கோ வழியாக இதாலிக்கோ அல்லது ஜெர்மனிக்கோ சென்று, பிற்பாடு ரஷ்யர் சகாயத்தால் மாஸ்கோவுக்குத் திரும்பலாம் என்று போஸ் முடிவு செய்துவிட்டார். இதாலிய ஸ்தானாதிபதி

ரோமுக்கும் பெர்லினுக்கும் தகவல் அனுப்பினர். முஸோலினியும் ஹிட்லரும் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள். இந்தியாவிலிருந்து தப்பி வந்த போஸுக்குப் பாராட்டுக்களை அனுப்பினர். இவர்கள் மாஸ்கோ வழியாகப் போஸ் வருவதற்கு ரஷ்ய அனுமதியைக் கோரியபோது, ரஷ்யா இந்த யோசனையை ஆதரிக்கவில்லை. அதிக வற்புறுத்தலின் பேரிலேயே இறுதியில் ரஷ்யா சம்மதித்தது என்று அச்சு நாட்டுப் பிரதிநிதிகள் கூறிய போதிலும், இந்தக் கூற்றை அப்படியே நம்புவதற்கும் இல்லை. ஏனெனில், இதாலியர் ஸ்ரீ போஸுக்குத் தந்த பாஸ்போர்ட்டில் 'காராடைன்' என்ற பெயர் காணப்பட்டது. ரஷ்யரையும் ஏமாற்றி, காராடைன் என்ற பெயரைப் போஸுக்குச் சூட்டி, அவரை அச்சு நாடுகளுக்குக் கொண்டு வருவதென்று இதாலியரும் ஜெர்மனியரும் முடிவு செய்தனர் என்பதை இதிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம்.

மார்ச் மாதம் (1941-ம் வருஷம்) 18-ந் தேதி சுபாஷ் போஸ் ஆப்கனிஸ்தானத்திலிருந்து ரஷ்யா மார்க்கமாகப் பெர்லின் யாத்திரை கிளம்பிவிட்டார். அவருக்குத் துணையாக இரு ஜெர்மனியரும் ஓர் இதாலியரும் சென்றனர். மூவரும் ரெயிலில் மார்ச் 20-ந் தேதி ரஷ்ய எல்லையிலிருந்து மாஸ்கோவுக்குப் புறப்பட்டார்கள். அங்கிருந்து விமானத்தில் பெர்லினுக்குச் சென்றனர்.

ஜெர்மன் பத்திரிகைகள் சுபாஷ் போஸின் படத்தையும் அத்துடன் கீழ்க்காணும் செய்தியையும் பிரசுரித்தன:

> "இந்தியாவின் மகத்தான தலைவரும், இந்திய தேசிய காங்கிரஸின் மாஜி அக்கிராசனரும், கொஞ்ச காலத்திற்கு முன் இந்தியாவிலிருந்து மர்மமாக மறைந்தவருமான சுபாஷ் சந்திர போஸ் மார்ச் 28-ந் தேதி பத்திரமாகப் பெர்லின் வந்து சேர்ந்தார்."

காபூலில் சத்திரத்தில் ஸ்ரீ சுபாஷ் போஸ் தங்கியிருக்கையில் ஸி. ஐ. டி. யின் தொல்லையிலிருந்து தப்பவும், துர்நாற்றத்திலிருந்து விடுபடவும் முயன்றபோது ஸ்ரீ உத்தமசந்த் அளித்த உதவி இந்தியாவால் என்றும் மறக்க முடியாததாகும். ஸ்ரீ உத்தமசந்த் தமது ஜாகையில் போஸுக்கு இடமளித்து, போஸ் வெளிநாடு செல்லத் தம்மால் இயன்ற உதவியை யெல்லாம் செய்திருக்கிறார்.

ஸ்ரீ உத்தமசந்த் வடமேற்கு எல்லைப்புற மாகாண யுவர் சங்கத்தின் காரியதரிசியாக இருந்தவர். 1930-ம் வருஷ இயக்கத்தில் இரண்டு வருஷத் தண்டனை பெற்றிருக்கிறார். 1941 பிப்ரவரி 3-ந் தேதியிலிருந்து 48 நாட்கள் இவர் ஸ்ரீ போஸைத் தமது ஜாகையில் வைத்திருந்தார். போஸ் பெர்லினை யடைந்ததும், உத்தமசந்த் செய்த உதவி பிரிட்டிஷ் இந்தியப் போலீசுக்குத் தெரிந்தது. இவரை ஆப்கன் போலீஸார் கைது செய்து, கைவிலங்குடன் ஜலாலாபாத்துக்குக் கொண்டு வந்து, 1942-ஆம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதியன்று ஆப்கனிஸ்தானத்திலிருந்து பிரஷ்டம் செய்தனர். அவர் பிஷாவரை யடைந்ததும் பிரிட்டிஷ் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். 1946-ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில்தான் அவர் விடுதலையானார். நேத்தாஜி தங்க இவர் இடம் தந்ததற்காக இவர் சொத்துக்களில் பல, ஆப்கன் சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டன. லட்ச ரூபாய் சொத்துக்கள் ரூ. 12,000க்கு ஏலம் போயின.

ஸ்ரீ போஸ் ரஷ்யாவிலோ சீனாவிலோ இப்பொழுது இருப்பதாய்த் தாம் கருதுவதாக ஸ்ரீ உத்தமசந்த் சென்னையில் 1946-ஆம் வருஷம் ஏப்ரல் மாத மத்தியில் கூறினார்.

இந்தியாவிலிருந்து போஸ் தப்பிய வகையை வர்ணிக்கும் சினிமாப் படம் ஒன்று போஸிடமே இருக்கிறது. அதை இதுவரை யாருக்கும் அவர் காண்பிக்கவில்லை. ரங்கூனிலிருந்து அவர் விமானத்தில் கிளம்புகையில்கூட, அந்தப் பிலிமைத் தம்முடன் எடுத்துச் சென்றார். "என்றாவது ஒரு நாள் இந்தியாவுக்கு நான் போனதும் இந்தப் பிலிமை மகாத்மாஜிக்குக் காண்பிப்பேன்" என்று போஸ் சொல்லிக்கொண்டிருந்தாராம். "சலோ டில்லி", "ரத்த ஸ்நானம்" என்ற இரண்டு பிலிம்கள் இந்திய தேசீய ராணுவ வீரர்களுக்கும் ரங்கூனிலிருந்த இதர இந்தியர்களுக்கும் காண்பிக்கப்பட்டனவாம்.

போஸ் இந்தியாவிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றதும் அங்கே ராணுவப் பயிற்சி பெற்றிருக்கிறார். ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து, இந்தியாவின் விடுதலை இயக்கத்தை விளக்கியிருக்கிறார். ராணுவ, ராஜதந்திரங்கள் யாவற்றிலும் கைதேர்ந்தவுடன் அவர் படைபலத்துடன் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தைத் தாக்கி இந்தியாவுக்குள் சுதந்திர புருஷராக வருவதற்காகக் கீழ்க்கோடிக்கு வந்துவிட்டார்.

3

ஐரோப்பாவில் இ. தே. ரா.

ஐரோப்பாவில் தோன்றிய இந்திய தேசீய ராணுவம் ஜெர்மன் பாஷையில் "ப்ரீஸ் இண்டியன் (Freies Indien)" என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்த ராணுவத்தில் இருந்தவர்களில் பெரும்பாலோர் லிபியப் பாலைவனத்தில் ரோமலின் ஆப்பிரிக்கப் படையால் பிடிக்கப்பட்டவர்கள். ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் ஜெர்மனிக்கு வந்த பிறகு 1942-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந் தேதி இந்த ராணுவத்தை நிறுவினார். ஆரம்பத்தில் 400 பேர்கள் வேண்டுமென்று போஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி 1400 பேர்களுக்கு மேல் சேர்ந்தனர். பிற்பாடு எண்ணிக்கை 4000க்கு அதிகமாயிற்று. இவர்களுக்கு டிரஸ்டன், அனுபர்க், மற்றும் இதர ராணுவ ஸ்தலங்களில் இ. தே. ரா. பயிற்சி முகாம்களில் நவீன யுத்த முறைகளில் கைதேர்ந்த நிபுணர்கள் பயிற்சி தந்திருக்கிறார்கள். இந்த வீரர்கள் ஆப்பிரிக்கப் படையினரின் யூனிபாரத்தையொத்த யூனிபாரத்துடனும், தாவும் புலி உள்ள மூவர்ண பாட்ஜியுடனும் (படத்தைக் காண்க) இருந்தார்கள்.

ராணுவம் ஒரே 'பிரிகேட்' கொண்டது. அந்தப் பிரிகேட் 15 'கம்பெனி' களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றின் வீரர்கள் ஹாலந்தில் முதல் தற்காப்பு அரணுக்கு அனுப்பப்பட்டனர். தென் பிரான்ஸ் போர்டா (Bordeaux) பிரதேசத்திற்கும், லாரோசெல்லிக்கும் (Larochelle) அனுப்பப்பட்டார்கள். அங்கிருந்துதான் அவர்கள் வாபஸாகி, சரணடைய வேண்டியதாயிற்று. இதாலியில் லெப். ஜஸ்வந்த் சிங் பிந்தாரா என்பவரின் தலைமையில் இருந்த பட்டாளம் ஒன்றும் வாபஸாகி, சரணடைய வேண்டியதாயிற்று.

இந்திய தேசீய ராணுவத்தினர் பல்வேறு யுத்த அரங்கங்களுக்கு அனுப்பப்பட்ட போதிலும், அவர்களை மிகவும் தீவிர யுத்த சர்விஸுக்கு அனுப்ப வேண்டாமென்றும், பல்வேறு போர் சாஸ்திரங்களில் பயிற்சியளிக்குமாறும் ஜெர்மன் சர்க்காருக்கு நேதாஜியிடமிருந்து கண்டிப்பான தாக்கீது வந்தி

ருந்தது. அவர்கள் பிரிட்டிஷ் - அமெரிக்கப் படைகளைத் தவிர வேறு எந்த வல்லரசின் படைகளையும் எதிர்த்துச் சண்டை போடக் கூடாது என்றும் நேதாஜி கட்டளை பிறப்பித்திருந்தார். எனவே, ரஷ்ய முனைக்கு இந்திய தேசீய ராணுவத்தினர் யாரும் போகவில்லை. ஆஜாத் ஹிந்த் சர்க்காரின் அடிப்படைக் கொள்கையில் ஹிட்லர் சர்க்காரின் தலையீடு எதுவுமில்லை.

இந்திய தேசீய ராணுவ வீரர்கள் ஜெர்மன் பெண்களை விவாகம் செய்துகொள்ள ஜெர்மன் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டனர். இதன்படி சிலர் ஜெர்மன் பெண்மணிகளைக் கல்யாணம் செய்துகொண்டனர். ஆனால் ஜெர்மனிக்கு வெளியில் தங்கள் மனைவிகளை அழைத்துச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

1943-ம் வருஷ ஆரம்பத்தில் கிழக்கு ஆசியாவுக்கு நேதாஜி பிரயாணமான போது, ஐரோப்பாவில் இந்திய தேசீய ராணுவத்திற்கு ஸ்ரீ நம்பியார் கமாண்டராக நியமிக்கப்பட்டார். இவர் பிற்பாடு ஆஜாத் ஹிந்த் சர்க்காரில் ஒரு மந்திரியாக நியமனமானார்.

பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து இந்திய தேசீய ராணுவம் சண்டை போடாதிருக்கையில்கூட, டிகாலேயின் ஆட்கள் இ. தே. ரா. வீரர்களைக் கண்டதுமே சுட்டுக் கொல்ல ஆரம்பித்தார்கள். ஜெர்மனி சரணடைவதற்கு நாலைந்து நாட்களுக்கு முன்பே ஜெர்மன் கமாண்டர் ஒருவர், 337 இ. தே. ரா. வீரர்கள் கொண்ட படையிடம், "ஜெர்மனி சீக்கிரம் சரணடையப் போகிறது. ஜெர்மனியிலிருந்து நீங்கள் தப்பிவிடுங்கள். உங்களை வெறுக்கும் டிகாலே துருப்புகளிடம் நீங்கள் சிக்கினால் உங்களை அவர்கள் சுட்டுக் கொன்றுவிடுவார்கள்" என்று எச்சரித்தார். இந்த யோசனையைப் பின்பற்றி அந்த இந்தியப் படையினர் ஜெர்மனியில் ஹியூபர்க்கிலிருந்து கிளம்பி, பனி நிறைந்த பாதைகள் வழியாகச் சென்றனர். டிகாலே துருப்புகளைத் தவிர்க்க அவர்கள் எவ்வளவோ முயன்றும் பலிக்கவில்லை. 1945-ஆம் வருஷம் மே மாதம் 3-ந் தேதி இன்ஸ்பர்கில் டிகாலே துருப்புகளால் பிடிபட்டனர். இவர்களைச் சுட்டுக் கொல்ல டிகாலேயினர் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்ததை அறிந்த காப்டன் குவாஜா அலி என்ற இ. தே. ரா. கைதி, தந்திரோபாயத்தைக் கையாள ஆரம்பித்தார். "நாங்கள் எல்லோரும் பிரிட்டிஷ்சக்கரவர்த்தியின்விசுவாஸத்துருப்புகளே.

நாஜிகளின் கொடுங்கோலாட்சிக்கு ஆளானேம். இப்பொழுது நாஜிகள் பழிவாங்கப்பட்டது குறித்து எங்களுக்கு ரொம்பச் சந்தோஷம். ஜெர்மனியரைத் தோற்கடித்த பிரெஞ்சுக்காரர் களாகிய உங்களுக்கு நம் பாராட்டுக்கள்'' என்று பிரசங்கமாரி ஒன்றைச் செய்தார் காப்டன் குவாஜா அலி. டிகாலே துருப்புகள் புளகாங்கிதமடைந்தன. இ. தே. ரா. வீரர்களைச் சுடுவதில்லை என்ற முடிவுக்கு வந்தன. ஆனல் ஜெர்மன் சரணு கதிக்கு நாலைந்து நாட்களுக்குமுன் எங்கோலமில் (Engoleme) பிடிபட்ட 34 இ. தே. ரா. வீரர்களை டிகாலேயின் ஸோல்ஜர்கள் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

"நேத்தாஜி, ஹிட்லர் இருவரும் உயிரோடு இருக்கிருர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தக்க தருணத்திற்காக அவர்கள் கர்த்துக்கொண்டிருக்கிருர்கள். சரியான சமயத்தில் வெளிவருவார்கள்'' என்று இந்தியாவுக்குத் திரும்பிய காப்டன் குவாஜா அலி கூறுகிருர். ("பிரீ பிரஸ் ஜர்னல்'' 8—1—1946.) நேசப் படைகள் ரைன் நதியைத் தாண்டுவதற்கு முன்ஞல் ஜெர்மனியிலிருந்து ஹிட்லர் கிளம்பிவிட்டாராம்.

ஸ்ரீ சுபாஷ் போஸ் கிழக் கோடியில் தேசீய ராணுவம் திரட்டிச் சுதந்திரப் போரை நடத்த வேண்டுமென்று தீர்மானித்த பிறகு ஜெர்மனியிலிருந்து தம்முடைய இரண்டு மூன்று சகாக்களுடன் சப்மரீனில் கிழக்கோடிக்குக் கிளம்பினர். இவருக்காக ஜெர் மனியர் ஒரு சப்மரீனையும் ஜப்பானியர் மற்றொரு சப்மரீனை யும் தந்திருந்தார்கள். பெர்லினிலிருந்து போஸுடன் சுமத்ரா வுக்குச் சென்ற அவருடைய அந்தரங்கக் காரியதரிசி மேஜர் அப்துல் ஹஸன் இந்தியாவுக்குத் திரும்பி 1946-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் வெளியிட்ட தகவல்களிலிருந்துதான், போஸ் எவ்வளவு அபாயங்களைக் கடந்து வந்திருக்கிருர் என்பது இந் தியர்களுக்குத் தெரியவந்தது. பெர்லினிலிருந்து சுமத்ராவுக்கு வர மூன்று மாதங்கள் பிடித்தன. ஒவ்வொரு நிமிஷமும் அபாயம் இருந்திருக்கிறது. பகல் பூராவிலும் ஜலத்திற்கு அடியில் இருந்து இரவில் மாத்திரம் மேலே வந்து பிரயாணம் செய்ய வேண்டி யிருந்ததால் மூன்று மாதங்கள் பிடித்தன. வரும் வழியெல்லாம் அபாயப் பிராந்தியங்கள். அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் பகலில் தவறுதலால் போஸின் சப்மரீன் கட்லுக்கு மேல் வந்தபோது, அதை எதிரியின் வேட்டைக் கப்பல் ஒன்று பார்த்துச் சுட்டு வீழ்த்த முயன்றது. மளமளவென்று போஸின்

சப்மரீனை நோக்கி அந்தக் கப்பல் வந்தது. ஆனால் சில கஜ தூரமே இருக்கையில் சப்மரீன் ஜலத்திற்குள் அமுங்கித் தப்பி விட்டது.

போஸ் உயிரோடு இருப்பதாக மேஜர் ஹாஸன் நம்புகிறார். இது சம்பந்தமாக அவர் கூறுகிறார்: “ஜப்பானியர் சரணாகதி யடைந்த பிறகு ஆலோசனைக்காக டோக்கியோவுக்குச் செல்ல நேத்தாஜி தீர்மானித்து, தம்முடன் வருமாறு என்னையும் மேஜர் ஸ்வாமியையும் (தென் இந்தியர்) அழைத்தார். நாங்கள் எல்லாரும் செய்கோனுக்குச் சென்றோம். டோக்கியோவுக்கு உடனடியாக விசேஷ விமானம் ஒன்று செல்லுவதாகவும், ஆனால் நேத்தாஜிக்காக அதில் இரண்டு ஸ்தானங்களே கிடைக்கு மென்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே நேத்தாஜி கர்னல் ஹபிபுர் ரஹ்மானை மாத்திரம் அழைத்துக்கொண்டு டோக்கியோ வுக்குப் பிரயாணமானார். செய்கோனில் நாங்கள் இரண்டு நாட் களுக்குத் தாமதிக்க வேண்டியதாயிற்று. பிற்பாடு எங்களுக்குக் கிடைத்த விமானத்தில் நாங்கள் ஹனாய் வந்து சேர்ந்தோம். அங்கிருந்து போக விமானம் எதுவும் இல்லை என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இரண்டொரு நாட்களில் நேத்தாஜி மரணச் செய்தியைக் கேட்டோம். அந்தச் செய்தியை ஊர்ஜிதம் செய்ய முயன்றோம். ஆனால் ஊர்ஜிதம் கிடைக்கவில்லை.”

4

சுதந்திர சர்க்கார்

1943-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் கிழக்கு ஆசிய இந்தியப் பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்று சிங்கப்பூரில் நடைபெற்றது. சுதந்திர இயக்கத்திற்குத் தமக்குப் பதிலாக இனி ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்குவார் என்று அந்த மகாநாட்டில் ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸ் அறிவித்தார்.

1943-ம் வருஷம் ஜுலை மாதம் 2-ந் தேதி ஸ்ரீ சுபாஷ் போஸ் சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்று ஜுலை 4-ந் தேதி நடைபெற்றது. அதில் ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸ் ராஜீநாமாச் செய்ததும், ஸ்ரீ சுபாஷ் இந்திய சுதந்திர லீகின் அக்கிராசனப் பதவியை ஏற்றார். சுயராஜ்யம் பெறக் கங்கணம் கட்டிக்கொண்டு இந்தியாவுக்குள் வேலை செய்யும் காங்கிரஸ் மகாசபையின் அக்கிராசனப் பீடத்தில் இருமுறை அமர்ந்த வீரர், இந்தியாவுக்கு வெளியில் ஆயுத பலத்துடன் போர் புரிந்து இந்தியாவுக்குள் பிரவேசிக்கும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திர லீகின் அக்கிராசனப் பதவி ஏற்றார்.

1943-ம் வருஷம் ஜுலை மாதம் 5-ந் தேதி இந்திய சுதந்திர ராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இதை 2-வது இந்திய சுதந்திர ராணுவம் என்று சிலர் அழைக்கிறார்கள்—மோகன சிங்கால் அமைக்கப்பட்டதை முதல் ராணுவம் என அழைத்து. மோகன சிங்கின் ராணுவம் போரில் ஈடுபடச் சந்தர்ப்பம் ஏற்படாது போய்விட்டதால் இனிச் ‘சுதந்திர ராணுவம்’ என்பது போஸ் ராணுவத்தையே குறிக்கும். சுபாஷ் சந்திர போஸ் இந்த ராணுவத்தைப் பார்வையிட்டார். எதிர்நோக்கியுள்ள மகத்தான பொறுப்பையும் கருத்துக்களையும் அவர் எடுத்துரைத்து, யாருக்காவது நெஞ்சு உரம் இல்லையென்றால் உடனே விலகிவிடலாம் என்றார். ஆனால் ஒருவர்கூட விலகவில்லை!

தலைமையைப் போஸ் ஏற்றவுடன் சுதந்திர இயக்கம் மளமள வென்று முன்னேற ஆரம்பித்தது.

'ஏராளமான பெண்கள் இந்திய சுதந்திர லீகில் மெம்பர்களாகச் சேர்ந்தார்கள். அவர்களில் ராணுவ சேவை செய்ய முன் வந்தவர்கள் லெப். கர்னல் லக்ஷ்மி தலைமையில் ஜான்ஸி ராணி ரிஜிமெண்டை அமைத்தார்கள். (லெப். கர்னல் லக்ஷ்மி, மத்திய அசெம்பிளியின் சென்னை நகரத் தொகுதி மெம்பர் ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதனின் புதல்வி. லக்ஷ்மி, வைத்தியப் படிப்புப் படித்து, எம்.பி. பி. எஸ். ஆனவர். காலேஜ் படிப்புக் காலத்திலேயே இவர் சுதந்திர உணர்ச்சி காண்பித்துவந்தவர்.) பல பெண்கள் செஞ்சிலுவைப் பகுதியிலும் சேர்ந்தார்கள். பெண்களுக்கு ராணுவப் பயிற்சி தர 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் சிங்கப்பூரில் ஒரு முகாமும், பிற்பாடு ரங்கூனில் ஒரு முகாமும் ஆரம்பிக்கப்பட்டன.

ஷோனனில் (சிங்கப்பூரில்) பயிற்சி முகாமை 22-10-1943ல் திறந்து வைத்து நேத்தாஜி போஸ் செய்த பிரசங்கம் :

"ஜான்ஸி ராணி ரெஜிமெண்ட் பயிற்சி முகாமின் ஆரம்பம் மிகவும் அவசியமானதாயும் விசேஷம் நிரம்பியதாயும் இருக்கிறது. கிழக்காசியாவில் நமது இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு இது ஒரு விசேஷ அறிகுறியாக உள்ளது. இதன் விசேஷத்தை நன்கறிவதற்கு, நமது இயக்கம் அரசியல் இயக்கம் மட்டுமல்ல என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்திய மக்களுக்கே புத்துயிரளிக்கும் மகத்தான தொண்டில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். உண்மையில், நாம் இப்புத்துயிரளிக்கும் தறுவாயில்தான் இருக்கிறோம். ஆதலால் நாம் பலத்த முன்னேற்பாடுகளோடுதான் இருக்க வேண்டும். நமது வேலை பிரசார மதிப்புப் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சியல்ல என்பதை நீங்கள் மனத்தில் திடமாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவின் புது எழுச்சியை நம் கண்ணெதிரே பார்த்துவருகிறோம். இப்புத்துயிரின் உணர்ச்சி நம் பெண்களுக்கும் உண்டாகவேண்டுவது நியாய இயல்பாகும்.

"நமது பண்டைக்காலப் பெருமை மகா உன்னதமானது. நமக்கு ஒரு விசேஷ பரம்பரை இல்லாவிட்டால் ஜான்ஸி ராணி போன்ற பெண்மணிகளுக்கு இந்தியா பிறப்பிடமாக இருந்திருக்க முடியாது. புராதன இந்தியாவிலும் மாதுசிரோமணிகள் இருந்து வந்தார்கள். இந்தியாவில் ஸம்ஸ்கிருதக் கலைகள் ஓங்கியிருந்த பொழுது இந்தியப் பெண்மணிகளின் பெருமை வேரூன்ற ஆரம்

பித்துவிட்டது. இந்தியாவின் சரித்திரத்தில் நெருக்கடியான காலம் ஏற்பட்டபொழுது எவ்வளவோ பெருமை தங்கிய பெண்மணிகளை அளித்த அதே இந்தியாதான் ஜான்ஸி ராணியையும் அளித்தது. இப்பொழுது நமது தேசம் நெருக்கடியான நிலைமையை அடைந்திருக்கிறது. சந்தர்ப்பத்தில் நெருக்கடிக்குத் தக்கவாறு பொறுப்பை ஏற்றுத் தொண்டு செய்ய இந்தியப் பெண்கள் முன்வருவார்களென்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

"ஜான்ஸியின் சுதந்தரப் போருக்காக இந்தியா ஒரு லக்ஷ்மி பாயை அளிக்குமானால், இந்தியாவின் விடுதலைக்காக, 38 கோடி மக்களின் விடுதலைப் போருக்காக ஆயிரக்கணக்கான ஜான்ஸி ராணிகளை இந்தியா அளிக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

"ஆதிகால இந்தியாவில் மைத்திரேயி போன்ற பெண் மணிகள் தோன்றியதுபோல, சமீப காலத்திலும் மகாராஷ்டிரத்தில் அகலியாபாயும், வங்காளத்தில் பவானி ராணியும், ரஜியா பீகமும், நூர்ஜகானும், பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்பிப்பதற்குமுன் அரசாங்க நிர்வாகங்களை ஏற்றுக் கியாதியுடன் நீதி செலுத்தி வந்தார்கள். இந்திய பூமி செழிப்பானதென்று எனக்கு நன்கு தெரியும். ஆதிகாலத்தைப் போல இப்பொழுதும் இந்தியாவில் பெண் ரத்தினங்கள் தோன்றுவார்களென்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

"1921-ம் ஆண்டில் இந்தியாவில் ஒரு புதிய அரசியல் முன்னேற்ற கட்டம் ஆரம்பிக்கப்பட்டதும், ஆயிரக்கணக்கான- இல்லை, லக்ஷக் கணக்கான பெண்கள் இயக்கத்தில் பங்குபெற்றுத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். அந்தக் காலத்தில் ஜெயிலுக்குப் போவதென்றால் பெரிய காரியமாக நினைக்கப்பட்டது. நம்முடைய சகோதரர்களும் சகோதரிகளும் சிறைவாசத்தை ஏற்றுக்கொள்ளச் சித்தமானார்கள். 1921-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவிலுள்ள இரண்டு ஜெயில்களும் நிரம்பியிருந்தது எனக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது. பிரிட்டிஷார்கள் பிறகு இன்னும் இரண்டு ஜெயில்களைக் கட்டினார்கள்; அவைகளும் சில தினங்களில் நிரம்பிவிட்டன.

"ஜெயில் வாழ்க்கை இந்தியர்களைப் பயப்படச் செய்யவில்லை என்று கண்டுகொண்டதும் பிரிட்டிஷார் வேறு முறைகளைக் கையாளத் தலைப்பட்டார்கள். தலைவர்களை ஜெயிலில் அடைத்தும் பொதுமக்களைக் குண்டாந்தடி, துப்பாக்கிப் பிர

யோகங்களைக்கொண்டும் அடக்க முயன்றார்கள். அக்காலத்தில் சட்டமறுப்பு இயக்கத்தில் சேருவதென்றால் தடியடியையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் வாங்கிக்கொள்ளத் தயாராக வேண்டுமென்றுதான் அர்த்தமாக இருந்தது. ஆண்களும் பெண்களும் இவைகளை எதிர்க்க முன்வந்தார்கள். இது சம்பந்தமாகக் கல்கத்தாவில் நடந்த ஒரு சம்பவத்தை மறக்க முடியவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உத்தரவை மீறி நாங்கள் ஓர் ஊர்வலத்தை நடத்தியபொழுது போலீஸார் ஊர்வலத்தைக் கலைக்கக் குண்டாந்தடிப் பிரயோகம் செய்ய முன் வந்தார்கள். அந்தச் சமயத்தில் ஊர்வலத்திலிருந்த பெண்கள் சிலர் அணிவகுத்துப் போலீசாரின் குண்டாந்தடிகளைப் பொருட் படுத்தாமல், எங்களுக்கும் போலீசார்களுக்குமிடையே வந்து நின்றார்கள். இவ்விதமாக இந்தியாவில் மாதர்களின் வீரமும் திட சித்தமும் படிப்படியாய் ஓங்கிவருவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

“சத்தியாக்கிரக இயக்கச் சரித்திரத்திலும், புரட்சிக் கோஷ்டிச் சரித்திரத்திலும் நம் தைரியம் வாய்ந்த சகோதரிகள் வழிகாட்டிகளாக நின்று அருஞ் செயல்களைச் செய்திருக் கிறார்கள். வெகு தைரியமாய்ப் புரட்சி இயக்கத்தில் பங்குபெற்ற பல சகோதரிகளை எனக்குத் தெரியும். சத்தியாக்கிரகத்திற்கு ஒருவித மனோதிடம் வேண்டியிருப்பது போல் புரட்சி முயற்சி களுக்கும் அதிக மனவன்மை தேவைப்படுகிறது. இவ்விரண்டி லும் நம் சகோதரிகள் ஒருவிதத்திலும் பின்வாங்கவில்லை.

“1931-வது ஆண்டில் ஓர் ஆங்கிலேய நீதிபதி இரண்டு பெண்களால் சுட்டு வீழ்த்தப்பட்டார். அவர்களில் ஒருவருக்கு 16 வயதும், மற்றவருக்கு 17 வயதுமே ஆகும். இந்தியாவில் பொதுப்படையாக ஆண்களே நீதிபதியைக் கண்டு பயப்படுவது சாதாரணமாகும். அப்படி இருந்தும் இவ்விரு பெண்மணி களும் நீதிபதியின் வீட்டிற்குச் சென்று தைரியமாய் அவரைச் சுட்டுவிட்டார்களென்றால், இவர்களின் தைரியத்தை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். இவ்வித மனோதிடம் வானத்திலிருந்து வந்து இறங்கவில்லை. இந்தியாவின் புராதன பரம்பரையிலேயே வேரூன்றிக் கிடக்கிறது.

“1928-ம் ஆண்டிலிருந்து நான் பெண்களின் ஸ்தாபனங் களில் சிரத்தையுள்ளவனாக இருந்துவருகிறேன். போதிய

வசதியும் சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டால் அவர்கள் சமயோசித மான அரும் பெரும் செயல்களைப் புரியவல்லமை படைத்தவர் களாக இருக்கிறார்கள். வங்காளத்தில் ராஷ்டிர மகிளா சங்கம் என்று ஒரு மாதர் சங்கம் இருந்தது. அது இணையற்ற தொண்டு புரிந்துவந்தது. 1928-ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் 500 பெண்களடங்கிய ஒரு வாலண்டியர் படை திரட்டப்பட்டது. அவர்களுடைய பயிற்சி முறையும் அணிவகுத்து நிற்கும் முறை யும் எனக்கு அதிகத் திருப்தியை அளித்தன. போதிய ஊக்கமும் சந்தர்ப்பமும் அளித்தால் நம் சகோதரிகள் பெரிய சேவை செய்ய வல்லமை படைத்தவர்களாவார்கள் என்னும் எனது நம்பிக்கை திடம் பெற்றது. அடிமைப்பட்ட நமது நாட்டில் கிடைக்கக்கூடிய ஆயுதங்களைக்கொண்டு (அதாவது குண்டாந் தடி, ஈட்டி முதலியவைகளைக் கொண்டு) பயிற்சியளிக்கப் பெற்றதில், நம் சகோதரிகள் பெரிய முன்னேற்றத்தை அடைந் தார்கள்.

"இந்திய சுதந்திரக் கழகத்தின் நடவடிக்கைகளை நடத்து வதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டபொழுது, இந்த நெருக் கடியான காலத்தில் நம் நாட்டுப் பெண்களுக்கும் தேசசேவை செய்யச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று உணர்ந்தேன். இது சம்பந்தமாகச் சிலரின் ஆலோசனையைக் கேட்டேன். இந்தியா வில் ஒரு மாதர் படையைத் திரட்டுவதென்றால் சாத்தியப்படு மென்றும் அவ்வாறு கிழக்காசியாவில் முயலுவது அசாத்திய மென்றும் சிலர் கூறினார்கள். அவர்கள் கூறியது என் தீர் மானத்தைச் சிறிதும் அசைக்கவில்லை. இன்று நீங்களே நம் சகோதரிகள் செய்து முடித்திருப்பவைகளைப் பார்க்கிறீர்கள். அவர்களின் வேலை ஜூலை மாதத்தில்தான் ஆரம்பமாயிற்று. இப்பொழுதுதான் அவர்களின் பயிற்சி முகாம் திறக்கப்பெற் றிருக்கிறது. இதுகாறும் ஏற்பட்ட காலதாமதம் அவர்களால் ஏற்பட்டதல்ல. தகுந்த வாசஸ்தலத்தைக் கண்டுபிடிப்ப தற்கும், மற்ற ஏற்பாடுகள் செய்வதற்கும் இவ்வளவு கால தாமதம் நேரிட்டது. இதற்கிடையில் நம் சகோதரிகள் பொறுமை யிழந்து கவலையுற்றிருந்ததும் எனக்குத் தெரியும். அவர்களெல்லாம் ஒன்றுகூடி, "நீங்கள் எங்களை மறந்துவிட்டீர் களா?" என்று கேட்பதற்கு ஒரு பிரதிநிதி கோஷ்டியை அனுப்ப ஏற்பாடு செய்ததாகவும் கேள்விப்பட்டேன். இன்று பயிற்சி முகாம் தயாராகிவிட்டதும், ஜான்ஸி ராணியின் பிறந்த

தினமாகிய இன்று திறப்பு விழாவை நடத்தி வைப்பது எனக்குப் பேரானந்தத்தை விளைவிக்கிறது.

"இந்தச் சந்தர்ப்பத்தில் ஜான்ஸி ராணியைப்பற்றிச் சில வார்த்தைகள் உங்களுக்குச் சொல்லலாமென்று நினைக்கிறேன். ஜான்ஸி ராணி யுத்தத்தை ஆரம்பித்தபோது அவருக்கு வயது இருபதே. இருபது வயதுப் பெண் குதிரை மேலிருந்து சமர்க் களத்தின் நடுவில் வாள் வீசுவதென்பது எவ்வாறு இருக்குமென் பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அவருக்கு எவ்வளவு ஊக்கமும் தைரியமும் இருந்திருக்க வேண்டுமென்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள். அவருக்கு எதிராக நின்று போர்புரிந்த ஆங்கிலேயக் கமாண்டர், புரட்சிக்காரர்களிலெல்லாம் ஜான்ஸி ராணியே மிகப் பராக்கிரமசாலி என்று கூறினர். ஜான்ஸி ராணி அவ்வளவு விசேஷ பராக்கிரமத்தைப் பெற்றிருந்ததால் அந்தக் கமாண்டர் இதை மறைத்துக் கூறுவதற்கு முடியவில்லை. மேலும் தாமே எதிர்நின்று யுத்தம் செய்ததால் ராணியின் பராக்கிரமம் நன்கு விளங்கலாயிற்று. முதலில் ஜான்ஸிக் கோட் டையிலிருந்து யுத்தம் செய்தார். கோட்டை முற்றுகையிடப் பட்டது. உடனே அவர் இன்னும் சிலரோடு கால்பிக்குத் தப்பி யோடி அங்கிருந்து யுத்தம் செய்தார். அவ்விடத்திலிருந்து பின் வாங்க நேரிட்டபொழுது தாந்தியா தோபேயோடு ஒப்பந்தம் செய்துகொண்டு குவாலியர் கோட்டையைத் தாக்கி அதைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு அதை முக்கியத் தளமாக வைத்துக்கொண்டு யுத்தத்தை நடத்தினர். கடைசியாக அவ் விடத்தில் யுத்தம் செய்தபொழுது யுத்த களத்திலேயே இறந்தார்.

"ஒன்றுக்கு அதிகமான தோல்வியிருந்தும் விடாது யுத்தம் செய்ய எவ்வளவு தைரியம் படைத்திருக்க வேண்டுமென்பதை நினைத்துப் பாருங்கள். இருபது வயதுள்ள ஜான்ஸி ராணி இவ்வாறு மனம் தளராமல் யுத்தம் நடத்தியது இன்னும் அநேக தலைமுறைகளுக்குப் பெருமையும் உணர்ச்சியும் சலியாத ஊக்கமும் அளிக்கக்கூடிய உதாரணமாக இருக்குமன்றோ?

"துரதிருஷ்டவசமாய் ராணி தோல்வியடைந்தார். அது அவருடைய தோல்வியல்ல; இந்தியாவின் தோல்வியாகும். அவர் இறந்துவிட்டார். ஆனால் அவருடைய ஆத்மா ஒருகாலும் இறக்காது. இந்தியா இன்னுமொரு முறை ஜான்ஸி ராணிகளை அளித்து ஜயத்தை அடையக்கூடும்.

"இன்று திறக்கப்படும் முகாமில் 156 சகோதரிகள் பயிற்சியை ஆரம்பிக்கப்போகிறார்கள். ஷோனனில் இந்தத் தொகை ஆயிரத்தை அடைந்துவிடுமென்று நம்புகிறேன். தாய்லந்து, பர்மா முதலிய இடங்களிலும் பெண்களுக்குப் பயிற்சி முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஷோனன் முகாம்தான் பிரதம முகாமாக விளங்குமென்று நான் நம்புகிறேன். ஆதலால் இங்கு 1,000 பலம் வாய்ந்த ஜான்ஸி ராணிகள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

"ஷோனன் ஜான்ஸி ராணிப் படையின் தளகர்த்தருடைய வீரம் செறிந்த சொற்களை இப்பொழுதுதான் கேட்டீர்கள். டில்லியை நோக்கி அணிவகுத்துச் செல்வதற்கு இரவும் பகலும் களைப்பின்றி வேலை செய்யவேண்டிய தீர்மானத்தை அவர் தெரிவித்துக்கொண்டார். நம் சகோதரர்களிடமிருந்து "டில்லிக்குச் செல்வோம்" என்னும் சுலோகத்தைக் கேட்டு ஆனந்தித்ததுபோல் நம் சகோதரிகளிடமிருந்தும் அந்தச் சுலோகத்தைக் கேட்டு நான் ஆனந்தமடைகிறேன்.

"இவ்வார்த்தைகளுடன் நான் இந்தப் பயிற்சி முகாமைத் திறந்து வைக்கிறேன். நான் உங்களுக்கு இப்பொழுது விடுத்த செய்தியை நீங்கள் இருக்கும் இடங்களுக்கு எடுத்துச் சென்று என் திட்டத்தைப் பூர்த்தி செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு விண்ணப்பித்துக்கொள்கிறேன்."

ஜான்ஸி ராணிப் படையில் முதலில் 185 பேர்கள் சேர்ந்தனர். கடைசியில் மொத்தம் 1000 பெண்கள் சேர்ந்திருந்தார்கள். இவர்கள் பர்மா, மலாய், பிலிப்பைன்ஸ், ஜாவா, தாய்லந்து ஆகிய நாடுகளில் வசித்து வந்த இந்தியப் பெண்கள். இந்த வீரப் புதல்விகளுக்குப் பயிற்சி தந்தவர்கள் இந்திய அதிகாரிகளே. (இ.தே.ரா. ஆண் படைகளுக்கும் இந்திய அதிகாரிகளே பயிற்சி தந்திருக்கிறார்கள்.)

பயிற்சிக் காலத்தில் காலையிலிருந்து மாலைவரை இவர்கள் உழைக்க வேண்டும். காலையில் முதலில் கொடிவணக்கமும், பிற்பாடு தேகப்பயிற்சியும் நடைபெறும்.

ஜான்ஸி ரெஜிமெண்டில் 'தற்கொலைப் படை'யும் இருந்தது. கடைசிவரை போராடுவதாக ரத்தத்தால் பிரதிக்ஞையில் இவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

ரெஜிமெண்டில் ஆம்புலன்ஸ் பகுதி ஒன்று மிகத் திறமையாகச் சேவை செய்திருக்கிறது.

ஜான்ஸி ரெஜிமெண்டைச் சேர்ந்த வீரப் பெண்மணிகள் மோல்மீன் போரில் எதிரித் துருப்புகளை எதிர்த்துச் சண்டை போட்டிருக்கிறார்கள். ஒரே மூச்சில் பதினாறு மணி நேரம் போர் புரிந்திருக்கிறார்கள். எதிரிப் படைகளிடம் டாங்கிகளும் பீரங்கிகளும் இருந்தபோதுகூட இந்தப் பெண்மணிகள் வெறும் துப்பாக்கிகளையும் ரவைகளையும் கொண்டு எதிர்த்திருக்கிறார்கள். எதிரிப்படையின் முன்னேற்றத்தை இவர்கள் பல மணி நேரம் தடை செய்து, காயமடைந்தனர். இரு பெண்கள் கொல்லப்பட்டனர்.

சிறுவருக்காகப் பால சேனை நிறுவப்பட்டது. இதில் சேர்ந்தவர்கள், "தற்கொலைப் படையாக" வேலை செய்தனர். சின்னஞ் சிறுவர், சாவது நிச்சயம், ஆனால் அடையப் போவது சுயராஜ்யம், தாங்கள் போகப் போவது வீர சொர்க்கம் என்பதை நன்கு உணர்ந்து, பர்மாவில் பிரிட்டிஷாருடன் நடந்த போரில், கையில் குண்டுகள் ஏந்தி, வேகமாக வரும் பிரிட்டிஷ் டாங்கிகள் முன் படுத்து விடுவார்கள். அடுத்த நிமிஷத்தில் டாங்கி தூள் தூளாகி விடும். புளகாங்கித மடைந்த சிறுவனின் ஆத்மா, மண்ணுலகை விட்டு, விண்ணுலகு போய்விடும்! கடல் கடந்த இந்திய ஆண்கள் இவ்வாறுகத் தேசிய ராணுவத்திலும், அவர்களுடைய மனைவிகளும் பெண்களும் ஜான்ஸி ரெஜிமெண்டிலும், பாலர் பால சேனையிலும் சேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் சொத்துக்களைச் சுதந்திர லீகுக்குக் கொடுத்தாகிவிட்டது. எனவே, சொத்துக்கள் என்ன ஆகுமோ என்ற கவலை இல்லை! உண்மையில் உடல், பொருள், ஆவி என்ற வார்த்தைகளின் முழு அர்த்தப்படி தியாகம் செய்தவர்கள் அந்த வீர ஆண்களும் பெண்களும் பால்மணம் மாறாத குழந்தைகளுமே.

1942-ல் தான் முதல்முதலாகத் தேசிய ராணுவத்தில் மனமொப்பி இந்தியர் யாவரும் சேரவேண்டுமென்ற அழைப்பு வெளியிடப்பட்டது. அநேகர் பதிவு செய்துகொண்டார்கள். ஆனால் பயிற்சி பெறாதவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் ஜப்பானியர் பல முட்டுக்கட்டைகளைப் போட்டதால் அபிவிருத்தி அதிகமாக இல்லை. ஆனால் சுபாஷ் வந்த பிறகோ, சேனைக்கு ஆள் சேர்த்தலும் பயிற்சியும் மிக ஜரூராக நடைபெற்றன. மலாயில் நான்கு பயிற்சி முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்திய ராணுவத்தின் N. C. O. (நான்கமிஷன்டு அதிகாரிகள்), சிப்பாய்கள், இந்திய ஸிவிலியன்கள் ஆகியவர்களிலிருந்து அதிகாரிகள் பதவிப் பயிற்சிக்காக நபர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டார்கள். பயிற்சிப் பள்ளிக்கூடம் வெகு நன்ருக நடைபெற்றது.

இந்திய சுதந்திர லீகுக்கு இந்தியர் ஏராளமாக நன்கொடைகளைத் தந்தார்கள். லீகுக்கும் தேசிய ராணுவத்திற்கும் தேவையான சாமான்களில் அநேகமாக எல்லாம் இந்தியரிடமிருந்து இலவசமாகக் கிடைத்தன.

சுதந்திர இயக்கத்தை மேற்கொண்டு பலப்படுத்துவதற்காக ஸ்ரீ சுபாஷ் போஸைத் தலைவராகக் கொண்ட சுதந்திர இந்தியத் தாற்காலிக சர்க்கார் 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ந் தேதி சிங்கப்பூரில் அமைக்கப்பட்டது. உடனே அதே தினத்தில் அந்தச் சர்க்கார் ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. அதன் முழு வாசகம் :

இந்திய மக்கள் 1757-ம் வருஷம் முதல்முதலாகப் பிரிட்டிஷாரிடம் தோல்வியுற்ற பிறகு, நூறு வருஷகாலத்தில் பல கஷ்டமான போர்களில் மூர்க்கமாகச் சண்டை போட்டிருக்கிருர்கள். அந்தக் கால சரித்திரத்தில், இணையற்ற வீரத்திற்கும் தியாகத்திற்கும் பல உதாரணங்கள் மிளிர்கின்றன. அந்தச் சரித்திர ஏடுகளில், வங்காளத்தைச் சேர்ந்த சுராஜுத்தௌலா, மோகன்லால், தென்னிந்தியாவைச் சேர்ந்த திப்பு சுல்தான், வேலு தம்பி, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த அப்பா ஸாகேப் பான்ஸ்லே, பீஷ்வா பாஜி ராவ், அயோத்தி பேகம்கள், பஞ்சாபைச் சேர்ந்த ஸர்தார் ஷியாம்சிங் அதாரிவாலா, கடைசியாக, ஆனால் யாருக்கும் வீரத்திலோ தீரத்திலோ சளைக்காத ஜான்ஸி ராணி லக்ஷ்மி பாய், தாந்தியா தோபே, தம்ரான் மகாராஜ் குன்வார் சிங், நானு ஸாகிப் முதலிய வீரர்களின் பெயர்கள் பொன் எழுத்துக்களால் சாசுவதமாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷார் இந்தியா முழுமைக்கும் அபாயகரமானவர்கள் என்பதை, நம் துர்ப்பாக்கிய வசமாக, நம் முன்னேர்கள் முதலில் உணரவில்லை. எனவே பகைவனை எதிர்க்க அவர்கள் ஐக்கிய முன்னணியாக இல்லை. இறுதியில் உண்மை நிலைமையை இந்திய மக்கள் உணர்ந்து, ஒன்று

பட்டு, 1857-ம் வருஷத்தில் பகதூர் ஷாவின் கொடியின் கீழ்ச் சுதந்திர புருஷர்களாகத் தங்களுடைய கடைசிப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் அவர்களுக்குப் பல வெற்றிகள் கிடைத்தபோதிலும், துரதிருஷ்டமும் தவறான தலைமையும் படிப்படியாக அவர்களை இறுதி வீழ்ச்சிக்கும் அடிமை நிலைக்கும் கொண்டு வந்தன. எனினும், ஜான்ஸி ராணி, தாந்தியா தோபே, குன்வார் சிங், நானா ஸாகிப் போன்ற வீரதீரர்கள் தேசத்தின் ஞாபகத்தில் மறையா நட்சத்திரங்களாக வாழ்ந்து, ஜ்வலித்து, மேலும் அதிகத் தியாக தீரச் செயல்களைப் புரிய நமக்கு ஊக்கத்தை அளிக்கிறார்கள்.

1857-க்குப் பிறகு பிரிட்டிஷாரால் பலவந்தமாக நிராயுதபாணிகளாக்கப்பட்டு, பயங்கரத்திற்கும் மிருகத்தனத்திற்கும் ஆளாக்கப்பட்ட இந்திய மக்கள் கொஞ்ச காலத்திற்குத் தலை தூக்காமல் இருந்தார்கள்; ஆனால் 1885-ம் வருஷம் இந்திய தேசீய காங்கிரஸ் ஜனித்ததும் புதிய எழுச்சி ஏற்பட்டது. 1885-ம் வருஷத்திலிருந்து முதல் மகா யுத்த பூர்த்திவரை இந்திய மக்கள், இழந்த சுதந்திரத்தை மீட்கும் முயற்சியில், சாத்தியமான எல்லா முறைகளையும் கைக்கொண்டனர். அதாவது கிளர்ச்சி, பிரசாரம், பிரிட்டிஷ் சாமான்கள் பகிஷ்காரம், பயங்கர இயக்கம், நாசவேலை ஆகியவற்றில் இறங்கினார்கள். இறுதியில் ஆயுதம் தாங்கிய புரட்சி நடத்தினார்கள். ஆனால் இந்த முயற்சிகளுக்கு அப்போதைக்கு வெற்றி கிடைக்கவில்லை. கடைசியாக இந்திய மக்கள் தோல்வி மனப்பான்மையால் பீடிக்கப்பட்டு, புதிய முறையைத் தேடிக்கொண்டிருக்கையில், மகாத்மா காந்தி தம் புதிய ஆயுதங்களான ஒத்துழையாமை, சட்ட மறுப்பு ஆகியவற்றுடன் வந்தார். அதற்குப்பின் இருபது வருஷங்களுக்கு இந்திய மக்கள் தீவிர தேசாபிமான நடவடிக்கை கட்டத்தில் ஆழ்ந்தார்கள். சுதந்திர உபதேசம் ஒவ்வோர் இந்தியனின் வீட்டுக்கும் கொண்டுபோகப்பட்டது. சொந்த உதாரணத்தின் மூலம், கஷ்டப்படவும், தியாகம் செய்யவும், சுதந்திரத்திற்காக உயிரையும் கொடுக்கவும் மக்கள் போதிக்கப்பட்டார்கள். நகரங்கள், டவுன்கள், கிராமங்கள் எல்லாவற்றிலும் உள்ள மக்கள், ஒரே அரசியல் ஸ்தாபனத்தில் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். எனவே, இவ்வாறாக

இந்திய மக்கள், இழந்த அரசியல் உணர்ச்சியை மீட்ட தோடு, மீண்டும் அரசியலில் தங்கள் சக்தி உணரப்படும்படி செய்தார்கள். இந்திய மக்கள் இப்பொழுது ஒரே குரலில் பேசி,பொது லட்சியத்தையடைய ஒருமுக உறுதியுடன் பாடு படலாம். 1937-ம் வருஷத்திலிருந்து 1939-ம் வருஷம் வரை எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிகள் மூலம், தங்கள் விவகாரங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்ளத் தயார், நிர்வகிக்கத் தங்களால் முடியும் என்பதை அவர்கள் நிரூபித் தார்கள். எனவே இப்போதைய உலக யுத்த ஆரம்பத் தறுவாயில் இந்திய விடுதலைக்காக இறுதிப் போராட்டத் தை நடத்த நிலைமை பக்குவமாயிற்று. இந்த யுத்த காலத் தில் ஜெர்மனி தன் நேச நாடுகளின் உதவியுடன் ஐரோப் பாவில் நம் எதிரிக்கு மண்டை தெறிக்கும் அடிகளைக் கொடுத்திருக்கிறது. கிழக்கு ஆசியாவில் ஜப்பான் தன் நேச நாடுகளின் உதவியுடன் நம் எதிரியை அடித்து வீழ்த்தியிருக்கிறது. மிகவும் சந்தோஷகரமான சந்தர்ப் பங்களின் சேர்க்கை அனுகூலத்தால் இந்திய மக்கள் தங்கள் தேசிய விமோசனத்தையடைய இன்று அற்புதமான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

கடல்கடந்த இந்தியரும் சமீப கால சரித்திரத்தில் முதல்முதலாக ராஜீய விழிப்படைந்து ஒரு ஸ்தாபனத்தில் ஒன்றுபட்டிருக்கிறார்கள். அவர்கள் சிந்தனையிலும் உணர்ச் சியிலும் தங்கள் தாய்நாட்டிலுள்ளவர்களுக்குச் சரிசமமாக இருப்பதோடு, சுதந்திரப் பாதையிலும் அவர்களுடன் சரி சமமாக முன்னேறி வருகிறார்கள். குறிப்பாகக் கிழக்கு ஆசி யாவில் 20 லட்சத்திற்கு அதிகமான இந்தியர்கள் இப் பொழுது "முழு பலத் திரட்டல்" சுலோகத்தின் தூண்டுத லால் ஒரே அரணாக ஒன்றுபட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு முன்னால் இந்திய விடுதலை ராணுவத்தின் கட்டுப் பாடான துருப்புகள் "டில்லி நோக்கி முன்னேறுவோம்" என்ற கோஷத்துடன் நிற்கின்றன.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் தன் நய வஞ்சகத்தால் இந்தியருக்குக் கோபாவேசத்தை உண்டாக்கி, கொள்ளை யடித்துச் சூறையாடி இந்தியரைப் பட்டினி போட்டு மடிய வைத்ததால், இந்தியரின் நல்லுறவை அடியோடு போக்கிக் கொண்டது; இப்பொழுது 'குத்துயிர், கொலை உயிரில்'

இருக்கிறது. அந்தத் துக்கம் நிறைந்த ஆட்சியின் கடைசிச் சின்னங்களை நாசமாக்க ஒரே ஒரு ஜ்வாலைதான் வேண்டும். அந்த ஜ்வாலையை மூட்டுவதே இந்திய விடுதலை ராணுவத்தின் வேலையாகும். தாய்நாட்டில் நிச்சயம் கிடைக்கப் போகும் ஸிவில் ஜனத்தொகையின் உற்சாகமான ஆதரவு, கட்டாயம் கிடைக்கப் போகும் பிரிட்டிஷ் இந்திய ராணுவப் பெரும் பகுதியின் ஆதரவு, வெளிநாடுகளிலுள்ள தைரியம் மிக்க, தோற்கடிக்க முடியாத நேசநாடுகளின் பக்க பலம் ஆகியவற்றுடனும்,ஆனால் முதல்முதலாகத் தனது சொந்த பலத்தையே நம்பிக்கொண்டும், இந்திய விடுதலை ராணுவம் தன் சரித்திரப் பிரசித்தமான கடமையைத் தன்னால் நிறைவேற்ற முடியும் என்று திட நம்பிக்கை கொண்டிருக்கிறது.

சுதந்திரம் இப்பொழுது உதயமாகப் போவதால், இந்திய மக்களுடைய தாற்காலிக சர்க்காரை அமைப்பதும் அந்தச் சர்க்காரின் கொடியின் கீழ்க் கடைசிப் போராட்டத்தை ஆரம்பிப்பதும் ஒவ்வோர் இந்தியனின் கடமையாகும். ஆனால் இந்தியத் தலைவர்கள் எல்லாரும் சிறையில் இருப்பதாலும், உள்நாட்டில் ஜனங்கள் பூர்ண நிராயுதபாணிகளாக இருப்பதாலும் இந்தியாவுக்குள் தாற்காலிக சர்க்காரை அமைப்பதோ அல்லது அதன் தலைமையில் போராட்டத்தைத் துவக்குவதோ சாத்தியமே இல்லை. எனவே இந்தக் கடமை - ஆஜாத் ஹிந்த் (சுதந்திர இந்தியத்) தாற்காலிக் சர்க்காரை அமைப்பதும், விடுதலை ராணுவத்தின் (அதாவது ஆஜாத் ஹிந்த் பௌஜ் அல்லது இந்திய தேசீய ராணுவம்) உதவியோடு கடைசிப் போரை நடத்துவதும் - கிழக்கு ஆசியாவிலுள்ள இந்திய சுதந்திர லீகைச் சாருகிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள எல்லாத் தேசபக்த இந்தியர்களும் இதற்கு உதவக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தாற்காலிக சர்க்காரை இப்பொழுது நாங்கள் அமைத்துவிட்டதால், எங்கள் பொறுப்பைப் பூர்ணமாக உணர்ந்து, காரியத்தில் இறங்குகிறோம். எங்கள் வேலையையும், தாய்நாட்டின் விடுதலைக்காக நாங்கள் ஆரம்பித்துள்ள போரையும் ஆண்டவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறோம். அன்னையின் விடுதலைக்காக நாங்கள் எங்கள்

உயிரையும், ஆயுதந்தாங்கிய எங்கள் சகாக்களின் உயிரையும் அர்ப்பணம் செய்யத் தயாரெனப் பிரதிக்ஞை செய்கிறோம். எங்கள் நாடு சுபிட்சமாக இருக்கவும் உலக நாடுகளிடையே தலைசிறந்து விளங்கவும் எங்கள் உயிரைக் கொடுக்கத்தயாராக இருக்கிறோம். இந்திய பூமியிலிருந்து பிரிட்டிஷாரையும் அவர்களுடைய கூட்டாளிகளையும் வெளியேற்றுவதற்காகப் போராட்டத்தைத் துவக்கி நடத்துவது தாற்காலிக சர்க்காருடைய பொறுப்பாகும். பிற்பாடு தாற்காலிக சர்க்கார்இந்திய மக்களுடைய விருப்பப்படிஇந்திய மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிரந்தர தேசிய சர்க்கார் ஸ்தாபிதமாக ஏற்பாடுகளைச் செய்யும். பிரிட்டிஷாரும் அவர்களுடைய நேச நாட்டினரும் விரட்டப்பட்ட பிறகு, இந்தியாவில் நிரந்தர தேசிய சர்க்கார் ஏற்படுகிறவரை, தாற்காலிக சர்க்கார் இந்திய மக்கள் சார்பில் நாட்டு விவகாரங்களை நிர்வகிக்கும்.

ஒவ்வோர் இந்தியனுடைய விசுவாசத்தையும் கோர, தாற்காலிக சர்க்காருக்கு உரிமை உண்டு ; அந்த விசுவாசத்தை இதன் மூலம் கோருகிறது. மத சுதந்திரமும் எல்லாப் பிரஜைகளுக்கும் சரிசம சந்தர்ப்பமும் உண்டு என்று சர்க்கார் உத்தரவாதமளிக்கிறது. தேசம் பூராவின் சுபிட்சத்திற்காகவும், எல்லாப் பாகங்களின் சுபிட்சத்திற்காகவும், நாட்டின் எல்லாப் புதல்வர்களையும் சரிசமமாகப் பாவித்து, ஏற்கனவே அந்நிய ஆட்சி சூழ்ச்சி செய்து உண்டாக்கியுள்ள வேற்றுமைகளை யெல்லாம் ஒழிக்கும் என்று உறுதி கூறுகிறது.

எங்கள் கொடியின் கீழ்த் திரண்டு, இந்திய சுதந்திரத்திற்காகப் போர்புரியுமாறு ஆண்டவன் பெயரால், இந்திய மக்களை ஒரே சமுதாயமாக ஐக்கியப்படுத்தி வைத்திருந்த நம் மூதாதையரின் பெயரால், வீரதீரம், தியாகம் ஆகிய பரம்பரைப் புகழைத் தந்துள்ள சொர்க்கவாசிகளின் பெயரால், இந்திய மக்களே, உங்கள் யாவரையும் அழைக்கிறோம். இந்தியாவில் பிரிட்டிஷார்மீதும், அவர்களுடைய கூட்டாளிகள் மீதும் இறுதிப் போராட்டத்தைத் துவக்குமாறும், பராக்கிரமமாகவும் விடாப்பிடியாகவும் நடத்துமாறும், இறுதி வெற்றியில் நம்பிக்கை கொண்டு, இந்திய மண்

ணிலிருந்து எதிரி விரட்டப்பட்டு, இந்தியா மறுபடியும் சுதந்திர தேசமாகிறவரை போரை நடத்துமாறும் இந்திய மக்களை அழைக்கிறோம்.

ஆஜாத் ஹிந்த் சர்க்கார் சார்பில் கையெழுத்திடப்பட்டது.

சுபாஷ் சந்திர போஸ் (சர்க்காரின் தலைவர், பிரதம மந்திரி, யுத்த மந்திரி, வெளிநாட்டிலாகா மந்திரி.)

கார்ப்டன் டாக்டர் (ஸ்ரீமதி) லக்ஷ்மி (மாதர் ஸ்தாபன இலாகா)

எஸ். ஏ. ஐயர் (பிரசார இலாகா)

லெப். கர்னல் ஐ. ஏ. ஸி. சாட்டர்ஜி (நிதி இலாகா)

லெப். கர்னல் அஜீஸ் அகம்மது, லெப். கர்னல் என். எஸ். பகத், லெப். கர்னல் ஜே. கே. பான்ஸ்லே, லெப். கர்னல் குல்ஸாரா சிங், லெப். கர்னல் எச். எஸ்ட். கியானி, லெப். கர்னல் ஏ. டி. லோகநாதன், லெப். கர்னல் ஈஷான் குவாதிர், லெப். கர்னல் ஷா நவாஸ் (ராணுவப் படைகளின் பிரதிநிதிகள்)

ஏ. எம். ஸாஹே (காரியதரிசி, மந்திரி அந்தஸ்து)

ராஷ் பிஹாரி போஸ் (சுப்ரீம் அட்வைஸர்)

கரீம் கனி, தீனநாத் தாஸ், டி.எம். கான், ஏ. எல்லப்பா, ஜே. திவி, ஸர்தார் இஷார் சிங் (அட்வைஸர்கள்)

ஏ. என். சர்க்கார் (சட்ட அட்வைஸர்)

ஷோனன், அக்டோபர் 21, 1943.

(இந்தப் பிரகடன வாசகத்தை முதல் இ. தே. ரா. வழக்கு விசாரணையில் டிபன்ஸ் வக்கீல் ஸ்ரீ புலாபாய் தேசாய் படித்தார்.)

இந்த இந்திய சுதந்திர சர்க்காரை ஜெர்மன், ஜப்பான், இதாலி, டிவேலராவின் அயர் குடியரசு, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், குரோஷியா, மஞ்சூரியா, பர்மா ஆகிய நாடுகளின் சர்க்கார்கள் அங்கீகரித்தன.

இரண்டு நாட்கள் கழித்து, அதாவது அக்டோபர் 23-ந் தேதியன்று இந்திய தேசீய சர்க்கார் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரண்டின் மீதும் யுத்தப் பிரகடனம் விடுத்தது.

இந்தப் பிரகடனத்தை முன்னிட்டு ஸ்ரீ போஸ் ஷோனனில் பிரம்மாண்டமான பொதுக் கூட்டமொன்றில் செய்த பிரசங்க மாவது :

நண்பர்களே !

தேசிய சுதந்தரமடைந்த பிலிப்பைனுக்கு வாழ்த்துக் கூறும் பொருட்டு அக்டோபர் 17-ந் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நான் பேசியபொழுது பர்மாவுக்கும் பிலிப்பைனுக் கும் பிறகு இனி இந்தியா அடுத்து விடுதலை பெறவேண்டுமெனக் குறிப்பிட்டேன். இந்தியாவின் விடுதலைக் காலமும் வந்துவிட்ட தென நான் உங்களுக்கு இன்று கூறுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதை உலகமும் அங்கீகரித்துள்ளது.

நமது சுதந்தர இயக்கச் சரித்திரத்தில் மிக முக்கியமான இம் மாறுபாடு நிகழ்வதற்கு முன்னர் ஏற்பட்ட தொடர்ச்சியான சம்பவங்களை நாம் ஊன்றிக் கவனிப்போமாகில் கடவுளின் கட்டளைக்கு இணங்கவே அனைத்தும் நடைபெற்று வந்திருக் கின்றன என்பதை அறிவோம். கடவுளின் கடாக்ஷம் நமக்கு இருந்து வருகிறது. ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கம் இன்று ஸ்தாபிக்கப்பட்டு உலகிற்கு அறிவிக்கப்பட்டிருப்ப தானது சரியான காலத்தில் காலநிலைக்கு ஒப்பவே நடைபெற் றிருக்கிறது.

ஐரோப்பாவில் தற்சமயம் நடைபெற்றுவரும் போர் ஆரம்ப மானதும் நம் ஜன்ம விரோதிகளான பிரிட்டிஷாருக்கு முதல் முதலாக மேற்கில் பலத்த உதை கிடைத்தது. அதனால் அவர்களின் பலம் குன்றியது. அவர்கள் மேற்கில் மட்டுமே உதை வாங்கிக்கொண்டிருந்தால் இந்திய சுதந்தர லக்ஷ்யத்திற்கு அதனால் யாதொரு நன்மையும் ஏற்பட்டிராது. ஆனால் மகா கிழக்காசியப் போர் கிழக்கில் ஆரம்பித்ததும் நம் விரோதிகள் இன்னும் பலமான அடி வாங்கியதுடன் தோல்வியின் மேல் தோல்வியடைந்து பலம் மிகவும் குன்றப்பெற்றனர். கிழக்கில் அவர்கள் அடைந்த நஷ்டங்களைவிட மிகவும் முக்கியமான ஓர் அதிசயமும் நடைபெற்றது. இந்தியாவின் மீட்சிக்குப் புதிய தொரு பாதை கிழக்கில் திறக்கப்பட்டதுதான் இவ்வதிசய மாகும். இத்தகைய ஒரு மார்க்கம் ஏற்படலாமென்று பிரிட்டி ஷார்கள் கனவிலுங்கூடக் கருதவில்லை.

இந்தியாவிற்கு ஆபத்தைப் பிரிட்டிஷ் ராணுவ நிபுணர்கள் எப்பொழுதும் வடமேற்கு எல்லைப்புறத்திலிருந்தே எதிர்பார்த் திருந்தனர். வடகிழக்குஎல்லை வழியாக விடுதலை ராணுவமொன்று

இந்தியாவுக்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பம் நிகழலாமென அவர்கள் கொஞ்சங்கூடக் கருதவில்லை. இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சியை அவர்கள் ஒரு நாளும் எதிர்பார்க்கவில்லையாதலால் இந்தத் திசையிலிருந்தும் வரும் தாக்குதலைச் சமாளிக்கவும் வேண்டிய முஸ்தீப்புகளை அவர்கள் செய்யவில்லை.

இந்தப் பிரச்னையில் மிகவும் ருசிகரமான விஷயமும் ஒன்று இருக்கிறது.பிரிட்டிஷார்கள் மேற்கில் தோல்விக்கு மேல்தோல்வி அடைந்து இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் வரையும் பின் வாங்குகிறார்களென்று வைத்துக்கொண்டாலுங் கூட அதனால் இந்திய சுதந்தரத்துக்கு யாதொரு நன்மையும் ஏற்படாது. ஏனெனில் மேற்கு ஆசியாவில் இந்தியர்கள் குடியேறியிருக்கவில்லை. ஆனால் கிழக்கு ஆசியாவில் முப்பது லக்ஷம் இந்தியர்களைக் குடியேறச் செய்ததும் விதியின் நியமம் போலும்! கிழக்கு ஆசியாவினின்றும் விரோதி விரட்டப்பட்டதுடன் ஆசியர்களின் உதவியும் கிடைக்கும் பொழுது சுதந்தரமடைய உண்மையிலேயே முயற்சி செய்ய இந்த முப்பது லக்ஷம் இந்தியர்களிடம் போதிய சாதனங்கள் இருக்கின்றன.

பிரிட்டிஷார்கள் இந்தியாவில் வடகிழக்கு எல்லைப்பிரதேசத்திற்கு-இந்தியா பர்மா எல்லைக்கு-விரட்டப்பட்டதுடன் இந்தியாவை விடுவிப்பதற்கான பொன்னான தருணம் வாய்த்தது. கிழக்கு ஆசிய இந்தியர்கள் இவ்வரிய தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள முன்வந்திராவிடில் இதுவும் இழக்கப்பட்டே போயிருக்கும். ஆனால் கிழக்கு ஆசிய இந்தியர்கள் இவ்வரிய தருணத்தில் இந்தியாவைக் கைவிட்டுவிடவில்லை என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காலத்தின் போக்கை உணர்ந்து அவர்கள் இந்திய சுதந்தரக் கழகத்தை அமைத்துக் கொண்டார்கள். அத்துடன் இந்திய தேசீய ராணுவத்தையும் அமைக்க ஆரம்பித்தார்கள். இந்திய விடுதலைக்கான கடைசிப் போராட்டத்திற்கு விதியும் எதிர்பாராத விதமாகவே உதவி செய்து வந்திருக்கிறதென்பதைச் சென்ற கால நிகழ்ச்சிகளைக் கவனித்தால் நன்கு புலப்படும். விஷயங்களனைத்தும் நிதானமாகவே காலத்துக்கு ஒப்பவும் இதர காரியங்களுக்குப் பொருந்தவுமே நடைபெற்று வந்திருக்கின்றன. இந்தியா விடுதலை பெற வேண்டிய காலமும் கடவுளின் கருணையினால் வந்துவிட்டதென நான் கூறப்புகின் அதை யாரே மறுக்கவல்லார்?

நான் கிழக்கு ஆசியாவிற்கு வந்து இவ்வியக்கத்தின் தலைமைப் பதவியை வகித்ததும் இந்திய சுதந்தரக் கழகத்தைத் திருத்தி யமைத்து வலுவடையச் செய்யவேண்டுமென்றும் ஆஜாத் ஹிந்த் ராணுவத்தைச் சீர்திருத்தி உறுதியடையச் செய்ய வேண்டுமென்றும் உள்ள ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தேன்.

இவ்வருஷ முடிவுக்குள் புனித பூமியாகிய இந்தியாவுக்குள் காலடி எடுத்துவைக்க நான் உறுதிகொண்டிருக்கிறேன் என்று ஆகஸ்ட் 15-ந் தேதியன்று பேசியபொழுது கூறினேன். நான் சொல்வதை எப்பொழுதும் செயலில் காண்பிப்பவனுவேன். வெறும் பிரகடனங்களுக்காகவோ வீண் பெருமைகளுக்காகவோ நான் ஒன்றும் கூறுபவன் அல்ல. அன்றையிலிருந்து நம் பிரயத்தனங்கள் யாவும் மெதுவாக ஆனுல் நிதானமாக நிறைவேறி வந்திருக்கின்றன. ஜுலை மாதம் 9-ந் தேதி இதே மைதானத்தில் நடைபெற்ற ராணுவ அணிவகுப்பைப் பற்றி உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இன்று காலை நடைபெற்ற ராணுவ அணிவகுப்பில் கலந்துகொண்ட ஆஜாத் ஹிந்த் பௌஜ் ஜுலை மாதத்தைவிட மிக மிகச் சொற்பமானதென்பதை நீங்களும் கவனித்திருப்பீர்கள். ஆஜாத் ஹிந்த் பௌஜைச் சார்ந்த பெரும்பாலான ராணுவத்தினர் ஷோனுனினின்றும் ஏற்கனவே வெளியே சென்றுவிட்டனரென்றும் அவர்கள் இப்பொழுது இந்தியாவிற்குச் செல்லும் பாதையில் இருந்து வருகிறுர்களென்றும் இன்று காலை நான் ராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டு நிகழ்த்திய பிரசங்கத்தில் கூறினேன். நம் முஸ்தீப்புகளனைத்தும் திருப்திகரமாகவே நிறைவேறி வந்திருக்கின்றன.

இந்தச் சமயத்தில் சுதந்தரத்தைப் பெறுவதற்கான மார்க்கத்தில் நாம் மிகவும் முக்கியமான நடவடிக்கையைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. ஆஜாத் ஹிந்த் பௌஜ் யாருடைய தலைமையில் போரிடும் என்ற கேள்வி எழுவது நியாயமே. நமது நிலைமையையும் கொஞ்சமேனும் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்துவதற்கும் இதுதான் சரியான சந்தர்ப்பமுமாகும். ஆஜாத் ஹிந்த் ராணுவம் யாருடைய தலைமையில் போரிடுமென்பதைப்பற்றியும், எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டதும் நிர்வாக உரிமையை யார் கைக்கொள்வார்கள் என்பதைப் பற்றியும் பொதுவாக உலகத்தினருக்கும், குறிப்பாக இந்தியர்

களுக்கும் அறிவிக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆகையினால், சரியான சமயத்தில் அக்டோபர் 21-ந் தேதி கூடிய கிழக்கு ஆசிய இந்தியர்களின் மகாநாட்டில் நாம் ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபித்தோம்.

நாம் மூன்று வருஷங்களுக்கு முன்னர் இத்தகைய ஓர் அரசாங்கத்தை ஸ்தாபித்திருந்தோமாகில் உலகத்தினர் இதை ஒரு நாட்கமெனவே அழைப்பார்கள். எதிரிகள் இது ஒரு பிரசார தந்திரமென்றே கூறுவர். கிழக்கு ஆசியாவில் இருக்கும் முப்பது லக்ஷம் இந்தியர்களைக் கொண்ட ஸ்தாபனத்தினின்றும் தாற்காலிக அரசாங்கம் தோன்றியிருப்பதனாலும், சக்திவாய்ந்த ஆஜாத் ஹிந்த் ராணுவமும் அமைக்கப்பட்டிருப்பதாலும் இது ஒரு பிரசார தந்திரமெனக் கூறுமுன்னர் நம் எதிரிகளும் கூட நன்கு ஆலோசனை செய்யவேண்டும். தற்சமயம் இருந்து வரும் ஆஜாத் ஹிந்த் அரசாங்கம் ஒரு விளையாட்டுக் கருவியல்ல. இந்திய சுதந்தரக் கழகத்தின் மூலம் கற்சுவரைப் போன்று ஒற்றுமைப்பட்டுள்ள முப்பது லக்ஷம் இந்தியர்களின் உறுதியையும், ஆஜாத் ஹிந்த் ராணுவத்தின் உதவியையும் பெற்றுள்ள ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனமாக ஆஜாத் ஹிந்த் அரசாங்கம் விளங்குகிறது.

இவ்வரசாங்கத்தை அமைப்பதனால் நாம் ஒன்றும் புதுமையாகச் செய்துவிடவில்லை. ஏனெனில் சுதந்தரத்திற்கான கடைசிப் போராட்டம் ஆரம்பிக்கும் முன்னர் ஒரு தாற்காலிக அரசாங்கத்தைப் பிரகடனம் செய்வது புரட்சியின் ஓர் அம்சமாகும். இவ்வழியைப் பின்பற்றியதற்கும் போதுமான ஆதாரங்கள் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. ஐரிஷ்காரர்களும், செக் நாட்டவர்களும் நமக்குப் போதிய உதாரணமாக விளங்குகின்றனர். துருக்கியச் சுதந்தரப் போரிலுங்கூட முஸ்தாபா கமால் பாஷா அனடோலியாவில் ஒரு சுதந்தர அரசாங்கத்தை ஸ்தாபித்தார்.

அக்டோபர் 21-ந் தேதி கைக்கொண்ட நடவடிக்கையின் மூலம் நாம் சரியான நேரத்தில் நமது கடமையைச் செய்துள்ளோம் என்பதுடன், சரியான பாதையையுமே பின்பற்றியுள்ளோம்.

இம்மாதிரியான தாற்காலிக அரசாங்கமொன்று இந்திய எல்லையினுள் நிறுவப்பட்டிருக்குமானால், அது மிகவும் நன்றாக

இருந்திருக்கும் என்பது உண்மைதான். ஆனால் இந்திய சுதந்தரக் கழகத்தைப் போன்ற ஒரு ஸ்தாபனத்தையோ, ஆஜாத் ஹிந்த் பௌஜைப் போன்ற ஒரு ராணுவத்தையோ தற்காலம் இருக்கும் நிலைமையில் இந்தியாவுக்குள் பெற்றிருக்க முடியுமென எதிர்பார்ப்பது நடக்கக்கூடிய விஷயமல்ல. நியாய மான ஒரு ஸ்தாபனமும், ஆயுதந்தரித்த ராணுவ பலமுமின்றி இந்தியாவுக்குள் பிரகடனம் செய்யப்படும் எந்தத் தாற்காலிக அரசாங்கமும் வெறும் கேலிக்கூத்தாகவே முடியும். நம் எதிரிகளும் இவற்றை அதிக விரைவில் அடக்கிவிட முடியும்; இவ்வுண்மையையும் மற்றும் இதர நிலைமைகளையும் சீர்தூக்கிப் பார்த்தபின்பு தேசாபிமானமுள்ள இந்தியர்கள் அனைவரும் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடியும். நமது சுதந்தரத்தைப் பெறு வதற்கான ஒரு மார்க்கம் நாம் இப்பொழுது தெரிந்தெடுத்திருக் கும் பாதையேயாகும்.

ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக் கிறதென அக்டோபர் 21-ந் தேதி வெளியிட்ட பிரகடனத்தில் இவ்வரசாங்கத்தின் நோக்கங்களையும் ஜீவியகாலத்தையும் நான் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். நமது அரசாங்கம் சாதாரண காலங்களில் நிர்வாகத்திற்காக ஸ்தாபிக்கப்படும் அரசாங்கத் தைப் போன்றதல்ல.

ஆகையால் நாம் சாதாரண வழிகளைப் பின்பற்றவில்லை என் பதுடன், சாதாரண காலங்களில் ஒரு நாட்டில் நிர்வாகம் நடத்து வதற்கு அவசியமான இலாகாக்களையும் நாம் திறக்கவில்லை. சுதந்தரப் போரை நடத்துவதென்பதே இவ்வரசாங்கத்தின் முதலாவதும், மிக முக்கியமானதுமான வேலையாகும். ஆகையால் நம் மந்திரிசபை ஒரு யுத்த மந்திரிசபையே ஆகும். இரண்டா வதாக, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் நிர்வாகத்தை இடைக் காலத்தில் மட்டும் இவ்வரசாங்கம் நடத்திவரும். கடைசி ஆங்கிலேயன் இந்தியாவினின்று துரத்தப்படும்வரையும், இந்தியா சுதந்தரமடைந்து, சுதந்தர இந்தியாவில் நீதியும் ஒழுங்கும் சமா தானமும் நிலவும்வரையும், இந்தியாவிலுள்ள 38 கோடி இந்தியர் களின் விருப்பத்திற்கிணங்க ஒரு நிரந்தரமான ஆஜாத் ஹிந்த் அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும்வரையும் நாம் வேலை செய்துவரு வோம். அக்டோபர் 21-ந்தேதியன்று நம்மால் வெளியிடப்பட்ட பிரகடனத்தை வாசிக்குமாறும் நம் தாற்காலிக அரசாங்கத்தின்

உண்மையான கருத்தை உணர்ந்துகொள்ளுமாறும் நான் கிழக்கு ஆசியாவில் வசிக்கும் ஒவ்வோர் இந்தியரையும் கேட்டுக்கொள்றேன்.

அரசாங்கத்தின் அங்கத்தினர்களாகச் சிலர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதனால் பெரும்பான்மையான இதரர்களின் பொறுப்பும் கடமையும் தீர்ந்துவிட்டன என்று கருதக்கூடாதென நான் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நிர்வாக சௌகரியத்திற்காகவும் அவசியத்துக்கு இணங்கவுமே சிலர் அரசாங்க அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; ஆனால் அரசாங்கத்தின் பொறுப்பு கிழக்கு ஆசிய இந்தியர்கள் அனைவரையுமே சமமாகச் சார்ந்திருக்கிறது.

புது அரசாங்க யந்திரத்தில் வேலை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எவ்விதமான உயர்வான பதவியையும் வகித்துவிட்வில்லை. உண்மையில் அவர்கள் கூடுதலான பொறுப்பையும் பாரத்தையுமே மேற்கொண்டிருக்கிறார்கள். இவ்வரசாங்கத்தின் பாதை ரோஜா இதழ்களின்மீது நடப்பதைப்போல அல்ல. அதிவிரைவில் இவ்வரசாங்கம் போர்க்களத்தில் சோதனைக்கு உட்படுத்தப்படுவதைக் காணலாம். தனிப்பட்ட நபர்களுக்கு உயர்வான ஸ்தானம் கிடைத்திருக்கிறதென நீங்கள் ஒரு நிமிஷங்கூட நினைக்கக்கூடாது.

ஸ்தானத்தில் ஏதாவது உயர்வு கிடைத்திருக்குமேயானால் அது இந்தியாவினுடையவும், இந்தியர்களினுடையவும் உயர்வே ஆகும். இவ்வரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதுடன்,உலகத்தினரின் அங்கீகாரமும் பெற்றதன் பின்னர் உலகத்தினரின் முன்பாக இந்தியர்களின் ஸ்தானமும் கௌரவமும் உயரவில்லையென யார்தாம் கூற முடியும்? இவ்வியக்கம் உங்களுடையதென்றும், இவ்வரசாங்கம் உங்களுடைய அரசாங்கமென்றும், இந்திய சுதந்தரக் கழகத்தின் அங்கத்தினர்கள் என்ற அளவில் உங்கள் கடமை பன்மடங்கு அதிகரித்துவிட்டது என்பதையும் நீங்கள் எப்பொழுதும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நம்முன்னர் இரு மாபெரும் கடமைகள் காட்சியளித்துவருகின்றன. இந்திய எல்லையைக் கடந்து இவ்வருஷ முடிவுக்குள் புனித பூமியாகிய இந்திய மண்ணில் காலடி எடுத்துவைப்

பதற்கான இறுதி முயற்சிகள் அனைத்தையும் செய்யவேண்டும் என்பது முதற் கடமையாகும்.

நமது வேலையைத் தொடர்ந்து செய்துவருவதுடன், நீண்ட நாள் போருக்கு நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்பது நம் இரண்டாவது கடமையாகும். இந்தியாவினின்றும் பிரிட்டிஷார் பின்வாங்குவதென்பது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அழிவையே குறிக்கும். ஆதலால் பிரிட்டிஷார்கள் தங்களால் இயன்றவரையிலும் இந்தியாவுடன் ஒட்டிக்கொண்டிருக்கவே து முயலுவார்கள். இந்தியாவினின்றும் பிரிட்டிஷாரை விரட்டுவ சுலபமான காரியமல்ல. ஆனால் இந்திய மண்ணில் நாம் காலடி எடுத்துவைத்ததும் இந்தியாவிலுள்ள இந்தியர்களின் உதவியும் ஆதரவும் நமக்குக் கிடைக்குமென்பதில் நான் திட நம்பிக்கை கொண்டுள்ளேன். நமது கடைசி நோக்கம் ஈடேறும் வரையில் கிழக்கு ஆசிய இந்தியர்கள் தங்கள் பிரயத்தனங்களைத் தொடர்ந்து செய்துவரவேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

தாற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்தாற்போல் 'சர்வாம்சப் படைதிரட்டு' என்ற நமது திட்டமும் மிகவும் ஜரூராக நிறைவேற்றப்பட்டு வரவேண்டுமென்பதை நான் மீண்டும் ஒரு முறை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஜன சக்தி சாதனங்களுக்கு விடுத்த வேண்டுகோளை நான் மீண்டும் விடுக்கிறேன். இறுதி வெற்றியை நாம் அடையும் வரையும், நமக்கு வேண்டிய ஆள் பலம், பொருளுதவி, தளவாட சாமான்கள் இவைகளைக் கொஞ்சமேனும் தடையின்றி அளித்துவர வேண்டிய கடமை கிழக்கு ஆசிய இந்தியர்களைச் சார்ந்ததாகும்.

ராணுவத்திற்கு ஆள் வேண்டுமென நான் விடுத்த வேண்டுகோள் நல்ல பலனை அளித்திருப்பதுடன், எனக்கும் திருப்தியைக் கொடுத்திருக்கிறது. வாலண்டியர்களாகச் சேருவதற்குக் கிழக்கு ஆசிய இந்திய இளைஞர்கள் முன்வந்த விதமும், ஜான்ஸிராணி ரெஜிமெண்டை அமைப்பதற்கு நம் சகோதரிகள் முன்வந்த விதமும் மிகவும் உற்சாகமூட்டத்தக்கன. பொருளுதவியையும், சாதனத் தளவாடங்களையும் பொறுத்தமட்டில் ஏழைகளும் மத்திய வகுப்பினரும் தங்களால் இயன்ற அளவு உதவி வருகிறார்கள் என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

கல்நெஞ்சம் படைத்தவர்களையுங்கூடக் கலங்கச் செய்யும் தியாக உணர்ச்சியை நான் நம் ஏழைச் சகோதரர்களிடம் அநேக தட்வை கண்டிருக்கிறேன். சலவைத் தொழிலாளி ஒருவன் என்னிடம் அவனுடைய சர்வத்தையும் கொடுத்துவிட்டு, தான் ஜான்ஸியிலிருந்து வந்திருப்பதால் ஜான்ஸி ராணி ரெஜிமெண்டிற்குச் சலவைத் தொழில் செய்துகொண்டு அவர்களுடன் செல்ல அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். எளிய உடை தரித்துள்ள ஓர் ஏழை இந்தியன் என்னிடம் அவனது அநேக வருஷ மீதமாகிய 200 வெள்ளியையும் மனமுவந்து கொடுத்துவிட்டான். எல்லாவற்றையும்விட மனமிளகச் செய்யக்கூடியது யாதவ சமூகத்தினரின் தியாகமே ஆகும். இவர்கள் தங்களிடமுள்ள ரொக்கம் முழுவதையும் கொடுத்ததுடன் தங்களுக்கு இருந்த கால்நடைகளையும் அளித்துவிட்டு ஆஜாத் ஹிந்த் ராணுவத்தில் தாங்களும் வாலண்டியர்களாகச் சேர முன் வந்துள்ளார்கள். எளிய ஜனங்கள் தங்களின் செய்கையினாலும் நடத்தையினாலும் சர்வாம்சப் படைதிரட்டு என்றால் என்ன என்பதை விளக்கி வருகிறார்கள். சர்வாம்சப் படைதிரட்டு என்றால் தங்களின் சேமிப்பில் ஐந்து அல்லது பத்து விகிதத்தையா குறிப்பிடுகிறதென பணக்காரர்கள்தாம் அறிய விரும்புகிறார்கள். ஏழை மக்கள் தங்களின் முழு உடைமைகளையும், தங்களின் உயிர்களையும் அளிக்க ஏராளமாக முன்வந்து கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்கள் தங்கள் மனோபாவத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய காலமும் வந்துவிட்டது. வாலண்டியர் ஒருவர் ராணுவத்தில் சேர்ந்து போர்க் களத்திற்குச் செல்லும் பொழுது தன் ரத்தத்தில் ஐந்து அல்லது பத்து சத விகிதம் சிந்தினால் போதுமா என்ற கேள்வியைக் கேட்பதில்லை என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். தன் ரத்தம் முழுவதையும் சிந்தத் தயாராகவே அவன் போர்க்களம் செல்லுகிறான். அவ்விதமான வாலண்டியர்களில் ஒருவனின் உயிர் எனக்கு லக்ஷக்கணக்கான வெள்ளிக்கும் உயர்வாகும். ஆகையால் பணக்காரர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அவர்கள் தங்களின் உயிர்களைத் தியாகம் செய்யத் தயாராக இல்லையெனில் தங்கள் உடைமைகளைக் கொடுக்கவாவது முன்வரவேண்டும்.

நாங்கள் ஓர் உபத்திரவக்காரர்களாக இருக்கிறோம் என்றும் இந்தியா செல்வதற்காக நாங்கள் ஷோனானை விட்டதும் இந்தத்

தொல்லைகள் நீங்கிவிடுமென்றும் சில பணக்காரர்கள் பேசிக் கொள்வதாக நான் கேள்விப்பட்டேன், நாங்கள் சென்றுவிட்டாலுங் கூட இந்திய சுதந்தரக் கழகம் இங்கு வேலை செய்து வருமென்பதை இவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். நாம் போர்க்களத்தில் எதிரிகளுடன் சமர் செய்துகொண்டு வரும்பொழுது இந்திய சுதந்தரக் கழகம் இங்கு 'ஹோம் பிரண்ட்' திட்டத்தை நிறைவேற்றி வரும். பணக்காரர்களை நாம் விட்டுவிட முடியாது. இந்தியர்களில் ஒருவரையும் நாம் விட்டுவிட முடியாது; ஏனெனில் நமது போராட்டம் 'வாழ்வு அல்லது மரணம்' என்பதைத் தீர்மானிக்கக் கூடியதாகும். வெற்றி கிட்டும் வரை நமது போராட்டத்தை எல்லா வகையாலும், எவ்விதத் தியாகத்தாலும் நடத்த நாம் உறுதி கொண்டிருக்கிறோம்.

இந்திய சுதந்தரக் கழகம் நிதி கோருவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகச் சில பணக்காரர்கள் தங்கள் பிரஜா உரிமையையே மாற்றிக்கொள்ள ஆலோசித்து வருவதாகவும் நான் கேள்விப்பட்டேன். இவ்விதமான மாறுதல்களால் சஞ்சலப்படுபவர்களுக்கு இரு வழிகளே உண்டு என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் உண்மையான இந்தியர்கள் என்ற முறையில் மிக முக்கியமான இந்நேரத்தில் தங்கள் கடமையைச் செய்யவேண்டும்; அல்லது நாங்கள் பிரிட்டிஷாரின் நண்பர்கள் எனக் கூறுவதுடன் பிரிட்டிஷாரை நடத்துவதைப் போன்று தங்களையும் நடத்த வேண்டுமெனக் கூறிவிட வேண்டும். பிரிட்டிஷார்களுக்கும் அவர்கள் நண்பர்களுக்கும் கிழக்கு ஆசியாவில் ஜெயிலைத் தவிர வேறு இடம் கிடைக்காது. இந்தியாவிலும் அவர்களுக்கு இதே நிலைமை ஏற்படக்கூடிய காலம் அதிக தூரத்தில் இல்லை. நம் வேண்டுகோளுக்குத் திருப்திகரமான முறையில் செவி சாய்க்காத சில பணக்கார இந்தியர்கள் தங்கள் நிலைமையை மீண்டும் புனராலோசனை செய்து கொள்வார்களென நான் நம்புகிறேன்.

ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கம் தீர்மானித்துள்ள இரு முக்கியமான விஷயங்களை உங்களுக்கு நான் இப்பொழுது அறிவிப்பதுடன் உங்கள் அங்கீகாரத்துக்காகவும் அவைகளைச் சமர்ப்பிக்கிறேன்.

கிழக்கு ஆசியாவிலுள்ள நமது இயக்கத்தைப் பிரிட்டிஷார்கள் தங்கள் பிரசாரத்தில் அலக்ஷியப்படுத்தியும் குறை கூறியும்

வந்த ஒரு காலமும் இருந்தது. ஆனால் அவர்கள் இப்பொழுது நமது இயக்கத்தைத் தீவிரமாகக் கருதி வருவதுடன் வேறு வழியின்றி என்னையும் ரேடியோ மூலமாகத் தூஷிக்கவும் துணிந்துள்ளனர். ஒருவனைத் தூஷிப்பதென்பது கோழையின் கடைசி ஆயுதமாகும். நமது சக்தியை எதிரிகள் அறிந்துகொண்டார்கள் என்பதுடன் நம் பிரயத்தனங்கள் யாவும் வெறும் பிரசார தந்திரமல்ல என்பதையும் உணர்ந்துவிட்டார்கள் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. ஆஜாத் ஹிந்த் அரசாங்கத்தை நாம் ஸ்தாபித்ததும் அது உலகம் முழுவதும் பெரும் திகிலை உண்டு பண்ணியிருக்கிறது. லண்டனிலும் வாஷிங்டனிலும் இது பெரும் குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டதென நான் கூறினால் அது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. ஆஜாத் ஹிந்த் அரசாங்க ஸ்தாபிதச் செய்தியை வெளியிடுவதில் எதிரி வானொலி நிலயங்கள் மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்தன.

இதனிடையில் நமது அரசாங்கத்தை நிப்பொன் இம்பீரியல் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என்ற செய்தியும் நாம் கிடைக்கப்பெற்றிருக்கின்றோம். இது மிக முக்கியமான ஒரு சம்பவமாகும். எவ்வித முன்னிகழ்ச்சியுமின்றி இவ்வங்கீகாரம் மாத்திரம் அளிக்கப்பட்டிருக்குமாயின் இதன் அந்தரங்க சுத்தியை ஜனங்கள் சந்தேகிக்க இடமளித்திருக்கும். ஆனால் இது புதிய நடவடிக்கையல்ல. நியாயம், சமத்துவம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு நிப்பொன் கடைப்பிடித்து வரும் ஆசியக் கொள்கையில் இதுவும் ஒன்றேயாகும். நிப்பொனின் இக்கொள்கையை உலகத்தினர் நன்கு அறிவர். பர்மியச் சுதந்தரத்தையும், அதைத் தொடர்ந்து பிலிப்பைன் சுதந்தரத்தையும் பற்றி உலகத்தினர் ஏற்கனவே கேள்விப்பட்டிருப்பர்.

ஆகையினால் இக்கொள்கையின் முடிவாகவே ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சுதந்தரம், ஜனநாயகம் ஆகியவற்றிற்குத் தாங்களே பாதுகாப்பாளர்களென ஆங்கிலோ-அமெரிக்கர்கள் உரக்கக் கூக்குரலிட்டு வருகின்றனர்; ஆனால் அவர்களின் நடத்தைகளே அவர்கள் கூறுவதைப் பொய்ப்படுத்தி வருகின்றன. இந்தியாவில் தங்கள் பிடியை நழுவ விடாததுடன் ஈரான், ஈராக் போன்ற சுதந்தர நாடுகளையும் அடிமையில் ஆழ்த்தி யிருக்கின்றனர். சுதந்தர பர்மாவையும் அடிமையில் ஆழ்த்த முயன்று

வருகின்றனர். இவர்களின் செய்கைக்கு எதிராக நிப்பொன் ஏற்கனவே சுதந்தர பர்மா, சுதந்தர பிலிப்பைன் ஆகிய தேசங்களை அங்கீகரித்திருப்பதுடன் இப்பொழுது ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கத்தையும் அங்கீகரிக்க முன்வந்துள்ளது. நம் நிப்பொனிய நண்பர்கள் நம்மிடம் எப்பொழுதுமே அனுதாபம் காட்டிவந்திருக்கின்றனர். இப்பொழுது அவர்கள் நமது அரசாங்கத்தை அங்கீகரித்ததின் மூலம் நமக்கு மட்டற்ற ஆத்மிக பலத்தை அளித்துள்ளனர். இதற்கு நமது நன்றியறிதல் உரித்தாகுக!

நிப்பொனின் இந்த நல்லெண்ணத்தைப் பாராட்டி ஆஜாத் ஹிந்த் மந்திரி சபை ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அந்தத் தீர்மானத்தை உங்களின் அங்கீகாரத்திற்கு நான் இப்பொழுது சமர்ப்பிக்கிறேன்.

> ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கத்தை இம்பீரியல் நிப்பொன் அரசாங்கம் அங்கீகரித்து அனுப்பியுள்ள செய்திக்கு ஆஜாத் ஹிந்த் அரசாங்கம் தம் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. மேலும் இம்பீரியல் நிப்பொன் அரசாங்கம் தன் மனப்பூர்ணமான ஒத்துழைப்பையும் உதவியையும் அளிக்கச் சித்தமாக இருக்கிறது என்று மேற்படி செய்தியில் அறிவிக்கப்பட்டிருப்பதற்கு ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கம் தன் மனமார்ந்த வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய சுதந்திர விஷயத்தில் பிரதம மந்திரி ஜெனரல் டோஜோ காட்டும் சிரத்தைக்கு நாம் நமது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்க ஸ்தாபிதத்தில் பேருதவி புரிந்த ஹிக்காரிகிக்கான் தலைவரான கர்னல் யாமமோத்தோவுக்கும் நம் வந்தனங்கள் உரித்தாகுக!

எனது மந்திரி சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கும் அடுத்த தீர்மானமும் மிக முக்கியமானதாகும்.

இந்தியாவின் அரசியல், பொருளாதார, ராணுவ நிலைமைகளைப்பற்றி விவாதித்த பின்னர் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் மீது ஆஜாத் ஹிந்த் தாற்காலிக அரசாங்கம் போர்ப் பிரகடனம் செய்யவேண்டிய சமயமும் வந்துவிட்டதென எனது மந்திரிசபை ஏகமனதாக முடிவிற்கு வந்துள்ளது.

கடந்த இரவு 12-55 மணிக்கு ரேடியோ மூலமாக நாம் போர்ப் பிரகடனத்தை வெளியிட்டோம். எதிரி ரேடியோ நிலையங்களும் நமது போர்ப் பிரகடனச் செய்தியைக் காலை 2 மணிக்கு வெளியிட்டன. நமது நடவடிக்கை ஒவ்வொன்றையும் அவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாகக் கவனித்துவருகிறார்கள் என்பதற்கு இது ஒன்றே போதிய சான்றாகும். இந்தியாவில் நான் நடத்திவந்த போராட்டங்களிலிருந்து பிரிட்டிஷார்கள் என்னை நன்கு அறிவர். நான் கூறுவதைச் செயலில் நடத்திக்காட்டப் போதிய வலிமை இல்லாதவரையில் நான் ஒன்றும் அறிவிக்கமாட்டேன் என்பதையும் அவர்கள் நன்கு அறிவார்கள். நமது பிரகடனம் வெறும் பிரசார தந்திரமல்ல. அடுத்துவரும் நடவடிக்கைகள் நாம் கூறியதை மெய்ப்பித்துக் காட்டும்.

பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின்மீது போர்ப் பிரகடனம் விடுத்த நமது தீர்மானத்தை உங்களின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கு முன்னர் அதன் கஷ்ட நஷ்டங்களைத் தீர ஆராய்ந்து உங்கள் முடிவைத் தெரிவிக்கவேண்டுமென நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது பிரகடனம் வெறும் பயமுறுத்தல் நடவடிக்கையல்ல என்பதை நான் மீண்டும் ஒரு முறை ஞாபகமூட்டுகிறேன். நமது சரீரத்தில் ஒரு துளி ரத்தம் இருக்கும் வரையும் நாம் அதை நிறைவேற்றவே உறுதி கொண்டுள்ளோம். உங்களை இத்தீர்மானத்தை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்ளும் பொழுது சாதாரணக் கொண்டாட்டங்களில் நடைபெறுவதைப் போன்று இதையும் நிறைவேற்ற வேண்டுமென நான் விரும்பவில்லை. நீங்கள் இதை அங்கீகரித்தால் நமது பிரகடனத்தை அமலுக்குக் கொண்டுவருவதில் எங்களைப்போன்றே நீங்களும் உங்கள் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் சிந்தத் தயாராக இருக்கிறீர்களென்றே பொருள்படும். ஆஜாத் ஹிந்த் ராணுவத்தினிடம் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டிய அவசியமில்லை என்பதை நான் அறிவேன் ஏனெனில் அவர்களின் மனத்தையும் டில்லி செல்லும் பாதையில் பிரவேசிக்க அவர்கள் கொண்டுள்ள துடிதுடிப்பையும் நான் நன்கு அறிவேன். இந்தப் போர்ப் பிரகடனத்தை விடுப்பதில் பொதுமக்களும் நம்முடன் ஒற்றுமைப் பட்டிருக்கிறார்களா என்பதை அறியவே நான் இப்பொழுது விரும்புகிறேன். அவர்களும் நம்முடன் ஒன்றியிருப்பதனால்

சர்வர்ம்சப்படை திரட்டு என்ற திட்டத்திற்கு அவர்களுடைய பரிபூரண ஒத்துழைப்பை உடனே அளிக்க முன்வர வேண்டும்.

நண்பர்களே! நாம் இங்கு இப்பொழுது நடத்தும் கூட்டம் ஒரு பிரசாரத்திற்காக அல்ல என்பதை நீங்கள் உணரவேண்டு மென நான் விரும்புகிறேன்.

இது ஒரு கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெறவில்லை. வாழ்வு அல்லது மரணம் என்ற பிரச்னையைத் தீர்மானிப்பதற் காக நாம் இங்கே குழுமியுள்ளோம். இந்தத் திட்டத்தில் நாம் வெற்றி பெற்றால் 38 கோடி இந்தியர்களும் விடுதலை பெறுவர். துரதிருஷ்டவசமாக நாம் இந்த முயற்சியில் தோல்வியுறுவோமே யானால் இன்னும் ஒரு நூற்றாண்டிற்கு நமது நாடு சகிக்கவொண் ணாத கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் உட்பட நேரிடும். ஆண்ட வன் நமக்கு அத்தகைய நிலைமையை அளிக்க மாட்டார். இத் தகைய பொன்னான தருணத்தை ஏற்படுத்தித் தருவதில் கடவு ளின் கடாக்ஷம் நமக்கு எவ்விதம் கிடைத்திருக்கிறது என்பதை நான் ஏற்கனவே உங்களுக்கு விளக்கிக் கூறியுள்ளேன்.

நாம் ஒவ்வொரு படியாக எவ்வாறு தாண்டிவந்துள்ளோம் என்பதை நான் உங்களுக்குத் தெளிவாகக் காட்டியிருப்பதுடன் நம் எதிரிகளைத் தாக்குவதற்கான உற்ற காலத்தையும் தகுந்த சந்தர்ப்பத்தையும் எவ்வாறு அடைந்துள்ளோம் என்பதையும் நான் உங்களுக்கு விளக்கிக் கூறியுள்ளேன். நமக்கு எவ்வாறு ஒரு ஸ்தாபனமும், ராணுவமும், உலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஓர் அரசாங்கமும் கிடைத்தன என்பதைப்பற்றியும், நாம் எவ் வாறு சகல உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றோம் என் பதையும் நான் விவரித்துக் கூறியுள்ளேன். இந்தியாவின் சரித் திரத்திலேயே மிக முக்கியமான இந்தச் சந்தர்ப்பத்தில் 'நாம் நமது தேசத்தைக் கைவிட்டுவிடுவோமா?

மேற்கூறிய விஷயங்களை நன்கு ஆராய்ந்துகொள்வதுடன் போர்ப் பிரகடனத்தின் கஷ்ட நஷ்டங்களையும் தீர ஆலோசனை செய்த பின்னர் யுத்தப் பாதையைப் பின்பற்ற நீங்கள் தீர் மானித்தால், பிரிட்டிஷாருக்கு எதிராக நடைபெறப்போகும் பிரசித்திபெற்ற போரில் எதிர்ப்படும் எத்தகைய சுக துக்கங் களையும் சகித்துக்கொள்வதென உங்கள் அந்தரங்க பூர்வமாக நீங்கள் உணர்ந்தால், வெற்றி கிட்டும்வரை உங்கள் உயிர் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அர்ப்பணித்து

எதிரியுடன் போர் புரிவதென நீங்கள் பிரியப்பட்டால் எழுந்து நின்று உங்கள் ஆரவாரத்தின் மூலமாக எங்கள் போர்ப் பிரகடனத்திற்கு அங்கீகாரம் அளியுங்கள்.''

* * *

உலகத்தின் இப்பாகத்தின்கண் இதுவரை கண்டிராத இந்தியர்களின் மகத்தான ஓர் ஆரவாரத்திற்கு இதுவே சைகையாக அமைந்தது. கூட்டத்திற்கு வந்திருந்த 50,000 பேர்களும் எழுந்து நின்று தங்கள் அங்கீகாரத்தைத் தெரிவித்துக்கொண்டனர். புரட்சி சுலோகங்களும், ஆரவாரமும் 15 நிமிஷங்கள் வரை ஓயாமல் ஒலித்துக்கொண்டிருந்தன. சொற்ப நேரத்திற்கு முன்னர் 50,000 தலைகளை மட்டும் கண்ட இடத்தில் இப்பொழுது எங்கும் ஒரே துப்பாக்கிமயமாகக் காணப்பட்டது. ஆஜாத் ஹிந்த் பௌஜ் வீரர்களும், வாலண்டியர்களும், ஆண் பெண் குழந்தைகளும் தங்கள் ஆர்ப்பாட்டங்களின் மூலமாக நேத்தாஜிக்குத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

15 அடி உயரமுள்ள மேடையின் மீது நேத்தாஜி சிம்மத்தைப் போன்று காட்சியளித்தார். நேத்தாஜி பின்னர் கூறியதாவது: "நண்பர்களே! உங்கள் உற்சாகத்தையும், தீர்மானத்தையும், விடுதலை வேட்கையையும் நேரில் கண்ட என் சந்தோஷமும் பெருமையும் கணக்கிட முடியாதவை. கிழக்கு ஆசிய இந்தியர்களிடம் இத்தகைய மனோசக்தி இருக்கும்பொழுது நமது போர்ப் பிரகடனத்திற்கு ஒரே ஒரு முடிவுதான் இருக்க முடியும். வெற்றியில் முடிவுறும் ஒரே ஒரு போர்தான் அம்முடிவாகவும் இருக்கும். இந்திய மக்களின் ஒன்றுபட்ட உறுதியினாலும் ஆத்ம சக்தியினாலும் எதிரிகளை வெற்றி கொள்வது மிகச் சுலபமாகும். கூட்டம் இத்துடன் முடிவுறுகிறது. நமது போராட்டத்தை வெற்றிகரமான முடிவிற்குக் கொண்டுவர உங்களாலான எல்லாவற்றையும் செய்வதென்ற தீர்மானத்துடன் அமைதியாக நீங்கள் வீடு செல்லவேண்டுமென உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, புரட்சிக்கும், சுதந்தர இந்தியாவிற்கும், நிப்போன் அரசாங்கத்திற்கும் மும்முறை கோஷிக்குமாறு உங்களை நான் வேண்டுகிறேன்.''

இந்திய சுதந்திர சர்க்கார், இந்திய சுதந்திர லீக் இரண்டின் தலைமைக் காரியாலயங்களும் இந்தியாவுக்கு அருகே இருப்

பதற்காகப் பர்மாவுக்கு மாற வேண்டியது அவசியமென்று கருதப்பட்டது. இந்த மாற்றம் 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 7-ந் தேதி நடந்திருக்கிறது.

பர்மாவில் அப்பொழுது ஜப்பானியருக்குச் சாதகமான நிலைமை இருந்ததாகச் சொல்லுவதற்கில்லை. ஜப்பானியர் முன்னேறித் தாக்க விரும்பவில்லை. ஹூக்வாங் பள்ளத்தாக்கில் நேசப்படைகள் ஆரம்பித்த தாக்குதல், சின்ட்வின் நதியை அவர்கள் தாண்டிவிடுவார்கள் போலிருந்த அபாயம்-இரண்டும் ஜப்பானியரை நெருக்கின. அப்போதுகூட, இம்பாலைக் கைப் பற்றி, பிறகு இந்திய தேசிய ராணுவம் யுத்தத்தில் ஈடுபடுவதை அனுமதிப்பது என்பதே ஜப்பானியரின் திட்டமாக இருந்தது.

1944-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4-ந் தேதி இந்திய தேசிய ராணுவம் யுத்தத்தில் ஈடுபட்டது; 1944 மார்ச் 18-ந் தேதி இந்திய - பர்மா எல்லையைத் தாண்டி இந்தியாவுக்குள் பிர வேசித்தது. அந்த ராணுவப் படைகள், ஜப்பானியப் படைகள் சிலவற்றுடன், மோராய், கோஹிமா, மற்றும் இதர கிராமங் களைக் கைப்பற்றிய பிறகு இம்பாலைச் சூழ்ந்துகொண்டன. ஆனால் போதிய விமானங்கள் இல்லாததாலும், மழைக் காலம் ஆரம்பித்துவிட்டதால் தொடர்ந்து சப்ளைகள் வருவது தடைப் பட்டதாலும் இந்திய தேசிய ராணுவம் வாப்ஸாக வேண்டிய தாயிற்று.

பிரிட்டிஷ் துருப்புகள் பர்மா மீது படையெடுக்கையில், இந்திய தேசிய ராணுவம் தற்காப்புப் போர் முறையைக் கையாள வேண்டியதாயிற்று. மீக்திலா வீழ்ச்சியுற்று, 14-வது ராணுவத் தின் முன்னேற்றம் கடுமையாக இருந்தபோது, ரங்கூனைக் காலி செய்வதென்று ஜப்பானியர் தீர்மானித்தார்கள்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸும் அவர் தோழர்களும் 1945-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 24-ந் தேதி ரங்கூனிலிருந்து பாங்காக் குக்குக் கிளம்பினார்கள். அவர்களே கடைசியாகக் கிளம்பியவர் கள். ஜப்பானிய சேனபதியும், பர்மா சர்க்கார் மெம்பர்களும் 23-ந் தேதி கிளம்பிவிட்டார்கள். இந்திய தேசிய ராணுவத்தின் 6000 துருப்புகளும் அதிகாரிகளும் மேஜர் ஜெனரல் லோகநாதன் தலைமையில் ரங்கூனிலேயே விடப்பட்டு, இந்திய உயிரையும் சொத்தையும் பாதுகாக்கும் பொறுப்புத் தரப்பட்டனர். இந்திய

சுதந்திர லீக், உதவி அக்கிராசனர் ஸ்ரீ ஜே. என். பகதூரி தலைமையில் விடப்பட்டது.

தாற்காலிக சர்க்காரின் பெயரால் வாங்கப்பட்டிருந்த கடன்களெல்லாம், ஸ்ரீ சுபாஷ் போஸ் ரங்கூனிலிருந்து விமானத்தில் கிளம்பு முன்பே திருப்பிக் கொடுக்கப்பட்டன.

இந்திய தேசீய ராணுவம் ரங்கூன் நகர நிர்வாகத்தை மேற்கொண்டது. இந்த இடைக்கால - ரங்கூன் ஜப்பானியரிடமிருந்து பிரிட்டிஷார் கைக்கு மாறுதற்கிடையே இருந்த கால - நிர்வாகத்தின் போது ரங்கூனில் திருட்டு, கொள்ளை, சூறை ஒன்றுகூட நடக்கவில்லை.

இந்தியரின் உயிர், சொத்து ஆகியவைகளுக்கு அபாயம் ஏற்படாதவாறு பர்மா ஜில்லாக்கள் பூராவிலும், இந்திய சுதந்திர லீகின் கிளைகள் பாதுகாத்தன. இதற்கும், 1942-ல் பிரிட்டிஷார் பர்மாவைக் காலி செய்து விட்டுப்போனபொழுது இருந்த நிலைமைக்கும் வித்தியாசம் எவ்வளவு! பர்மாவைப் பிரிட்டிஷார் காலி செய்தபோது அந்நாடு முழுமையிலும் முன்னர் என்றுமே நிகழாத அளவில், இந்தியர் பெருவாரியாகக் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அந்தக் காரியங்களை வர்ணிக்க ஆரம்பித்தால் மெய் சிலிர்க்கும். அவ்வளவு பயங்கர அட்டகாசங்கள் நடந்திருக்கின்றன.

1945-ம் வருஷம் மே மாதம் 5-ந் தேதி 36-வது இந்தியக் காலாட் படை பிரிகேடியர் லாடர் - இவர்தாம் ரங்கூன் பிரதேசக் கமாண்டர் - ஸ்ரீ பகதூரியை அழைத்தார். இந்திய சுதந்திர லீக்கின் லட்சியங்களை ஸ்ரீ பகதூரி விளக்கிச் சொன்னார். லீக் தன் அரசியல் அல்லா வேலைகளை நிறுத்தாமல் நீடித்துச் செய்ய வேண்டுமென்று லாடர் கேட்டுக்கொண்டார். இதற்கு ஸ்ரீ பகதூரி தம் சம்மதத்தை தெரிவித்தார். ரங்கூனில் இந்திய சுதந்திர லீக் முன்பு ஐந்து இலவச ஆஸ்பத்திரிகளை நடத்தி வந்தது. இவை திரும்பத் திறக்கப்பட்டன.

1944 ஏப்ரலில் ரங்கூனில் ஆரம்பிக்கப்பட்ட ஆஜாத் ஹிந்து தேசீய பாங்கி 1945-ம் வருஷம் மே மாதம் 19-ந் தேதிவரை வேலை செய்ய அனுமதிக்கப்பட்டது. 19-ந் தேதி அந்தப் பாங்கியைப் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் கைப்பற்றினார்கள். 1945-ம் வருஷம் மே மாதம் 28-ந்தேதி ஸ்ரீ பகதூரியும், சுதந்திர

லீகின் இதர நிர்வாகிகளும் பிரிட்டிஷ் ராணுவப் பாதுகாப்பு ஸர்விஸால் கைது செய்யப்பட்டவுடன் லீகின் வேலைகள் நின்று விட்டன. லீகுடன் லேசாகத் தொடர்பு வைத்திருந்தவர்கள் கூடப் பிற்பாடு கைது செய்யப்பட்டார்கள். ராணுவப் பாது காப்பு ஸர்விஸ், "நீங்கள் ஒரு சில நிமிஷ நேரத்துக்கு இங்கே வாருங்கள்" என்று ஒருவரை அழைத்து ராணுவப் புலன் விசா ரணைக் கோஷ்டியிடம் அவரை ஒப்படைத்துவிடும். வந்த மனிதர், அப்போது தாம் அணிந்திருந்த உடையுடனேயே நாள் கணக்கில் இருக்க வேண்டும். ஏனெனில் விசாரணை சீக்கிரத் தில் முடிவடையாது. அவர் ரங்கூன் மத்திய சிறையில் வேறு துணியோ படுக்கையோ இன்றி அவதிப்பட வேண்டும். சந் தேகத்தின்பேரில் அழைத்து வரப்பட்டவர்களில் சிலர், கேள்வி கள் கேட்கப்பட்ட பிறகு வீடு திரும்ப அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் நடமாட்டத்தின்மீது கட்டுப்பாடு விதிக்கப் படும்; போலீஸ் கண்காணிப்பு இருக்கும். சிலர் தினசரி போலீ ஸிடம் ஆஜராக வேண்டும். இவ்வாறு தினசரி ஆஜர் ஜாப் தாவில், ஜான்ஸி ராணி ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு பெண் மணியும் சேர்க்கப்பட்டிருந்தார். சிலர் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டனர். பலர் விசாரணையின்றித் தண்டிக்கப்பட்டு, இன்ஸீன் சிறையில் வைக்கப்பட்டார்கள்.

பிரிகேடியர் லாடர் ரங்கூனில் பிரவேசித்த ஆரம்ப காலத்தில், இந்திய தேசிய ராணுவத் துருப்புகள் இந்தியா வுக்கு அனுப்பப்படும் என்று மேஜர் ஜெனரல் லோகநாதனிடம் சொல்லியதாகத் தெரிகிறது. இந்திய தேசிய ராணுவத்தில் உள்ள இந்திய ராணுவத்தல்லாதார் யூனிபாரங்கள் தரிக்க வேண்டாம்; ஏற்கனவே பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் இருந் தவர்கள் தங்களுடைய பழைய யூனிபாரத்தை அணிந்து கொள்ள வேண்டும் என்று பிரிகேடியர் லாடரின் வேண்டு கோளின் பேரில் மேஜர் ஜெனரல் லோகநாதன் சொன்னதாக வும் தெரிகிறது.

பிரிகேடியர் லாடர் பின்வரும் வாக்குறுதிகளையும் கொடுத் தாராம்:

(1) 'களைப்பு வரும் வரை வேலை'க்கு இந்திய தேசிய ராணு வத்தினர் தனியாக உபயோகிக்கப்படமாட்டார்கள்; அவசிய மான வேலைகளையே செய்யப் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தி

னருடன் அவர்களுடைய எண்ணிக்கைக்குச் சம எண்ணிக்கையில் (இந்திய தேசிய ராணுவத்தினர்) உபயோகிக்கப்படுவார்கள்.

(2) இந்திய தேசிய ராணுவ முகாமை அந்த ராணுவத்தைச் சேர்ந்தவர்களே காவல் புரியலாம்.

(3) இந்திய தேசிய ராணுவத்தினர் தங்கள் சொந்தத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டு, தங்கள் சொந்தத் தேசிய கீதத்தைப் பாடலாம்.

ஆனால் இந்திய தேசிய ராணுவம் நிராயுதபாணியாக்கப் பட்டவுடன், அதன் துருப்புகள் பிரிட்டிஷ் காவலாளிகளின் கட்டுப்பாட்டின்கீழ் விடப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியத் துருப்பு களின் மேற்பார்வையில் ரோட்டில் 'களைப்பு வரும் வேலை' செய்யு மாறும், தோட்டிவேலை செய்யுமாறும் நிர்ப்பந்திக்கப்பட்டன. இந்திய தேசிய ராணுவத்தின் ஸீனியர் அதிகாரிகள் காவலில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

ஆஜாத் ஹிந்தின் தாற்காலிக சர்க்கார் மந்திரிகள் இந்திய சுதந்திர லீகின் இலாகாக்கள் மூலம் வேலை செய்தார்கள். 1944-ம் வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து ஆஜாத் ஹிந்த் சர்க் கார், இந்திய சுதந்திர லீக் ஆகியவற்றின் தலைமைக் காரியால யங்கள் ரங்கூனில் இருந்தன. லீக் தலைமைக் காரியாலயத்தில் 19 இலாக்காக்கள் வேலை செய்துவந்தன.

இந்திய சுதந்திர லீகின் பின்னணித் தலைமைக் காரியாலயம் ஒன்று சிங்கப்பூரில் இருந்தது. மலாய், சுமத்ரா, ஜாவா, போர் னியோ ஆகியவற்றில் நடவடிக்கைகளை அந்தக் காரியாலயம் மேற்பார்வையிட்டு வந்தது.

இந்திய சுதந்திர லீகுக்கு மலாயில் 70 கிளைகள் இருந்தன. மெம்பர்களின் எண்ணிக்கை 2 லட்சத்திற்கு அதிகமாக இருந் தது. பர்மாவில் 100-க்கு அதிகமான கிளைகள் இருந்தன. தாய்லாந்தில் 24 கிளைகள் இருந்தன. அந்தமான், சுமத்ரா, ஜாவா, ஸெலிபஸ், போர்னியோ, பிலிப்பைன்ஸ், சீனு, மஞ்சுகோ, ஜப்பான் ஆகியவற்றில் கிளைகள் இருந்தன.

இந்திய தேசிய ராணுவம், ஸிவில் ஸர்விஸ் இரண்டுக்கும் ஆட்கள் சேர்க்கப்பட்டார்கள். ஏக்காலத்தில் ஒன்பது ராணுவப் பயிற்சி முகாம்கள் இருந்தன. சிங்கப்பூரிலும் ரங்கூனிலும் அதிகாரிகள் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டன.

முகாம்களில் எல்லா ஜாதியினருக்கும் வகுப்பினருக்கும் ஒரே சமையல்தான். ரிக்ரூட்டுகளே கோஷ்டி கோஷ்டியாக மாறி மாறிச் சமையல் செய்தார்கள். அதிகாரிகள் ஹிந்துஸ்தானி பாஷையிலேயே பயிற்சி தந்தனர். ராணுவ உத்தரவுகள் ஹிந்துஸ்தானியில் தரப்பட்டன.

மலாயில் மாத்திரம் பயிற்சி அளிக்கப்பட்டு, இந்திய தேசீய ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 20,000.

இந்திய சுதந்திர இயக்கம் இந்தியரின் பணத்தாலேயே நடத்தப்பட்டது. கிழக்கு ஆசியா பூராவிலிருந்தும் நன்கொடைகள் கிடைத்தன. பர்மாவில் மாத்திரம் சுமார் 8 கோடி ரூபாய் வசூலாயிற்று. பணம் இருந்தவர்கள் பணமாகத் தந்தார்கள். பண்டங்கள் இருந்தவர் பண்டமாகத் தந்தார்கள். அவை அந்நாட்டுச் சுதேசி மக்களிடம் ஏலத்தில் விற்கப்பட்டன. கிடைத்த பணம், நிதியில் சேர்க்கப்பட்டது. ரங்கூனைச் சேர்ந்த ஸ்ரீ ஹபீப் என்ற செல்வர் சுதந்திர லீகுக்காக ஸ்ரீ சுபாஷ் போஸிடம் ஒரு கோடி ரூபாய் தந்திருக்கிறார். இதற்காக லீக் சார்பில் ஸேவக்-இ ஹிந்த் என்ற பதக்கம் ஒன்று அவருக்கு நேதாஜியால் அளிக்கப்பட்டது.

1945-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் இரண்டே வாரங்களில் மலாயில் மாத்திரம் புது வருஷ நன்கொடையாக ரூ. 40 லக்ஷம் வசூலாயிற்று.

ஆயுதங்கள், வெடி மருந்துகள் நீங்கலாக இந்திய தேசீய ராணுவத்தின் தேவைகள் எல்லாம் இந்திய சுதந்திர லீக்கால் லீகின் சொந்தப் பணத்தாலேயே வாங்கப்பட்டன.

இந்திய சுதந்திர லீக், இந்திய விடுதலைக்காகப் போர் புரிவதற்கென்று ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனம். ஆனால் அந்த வேலையுடன் சமூக சேவைத் திட்டத்தையும் அந்த ஸ்தாபனம் அமலுக்குக் கொண்டுவந்தது. யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களிடையே நிவாரண வேலையை லீக் செய்தது. மலாயில், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களிடையே வறுமையும் பிணியும் அதிகம் இருந்தன. லீகும் அதன் பல்வேறு கிளைகளும் டாக்டர்களை நியமித்து, நிவாரண ஸ்தலங்களை ஏற்படுத்தி, அங்கே இலவசமாக உணவு தந்து வைத்திய உதவியும் செய்து வந்தன.

மலாயில் கோலாலம்பூரில்தான் மிகப் பெரிய நிவாரண முகாம் இருந்தது. அங்கே ஒரு சமயத்தில் தினசரி 1,000 பேர்களுக்கு மேல் இருந்தனர். 75,000 மலாய் டாலருக்கு அதிகமாக மாதச் செலவு ஆயிற்று.

பர்மாவில் இந்திய சுதந்திர லீக் அநேக இலவச வைத்திய சாலைகளை நடத்திவந்தது.

தாய்லர்ந்தில் நவீன வைத்திய சாதனங்கள் கொண்ட ஆஸ்பத்திரி ஒன்றை இந்தியருக்காகச் சுதந்திர லீக் நடத்தி வந்தது.

வறுமையைப் போக்குவதற்காக இந்தியர் நிலச் சாகுபடி செய்யவும் சுதந்திர லீக் ஏற்பாடு செய்தது. மலாயில் 2000 ஏக்கருக்கு மேற்பட்ட காட்டுப் பிரதேசம், இந்தியரின் தோட்ட வேலைக்காகச் சீர்படுத்தப்பட்டது.

இந்தியக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பையும் சுதந்திர லீக் மேற்கொண்டது. கிழக்கு ஆசியாவில் முந்திய வருஷங்களை விட அதிகமாக, மூன்றே வருஷங்களில் ஹிந்துஸ்தானிப் படிப்பு முன்னேறியது. எல்லாப் பிரதேசங்களிலும் இந்திய சுதந்திர லீகால் தேசீயப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. பர்மாவில் மாத்திரம் 70 இந்தியப் பள்ளிக்கூடங்கள் லீகின் மேற்பார்வையில் நடத்தப்பட்டன.

இந்திய தேசீய ராணுவம் காலநிலை பாதகத்தால், இந்தியாவிலிருந்து வாபஸாக வேண்டியதாயிற்று. இந்தியக் கிராமங்கள் சிலவற்றில் சில நாட்களுக்கே மூவர்ணக் கொடி சுதந்திரமாகப் பறந்தது.

அந்தமான், நிக்கோபார் தீவுகளும், பர்மாவில் ஜியாபாடி என்ற பிரதேசமும் சுதந்திர இந்தியாவின் பிரதேசங்களாகக் கொஞ்ச காலத்துக்கே இருந்தன.

மறுபடியும் அங்கேயும் இதர இந்தியாவிலும் சுதந்திரக் கொடி எப்போது பறக்கும் என்பது, இந்திய மக்கள் விடுதலை பெற எப்போது உறுதியர்கவும் தயாராகவும் இருப்பார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது.

சுதந்திர இயக்கத்திற்குப் போஸ் தந்த புத்துயிரும் புதிய பலமும் வெறும் வர்ணனை வார்த்தைகளுக்கு அடங்கா மகோன்னதமானவை. தேசத்திற்குப் போஸ் தந்த சக்தி, இறுதி

வெற்றிப் போரில் பெரும் பங்கெடுத்துக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

போஸ் நிலைமை என்ன? அவர் இப்பொழுது எங்கு இருக்கிறார்? 1945-ம் வருஷம் ஆக்ஸ்ட் மாதம் 18-ந்தேதி அவர் விமான விபத்தில் காலமானதாக ஆகஸ்ட் 23-ந் தேதி இந்தியாவுக்குக் கிடைத்த ஜப்பானியச் செய்தி உண்மையானதா? அவர் காலமானார் என்று இதற்கு முன் வந்த செய்தி பொய்யானதுபோல இந்தச் செய்தியும் பொய்யாக வேண்டும் என்பதே 40 கோடி இந்தியரின் பிரார்த்தனையாக இருக்கிறது. பிரஸ்தாப மரணச் செய்தியில் மகாத்மாவோ மாளவியாவோ அல்லது பல்லாயிரக்கணக்கான தேசீய ராணுவ வீரர்களோ நம்பிக்கை வைக்கிறார்களா? மரணச் செய்தி வந்ததும் புனா இயற்கை வைத்தியசாலையில் தேசீயக் கொடியை இறக்குவதற்காகப் போன தொண்டரை மகாத்மா தடுத்துவிட்டார் - செய்தி பொய்யாக இருக்கலாமென்று. போஸ் உயிரோடு இருப்பதாகவும், எங்கேயோ தலைமறைவாக இருப்பதாகவும், சரியான தருணத்தில் அவர் வந்துவிடுவார் என்று தாம் நம்புவதாகவும் மகாத்மாஜி சொல்லிவந்தார். ஆனால் போஸ் மந்திரிசபையில் ஒரு மந்திரியாக இருந்தவரும், டில்லி ராணுவக் கோர்ட்டு விசாரணையில் தண்டிக்கப்பட்டு, சேனாபதி ஆகின்லக்கால் உடனே விடுவிக்கப்பட்டவருமான ஸ்ரீ ஷா நவாஸ்கான், "நேத்தாஜியின் மரணம் என்னவோ உண்மைதான். இதை என்னிடம் கர்னல் ஹபிபுர் ரஹ்மான் - விபத்து ஏற்பட்ட விமானத்தில் போஸுடன் இருந்தவர் - சொன்னார். போஸின் அஸ்தி பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்" என்கிறார்.

ஷா நவாஸின் இந்த அறிக்கை, மகாத்மா தமது நம்பிக்கையைத் தெரிவித்த ஒரு வாரத்திற்கெல்லாம், 1946-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ந் தேதி டில்லியில் ஓரியண்ட் பிரஸ்ஸிடம் தரப்பட்டது. அப்போதும் காந்திஜியின் கருத்து மாறவில்லை. அவர் ஆதாரமில்லாமல், "நான் நம்புகிறேன்" என்று சொல்ல மாட்டார். ஹபிபுர் ரஹ்மான் பொய் சொல்லுகிறாரா, ஷா நவாஸ் உண்மையைச் சொல்லவில்லையா என்ற சங்கடமான கேள்விகளை யாரும் போடாதிருப்பதே நல்லது. போஸ் உயிருடன் இருக்கிறார் என்றால் அவரை வேட்டையாடப் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் முயற்சி செய்தால் என்ன செய்வதென்று

இ.தே.ரா.அதிகாரிகள் உண்மையைத் தாற்காலிகமாக மறைத்து வைக்க விரும்பக் கூடும். போஸ் உயிருடன் இல்லை, இல்லை என்று இ. தே. ரா. அதிகாரிகள் அடிக்கடி காந்திஜியிடம் சொல்லி வரவே, அவரும் தமது பழைய அபிப்பிராயத்தை மீண்டும் வெளியிடாமல், "இந்த அதிகாரிகள் சொல்வதும் நிஜமாக இருக்கலாம்" என்று கூறிவிட்டார்.

ஜப்பானிலுள்ள இந்தியர் போஸ் மரணச் செய்தியை நம்ப வில்லை. அந்தச் செய்தி பிரசுரமானவுடன் போஸ் பிரேதத்தைக் காண டோக்கியோ இந்தியர் விரும்பினர். ஆனால், 'பிரேதம் இல்லை; அவருடைய அஸ்தி' என்று ஜப்பானியர் ஏதோ அஸ்தியைக் காண்பித்தார்கள். "எப்போது ஈமக் கிரியைகள் நடக்கும்?" என்று கேட்கப்பட்டதற்கு, "இன்னும் இரண்டு நாட் களில்" என்ற பதில் கிடைத்தது. ஆனால் டோக்கியோப் பத்திரி கைகளில் பிற்பாடு வந்த ஒரு செய்தி, இந்த இந்தியரிடம் கூறப்பட்ட ஈமக்கிரியைத் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்ன தாக ஒரு தேதியில் ஈமக்கிரியை நடந்ததாகக் கூறியது. எனவே போஸ் மரணச் செய்தியை நம்புவதற்கில்லை என்று ஜப்பானில் எட்டு வருஷங்களாக வசித்துவரும் பங்களூர் ஸ்ரீ கே. வி. நாராயணன் சொல்லுகிறார். பிரிட்டிஷாரை ஏமாற்றப் போஸே இந்த மரணக் கதையைக் கட்டியிருக்கலாம். அவர் மலாயில் இருக்கையில் ரஷ்யாவுக்கு ஒரு தடவை விஜயம் செய்ததாகவும், திரும்பி வந்த பிறகு அவரே இ. தே. ரா. அதிகாரிகளிடம் தமது ரஷ்ய விஜயம் பற்றிப் பேசியதாகவும் இ. தே. ரா. வின் 2-வது டிவிஷன் தலைமைக் காரியாலயத்துடன் வேலைசெய்த ஸ்ரீ கோவிந்தராவ் கிர்டே என்பவர் 1944-ம் வருஷம் நவம்பர் மாதம் 27-ந் தேதி நாகபுரிப் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இந்தியாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பார்வர்டு பிளாக் கட்சியினருக்கும் தீவிர அபிப்பிராய பேதங்கள் இருக்கை யில், ஸ்ரீ சுபாஷ் போஸுக்கு ரஷ்யா புகலிடமாக இருக்க முடியுமா? இருக்க முடியாது என்ற ஊகத்திற்கு வரவேண்டியிருக் கிறது.

சீனாவில் இருக்கக்கூடும் என்ற ஹேஷ்யமும் கொஞ்ச கால மாக இருந்துவருகிறது. லெப். கர்னல் லக்ஷ்மி, ஸ்ரீ உத்தம சந்த் ஆகியவர்கள் இவ்வாறே ஹேஷ்யம் செய்கிறார்கள். இந்தியா வில் போஸ் இல்லை என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லு

கிறுர் ஸ்ரீ உத்தமசந்த். அரக்கோணம் அருகே போஸைத் தாம் 1946-ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் பார்த்ததாகக்கூட ஒருவர் சொல்லுகிறுர்.

மொத்தத்தில், போஸ் இருப்பிடம் பற்றி வெளியாகும் செய்திகள், மூளையைக் குழப்புவனவாக இருக்கின்றன. சந்தர்ப்ப சாட்சியங்களை ஆராய்ந்தால் நேதாஜி காலமாகவில்லை என்ற முடிவுக்குத்தான் யாரும் வரமுடியும். யாருக்குச் சந்தேகம் இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் சந்தேகம் எதுவுமே இல்லை. உயிரோடு இருக்கிறுர் என்றே என் மனத்துக்கு உறுதியாகப் படுகிறது.

"சரியான தருணத்தில் போஸ் திரும்பி வருவார் என்று சொல்லப்பட்டதே, அது எந்தத் தருணம்? இந்த வருஷத்தில் டில்லியில் கூடப்போகும் காங்கிரஸ் செஷனுக்கு' வருவாரா?" என்று டில்லிப் பத்திரிகை ஒன்று ஹேஷ்யம் கிளப்புகிறது. அயர்லாந்தையும் இந்தியாவையும், டிவேலராவையும் சுபாஷ் பாபுவையும் நேருவின் பத்திரிகையான "நேஷனல் ஹெரால்டு" ஒப்பிட்டு, போஸ் இந்தியாவுக்குத் திரும்பலாம் என்பதற்குச் சாதக வர்தங்களைக் கூறுகிறது.

ஷா நவாஸ் விடுதலையானவுடன், மகாத்மாவைப் போற்றிப் புகழ்ந்து, இனி அஹிம்ஸா முறைப்படி நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடப் போவதாகத் தெரிவித்தார். ஆயுதம் இல்லாவிட்டால் அஹிம்ஸைதான் என்ற வாதம் ஒரு புறம் இருக்க, ஆயுதப் புரட்சியின் சக்தி அஹிம்ஸைப் புரட்சிக்கும் உண்டு என்று மகாத்மா சொல்லுவதையும் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

சுபாஷ் போஸ் திரும்பி வந்து, மறுபடி மகாத்மாவைச் சந்தித்து, **அஹிம்ஸைக் கொள்கையைத்** தாம் பின்பற்றப்போவதாகச் சொல்வாரா? அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தால் சர்க்கார் என்ன செய்யும்? அல்லது அவர் அடிமை இந்தியாவுக்குத் திரும்பி வராமல் மற்ருெரு சந்தர்ப்பத்துக்காகக் காத்திருப்பாரா ?

இதற்கெல்லாம் பதிலைப் பேனுவால் இப்பொழுது சொல்ல முடியாது; எதிர்கால நிகழ்ச்சிகளால்தான் சொல்ல முடியும்.

5

இ. தே. ரா. விசாரணைகள்

இந்திய தேசீயராணுவத்தின் பராக்கிரமச் செயல்களெல்லாம் டில்லி சர்க்காருடைய கைங்கர்யத்தாலேயே இந்திய மக்களுக்கும் உலகுக்கும் நன்குகத் தெரிந்தன. அந்த ராணுவத்தைச் சேர்ந்த பலர் மீது விசாரணை நடத்துவதென்று சர்க்கார் முடிவு செய்தனர். உடனே பெரியகிளர்ச்சியைத் தம் பிரசங்கங்கள், அறிக்கைகள் ஆகியவை மூலம் நேரு ஆரம்பித்தார். "அவர்கள் தண்டிக்கப்பட்டால், இந்திய மக்கள் எல்லாருமே தண்டிக்கப்படுவது போலாகும். மக்களின் மனத்தில் ஏற்படும் புண் லேசில் ஆருது" என்ருர் நேரு.

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்த உடனேயே நேரு தமது கோரிக்கையை வற்புறுத்த ஆரம்பித்த போதிலும், சர்க்கார் தன் பிடிவாதத்தைக் கைவிடவில்லை. கைவிட வேண்டாமென்று யோசனை சொன்னவர்கள் புத்திசாலிகள் அல்ல என்பது பின்னல் ருசுவாயிற்று. 1945-ம் வருஷம் நவம்பர் மாதம் 5-ந்தேதி இ. தே. ரா. முதல் வழக்கில் கேப்டன் ஷா நவாஸ், கேப்டன் ஸேகால், லெப். தில்லான் ஆகியவர்கள் மீது டில்லிச் செங்கோட்டையில் விசாரணை ஆரம்பமாயிற்று. ஸ்ரீ புலாபாய் தேசாய், ஸர் ஸப்ரு, பண்டித நேரு, ஆஸப் ஆலி, டாக்டர் காட்ஜூ மற்றும் பல நிபுணர்கள் எதிர்வழக்காடி, போஸ் ராணுவத்தின் மாசற்ற தேசபக்தியையும், இணையற்ற தியாகத்தையும் நிரூபித்தார்கள். வகுப்பு வாதம், அந்நிய ஆட்சி உள்ள இடத்திலேயே செழிப்பாக இருக்க முடியும், சுதந்திர சர்க்கார் தோன்றினுல் அந்த வாதம் ஒழிந்துவிடும் என்பதைப் போஸின் தாற்காலிக சுதந்திர சர்க்காரின் நிர்வாகம் நிரூபித்ததை மேற்கண்ட வக்கீல்கள் எடுத்துக் காட்டினுர்கள். இதன் விளைவாகத் தேசம் பூராவிலும் புதிய விழிப்பு ஏறபட்டது. சுதந்திர வீரர்களின் வீரப் பிரதாபங்களை மகாஜனங்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். (இதையறிந்த சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்த விசாரணையை நடத்தியே இருக்கக்கூடாது என்று எழுதின.)

ஷா நவாஸ் வாக்குமூலம்

கோர்ட்டில் ஷா நவாஸ் பின்வரும் வாக்கு மூலத்தைப் படித்தார் :

"இந்திய தேசீய ராணுவத்தில் சேருவதென்று நான் முடிவு செய்தபோது, எனக்குச் சொந்தமான சகலத்தையும்—என் உயிர், என் வீடு, என் குடும்பம், அதன் பரம்பரைக் குணம் (மன்னரிடம் விசுவாசம்) எல்லாவற்றையும்—தியாகம் செய்வதென்று தீர்மானித்தேன். என் மார்க்கத்தில் குறுக்கே என் சகோதரர் நின்றால் அவரையும் எதிர்த்துப் போராடுவதென்று உறுதிகொண்டேன். 1944-ம் வருஷம் நடைபெற்ற போரில் நாங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டோம். அவர் காயமடைந்தார். சின் குன்றுகளில் இரண்டு மாதங்களில் அநேகமாகத் தினசரி நானும் என் ஒன்றுவிட்ட சகோதரரும் ஒருவரை ஒருவர் எதிர்த்துச் சண்டை போட்டோம். மன்னருக்கு விசுவாசமா, அல்லது தாய்நாட்டுக்கு விசுவாசமா என்ற பிரச்னையே எங்களை எதிர்நோக்கியது. நாட்டிடம் விசுவாசமாக இருப்பதென்று தீர்மானித்தேன். அதற்காகத் தியாகம் செய்யத் தயார் என்று என் நேத்தாஜியிடம் (சுபாஷ்சந்திர போஸ்) வாக்களித்தேன்.

கொலைக்கு நான் உடந்தையாக இல்லை. பிராஸிக்யூஷன் தரப்பு என்மீது கூறியவை உண்மையென்று வைத்துக்கொண்டால்கூட எந்தக் குற்றத்தையும் நான் செய்தவனாக மாட்டேன். இ. தே. ரா. வில் மனமொப்பிச் சேர்ந்து, அதன் கட்டு திட்டங்களுக்குட்பட்ட முகம்மத் ஹுஸேன், நெருக்கடியான சமயத்தில் ராணுவத்தைவிட்டு ஓடவும், தம்முடன் சிலரை அழைத்துக் கொண்டு போகவும் முயற்சி செய்திருக்கிறார் என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. முயற்சியில் அவர் வெற்றி பெற்றிருந்தால், என் தலைமையிலிருந்த படைகளைப்பற்றிய தகவல்களை அவர் பிரிட்டிஷாருக்குக் கொண்டு போயிருப்பார். நாங்கள் சர்வ நாசமாக்கப்பட்டிருப்போம். வேறு நாகரிக தேசங்களின் ராணுவச் சட்டத்தைப்போலவே இ. தே. ரா. சட்டப்படியும், குற்றம் செய்ய நடந்த அந்த முயற்சி மிகவும் பெரியது, அருவருக்கத்தக்கது, மரண தண்டனை பெறவேண்டியது.

எனினும், ஹுஸேனுக்கு நான் மரண தண்டனை விதித்தேன் என்றோ, அல்லது நான் விதித்த தண்டனையின் விளைவாக

அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றே சொல்லுவது தவறு. அவரும் அவர் தோழர்களும் என் முன் ஆஜர் செய்யப் பட்டனர். அவர்கள் மீது குற்ற ரிப்போர்ட்டுகள் எழுதப் பட்டில்லை. ஹுஸேனை நான் ரொம்பவும் கண்டித்துப் பேசினேன். "நீங்கள் செய்த குற்றத்திற்கு உங்களைச் சுடலாம்; சுடவேண்டும்" என்றேன். அத்துடன் விவகாரத்தை விட்டு, மறுபடியும் எதிரியை என்னிடமாவது அல்லது ரிஜிமெண்ட் கமாண்டரிடமாவது ஆஜர் செய்யச் சொன்னேன். இரண்டாவது தடவையாக இதைப்போல நடந்துகொண்டால், எதிரிகளை விசாரிக்க அந்தக் கமாண்டருக்கு அதிகாரம் உண்டு. இந்த வழக்கு மறுபடியும் என்னிடம் வரவில்லை. வரவேண்டிய அவசியம் ஏற்படவில்லைபோலும்.

என் தகப்பனுர் இந்திய ராணுவத்தில் 30 வருஷ காலம் சேவை செய்திருக்கிருர். முதல், இரண்டாவது உலக மகா யுத்தங்களில் என் குடும்பத்தினரில் தேக ஆரோக்கியமாக இருந்தவர்கள் யாவரும் சேர்ந்திருக்கிருர்கள். அவர்களில் இப் பொழுது இந்திய ராணுவத்தில் 80 அதிகாரிகள் இருக்கிருர்கள். மன்னரிடம் விசுவாசமாக இருப்பதை அரும்பெரும் பொக்கிஷமாகப் பாவித்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் நான்.

ஜப்பானியரால் நான் பிடிபட்ட பிறகு ஒரு சமயத்தில் இந்திய தேசிய ராணுவத்தில் நானுகவே சேருவதென்று தீர் மானித்தேன். என் ஸோல்ஜர்களின் நலனை முன்னிட்டே இந்த முடிவுக்கு வந்தேன். இந்த ராணுவம் ஜப்பானியரின் சுரண்டலுக்குப் பணியும் என்று என் மனத்துக்குப் படுகிற சமயத்தில் அதைத் தகர்ப்பது அல்லது உள்ளிருந்து காலை வாரிவிடுவது என்று தீர்மானித்தேன்.

நேத்தாஜி போஸை இந்தியாவில் நான் கண்டதில்லை. அவருடைய நடவடிக்கைகள்பற்றி எதையும் நான் அறியேன். ஆனுல் மலாயில் அவருடைய பல பிரசங்கங்களைக் கேட்டேன். அவை என்னைப் பரவசப்படுத்தின. அவருடைய கம்பீரமான ஆஜானுபாகுவான தோற்றத்திலும், பிரசங்கங்களிலும் நான் மயங்கிவிட்டேன் என்று சொல்வது மிகையாகாது. இந்தியாவின் உண்மை நிலையை அவர் எங்களுக்குச் சித்திரித்துக் காண்பித்தார். என் வாழ்க்கையில் முதல்முதலாக நான் இந்தியனின் பார்வை மூலம் இந்தியாவைக் கண்டேன். அவரது

தன்னலமின்மை, நம் நாட்டிடம் அவருக்கு இருந்த பரிபூர்ணப் பற்றுதல், சூதுவாதற்ற அவரது குணம், ஜப்பானியரின் விருப்பங்களுக்கு அவர் பணிய மறுத்தது ஆகியவை மறக்க முடியாதபடி என் உள்ளத்தில் பதிவாயின.

நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, ஜப்பானியர் இந்தியாவில் பிரவேசிப்பது நிச்சயம் என்பதை உணர்ந்தேன். சண்டை அநேகமாக இந்தியாவுக்குள்ளும் நடக்கும் என்று நினைத்தேன். ஏனெனில், ஜப்பானியரின் முன்னேற்றத்தைப் பிரிட்டிஷ் துருப்புகளால் தடுக்க முடியாது என்ற உறுதியான கருத்துக் கொண்டிருந்தேன்.

மலாய் படையெடுக்கப்பட்டதைப் பார்த்திருக்கிறேன். இந்தியாவுக்கும் அது நடக்கவேண்டுமென்று நான் விரும்பவில்லை. மலாயில் நான் கதியற்ற கைதியாக இருப்பதைவிட, இந்தியரின் உயிர், சொத்து, மானம் ஆகியவற்றைக் காப்பாற்ற கையில் துப்பாக்கியுடன் இருந்தால் என் நாட்டுக்கு மிகவும் உபயோகமாக இருப்பேன் என்று நினைத்தேன்.

ஜப்பானியர் நேர்மையின்றி நடந்து கொண்டால் அவர்களையும் எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கக் கூடியவர்களையே இ. தே. ரா. வில் சேர்த்தோம். பிராஸிக்யூஷன் சாட்சிகள்கூட இதைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்திருக்கிறார்கள். யுத்தக் கைதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டு, இ. தே. ரா. வில் சேர்க்கப்பட்டார்கள் என்ற கூற்று உண்மையல்ல. நிர்ப்பந்தப்படுத்தி யாரையும் சேர்க்கலாகாதென்று சொல்லியிருக்கிறேன். யாரையும் நிர்ப்பந்தம் செய்து சேர்க்கிற அதிகாரிகளுக்குத் தண்டனை கிடைக்கும் என்றுகூட எச்சரித்திருக்கிறேன்.

அதிகப்பட்ச தியாகங்களைச் செய்யத் தயாராக இல்லாதவர்கள் இ. தே. ரா. விலிருந்து விலகிவிடலாம் என்றும், இ. தே. ரா. வில் உள்ளவர்கள் தண்ணீரின்றித் தாகத்தோடு இருக்கவும், பட்டினி கிடக்கவும்,போதிய சக்தி இல்லாதபோது முன்னேறிப் போகவும், இறுதியில் சாகவும் தயாராக இருக்கவேண்டுமென்றும் நேதாஜி எச்சரித்திருக்கிறார்.

கீழ்க்கோடி இந்தியரில் ஆயிரக்கணக்கான பேர்கள் தங்கள் சொத்துக்களையெல்லாம் இந்திய தேசீய ராணுவத்

திற்குக் கொடுத்து, கையில் தம்படிகூட இல்லாமல் ராணு வத்தில் குடும்பங்கள் சகிதமாகச் சேர்ந்து தாய்நாட்டுக்காகப் "பக்கிரி"களாக ஆனதை என் கண்களால் நானே பார்த் திருக்கிறேன். எங்களுக்கு உண்மையான தலைவர் இருந் தார் என்பதை அறிந்திருந்தோம். அவர், வறுமையால் வாடிக்கொண்டும், ஆயுதமின்றி நிர்க்கதியாகவும் உள்ள கோடானுகோடி மக்களின் பெயரால் எங்களை முன்வருமாறு கேட்டு, அவர்களின் சுதந்திரத்திற்காக உயிரைத் தியாகம் செய்யுமாறு கோருகையில் எந்தக் கண்ணியமான இந்தி யனும் 'முடியாது' என்று சொல்ல முடியாது. நேதாஜியின் கோரிக்கை ரொம்பச் சொற்பமானதே என மதித்து, அவர் கோரிக்கைக்கு இணங்கச் சம்மதிப்பான்.

தலைவரை நான் கண்டேன். அவரைப் பின்பற்றுவ தென்று தீர்மானித்தேன். இது, என் வாழ்நாளிலேயே நான் செய்த மிகப் பெரிய முடிவாகும்; பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் ஏராளமாக உள்ள என் உற்றார் உறவின ரையும் — அவர்களை என் கட்சிக்குத் திருப்புவது அசாத்திய மென்பதை நான் அறிவேன் — எதிர்த்துச் சண்டை போடுவதென்று செய்த முடிவாகும்.

பிரிட்டிஷாரால் சுரண்டப்பட்டு, அவ்வாறு சுரண்டச் சௌகரியமாக இருக்கவேண்டுமென்பதற்காக வேண்டு மென்றே எழுத்தறிவின்றி வைக்கப்பட்டிருக்கும் கோடிக் கணக்கான பட்டினி இந்தியர்களை நான் நினைத்தபோது, இந்தியாவிலுள்ள ஆட்சி முறையிடம் பெரிய வெறுப்பு என் உள்ளத்திலே வளர்ந்தது. அந்த ஆட்சி முறை அநீதியை அடிப்படையாகக் கொண்டிருந்ததாக என் மனத்துக்குப் பட்டது. அந்த அநீதியை நீக்க நான் எனக்குச் சொந்தமான சகலத்தையும் — என் உயிர், என் வீடு, என் குடும்பம், அதன் பாரம்பரியப் பெருமை யாவற் றையும் — தியாகம் செய்வதென்று தீர்மானித்தேன்.

இந்தத் தேசிய ராணுவம் சமாளித்த கஷ்ட நஷ்டங்களை எந்தக் கூலிப்பட்டாளமும், எந்தப் 'பொம்மை' ராணுவமும் சமாளிக்க முடியாதென்பதை இந்தக் கோர்ட்டின் கவனத் திற்கும் என் நாட்டினரின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்."

ஸேகாலின் வாக்குமூலம்

கேப்டன் ஸேகால் தமது வாக்குமூலத்தில் கூறியதாவது:

"பிரிட்டனின் பிரதிநிதி என்ற முறையில் லெப். கர்னல் ஹன்ட் இந்திய அதிகாரிகளையும் துருப்புகளையும் ஆட்டு மந்தைபோலப் பாவித்து 1942-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 17-ந் தேதி ஜப்பானியரிடம் ஒப்படைத்தார். இது எங்களுக்குப் பேயறையாக இருந்தது. எதிரியின் அதிகப் படை பலத்தை எதிர்த்து இந்திய ராணுவம் தைரியமாகப் போராடியதற்குப் பலனாகப் பிரிட்டிஷார் அந்த ராணுவத்தை ஜப்பானியரின் பூர்ண தயாதாட்சண்யத்திடம் ஒப்படைத்தார்கள்.

பிரிட்டிஷ் மன்னருடன் எங்களுக்கு இருந்த எல்லாத் தொடர்புகளையும் பிரிட்டனே துண்டித்து, அதனிடம் எங்களுக்கு இருந்த பொறுப்புகளிலிருந்து எங்களை விடுவித்து விட்டதாகக் கருதினோம். ஜப்பானியர் எங்களைக் கேப்டன் மோகன் சிங்கிடம் ஒப்படைத்தனர். மோகன் சிங் சேனாபதி என்று அழைக்கப்பட்டார். அவர் தலைமையின் கீழ் எங்கள் கதியை நாங்களே உருவாக்கிக் கொள்ள எங்களுக்கு உரிமையளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் எங்களுக்கு எவ்விதப் பாதுகாப்பையும் அளிப்பதை நிறுத்தி விட்டதால், எங்களிடமிருந்து இனி விசுவாசத்தைக் கோர முடியாதென்று நம்பினோம்."

1942 ஆகஸ்டில் இந்தியாவில் "க்விட் இந்தியா" தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு நடந்தவற்றைக் கேப்டன் ஸேகால் பிரஸ்தாபித்துப் பின்வருமாறு கூறினர்: "அகில இந்திய ரேடியோவும், பி. பி. ஸி. யும் இந்திய நிகழ்ச்சிகள்பற்றிச் சொல்லுவதை நிறுத்தின. எனினும், இந்தியாவில் எங்கிருந்தோ வேலை செய்துவந்த சில ரகசிய ரேடியோ நிலயங்களும், இந்தியாவுக்கு வெளியில் ஜப்பானிய, இதர அச்சு ரேடியோ நிலயங்களும் ஆகஸ்ட் தீர்மானம் நிறைவேறியதற்குப் பிற்பாடு நடந்தவற்றையும், சுதந்திர இயக்கத்தை ஒடுக்கச் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் அறிவித்து வந்தன. அவற்றைக் கேட்டதிலிருந்து, 1857-ம் வருஷப் புரட்சி முடிவடைந்ததும் நிலவிய பயங்கர ஆட்சி மீண்டும் தோன்றிவிட்டது போலத் தெரிந்தது.

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் இந்தியப் பத்திரிகைகளும், பிரிட்டிஷ் ரேடியோக்களும் இந்திய சர்க்கார் ரேடியோக்களும் இந்த விஷயம் குறித்து எதையும் சொல்லாததால், அந்த இந்திய ரகசிய ரேடியோக்கள், அச்சு ரேடியோக்கள் ஆகியவை சொன்னவையெல்லாம் உண்மைதாஞு என்று நாங்கள் சந்தேகிக்கக் காரணமில்லை.

நாங்கள் எங்கள் நாட்டில் விட்டு வந்த உற்றுர் உறவினர் கதி என்னவாயிற்ருே என்ற கவலை எங்களுக்கு ஏற்பட்டது; நம்மை சாசுவதமாக அடிமைகளாக வைத்திருப்பதென்ற பிடிவாதத்துடன் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மீது வெறுப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் படை பலம் அதிகமாக இல்லையென்றே எங்களுக்குத் தகவல் வந்திருந்தது. ஜப்பானிய முன்னேற்றத்தை நிறுத்த பிரிட்டிஷாருக்கு திறமையுண்டா என்று எங்களில் நிபுணர்களும் சந்தேகித்தார்கள். எனவே, நாங்கள் சாங்கோபாங்கமாக விவாதித்து கட்டுப்பாடான இந்திய தேசிய ராணுவம் ஒன்றை அமைப்பதென்றும், ஜப்பானிய ராணுவத்துடன் அந்த ராணுவமும் இந்தியாவுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றும், இந்திய சுதந்திரத்திற்காக நாம் போர் புரிந்துகொண்டு, அதே சமயத்தில் பிரிட்டிஷாருக்குப் பதிலாக ஜப்பானியர் நமது எஜமானர்களாகி விடும் முயற்சி நடந்தால் அதை எதிர்ப்பதென்றும் தீர்மானித்தோம்.

ஜப்பானியர் என்னை துன்புறுத்துவார்கள் என்ற பயத்தினுல் நான் இ. தே. ரா. வில் சேர்ந்ததாக யாரும் நினைக்க வேண்டியதில்லை. , எந்த சுயநலத்தோடும், அல்லது கூலிக்கு உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் நான் இ. தே. ரா. வில் சேரவில்லை. 1942 செப்டம்பரில் இ. தே. ரா. கேப்டன் என்ற முறையில் எனக்கு மாதம் 80 டாலர் தான் கிடைத்தது. இ. தே. ரா. வில் நான் சேராதிருந்தால் மாதம் 120 டாலர் கிடைத்திருக்கும். தாய்நாட்டை விடுவிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தான் இ. தே. ரா. வில் நான் சேர்ந்தேன்.

யுத்தக் கைதிகளுக்குள்ள எல்லா உரிமைகளையும் எங்களுக்கு பிரிட்டிஷார் தந்தாகவேண்டும். 1945-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ந் தேதி பிரிட்டிஷ் படை கமாண்டருக்கு நான் எழுதிய கடிதத்தில் நானும் எனது தலைமையில் போர் புரிந்த

அதிகாரிகளும் துருப்புகளும் யுத்தக் கைதிகள் எந்த அந்த ஸ்தில் தான் சரணடைய முடியும் என்று குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கடிதத்தை பெற்றுக்கொண்ட பிறகு எவ்வித ஆட் சேபனையுமின்றி எங்கள் சரண் ஏற்கப்பட்டது. சரணடைந்த பிறகு யுத்தக் கைதிகளாகவே நாங்கள் நடத்தப்பட்டோம்.

நாங்கள் கூறிய சரண் நிபந்தனையை பிரிட்டிஷ் கமாண்டர் ஏற்க மறுத்திருந்தால், மேலும் போர் புரிய நாங்கள் உறுதி கொண்டிருந்தோம். போர் புரிய எங்களால் முடியும். ஏனெனில் அப்போது நாங்கள் 400 பேர்களும் கடைசிச் சொட்டு ரத்தம் உள்ள வரை தாய்நாட்டுக்காக போர் புரிய தயாராயிருந்ததோடு எங்களிடம் சகல ஆயுதங்களும் இருந்தன.

குற்றச்சாட்டுக்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள நான்கு சிப்பாய்கள் மீது நான் விசாரணை நடத்தி, அவர்கள் குற்ற வாளிகள் என நிரூபிக்கப்பட்டதும் மரண தண்டனை விதித்தது உண்மையே. ஆனால் தண்டனை நிறைவேற்றப் படவில்லை. அந்த சமயத்தில் வேறு பலர் தண்டிக்கப் பட்டனர்; அவர்கள் வருத்தம் தெரிவித்து இனி நேர்மையாக நடப்பதாக வாக் களித்ததும் மன்னிக்கப்பட்டார்கள். அதே போலத்தான் இந்த நால்வரும் மன்னிக்கப் பட்டார்கள். இதரர்கள் பட்டாளத் திலிருந்து ஓடாதிருப்பதற்காக இவர்களுக்கு தரப்பட்ட தண்டனைச் செய்தி எல்லாருக்கும் தெரிவிக்கப்பட்டது. தண் டனை நிறைவேற்றப்பட்டிருந்தால் கூட, கொலைக்கு உடந்தையாக இருந்ததாக என் மீது குற்றஞ் சாட்டுவதற்கில்லை. அந்த நால்வரும் மனமொப்பி இ. தே. ரா. வில் சேர்ந்து, அதன் கட்டுப் பாட்டுக்கு உட்பட்டு, நடக்கப்போகும் போராட்டத்தில் ஈடுபடுவ தாக மனமொப்பி சம்மதித்திருக்கிறார்கள். போர் நடக்கையில் வெட்கம் மானமின்றி அவர்கள் சேனையிலிருந்து ஓட்டமெடுத் ததின் மூலம் இ. தே. ரா. சட்டத்தின் கீழ் மரண தண்டனை பெறவேண்டிய குற்றத்தைச் செய்தார்கள். உலகெங்கும் இந்த குற்றத்திற்கு இந்த தண்டனை தான் விதிக்கப்படுகிறது.

இ. தே. ரா. தனது பிரதான நோக்கமாகிய இந்திய விடு தலையை அடைவதில் தவறி விட்டபோதிலும், மலாய், பர்மா, மற்றும் இதர தென் கிழக்கு ஆசியப்பகுதிகளில் இந்தியரின் உயிர், உடைமை, மானம் ஆகியவற்றைக் காப்பாற்றும் நோக்கம் பரிபூர்ணமாக கைகூடிற்று. இந்த விசாரணை ஆரம்பமான

பிறகு ரங்கூன் இந்திய கிறிஸ்தவர் சங்கம், பர்மா இந்தியர் சங்கம் ஆகியவற்றின் அக்ராசனர்களிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ள தந்திகள் இதை நன்கு ருசுப்பிக்கின்றன.''

லெப் தில்லான் வாக்குமூலம்

லெப். தில்லானின் வாக்கு மூலம்: "டேராடூனிலுள்ள இந்திய ராணுவ அகாட்மியில் செட்வோட் ஹாலில் கீழ்க்காணும் வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கின்றன:

> 'உனது நாட்டின் கௌரவம், க்ஷேமலாபம், பாதுகாப்பு ஆகியவை தான் எப்பொழுதும், ஒவ்வொரு சமயத்திலும் பிரதானமாகும். உனது தலைமையின் கீழ் உள்ளவர்களின் சௌகர்யங்கள், பாதுகாப்பு, க்ஷேமலாபம் ஆகியவை அடுத்தபடி தான். உனது சொந்த பாதுகாப்பும், சௌகர்யங்களும் எப்பொழுதும், ஒவ்வொரு சமயத்திலும் கடைசியாகத்தான் இருக்க வேண்டும்.'

இந்த மணிவாக்கை வழி காட்டியாகக் கொண்டு தான் இந்திய ராணுவத்தில் ஒரு அதிகாரியாக எனது நாட்டுக்கு நான் சேவை புரிந்தேன்.........

ஜப்பானிய படையெடுப்பின் விளைவாக மலாயில் மக்கள் எப்படிக் கஷ்டப்பட்டார்கள் என்பதை நானே பார்த்தேன். அந்த கஷ்டத்திற்கெல்லாம் மலாயின் தற்காப்புப் பொறுப்பை ஏற்ற பிரிட்டிஷ் சர்க்காரின் ஆயத்த மின்மையே காரணம். எனவே இந்தியா மீது படையெடுப்பு நடந்தால் என் சொந்த நாட்டு மக்கள் படப்போகும் கஷ்டங்களை நினைத்து நான் நடுங்கிப் போனேன்.

அந்த சமயத்தில் தான், 150 வருஷ கால பிரிட்டிஷ் ஆட்சி எனது துர்ப்பாக்கிய தாய்நாட்டுக்கு இழைத்துள்ள கொடுமைகளின் பூர்ண அர்த்தபுஷ்டிகளை உணர்ந்தேன். பிரிட்டிஷார் நம்முடைய பொருள்களை யெல்லாம் தங்கள் சுய நலத்திற்காக சுரண்டியதோடு, தங்கள் சொந்த ஏகாதிபத்திய யுத்தங்களில் போராடுவதற்காக நம் நாட்டின் ஆள் பலத்தையும் தாராளமாக இழுத்திருக்கிறார்கள். அதே சமயத்தில் அவர்கள் நம் தாய்நாட்டின் பாதுகாப்புக்காக நம்மைத் தயார் செய்யாததோடு, சாசுவதமாக நம்மை அடிமைகளாக வைத்திருக்க, நம்மை பூர்ணமாக பேடிகளாக்கி விட்டார்கள் என்பதையும் அறிந்தேன்.

மோகன் சிங் ஆரம்பிப்பதாயிருந்த இந்திய தேசிய ரா்ணுவத்தில் இந்தியாவுக்கு விமோசனத்தைக் கண்டேன். மனமொப்பி சேர்ந்தவர்கள் கொண்ட சக்திவாய்ந்த தேசிய ராணுவம் ஒன்றை அந்த சமயத்தில் திரட்டினால், அந்த ராணுவம் இந்தியாவை விடுவிப்பதோடு மாத்திரமின்றி, ஜப்பானியர் தங்கள் வாக்குறுதிகளை மீறி சுதந்திரம் பெற இந்தியர்வுக்கு உதவாமல் இந்தியாவைச் சுரண்டப்பார்த்தால் அவர்களையும் எதிர்க்க முடியும் என்று நினைத்தேன்.

இந்தியத் தாய் என்னை அழைத்தாள். அழைப்பை ஏற்பதென்று தீர்மானித்து மோகன் சிங்குடன் சேர்ந்தேன்.

சுபாஷ் போஸின் தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டாவது தேசிய ராணுவத்திலும் சேவை செய்வதென்று முடிவு செய்தேன். தேசிய ராணுவத்தில் சேருமாறு யாரும் நிர்ப்பந்திக்கப்படவில்லை. நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியமே கிடையாது. ஏனெனில் எங்களிடம் எப்பொழுதும் அதிகப்படி வாலண்டியர்கள் இருந்தார்கள். எங்களிடம் போதிய ஆயுதங்கள் இல்லாததால் அவர்களுக்கு ஆயுதங்களைத் தரமுடியவில்லை. நான் செய்த பிரசங்கங்கள் எல்லாவற்றிலும், தாய் நாட்டிடம் அன்பும், சகல கஷ்டங்களையும் சமாளிக்க இஷ்டமும் உள்ளவர்கள் தான் சேரலாம் என்று கூட்டத்தினருக்குச் சொல்லியிருக்கிறேன். போரில் இறங்கப்போகும் தருவாயிலும், எனது தலைமையின் கீழ் இருந்தவர்களை மறுபடியும் எச்சரித்தேன். சில அதிகாரிகளும் துருப்புகளும் போருக்குத் தாங்கள் வருவதற்கில்லை என்பதை தெரிவித்தார்கள். அவர்களில் 200 பேர்கள், எனது ரிஜிமெண்ட் மயிங்யானிலிருந்து (Myingyan) கிளம்பு முன், ரங்கூனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

நிர்ப்பந்தப்படுத்தி தேசிய ராணுவத்தில் சேர்த்து விடுவதற்காக யுத்தக் கைதிகள் காவல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டதாக பிராஸிக்யூஷன் தரப்பு சாட்சிகளில் சிலர் கூறியது உண்மையல்ல. கட்டுப்பாட்டை மீறியவர்களும், அதைப்போன்ற இதர குற்றங்களைச் செய்தவர்களும் மாத்திரமே ஒரு காவல் முகாமுக்கு அனுப்பப்பட்டு வந்தார்கள். அந்த முகாமுக்கும் தேசிய ராணுவத்தில் ஆள் சேர்க்கப்பட்டதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. காவல் முகாமில் இருந்தவர்கள், தேசிய ராணுவத்தில் சேர தங்கள் இஷ்டத்தைத் தெரிவித்தால்கூட

சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், அவர்கள் காவல் முகாமில் உள்ளதே, யோக்யதாம்சக் குறைவைக் காண்பித்தது. தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், சர்க்காருடைய தயவை நாடவும்தான் இந்த பிராஸிக்யூஷன் தரப்பு சாட்சிகள் பொய்க் கதைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

எனது படை முன்னேற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், இருக்கவோ அல்லது விலகிக் கொள்ளவோ துருப்புகளுக்கு நான் சுதந்திரம் தந்திருக்கிறேன். அதனால்தான் எதிரியின் அரண்களுக்கு இரண்டு மைல் தூரத்திற்குள்ளாகவே நான் வாரக்கணக்கில் இருந்தபோதிலும் என் துருப்புகளில் யாரும் எனது இருப்பிடத்தை எதிரியிடம் போய்ச் சொல்லவில்லை. பல தடவைகளில் நான் தண்ணீரின்றி 20 மணி அல்லது 30 மணி நேரம் இருக்க வேண்டியதாயிற்று. சேர்ந்தாற் போல இரண்டு மூன்று நாட்களுக்கு உணவின்றி நான் பல தட்வைகள் இருக்க வேண்டியதாயிற்று. பிரிகேட் கமாண்டராகிய நானே இவ் வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் என்றால், என் தலைமையின் கீழ் இருந்த துருப்புகள் எவ்வளவு அதிகமாக கஷ்டப்பட்டிருப் பார்கள் என்பதை யூகித்துக் கொள்ளலாம். எனினும் அவர்கள் என்னைப் பின் தொடர்ந்தார்கள். பலவந்தத்தினால் அல்லது நிர்ப்பபந்தத்தினால் சேர்ந்தவர்கள் இவ்வாறு நடந்துகொண் டிருக்கமுடியாது.

ராணுவத்தை விட்டு ஓடியதற்காகவும் எதிரியுடன் தொடர்பை ஸ்தாபித்துக்கொள்ள முயன்றதற்காகவும் நால்வரை விசாரணைக்கு நான் அனுப்பியது உண்மையே. ஆனால் எனது தூண்டுதலால் அல்லது எனது உத்தரவின்பேரில் அவர்கள் சுடப்பட்டார்கள் என்ற கூற்று பொய். அவர்கள் சுடப்பட்டதாகச் சொல்லப்படும் தேதியன்று, அந்த நேரத்தில் நான் படுத்த படுக்கையோடு இருந்தேன். நடமாடுவதற்கு சக்தியில்லை. உண்மையாதெனில், அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை டிவிஷனல் கமாண்டரால் ரத்துச் செய்யப் பட்டது. தண்டனை நிறைவேற்றப்படவேயில்லை.

நான் என்ன செய்திருந்தாலும் சரி, அதெல்லாம் சுதந்திர இந்தியாவின் இடைக்கால சர்க்காரின் கட்டளைப்படி போர் புரிந்து கொண்டிருந்த ஒழுங்கான ராணுவத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலேயே செய்திருக்கிறேன். எனவே, அந்த

1029.57

படையைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் எனது கடமைகளை நிறைவேற்றுகையில் செய்தவைகளுக்காக இந்திய ராணுவச்சட்டம், இந்திய கிரிமினல் சட்டம் ஆகியவற்றின் கீழ் என் மீது குற்றஞ் சாட்டுவதற்கில்லை; விசாரணை நடத்துவதற்குமில்லை.

இந்த ராணுவ கோர்ட் விசாரணையானது சட்டத்திற்கு விரோதமானதென்றும் சட்ட நிபுணர்கள் என்னிடம் கூறியுள்ளனர். நல்ல, பரிசுத்தமான எண்ணங்களுடன் இந்திய தேசிய ராணுவத்தில் நான் சேர்ந்தேன். இ. தே. ரா. வில் நான் இருக்கையில் அநேக யுத்தக் கைதிகளுக்கு பணத்தையும் பொருள்களையும் கொடுத்து உதவி செய்திருக்கிறேன். கீழ்க் கோடியில் வசிக்கும் இந்தியர்களின் உயிர், உடைமை, கௌரவம் ஆகியவற்றைக் காப்பாற்ற இ. தே. ரா. வால் முடிந்தது. பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட அநேக ஸிவிலியன்கள், யுத்தக் கைதிகள் ஆகியவர்களின் உயிர்களை நான் காப்பாற்றினேன்.

இந்தியாவில் டவுன்களில் ஸிவிலியன்கள் மீதும் அவர்களது சொத்துக்கள் மீதும் குண்டுகளைப் போடவேண்டாமென ஜப்பானியரிடம் நயமாகச் சொல்லி, வெற்றி பெற்றிருக்கிறேன். தங்களுக்கு இ. தே. ரா. செய்த சேவையை பாராட்டி, தேசபக்தி மேலீட்டால் கிழக்கு ஆசிய இந்தியர்கள் சுதந்திர இந்தியாவின் இடைக்கால சர்க்காருக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் தந்திருக்கிறார்கள்.''

ஷா நவாஸ், ஸேகால், தில்லான் ஆகியோர் ராணுவ கோர்ட்டால் ஆயுள் பரியந்த சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டபோதிலும், சேனாபதி ஆகின்லக் தமது அதிகாரத்தை உபயோகித்து மூவரையும் விடுதலை செய்தார். ஜனங்கள் செய்த கிளர்ச்சியும், பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் நூற்றுக்கு 85 பேர்களின் வற்புறுத்தலும் இந்த விடுதலைக்கு முக்கிய காரணங்கள் என்பது தேசிய இந்தியாவின் திடமான அபிப்ராயம்.

சேனாபதி ஆகின்லக்கின் முடிவு அடங்கிய சர்க்கார் அறிக்கை (1946-ம் வருஷம் ஜனவரி மாதம் 3-ந்தேதி வெளியானது) முழு வாசகம்:

"

109257

"காப்டன் ஷா நவாஸ், காப்டன் ஸேகால், லெப். தில்லான் ஆகிய மூவர் மீதும் நடந்த ராணுவ கோர்ட் விசாரணையில், மன்னர் மீது யுத்தம் தொடுத்ததாக குற்றஞ் சாட்டப்பட்டது. லெப். தில்லான் மீது கொலைக்குற்றமும் இதர இருவர் மீது கொலைக்கு உடந்தையாக இருந்த குற்றமும் சாட்டப்பட்டன.

"யுத்தம் தொடுத்த குற்றத்தை மூவரும் செய்திருக்கிறார்கள் என்று கோர்ட் தீர்ப்பளித்தது. கொலைக்கு உடந்தையாக காப்டன் ஷா நவாஸ் இருந்தார் என்று தண்டிக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ தில்லான் கொலைக் குற்றம் செய்யவில்லை என்றும் காப்டன் ஸேகால் கொலைக்கு உடந்தையாக இருக்கவில்லையென்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

"யுத்தம் தொடுத்த குற்றத்தை எதிரிகள் செய்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு கோர்ட்டுவந்ததால்,எதிரிகளுக்கு தூக்கு தண்டனையோ அல்லது ஆயுள்பரியந்த சிறைவாச தண்டனையோ கோர்ட்டால் தரப்படவேண்டும். சட்டப்படி குறைந்த தண்டனை எதையும் விதிப்பதற்கில்லை. ஆயுள் பரியந்த சிறைவாச தண்டனை, உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ், சம்பள, அலவன்சு பாக்கிகள் பறிமுதல் ஆகியவையே மூன்று எதிரிகள்மீது கோர்ட் விதித்த தண்டனைகளாகும்.

"ராணுவ கோர்ட்டின் தீர்ப்போ அல்லது தண்டனையோ ஊர்ஜிதம் செய்யப்பட்டால்தான் பூர்த்தியாகவுள்ளதாய் கருதப்பட வேண்டும். பிரஸ்தாப வழக்கில் சேனாதிபதி தான் ஊர்ஜித அதிகாரி. அவர் ராணுவ கோர்டின் தீர்ப்புகள் எல்லாம் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்று கருதி, அந்த முடிவுகளை ஊர்ஜிதம் செய்கிறார்.

"ஆனால் தண்டனைகளை குறைக்கவோ, ரத்துச் செய்யவோ ஊர்ஜித அதிகாரிக்கு உரிமையுண்டு. ஏற்கனவே பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டது போல, அரசாங்கம் மீது யுத்தம் தொடுத்ததோடல்லாமல், அக்ரமச் செயல்களையும் செய்துள்ளவர்கள் மீது மாத்திரமே இனி வழக்குத் தொடருவதென்பது இந்திய சர்க்காரின் கொள்கையாகும். தண்டனைகளை அதிகாரி பரிசீலனை செய்கையில், நிரூபிக்கப்பட்ட செயல்கள் நாகரீக நடத்தையை எவ்வளவு தூரம் மீறிப் போயிருக்கின்றன என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"லெப் தில்லான், காப்டன் ஸேகால் இருவரும் கொலைக்குற்றமும் கொலைக்கு உடந்தை குற்றமும் செய்ய வில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதர அக்ரமச் செயல்களைச் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட வில்லை. காப்டன் ஷா நவாஸ் கான் கொலைக்கு உடந்தை யாக இருந்திருக்கிறார் என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிற போதிலும், அவர் மீது நிரூபிக்கப்பட்டுள்ள செயல்கள் மிகவும் கொடூரமானவையாகவுள்ள போதிலும், சந்தர்ப் பத்தையும் ஊர்ஜித அதிகாரி ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

"தண்டனையைப் பொருத்தவரை மூன்று எதிரிகளையும் ஒரே விதமாக நடத்துவதென்றும், ஆயுள் பரியந்த சிறை வாஸ தண்டனையை ரத்துச் செய்வதென்றும் சேனாதிபதி முடிவு செய்திருக்கிறார். எனினும் அவர், உத்தியோகத் திலிருந்து மூவரையும் டிஸ்மிஸ் செய்வதென்ற தண்டனை யையும், பாக்கி அலவன்சுகளை பறிமுதல் செய்வ தென்ற தண்டனையையும் ஊர்ஜிதம் செய்கிறார். ஏனெனில், அதிகாரியோ, அல்லது ஸோல்ஜரோ தனது விசுவா சத்தை உதறித் தள்ளி அரசாங்கம் மீது யுத்தம் தொடுப் பது எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் மிகவும் பெரிய் குற்ற மாகும். சட்ட பூர்வமாக இப்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் ஸ்தாபிதமாகப்போகும் சர்க் கார் ஆட்டங் கொடுக்காமல் நிலைத்திருக்க இந்தக் கொள்கை அவசிமாகும்."

ஸ்ரீ. புலபாய் தேசாய் தேக அசௌக்யமாக இருக்கையி லேயே தமது உடல் நலனையும் கவனியாது ஷா நவாஸ், ஸேகால், தில்லான் ஆகியவர்கள் சார்பில் வழக்கை மிகத் திறமையாக நடத்தி, தேசீய ராணுவத்தின் நூற்றுக்கு நூறு தேசீயத் தன்மையை உலகுக்குப் பறை சாற்றினார். ஆளும் ஆட்சியை எதிர்த்துத் தகர்க்க அடிமை மக்களுக்கு பூரண உரிமையுண்டு என்று நிரூபித்தார். தேசத்தின் விமோசனத்தைக் கருதி, தனது தேகத்திற்கும் மூளைக்கும் அதிக வேலையைத் தந்த தேசாய், வழக்கு முடிவடைந்த சில மாதங்களிளெள்ளாம் உயிர் நீத்தார். இ. தே. ரா. வின் புகழ் இந்நாட்டில் சாசுவ தமாக இருக்கப்போவது போல, அந்த மாணிக்கத்தின் ஒளியை

உலகுக்குக் காண்பித்த ஸ்ரீ. புலபாயின் தன்னலமற்ற தேச சேவையும் நிரந்தரமாக, நிகரற்று விளங்கும்.

பாக்கி இ. தே. ரா. வினர் மீது தொடர விருந்த வழக்குகள் எல்லாவற்றையும் வாபஸ் வாங்குவதாக இந்திய சர்க்கார் அறிவித்து, ஜெனரல் மோகன சிங் முதலியவர்களை விடுதலை செய்துள்ள போதிலும், தண்டனை பெற்ற ரஷீத் அலி முதிலியவர்கள் இன்னும் விடுதலையாகவில்லை. பர்மாவில் இ. தே. ரா. வுக்கு உதவியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜெர்மனியில் இ. தே. ரா. வீரர்கள் பலர் பிரிட்டிஷ் பிராந்தியத்தில் காவற் கூட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷார் இந்தியாவில் காண்பித்த புத்திசாலித்தனத்தை யொட்டி பாக்கி எல்லா இ. தே. ரா. வினரையும், அந்த ராணுவத்திற்கும் போஸ் சர்க்காருக்கும் உதவியவர்களையும் உடனடியாக விடுதலை செய்தாகவேண்டும். இந்தியாவிலிருந்து தங்கள் ஆட்சியை வாபஸ் வாங்கிக்கொள்ள தாங்கள் தயார் என்று பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லுவதால், அதே ஆட்சியை எதிர்த்து போர் புரிந்து, பிரிட்டிஷ் சர்க்கார் இவ்வாறு சொல்லும்படியான ஒரு நிலைமையை உண்டாக்கிய ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸுக்கு நன்றி தெரிவித்து, அவர் இந்தியாவுக்கு குஷாலாக வரலாம் என்ற பிரகடனத்தை விடலாம். பிரிட்டிஷ் சர்க்கார் இதைப்போல பெருந்தன்மையான பிரகடனத்தை விட்டு, பெருமையையும் புகழையும் பாராட்டையும் பெற விரும்பா விட்டால், அதைப் போல பிரகடனத்தில் இந்திய சுதந்திர சர்க்கார் தனது முதல் கையெழுத்தைப் போடுவதும், ஸ்ரீ. சுபாஷ் போஸுக்கு ராஜோபசாரம் செய்யப் போவதும் நிச்சயம்.

ஜேய் ஹிந்த் !

அனுபந்தம் 1.

காங்கிரஸின் ஆகஸ்ட் தீர்மான வாசகம்

1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 8-ந்தேதி மாலை பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானம்:

"இந்தக் கமிட்டியின் ஆலோசனைக்காக காங்கிரஸ் காரியக் கமிட்டி 1942-ம் வருஷம் ஜூலை மாதம் 14-ந்தேதி நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தில் உள்ளவற்றையும், யுத்த நிலைமையின் போக்கு, பிரிட்டிஷ் சர்க்காரின் பொறுப்பு வாய்ந்த பிரதி நிதிகளின் பேச்சுக்கள், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தெரிவிக்கப்பட்ட அபிப்ராயங்கள் உள்பட அந்த தீர்மானம் நிறைவேறியதற்குப் பின் நடந்தவற்றையும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்திருக்கிறது. அந்தத் தீர்மானத்தை கமிட்டி அங்கீகரித்து, ஊர்ஜிதம் செய்கிறது. தீர்மானம் நிறைவேறியதற்குப் பிறகு நடந்தவை, தீர்மானம் நியாயமானதென்பதற்கு மேற்கொண்டு ஆதாரங்களாக விளங்குகின்றன; இந்தியாவில் உடனடியாக பிரிட்டிஷ் ஆட்சி ஒழிய வேண்டியது இந்தியாவின் நன்மையை முன்னிட்டும், ஐக்கிய நாடுகளின் நன்மையை முன்னிட்டும் அவசர அவசிய மென்பதையும் தெளிவாக்குகின்றன. அந்த ஆட்சி நீடிப்பு இந்தியாவை மேற்கொண்டு அவமானப் படுத்துவதோடு, பலவீன மாக்குகிறது; இந்தியாவின் சுய பாதுகாப்புச் சக்தியையும், உலக சுதந்திரத்திற்கு இந்தியாவின் பங்கையும் படிப்படியாக குறைக்கிறது. ரஷ்ய, சீன முனைகளில் நிலைமை சீர்கேடாகி வருவதைக் குறித்து இக்கமிட்டி கவலைப்பட்டு, தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க வீரதீரத்தைக் காண்பிக்கும் ரஷ்ய மக்களையும், சீன மக்களையும் பாராட்டுகிறது. அதிகமாகிவரும் இந்த அபாயமானது, மீண்டும் மீண்டும் படுதோல்விகளுக்கு கொண்டு வந்துள்ள நேச நாடுகள் கொள்கையின் அடிப்படைகளை ஆராயுமாறு சுதந்திரத்திற்காக பாடுபடுபவர்களையும், ஆக்ரமிப்புக்கு ஆளானவர்களிடம் அனுதாபம் காட்டுகிற மக்களையும் நிர்ப்பந்திக்கிறது. அதைப்போல நோக்கங்கள், கொள்கைகள், முறைகள் ஆகியவற்றை விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருப்பதின்

மூலம், தோல்வியை வெற்றியாக மாற்றிவிட முடியாது. ஏனெனில் அவைகளிலேயே தோல்வி உள்ளடங்கியிருக்கிறதென்பதை சென்றகால அனுபவத்திலிருந்து நாம் கண்டிருக்கிறோம். இந்தக்கொள்கைகள், சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல; அடிமை நாடுகள், காலனிநாடுகள் ஆகியவை மீது மேலாதிக்கத்தையும், ஏகாதிபத்திய வழக்க முறை நீடிப்பையும் ஆதாரமாகக் கொண்டவையாகும். சாம்ராஜ்ய சொத்து, ஆட்சி புரியும் வல்லரசின் பலத்தை ஜாஸ்தியாக்குவதற்கு பதிலாக, சுமையாகவும் சாபக்கேடாகவும் விளங்குகிறது. நவீன ஏகாதிபத்திய ஆட்சிக்கு இணையற்று விளங்கும் இந்தியா, பிரச்னையில் உரைகல்லாகி விட்டது. ஏனெனில், இந்தியாவுக்கு விடுதலை தரப்படுகிறதா என்பதைப் பொறுத்தே பிரட்டனும் ஐக்கிய நாடுகளும் மதிப்பிடப்படும்; ஆசிய, ஆப்ரிக்க மக்கள்களுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட முடியும்.

எனவே, இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க வேண்டியது மிக முக்கியமான, உடனடியான பிரச்னையாகும். இதைப் பொறுத்தே யுத்தத்தின் எதிர்காலமும், சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் வெற்றியும் இருக்கும். சுதந்திர இந்தியா, சுதந்திரத்திற்காகவும் நாஜிஸம், பாஸிஸம், இம்பீரியலிஸம் ஆகியவற்றின் ஆக்ரமிப்பை எதிர்த்தும் நடக்கும் போரில் தனது மகத்தான சாதனங்களையெல்லாம் ஈடுபடுத்துவதின் மூலம் அந்த வெற்றிக்கு உத்தரவாதமளிக்கும். இது, யுத்தப் போக்கையே வெற்றிப் பாதைக்கு திருப்புவதோடு அடிமையாகவும் ஒடுக்கப்பட்டும் உள்ள மானிடரை ஐக்கிய நாடுகள் பக்கம் கொண்டுவந்து, இந்த நாடுகளுக்கு—இவற்றின் நேச நாடாக இந்தியா இருக்கும்—உலகின் தார்மீக, ஆத்மீக தலைமையைத் தரும். அடிமைத் தளையுடன் உள்ள இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னமாகவே இருக்கும்; அந்த ஏகாதிபத்தியத்தின் மாசு ஐக்கிய நாடுகளின் தலை விதியை மோசமாக்கிவிடும்.

எனவே, இன்றைய அபாயம், இந்திய சுதந்தரத்தையும் பிரிடிஷ் ஏகாதிபத்திய ஒழிப்பையும் அவசியமாக்குகிறது. எதிர்காலத்தில் நிறைவேறுவதற்கென இப்போது வருகிற வாக்குறுதிகளால் அல்லது உத்தரவாதங்களால் தற்போதைய நிலைமையை மாற்றவோ அல்லது அபாயத்தை சமாளிக்கவோ முடியாது. மக்களின் மனதை மாற்றுவதற்கு தேவையான சக்தியை

அந்த வாக்குறுதிகளாலும் உத்தரவாதங்களாலும் உண்டாக்க முடியாது. யுத்தத்தின் தன்மையை நிச்சயமாக உடனடியாக மாற்றக்கூடிய கோடானுகோடி மக்கள் சக்தியையும், உற்சாகத்தையும் உடனடியான சுதந்திரத்தின் ஒளியின் ஒன்றுல்தான் ஏற்படுத்த முடியும். எனவே இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரம் வாபஸாக வேண்டுமென்ற கோரிக்கையை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தனது முழுபலத்துடன் மறுபடியும் அறிவிக்கிறது. இந்திய சுதந்திரம் பிரகடனமானவுடன், தற்காலிக சர்க்கார் ஒன்று அமைக்கப்படும். சுதந்திர இந்தியா, ஐக்ய நாடுகளின் நேச நாடாகி, கூட்டாக சுதந்திரத்திற்கென்று நடத்தப்படும் யுத்தத்தில் ஐக்ய நாடுகளுடன் கஷ்ட நஷ்டங்களை பகிர்ந்து கொள்ளும். நாட்டிலுள்ள முக்கிய கட்சிகள், கோஷ்டிகள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தான் தற்காலிக சர்க்காரை அமைக்க முடியும். எனவே அது கலப்பு சர்க்காராக, இந்திய மக்களின் எல்லாப் பிரிவுகளின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்கும். அதன் பிரதான வேலைகள்: இந்தியாவை பாதுகாத்து, ஆக்ரமிப்பை தன் வசமுள்ள ஆயுதப் படைகளாலும் அஹிம்ஸா படைகளாலும் தனது நேச நாடுகளுடன் சேர்ந்து எதிர்த்தல்; வயல்களிலும் தொழிற்சாலைகளிலும் வேறு இடங்களிலும் உள்ள தொழிலாளர்களின்—முக்கியமாக இவர்களுக்குத்தான் அதிகாரமும், அந்தஸ்தும் சேரவேண்டும்—சுபிட்சத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உழைத்தல். அரசியல் நிர்ணய சபை ஒன்று ஏற்பட திட்டம் ஒன்றை தற்காலிக சர்க்கார் நிறுவும். மக்களின் எல்லாப் பிரிவுகளும் ஏற்கக் கூடிய இந்திய சர்க்கார் அரசியல் அமைப்பு ஒன்றை அந்த அரசியல் நிர்ணய சபை தயாரிக்கும். இந்த அரசியலமைப்பு, பெடரல் முறையுள்ளதாக இருக்கவேண்டும்; பெடரல் அமைப்பில் சேருகிற யூனிட்டுகளுக்கு அதிகபட்ச சுயாட்சி இருக்க வேண்டும்; மிச்ச அதிகாரங்கள் இந்த யூனிட்டுகளிடம் (மாகாண ஆட்சிகள்) இருக்க வேண்டும் என்பது காங்கிரஸின் அபிப்ராயமாகும். இந்தியாவுக்கும் நேச நாடுகளுக்குமிடையே இருக்க வேண்டிய எதிர்கால உறவுகளை, இந்த எல்லா சுதந்திர நாடுகளின் பிரதிநிதிகளும் பரஸ்பர அனுகூலங்களையும், ஆக்ரமிப்பை எதிர்க்கும் பொதுவான வேலையில் ஒத்துழைப்பையும் முன்னிட்டு ஒன்றுகூடி ஆலோசனை செய்து, சரிக்கட்டுவார்கள். ஜனங்களுடைய ஒன்றுபட்ட உறுதி, சக்தி ஆகியவற்றை பக்க பலமாகக்கொண்டு

ஆக்ரமிப்பை திறமையாக எதிர்க்க சுதந்திரம் இந்தியாவுக்கு பலம் தரும்.

இந்திய சுதந்திரம், அந்நிய ஆதிக்கத்திலுள்ள இதர ஆசிய நாடுகளின் விடுதலைக்கு சின்னமாகவும் பூர்வாங்கமாகவும் இருக்கவேண்டும். பர்மா, மலாய், இந்தோ-சீனு, டச்சு இந்தியத் தீவுகள், ஈரான், இராக் ஆகியவையும் பரிபூர்ண சுதந்திரம் அடைந்தாகவேண்டும். இப்பொழுது ஜப்பானிய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நாடுகள் பிற்பாடு வேறு எந்தகாலனி வல்லரசின் ஆட்சியின்கீழ் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் விடப்படலாகாது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இந்த அபாய நேரத்தில் பிரதானமாக இந்தியாவின் சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தவேண்டியிருக்கையில், உலகின் எதிர்கால அமைதி, பாதுகாப்பு, ஒழுங்கான முன்னேற்றம் ஆகியவற்றை முன்னிட்டு சுதந்திர நாடுகள்கொண்ட உலக பெடரேஷனை அமைத்தாகவேண்டுமென்ற அபிப்ராயத்தையும், வேறு எந்த அடிப்படையிலும் தற்கால உலகின் பிரச்னைகளை தீர்க்க முடியாதென்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது. அதைப்போன்ற உலக் பெடரேஷன், தனது அங்கங்களாக உள்ள நாடுகளின் சுதந்திரத்திற்கும், ஆக்ரமிப்புத் தடுப்புக்கும், ஒரு தேசம் மற்றொரு தேசத்தை சுரண்டுவதை தடுப்பதற்கும், தேசிய மைனுரிட்டிகளின் பாதுகாப்புக்கும், பிற்போக்கான பிற தேசங்களுடைய, மக்களுடைய முன்னேற்றத்திற்கும், எல்லாருடைய பொதுவான நன்மைக்காக உலக சாதனங்களை திரட்டுவதற்கும் உத்தரவாதமாக விளங்கும். அதைப்போல பெடரேஷன் ஸ்தாபிதமான பிறகு, எல்லா நாடுகளிலும் ஆயுதப் பரிஹரணம் சாத்தியமாகும்; தேசிய ராணுவங்கள், விமானப் படைகள் ஆகியவை அவசியமாக இராது; உலக பெடரல் படை உலக அமைதியை பாதுகாத்து, ஆக்ரமிப்பை தடுக்கும்.

அதைப்போல பெடரேஷனில் சுதந்திர இந்தியா மகிழ்ச்சியுடன் சேர்ந்து, சர்வதேசப் பிரச்னைகளுக்கு பரிகாரம் தேடுவதில் இதர நாடுகளுடன் சரிசம அந்தஸ்தில் ஒத்துழைக்கும்.

அதைப்போன்ற பெடரேஷனில், அதன் அடிப்படைகளை ஒப்புக்கொள்ளும் நாடுகள் எல்லாம் சேர உரிமை இருக்க வேண்டும். இப்பொழுது யுத்தம் நடந்து கொண்டிருப்பதால்,

அந்த பெடரேஷனில் ஐக்ய நாடுகள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய நிலைமை இருக்கிறது. இவ்வாறு காரியம் இப்போது நடந்தால், யுத்தப்போக்கு மாறும்; அச்சு நாட்டு மக்களின் மனம் மாறும்; வரப்போகும் சமாதானம் மாசற்றதாக இருக்கும். யுத்தத்தின் பரிதாபகரமான, ஏராளமான படிப்பினைகள் இருக்கின்ற போதிலும், உலகை மாபெரும் அபாயங்கள் எதிர்நோக்கியுள்ளபோதிலும், உலக பெடரேஷனை அமைக்கும் மார்க்கத்தில் உள்ள இந்த தவிர்க்க முடியாத காரியத்தை (முதலில் ஐக்ய நாடுகள் உள்ள பெடரேஷனை அமைத்தல்) மேற்கொள்ள இப்போதுகூட சில நாடுகளின் சர்க்கார்கள் தயாராக இல்லாததை இந்தக் கமிட்டி வருத்தத்துடன் உணருகிறது. இப்போதைய அபாயத்தை சமாளிக்கவும், இந்தியா தன்னைத்தானே சமாளித்துக் கொள்ளவும், சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் அவற்றின் நெருக்கடியான சமயத்தில் உதவவும் இந்தியாவின் விடுதலை கோரப்படுகிறபோதிலும், அந்த கோரிக்கையை எதிர்க்கும் அறிக்கைகளையும் காரியங்களையும் பிரிட்டிஷ் சர்க்கார் செய்கிறது; பொய்ச்செய்திகளை நம்பி வெளிநாட்டுப் பத்திரிகைகளும் அந்த கோரிக்கையை எதிர்க்கும் அபிப்ராயங்களை எழுதுகின்றன. சீனா அல்லது ரஷ்யாவின் தற்காப்பை எந்த வகையிலும் பாதிக்க இக் கமிட்டி விரும்பவில்லை. அந் நாடுகளின் சுதந்திரம் அருமையும் பெருமையும் வாய்ந்தது; அதை பாதுகாக்கத்தான் வேண்டும். ஐக்ய நாடுகளின் தற்காப்புச்சக்தியை பாதிக்கும் உத்தேசமும் இக் கமிட்டிக்கு இல்லை. ஆனால் இந்தியாவுக்கும் இந்த நாடுகளுக்கும் அபாயம் அதிகமாகிறது. இந்த கட்டத்தில் செயல் அற்று இருப்பதும் அந்நிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்திருப்பதும், இந்தியாவின் மதிப்பைக் குறைப்பதாகும்; தன்னைப்பாதுகாக்கவும் ஆக்ரமிப்பை எதிர்க்கவும் இந்தியாவுக்குள்ள சக்தியை குறைப்பதாகும். மேலும் அவ்வாறு செயலற்று இருப்பது, அதிகமாகிவரும் அந்த அபாயத்திற்கு பதில் ஆகாது; ஐக்ய நாடுகளின் மக்களுக்கு சேவையாகாது. பிரிட்டனுக்கும் ஐக்ய நாடுகளுக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்துகொண்ட வேண்டுகோளுக்கு இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை. அநேக அந்நிய வட்டாரங்கள் இதுவரை தெரிவித்துள்ள கண்டனக் கருத்துக்கள் இந்தியாவின் தேவை, உலகின் தேவை ஆகியவற்றை புறக்கணிப்பதாகவே இருக்கின்றன. சில சமயங்களில் இந்திய விடுதலைக்கு எதிர்ப்

பைக்கூட அவை கர்ண்பிக்கின்றன. மேலாதிக்க மனப்பான்மையையும், இன மேன்மை உணர்ச்சியையும் பிரதிபலிக்கின்றன. இதையெல்லாம் பேரும் பெருமையும் உள்ள மக்கள், தங்கள் சக்தியையும் கோரிக்கையின் நியாய தர்மத்தையும் உணருகிற மக்கள் சகிக்கவே முடியாது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, உலக சுதந்திரத்தை முன்னிட்டு, இந்த கடைசி நிமிஷத்திலும் தனது வேண்டுகோளை மறுபடியும் பிரிட்டனுக்கும் ஐக்ய நாடுகளுக்கும் அனுப்புகிறது. ஆனால் தேசத்தின்மீதும் ஏகர்திபத்திய எதேச்சாதிகார சர்க்கார் ஆதிக்கம் செலுத்துவதாலும், தேசம் தனது நலனை முன்னிட்டும் மானிடவர்க்கத்தின் நலனை முன்னிட்டும் தானே ஆட்சிபுரிவதை ஏகாதிபத்திய சர்க்கார் தடுப்பதாலும், அதை (ஏகாதிபத்திய சர்க்கார்) எதிர்த்து தேசம் தனது அபிலாஷையை அடைந்தேதீர கொண்டுள்ள உறுதியை அமுலுக்குக் கொண்டுவருவதிலிருந்து அதை (தேசத்தை) இனி தடுத்து வைப்பது நியாயமாகாதென கமிட்டி கருதுகிறது. எனவே, விடுதலையையும் சுதந்திரத்தையும் அடைய இந்தியாவுக்கு உள்ள உரிமையை—யாராலும் பறிக்க முடியாத உரிமையை நிலைநாட்டுவதற்கா சாத்தியமான மிகவும் விரிவான ரீதியில் அஹிம்ஸா முறைகளில், மகாஜனப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க அதிகாரம் தருவதென்று கமிட்டி தீர்மானிக்கிறது. சென்ற 22 வருஷகால சாத்வீகப் போராட்டத்தின்போது தான் பெற்ற எல்லா அஹிம்ஸா சக்தியையும் தேசம் உபயோகித்துக் கொள்ளும். அந்தப்போராட்டம் காந்திஜியின் தலைமையில்தான் நடக்கவேண்டுமென்பதை சொல்லத் தேவையில்லை. தலைமை தாங்கி, எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக தேசத்திற்கு வழிகாட்டுமாறு அவரை கமிட்டி கேட்டுக் கொள்ளுகிறது.

இந்திய மக்களுக்கு அபாயங்களும் கஷ்ட நஷ்டங்களும் வரும். அவற்றை தைரியமாகவும் பொறுமையாகவும் சமாளிக்குமாறும், காந்திஜியின் தலைமையில் ஒன்றுபட்டிருக்குமாறும், அவருடைய உத்தரவுகளை இந்திய சுதந்திரப் போரின் கட்டுப்பாடான ஸோல்ஜர்கள் என்ற முறையில் நிறைவேற்றுமாறும் அவர்களை கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது. அஹிம்ஸையே இந்த இயக்கத்தின் அடிப்படை என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்

கொள்ள வேண்டும். உத்தரவுகளை பிறப்பிப்பது, அல்லது உத்தரவுகள் மக்களை அடைவது, அல்லது காங்கிரஸ் கமிட்டிகள் வேலை செய்வது சாத்தியமில்லாமற் போகும்காலம் வரக்கூடும். அந்தக்காலம் வந்தால், இந்த இயக்கத்தில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் வரம்புக்குள்ளேயே நடந்துகொள்ள வேண்டும். சுதந்திரத்தை விரும்பி, அதை அடைய பாடுபடும் ஒவ்வொரு இந்தியரும் தனக்குத்தானே வழிகாட்டியாக இருந்து ஓய்வு ஸ்தலமில்லாத கரடு முரடான பாதையில், இறுதியில் இந்திய சுதந்திரத்திற்கும் விமோசனத்திற்கும் கொண்டு போகும் பாதையில் மேலும் மேலும் முன்னேற ஊக்கமூட்டிக் கொள்ளவேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை. சுதந்திர இந்தியா எவ்வாறு நிர்வாகிக்கப்படவேண்டும் என்பது பற்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தனது சொந்த அபிப்பிராயத்தை தெரிவித்திருப்பதோடு, மகாஜனப் போராட்டத்தை ஆரம்பிப்பதின் மூலம் காங்கிரசுக்கு அதிகாரத்தை பெறும் உத்தேசம் எதுவும் தனக்குக் கிடையாதென்பதை யாவருக்கும் நன்கு தெளிவாக்க விரும்புகிறது. அதிகாரம், வந்தவுடன், இந்திய மக்கள் எல்லாருக்கும் சொந்தமாக இருக்கும்''.

அனுபந்தம் 2

சுதந்திரம் பெற போஸ் வழி

ஸ்ரீ சுபாஷ் போஸ் இந்தியாவிலிருந்து தப்பிய பிறகு இந்திய தேசிய ராணுவத்திற்குத் தலைமை வகிக்க முன்வந்து செய்த பிரசங்கமாவது :

முதலில் என்னைப் பற்றியே கொஞ்சம் தெரிவித்துவிடு கிறேன். என் வாழ்க்கை, கொள்கைகள் இவைகளைப்பற்றி நீங்கள் அறிந்துகொண்டால் நல்லதென்று நான் நினைக்கிறேன். நான் கலாசாலைப் பட்டம் பெற்ற பிறகு அரசியலில் பிரவேசித் தேன். அப்போது மிகவும் முக்கிய பிரச்னைகளாக இருந்தவை இவைதாம் :—போன யுத்தத்தில் இந்தியர்கள் எத்தகைய சேவை செய்தார்கள்? அவர்களுக்குக் கிடைத்த பலன் என்ன? எதிர்காலத்திற்கு அந்த அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொண்டது என்ன?

இந்தியாவிலும் இங்கிலாந்திலும் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து எங்கள் தலைவர்களின் வழி சரியல்ல என்பதை அறிந்துகொண்டோம். செய்யவேண்டியவை எல்லா வற்றிற்கும் நாங்கள் எங்கள் தலைவர்களையே நம்பி இருந்தோம். ஆனால் அவர்களிடம் இளைஞர்களும் மாணவர்களுமாகிய நாங் கள் ஏமாற்றத்தையே அடைந்தோம். எங்கள் மனத்தில் ஒரு விஷயந்தான் முக்கியமாக உறுத்திக்கொண்டிருந்தது. அது என்னவென்றால், சென்ற மகா யுத்தத்தில் எங்கள் தலைவர்கள் செய்த தவறுகளை மறுபடியும் அவர்கள் செய்யாமலிருக்க வேண்டுமே என்பதுதான். மறுபடியும் எப்போதாவது சந்தர்ப் பம் நேர்ந்தால், நாங்கள் அதைப் போன்ற தவறுகளைச் செய்ய மாட்டோம் என்று நினைத்தோம்.

முக்கியமான மற்றொரு விஷயத்தைப் பற்றியும் நான் குறிப் பிட விரும்புகிறேன். யுத்தத்துக்குப் பிறகு, அதாவது **1918**-க்கும் **1919**-க்கும் இடையில், ஐரோப்பாவில் பல மாறுதல்கள் நடைபெற்றன. புதிய புதிய சர்க்கார்கள் உண்டாயின. ஆஸ்ட் ரோ-ஹங்கேரிய சாம்ராஜ்யத்திலிருந்து செக்கோஸ்லோவேகியா

பிரிந்துவிட்டது. போலிஷ் மக்கள் தங்களுடைய சொந்த சர்க்காரை ஸ்தாபித்துக்கொண்டனர். நான் ஐரோப்பாவுக்குப் போனபோது அங்கே இரண்டு மூன்று இந்தியத் தலைவர்களைச் சந்தித்தேன். நான் என்னுடைய தாய்நாட்டுக்கு ஏதேனும் செய்ய விரும்பினால், யுத்தத்தின் சரித்திரத்தை நான் ஊன்றிக் கவனிக்கவேண்டுமென்று அவர்கள் எல்லோரும் கூறினார்கள். சமீப காலத்திய சரித்திரத்தில் ஏற்பட்ட அனுபவங்களை நாம் மனத்தில் வைத்துக்கொண்டு பிரிட்டனை எதிர்த்துப் போராட வேண்டுமென்று தெரிவித்தார்கள். நாங்கள் அவைகளைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தோம். செக்கோஸ்லோவேகியத் தலைவர்களில் சிலர் பிரசாரம் செய்வதற்காகவும், ஆஸ்டிரியா, ஹங்கேரி முதலிய தேசங்களின் எதிரிகளிடமிருந்து உதவி பெறுவதற்காகவும் எப்படி வெளிநாடுகளுக்குச் சென்றார்கள் என்பதையும் அறிந்தோம். பிரிட்டனுடனும் பிரான்ஸுடனும் அவர்கள் நட்புக் கொண்டார்கள். மேற்படி தேசங்கள் இந்தச் செக்கோஸ்லோவேகியத் தலைவர்களுக்கு உதவிபுரிந்தன. யுத்தத்துக்குப் பிறகு அவர்கள் சுதந்திர செக்கோஸ்லோவேகியாவை அடைவதற்கு உரிமையுள்ளவர்கள் என்பதைக்கூடப் பிரிட்டனும் பிரான்ஸும் ஒப்புக்கொண்டன. அவை அப்படி உதவி நாடிய செக்கோஸ்லோவேகியத் தலைவர்களுக்கு எல்லா விதத்திலும் உதவியளிக்கத் தயாராக இருந்தார்கள்; அவர்களுடன் ஒத்துழைக்க முன் வந்தார்கள். செக் நாட்டுத் தலைவர்கள் உடனே வேலையில் ஈடுபட்டார்கள். செக்கோஸ்லோவேகியாவுக்கு வெளியிலுள்ள செக்கோஸ்லோவேகிய மக்கள் யாவரையும் அவர்கள் ஒன்று திரட்டினார்கள். ஆஸ்ட்ரோ-ஹங்கேரிய ராணுவத்திலிருந்து எதிரி கையில் சிக்கிய செக்கோஸ்லோவேகிய ராணுவத்தினரும் செக் தேசீய ராணுவத்தில் சேர முன்வந்தனர். ஏற்கனவே அந்த ராணுவத்தில் 20,000 பேர் இருந்தார்கள். பிரிட்டன், பிரான்ஸ் முதலியவர்களுடன் சேர்ந்து இந்த ராணுவமும் ஆஸ்டிரியா, ஹங்கேரி, ஜெர்மனி முதலியவைகளுக்கு எதிராக யுத்தம் செய்தது.

போலந்து தேச மக்களும் 30,000 பேர்கொண்ட ஒரு படையைத் திரட்டிக்கொண்டு யுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களுடைய அதிருஷ்டவசமாக ஜெர்மனியும் அதைச் சேர்ந்த நாடுகளும் தோற்றுவிட்டன. யுத்தத்துக்குப் பிறகு அவர்கள் தங்கள் சர்க்காரை ஏற்படுத்த முடிந்தது.

அதே வழியை நாம் ஏன் பின்பற்றக்கூடாது என்பதற்கு ஒரு காரணமுமில்லை. இப்போது இருக்கும் சர்வதேச நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, பிரிட்டனுடைய எதிரிகளுடன் சேர்ந்து, நம் சுதந்திரத்துக்காக நாமும் பிரிட்டனை எதிர்த்துப் போர் புரியவேண்டும்.

அயர்லாந்து தேசமக்களும் யுத்தத்தையே பயன்படுத்திக் கொண்டார்கள். சின்பின் கட்சியின் தலைமையில் அவர்கள் பிரிட்டனுக்கு எதிராகப் பகிரங்கமாய்க் கலகம் செய்தார்கள். டப்ளின் நகரத்தில் சின்பின் கட்சி 3000 பேரைக்கொண்ட ராணுவம் ஒன்றை வைத்துக்கொண்டிருந்தது. அதைத் தவிர அவர்களுக்கு 10,000 பேர் கொண்ட படை பலமும் இருந்தது. அவர்கள் திட்டத்தில் ஏதோ தவறு நேர்ந்ததால் டப்ளினில் ஆரம்பித்த கலகம் தேசமெங்கும் பரவவில்லை. எப்படியும் டப்ளின் நகரம் எட்டு நாட்கள் அவர்களுடைய நிர்வாகத்திலேயே இருந்தது. இந்தப் புரட்சி ஈஸ்டரின் போது நடைபெற்றது. அதனால்தான் இதை ஈஸ்டர் புரட்சி என்று சொல்லுகிறார்கள். 1916-ல் அது வெற்றி யடையாவிட்டாலும் 1919-ல், யுத்தம் முடிந்தவுடன் அந்தக் கலகம் மறுபடியும் உண்டாயிற்று. அவர்களிடம் 5000 தொண்டர்களே இருந்தார்கள். ஆனால் இந்தத் தடவை முடிவு வேறு மாதிரியாக ஆயிற்று. யுத்தம் முடிந்துவிட்டது. இங்கிலாந்திலிருந்து படைகளைக் கொண்டுவந்து கலகத்தை அடக்கலாம். அப்படி இருந்தும் இந்த 5000 தொண்டர்கள் யுத்தத்தை நடத்தினார்கள். கடைசியில் பிரிட்டிஷார் தோல்வியடைய நேரிட்டது.

சென்ற யுத்தத்தில் நடைபெற்ற விஷயங்களை நன்றாக அறிந்துகொண்ட பிறகு 1921-ம் வருஷத்தில் இந்தியாவில் நாங்கள் வேலை செய்யத் தொடங்கினோம். அந்தச் சமயத்தில் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியிருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும். கிலாபத் கமிட்டியும் காங்கிரஸும் ஒன்றாக இருந்து வேலை செய்தன. ஒத்துழையாமை இயக்கத்தில் நாங்கள் கலந்துகொண்டோம். காந்திஜியின் தலைமையில் 1921-ல் நாங்கள் காங்கிரஸில் சேர்ந்தோம். ஏனென்றால் எங்கள் போராட்டத்தை நடத்துவதற்கு வேறு வழி இல்லை. தாங்க முடியாத பிரிட்டிஷ் அடக்கு முறையை எதிர்த்து, தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கு

அப்போது அது ஒன்றுதான் சாத்தியமாக இருந்தது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் இருந்தார்கள். பொது ஜனச் சட்டமறுப்பினுல் மட்டும் பரிபூரண சுதந்திரத்தை நாம் அடைய முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனலும் அந்த இயக்கம் மக்களுக்கு அரசியல் உணர்ச்சியை ஊட்டிற்று என்பதில் சந்தேகமில்லே. மக்களே ஆயுதந்தாங்கிப் போராடச் செய்வதற்கும் அதுதான் தயார் செய்தது.

இது என்னுடைய சொந்தக் கருத்து அல்ல. 1921-ம் வருஷத்தில் மகாத்மா காந்தியின் தலைமையில் போராட்டத்தில் இறங்கிய பல வாலிபர்களின் அபிப்பிராயமும் இதுவேயாகும். அஹிம்ஸையில் நம்பிக்கை கொண்ட பல இளைஞர்களும் அதில் இருக்கத்தான் இருந்தார்கள். ஆனல், பலர் ஆயுத பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாகவே இருந்தனர்.

நான் 1933-ம் வருஷத்தில் ஐரோப்பாவுக்குச் சென்றேன். 1936 வரையில் அங்கே இருந்தேன். அங்குள்ள நிலைமையை அறிந்து, அடுத்து என்ன நேரப் போகிறது என்பதைத் தெரிந்துகொள்வதே நான் ஐரோப்பாவுக்குச் சென்றதன் நோக்கம். நான் அங்கு இருந்தபோது பேர்லினுக்குப் போயிருந்தேன். சில சர்க்கார் அதிகாரிகள் மூலமாக ஹிட்லரையும் சந்தித்தேன். "எப்போது யுத்தத்தைத் தொடங்கப் போகிறீர்கள் ?" என்று ஒளிவு மறைவு எதுவுமின்றி நான் அவரைக் கேட்டேன். பிரிட்டனேடு அவர்கள் யுத்தம் செய்யப் போவதே இல்லை என்றும், கேட்பவை எல்லாவற்றையும் யுத்தம் தொடுக்காமலே பிரிட்டன் கொடுத்துவிடும் என்றும் அவர்கள் கூறினர்கள். அவர்கள் பிரிட்டனுடன் சமாதானமாக இருக்கவே விரும்பினர்கள். ஆனல் இந்திய சுதந்திரத்தைப் பற்றியும் அவர்கள் தங்களுடைய ஆசியைத் தெரிவித்தார்கள்.

நான் இதைச் சொல்லுவதன் நோக்கம் பின்வருமாறு: என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றி ஒரு திட்டமான அபிப்பிராயத்துடன் நான் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்தேன். ஜெர்மனியில் புதிதாக அதிகாரத்துக்கு வந்திருந்த கட்சி எப்போதும் யுத்தத்தை ஆரம்பிக்கக் காத்துக்கொண்டிருந்தது. ஜெர்மன் கோரிக்கைகளைப் பிரிட்டன் ஒப்புக்கொள்ளாது என்பதையும் ஜெர்மானியரின் பலம் பெருகிவருவதைக் கண்டால், பிரிட்டன் நாஜிகளுடன் போர் தொடுக்கும் என்பதை

யும் நான் தெளிவாக அறிந்துகொண்டேன். 1938-ல் நான் ஐரோப்பாவுக்குச் சென்றபோது, நிலைமையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. தன்னுடைய கோரிக்கைகள் முழுவதையும் பிரிட்டன் ஏற்றுக்கொள்ளாது என்பதை ஜெர்மனி அறியத் தொடங்கி இருந்தது. 1938-செப்டம்பரில் சூடேட்டன் ஜெர்மானியரின் விஷயத்தை ஜெர்மனி எடுத்துரைத்தது. அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த சேம்பர்லேன் ஹிட்லருடன் பேசுவதற்காக மியூனிக்குக்கு ஓடிவந்தார். சர்வ தேசீய விஷயங்களைப்பற்றிய பேச்சு வார்த்தைகள் எல்லாம் ஒரு காலத்தில் லண்டனில் நடைபெற்றன. ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் ஜெர்மனிக்குப் போனதைப் பார்த்ததும், பிரிட்டன் பலஹீனமடைந்து வருகிறதென்பதையும், ஜெர்மனியின் பலம் அதிகரித்து வருகிறதென்றும் அறிந்துகொண்டேன்.

பிறகு நான் பிரசாரம் செய்ய ஆரம்பித்தேன். ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பிக்கப் போவது நிச்சயமென்றும், நாம் தூங்கி வழிந்துகொண்டிருக்கக் கூடாதென்றும் நம்முடைய கோரிக்கைகளைப் பிரிட்டன் அங்கீகரிக்கும்படி செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் போராட்டத்துக்கு நாம் தயார் செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறினேன். என் பிரசாரத்தைப் பற்றிப் பொதுஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் கவனித்து வந்தேன். என்னை அவர்கள் பரிபூர்ணமாக ஆதரித்தார்கள். ஆனால் தலைவர்கள் வேறு விதமாக நினைத்தார்கள். முக்கியமாக மகாத்மா காந்தி, "எல்லாவற்றையும் நிதானித்து இருந்து பார்க்கலாம்'' என்ற கொள்கையுடன் இருந்தார். இந்தக் கொள்கையால் வாலிபர்களாகிய நாங்கள் தடைப்பட்டு நிற்கவில்லை. முன்னிலும் அதிகமாக நாங்கள் வேலை செய்தோம்; பிரசாரம் செய்தோம். சீக்கிரத்தில் மிகவும் அரிய சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறதென்றும், அதை வீணாக்காமல் நன்றாக உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறிவந்தோம்.

திரிபுரியில் 1939-ம் வருஷம் மார்ச் மாதம் இந்திய தேசீய காங்கிரஸின் வருஷாந்தரக் கூட்டம் நடைபெற்றது. ஆறு மாதங்களுக்குள் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்துவிட வேண்டுமென்று பிரிட்டனுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பதாக நான் கூறினேன். இந்தக் கோரிக்கைக்குப் பிரிட்டன்

இணங்காவிட்டால், நம்மிடம் இருப்பதைக் கொண்டு பிரிட்டனை எதிர்ப்பதற்கு நாம் தயாராக வேண்டுமென்று சொன்னேன். சர்வதேச நிலைமையை மனத்தில் வைத்துக்கொண்டேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்த ஆறு மாதத்துக்குள் ஐரோப்பாவில் குழப்பம் தோன்றிவிடும் என்பது எங்களுக்குத் தெரியும்.

யுத்தம் செப்டம்பரில் ஆரம்பித்ததைப் பார்த்தவுடன் நான் மார்ச் மாதத்தில் கூறியது சரி என்பதைப் பொது மக்கள் உணர்ந்தார்கள். நமக்கு இருந்த பலத்தை எல்லாம் ஒன்றுகத் திரட்டி நமது கோரிக்கைக்குப் பிரிட்டனை இணங்கச் செய்வது நம் கடமையாக இருந்தது. ஆனால் நம் தலைவர்கள் வேறுவிதமாக நினைத்துக் காரியம் செய்துகொண்டிருந்தார்கள். யுத்தத்தினுல் பிரிட்டன் பலஹீனமடைந்துவிடும் என்றும், அப்போது இந்தியாவின் உதவியை நாட நேரிடுமென்றும், அப்படி நாடும்போது காங்கிரஸோடு சமரசத்துக்கு வந்துதான் தீரவேண்டுமென்றும் நினைத்தார்கள். அது எவ்வளவு தூரம் தவறு என்பதை நான் எடுத்துக் காட்டினேன். யுத்த காலத்தில் பிரிட்டனின் பலம் எவ்வளவுதான் மோசமடைந்தாலும், இந்தியாவில் தன்னுடைய அதிகாரத்தைக் கைவிடுவதற்குப் பிரிட்டன் ஒப்புக்கொள்ளாது என்று சொன்னேன். அவர்களுடைய பலம் எவ்வளவுக்கு எவ்வளவு குறைகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இந்தியாவை அவர்கள் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டுதான் தொங்குவார்கள். இந்தியா இல்லாமல் அவர்களால் யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. தேசத்தின் செல்வத்தை அவர்கள் சுரண்டிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் பலம் குறையக் குறைய இந்தச் சுரண்டல் அதிகரிக்கும்.

காங்கிரஸ் 1940-ல் கூடியபோது ஏதாவது முன்னேற்றம் காணப்படும் என்று நினைத்தோம். ஆனால் காந்திஜியின் வழிதான் வெற்றி பெற்றது. அவர் நிதானித்துப் பார்க்கலாம் என்று கூறினர். என்ன வந்தாலும் சரி என்று நாங்கள் எங்கள் இயக்கத்தை ஆரம்பிக்கத் தயாரானோம். தேசம் முழுவதும் யுத்த எதிர்ப்பு இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அது சிறிது சிறிதாக அதிகரித்தது. பலர் சிறைக்குச் சென்றனர். சர்க்கார் அசைந்து கொடுக்காததால் மகாத்மா

காந்தியே நவம்பர் மாதத்தில் ஒரு சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கப்போகிறுர் என்ற செய்தி கிடைத்தது. எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இந்தியர்கள் சுதந்திரத்துக்காகப் போராடுகிறுர்கள் என்பது உலகம் முழுவதுக்கும் தெரிந்துபோகும். இந்தியா சுதந்திரம் பெறத் தகுதியுடையதுதான் என்பதை அகில உலகமும் அறிந்துகொள்ளும். உலகத்தின் அனுதாபம் முழுவதும் நமக்குக் கிடைக்கும்.

ஆனுல் சட்டமறுப்பினுல் மட்டும் சுதந்திரம் வராது என்று நான் நினைத்தேன். அந்த இயக்கமானது சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்தும் என்பது உண்மைதான். சர்க்கார் முயற்சிகளை அது பாதிக்கும். ஆனுல் நம் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ருது என்று எனக்குத் தோன்றிற்று. என்ன செய்வதென்று நாங்கள் யோசனை செய்துகொண்டிருந்தோம். புதிய முறை ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தோம். வெடிகுண்டுகளையும் கைத்துப்பாக்கிகளையும் கொண்டு வாலிபர்கள் ஏதோ இயன்றதைச் செய்துகொண்டிருந்தார்கள். இவ்வகையான புரட்சிக்காரர்களுடன் நாங்கள் சம்பந்தம் வைத்துக்கொண்டோம். அவர்களுடைய பலம் எவ்வளவென்று எனக்குத் தெரியும். அவர்கள் தளரா நெஞ்சமுள்ளவர்கள். உண்மையான புரட்சிக்காரர்கள். ஆனுல் நம் தேசம் சுதந்திரம் அடைவதற்கு அவர்களுடைய பலமும் தியாகமும் போதா.

அப்போதுதான் தேச சரித்திரத்தின் பக்கங்களை விழுந்து விழுந்து புரட்டினேம். அதில் பல உதாரணங்கள் எங்களுக்குக் கிடைத்தன. எங்களால் பல பாடங்கள் அதிலிருந்து கற்றுக்கொள்ள முடிந்தது. அமெரிக்காவை உதாரணமாக எடுத்துக்கொண்டோம். வெளிநாட்டு உதவியின்றி இந்தியப் புரட்சி வெற்றி பெருது என்ற முடிவுக்கு அப்போதுதான் வந்தேன். அமெரிக்காவுக்குப் பிரான்சிலிருந்து ஏராளமான உதவி கிடைத்தது. மற்றத் தேசங்களின் உதவி கொண்டு,ஒரு தேசம் சுதந்திரமடைவது என்பது உலக சரித்திரத்துக்குப் புதியதல்ல.

இந்தியாவில் எங்களுக்குக் கிடைத்த செய்திகள் எல்லாம் வெறும் சரடுகளாக இருந்தன. பிரசாரம் அதில் அதிகமாக இருந்தது. பிரிட்டன் அத்துமாதிரி செய்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. இந்தியாவுக்குள்ளிருந்தே சரியான நிலைமை என்ன என்று அறிவது முடியாததாகிவிட்டது. யுத்தத்தின் முடிவு

என்ன ஆகும்; எப்படி முடியும்; யார் ஜயிப்பார்கள்? வெளி நாட்டிலுள்ள இந்தியர்களின் எண்ணங்கள் என்ன? இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அவர்கள் என்ன அபிப் பிராயம் கொண்டிருக்கிறார்கள்? அவர்களிடமிருந்து இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு உதவி பெறுவது எப்படி? பிரிட்டனின் எதிரிகளிடமிருந்து அவர்கள் மூலமாக உதவி பெறுவது சாத்தியமா? யாரையாவது இந்தியாவுக்கு வெளியில் அனுப்பி, நிலைமையைத் தெரிந்துகொண்டு வர எங்களைத் தூண்டிய பிரச்னைகள் இவைகளே. வெளிநாடுகளுக்குச் சிலரை அனுப்பலாமென்று பார்த்தேன். அது ரொம்பவும் கஷ்டமான காரியமாக இருந்தது. எங்களுடைய போக்குவரத்துக்களுக்குத் தடைகள் பிரமாதமாக இருந்தன. பிரிட்டன். சரியானபடி அறிந்துள்ள ஒருவரைத்தான் வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும்; இந்தியர்களின் மதிப்பையும் அவர் பெற்றவராக இருக்க வேண்டும். எனவே நானே இந்தியாவை விட்டு வெளி யேறிவிடுவது என்று முடிவு செய்தேன்.

நான் அப்போது சிறையில் இருந்தேன். சிறையை விட்டு வெளியேறுவதே கஷ்டம். அப்படி வெளியேறிவிட்டாலும் பிறகு அதனால் தேசத்தை விட்டு வெளியேறுவது இன்னும் கடினமாகி விடும். ஏனெனில் பிரிட்டிஷ் சி. ஐ. டி.க்கள் ரொம்ப உஷாராகி விடுவார்கள். உண்ணாவிரதம் இருப்பது என்று கடைசியில் தீர் மானித்தேன். சிறையைவிட்டு வெளியேறுவது அல்லது சாவது என்று இரண்டில் ஒன்றைப் பார்ப்பதற்காகவே இந்தமாதிரி தீர்மானித்தேன். உண்ணாவிரத விஷயம் சர்க்காருக்குத் தெரிந்தவுடன், அதிகாரிகள் பரபரப்புக் கொண்டனர். ஜெயிலில் நான் சாவதைக் காண அவர்கள் விரும்பவில்லை. பட்டினி கிடக்க வேண்டாமென்று சிறைச் சூப்பரின்டென்டு என்னை வந்து கேட்டுக்கொண்டார். எல்லாரும் இதைப் போல் பட்டினி கிடக்க ஆரம்பித்தால் ராஜாங்கம் நடக்காது என்றும் சொன்னார். நான் உண்ணாவிரதம் இருந்தால் அது என்னுடைய பொறுப்பே என்றும் தெரிவித்தார். நான் ஆறு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தேன். பலவந்தமாக எனக்குச் சிறையில் உணவூட்ட முயன்றார்கள். ஜதீந்திரநாத் தாஸைப்போல் உயிரைத் தியாகம் செய்வதென்று முடிவு செய்திருந்தேன். நான் ஏழு நாட்கள் உண்ணாவிரதம் இருந்த பிறகு சர்க்கார்

மாளிகையில் ஓர் அவசர மகாநாடு நடைபெற்றது. என் தேகநிலை படுமோசமாகிவிட்டதால், அடுத்தபடி என்ன செய்வதென்று யோசனை நடந்தது. ஒரு மாதம் வெளியில் விட்டு, மறுபடியும் கைதி செய்யலாம் என்ற எண்ணத்துடன் அவர்கள் என்னை விடுதலை செய்தனர். சரியான சமயத்தில் எனக்கு அந்தச் செய்தி கிடைத்தது. இதற்கிடையில் நாட்டை விட்டு வெளியேறுவதற்குச் சில ஏற்பாடுகள் செய்ய முடிந்தது.

தேசத்திலிருந்து புறப்பட்டேன். கிளம்பிய பிறகு ஏராளமான அனுபவங்கள் உண்டாயின. இரு சாராரின் ரேடியோ பிரசார ஒலிபரப்புகளையும் கேட்டுக்கொண்டு வந்தேன். எதிரி ரேடியோவைக் கேட்கவும், அவர்களது பிரசாரத்தை அதன் மூலம் அறிந்துகொள்ளவும் ஜெர்மன் அதிகாரிகள் எனக்கு வசதிகள் செய்து கொடுத்தார்கள். அவர்களுடைய கோட்டைகளையும், ஐரோப்பா முழுவதிலுமுள்ள மற்றப் பாதுகாப்புகளையும் பார்வையிடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

இந்த நிலைமையில் இந்தியாவின் கதி என்ன என்ற பிரச்னை எழுந்தது. மூன்று விதமான பதில்கள் தோன்றின. அவை :—

1. யுத்தத்தில் சேராமல் ஒதுங்கி இருந்து, நடுநிலைமை வகிப்பது.

2. பிரிட்டனின் எதிரிகளிடம் சென்று இந்திய சுதந்திரத்துக்கு யாசிப்பது.

3. பிரிட்டன் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு யுத்தத்தில் நாமும் ஈடுபட்டு, அதன் மூலம் நாம் சுதந்திரம் பெறுவது.

பிரிட்டனுடைய எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு, பிரிட்டனுக்கு எதிராக யுத்தத்தில் இறங்குவதே சரியான வழி என்று எனக்குப் பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதில் நம்முடைய கைங்கரியத்தை அப்படிச் செய்யலாமென்று நினைத்தேன்.

இந்தியாவில் உள்நாட்டு நிலைமை மகா கேவலமாக இருந்தது. இந்தியாவில் இருந்துகொண்டு, பிரிட்டனை எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு உதவ வேண்டியது எங்கள் கடமை. இந்தியாவிலுள்ள ஜனத்தொகை முழுவதுமே பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிராக இருந்தது.

சுதந்திர சேனை செய்யக்கூடிய காரியங்கள் இரண்டு. முதலில் அது செய்யவேண்டிய முக்கியமான காரியம் பிரிட்டனை எதிர்த்துப் போர் புரிந்து, தாய்நாட்டுக்கு விடுதலை அளிப்பது தான். அடுத்த காரியம் என்னவென்றால், இந்தியாவில் மிகவும் பலம் வாய்ந்த ராணுவத்தைச் சிருஷ்டிக்க வேண்டியது. ஒரு தேசமானாலும், பல தேசங்கள் சேர்ந்தாயினும் இந்தியா மீது படை எடுக்க முடியாதபடி செய்யவேண்டியது அவசியம்.

நண்பர்களே! நாம் அடிமைகளாக இருப்பதில்லை என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அடிமைத்தனம் எப்படி இருக்குமென்பதை நாம் அனுபவித்துவிட்டோம். நமது தாய் நாட்டின் மீது வெளியிலிருந்து எவரும் படை எடுக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமானால், நீங்கள் எல்லோரும் சேர்ந்து உலகத்திலேயே மிகவும் பலம் வாய்ந்த ராணுவத்தை ஸ்தாபிக்க வேண்டும். திறமையையும் சக்தியையும் பொறுத்தவரையில், இந்திய சோல்ஜர்கள் எவருக்கும் இளைத்தவர்கள் அல்ல என்று நான் தைரியமாகச் சொல்லுவேன். நமக்குச் சரியான பயிற்சியும் சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஆனால் அவை கிடைத்த சமயத் தில், இந்தியர்களின் உண்மையான தீரம் வெளியாகியிருக்கிறது. ராணுவத்தில் மட்டுமின்றி, அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விளையாட்டு முதலிய ஒவ்வொன்றிலும் இந்தியர் களாகிய நாம் ஒருவருக்கும் இளைத்தவர்கள் அல்ல. இந்தியர் திறமைவாய்ந்தவர்களாகவும், அதிக சக்தி வாய்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். கடவுள் அவர்களை அப்படி ஆக்ஞாபித்திருக் கிறார். உலகத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன என்பது உண்மைதான். அதற்கு நாம் தயாராக இருக்கிறோம். இதைப் போன்ற கல்வியுடனும் நம் மக்களுடைய சக்தியுடனும் நம்பிக்கையுடனும், நாம் இந்த ராணுவத்தை ஆரம்பிக்கிறோம்.

ஒரு சைன்யம் வெற்றி பெறவேண்டுமானால், ராணுவப் பயிற்சி மட்டும் போதாது. பிரான்ஸை எடுத்துக்கொள்ளுங்கள். 1939-முடிய பிரஞ்சு சைன்யம் உலகத்திலேயே மிகப்பெரியது என்ற எண்ணம் இருந்து வந்தது. உண்மையும் அதுதான். ஏராளமான யுத்தப் பொருள்கள், ஆகாய விமானங்கள், துப் பாக்கிகள். அத்துடன் உடைக்க முடியாத "மாகினாட் அரண்" முதலியவை இருந்தன. ஆனல் வெகு சீக்கிரத்தில் பிரான்ஸ்

தோல்வி அடையக் காரணம் என்ன? அதற்குக் காரணம் ஒன்று தான். அவர்களிடம் போதிய உள்ளக் கிளர்ச்சி இல்லை. கடந்த யுத்தத்திற்குப் பிறகு எதிரி ஒரேடியாக முறியடிக்கப்பட்டு விட்டானென்றும், தாங்கள் படுத்துத் தூங்கிப் போகலாமென் றும் பிரான்ஸ் நினைத்து விட்டது. ஜெர்மனியோ அப்படியல்ல. ஜெர்மனியில், "பழிக்குப்பழி" என்ற ஆத்திரம் நிறைந்திருந்தது. அந்த தேசம் பழிவாங்குவதையும் தியாகத்தையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. அதனால்தான் அப்படிப்பட்ட விபரீத தோல்வி பிரெஞ்சு மக்களுக்கு ஏற்பட்டது. பிரெஞ்சு மக்கள் தங்களது உள்ளக் கிளர்ச்சியை இழந்து விட்டனர். ஜெர்மானியரிடம் அந்தக் கிளர்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. ஒரு சைன்யத்தின் வெற்றி தோல்வியானது அதற்கு கொடுக் கப்பட்ட மனப் பயிற்சியைப் பொருத்தே இருக்கிறது. அட்டுத் தீவைப் பாதுகாத்த ஜப்பானியரின் உள்ளக் கிளர்ச்சியைப் பாருங்கள். எண்ணிக்கையில் பல மடங்கு அதிகமான சைன் யத்தை அவர்களால் வெகு நாட்களுக்கு எதிர்த்து நிற்க முடி யாது என்று அங்கிருந்த ஜப்பானியப் படைகளுக்குத் தெரியும். சுலபமாக அவர்கள் சரணடைந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவர்களுடைய தாய் நாட் டின் மேன்மைக்கும், கௌரவத்துக்கும் தகுந்த முறை அது அல்ல. 2000 பேரைக் கொண்ட அந்த சைன்யம் முழுவதும் தங்கள் உயிரை யுத்தத்தில் தியாகம் செய்தன.

ஸ்டாலின்கிராடைப் பாதுகாத்த வீரர்களையும் பாருங்கள். ஒரு சமயத்தில் 20,000 எதிரிகள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டனர். சரணடைந்து விடும்படி ஜெர்மனியர் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை கூட விடுத்தனர். அவர்கள் அப்படிச் செய்யவில்லை. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினார் கள். ஸ்டாலின்கிராடைப் பாதுகாத்தவர்களின் உணர்ச்சி அப்படிப்பட்டது.

அதைப் போன்ற உணர்ச்சியை நம்முடைய ஆட்களிடத்தில் உண்டாக்க வேண்டும். உத்தியோகஸ்தர்களின் பொறுப்பு இதில் மிகவும் மகத்தானது. யுத்தகளத்தை விட்டு ஒரு சிப்பாய் வெளியேறி விட முடியும். ஆனால் உத்தியோகஸ்தரால் அப்படிச் செய்ய முடியாது. அவர்கள் ரொம்பவும் பொறுப்பு வாய்ந்தவர்கள். அதைப் போன்ற பொறுப்பு வாய்ந்தவர்கள்

தலைமை வகித்து நடத்தும் ராணுவம் முடிவில் வெற்றி பெறும் என்பதில் ஆட்சேபணையே கிடையாது.

(பம்பாயிலிருந்து வெளிவரும் "பிரீ பிரஸ் ஜெர்னலி"லிருந்து எடுக்கப்பட்டது.)

அனுபந்தம் 3

இந்திய சுதந்தரக்கழக மகாநாட்டு நடவடிக்கைகள்

கிழக்காசிய இந்தியர்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மகாநாடு 21-10-43ல் ஷோனன் கைதோவா கெகிஜோவில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையின் கீழ் நடைபெற்றது.

கோலாலம்பூர் இந்திய சுதந்திரக்கழகத் தலைவராகிய ஸ்ரீ எம். கே. ராமச்சந்திரன் மகாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்று உபசாரப் பத்திரமொன்று வாசித்தார்.

அதற்கடுத்தபடியாக பெர்துக் காரியதரிசி ஸ்ரீ சாட்டர்ஜி தனது அறிக்கையை ஹிந்துஸ்தானியில் வாசித்தார். இவரது அறிக்கை தமிழில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது. இதைத் தொடர்ந்தாற்போல் நேத்தாஜி தனது தலைமையுரையை ஹிந்துஸ்தானியில் நிகழ்த்தினர். தலைவரின் பிரசங்கமும் தமிழில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது. நேத்தாஜி சுபாஷ்சந்திர போஸ் ஹிக்காரி ஹிக்கான் அதிபர் கர்னல் யமமோத்தோவுடன் மாலை மகாநாட்டிற்கு வந்தார்.

நிப்பொன், பர்மா, பிலிப்பைன் ஆகிய மூன்று நாடுகளுக்கு வந்தனச் செய்திகளும் ஆசிச்செய்திகளும் அனுப்புவதென்ற தீர்மானங்கள் ஏகமனமாக நிறைவேற்றப்பட்டன.

நிப்போனுக்கு வாழ்த்து

மே. த. பிரதம மந்திரி ஜெனரல் ஹிதேகி டோஜோ, டோக்கியோ :

இந்தியர்கள் தங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு நிப்பொனிடமிருந்து பெற்றுவரும் உதவிக்கும், ஒத்துழைப்பிற்கும், அனுதாபத்திற்கும் கிழக்காசியாவில் பற்பல பிரதேசங்களிலிருக்கும் இந்திய சுதந்தரக் கழகங்களின் பிரதி

நிதிகளைக்கொண்டு ஷோனனில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையின்கீழ் இன்று கூடியுள்ள இம்மகாநாடு தனது மனமார்ந்த வந்தனத்தை நிப்பொன் இம்பீரியல் அரசாங்கத்திற்கும் நிப்பொன் மகாஜனங்களுக்கும் மே. த. பிரதம மந்திரி ஹிதேகி டோஜோவிற்கும் தெரிவித்துக் கொள்கிறது. பொது விரோதி முறியடிக்கப்படும்வரையும் கிழக்காசிய இந்தியர்களும், தாய்நாட்டில் வசிக்கும் தேசாபிமானிகளும் நிப்பொனுடனும், அதன் நேச நாடுகளுடனும் தோள்கொடுத்துப் போரிடுவார்களென இம்மகாநாடு உறுதி அளிக்கிறது.

பர்மாவுக்கு வாழ்த்து

மே. த. அதிபதி டாக்டர் பா மா—ரங்கூன் :

கிழக்காசியாவில் பற்பல பிரதேசங்களிலிருக்கும் இந்திய சுதந்தரக் கழகங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு ஷோனனில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையின்கீழ் இன்று கூடியுள்ள இம்மகாநாடு பர்மியர்களின் நெடுநாளைய ஆவலாகியதேசிய சுதந்தரம் சித்திபெற்றமைக்கு சுதந்தர பர்மிய அரசாங்கத்தின் முதலாவது தலைவரும் பிரதம மந்திரியுமாகிய மே. த அதிபதி டாக்டர் பா மாவுக்கும், அவரது மந்திரி சபை அங்கத்தினர்களுக்கும் பர்மிய மக்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், பர்மிய சமுதாயம் தனது எதிர்கால சரித்திரத்திலும் நிரந்தரமான சுதந்தரத்தைப் பெற்றுத் திகழ வேண்டுமெனப் பிரார்த்திக்கிறது.

பிலிப்பைனுக்கு வாழ்த்து

மே. த. ஜோஸ் பி. லாரெல்—மணிலா :

கிழக்காசியாவில் பற்பல பிரதேசங்களிலிருக்கும் இந்திய சுதந்தரக் கழகங்களின் பிரதிநிதிகளைக்கொண்டு ஷோனனில் நேத்தாஜி சுபாஷசந்திரபோஸ் தலையின்கீழ் இன்று கூடியுள்ள இம்மகாநாடு பிலிப்பைன் மக்களின் நெடுநாளைய ஆவலாகிய தேசிய சுதந்தரம் சித்திபெற்றமைக்கு சுதந்தர பிலிப்பைன் குடியரசின் முதலாவது தலைவரும் பிரதம மந்திரியுமாகிய மே. த. ஜோஸ் பி. லாரெலுக்கும், அவரது மந்திரி சபை அங்கத்தினர்களுக்கும் பிலிப்பைன் மக்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், பிலிப்பைன் சமுதாயம் தனது எதிர்கால சரித்திரத்திலும் நிரந்தரமான சுதந்தரத்தை

யும், சுபிட்சத்தையும் மெற்றுத் திகழவேண்டுனெப் பிரார்த்திக்கிறது.

இதன் பின்னர் மந்திரி சபை அமைப்புபற்றி அறிவிக்கப்பட்டது. தற்காலிக மந்திரி சபையின் மந்திரிகள், ஆஸாத் ஹிந்த் பௌஜ் பிரதிநிதிகள், ஆலோசனையாளர்கள் இவர்களின் பெயரை நேத்தாஜி வெளியிட்டபொழுது எங்கும் ஒரே ஆரவாரமாக விருந்தது. நேத்தாஜியும் மந்திரி சபை அங்கத்தினர்களும் பின்னர் விசுவாசப்பிரமாண மெடுத்துக்கொண்டனர்.

நேத்தாஜி ஹிந்துஸ்தானியில் எடுத்துக்கொண்ட பிரமாணமாவது: "இந்தியாவினதும், 38 கோடியுள்ள என் தாய் நாட்டினரினதும் விடுதலைக்காக இப்புனித சுதந்தர யுத்தத்தை எனது உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரையும் தொடர்ந்து நடத்தி வருவேனென சுபாஷ் சந்திர போஸாகிய நான் ஆண்டவன் சாட்சியாகப் பிரமாணமெடுத்துக்கொள்கிறேன். நான் எப்பொழுதும் இந்தியாவின் தொண்டனுகவே இருந்து வருவேன். 38 கோடியுள்ள எனது இந்திய சகோதர சகோதரிகளின் நலனை கவனிப்பதே எனது முழு முதற் கடமையாக விருக்கும். சுதந்தரம் அடைந்ததின் பின்னரும், இந்தியாவின் சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்காக நான் எனது தேகத்திலுள்ள கடைசிச் சொட்டு ரத்தத்தையும் சிந்தத் தயாராகவிருப்பேன்'.'

பின்னர் மந்திரி சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் தங்கள் தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸிடம் விசுவாசமாக இருப்பதுடன் தேசத்திற்காக தங்களனைத்தையும் அர்ப்பணஞ் செய்துள்ளதாக ஆண்டவரின் பெயரால் பிரமாணமெடுத்துக்கொண்டனர். நேத்தாஜி ஒவ்வொரு மந்திரியிடமும் கை குலுக்கினுர்.

மாலை 4-15 மணிக்கு சுதந்தர இந்தியத் தற்காலிக அரசாங்கப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இப்பிரகடனத்தை ஸ்ரீ. ஏ. எம். ஸஹாய் ஹிந்துஸ்தானியில் வாசித்தார். இதை தமிழில் ஸ்ரீ எம்.கே. சிதம்பரமும், ஆங்கிலத்தில் நேத்தாஜியும் வாசித்தனர்.

இந்த மகாநாட்டில் நேத்தாஜி செய்த பிரசங்கமாவது :

"நண்பர்களே!

அதிகக் குறுகிய கால அறிவிப்பின் பேரில் இம் மகாநாட்டிற்கு வந்துள்ள உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். சென்ற ஜுலை மாதம் நாம் இவ்விடம் சந்தித்ததன் பின்னர் அடைந்திருக்கும் அபிவிருத்திகளையும் அருஞ் செயல்களையும் மதிப்பிடுவதற்காகவும், அதன் பின்னர் நமது தேசிய லக்ஷியம் நிறைவேறுவதற்கான நடவடிக்கைகளைக் கையாளுவதற்குமாகவே இம் மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

கிழக்காசிய இந்திய சுதந்தரக் கழகத்தின் தலைமைப் பதவியை நான் ஏற்றுக்கொண்டதும் முதன் முதலாகத் தலைமைக் காரியாலயத்தை யுத்த முஸ்தீபிற்கான நிலைமையில் திருத்தியமைப்பதில் எனது முழுக்கவனமும் செலுத்தப்பட்டது. இவ்வேலையானது ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு தலைமைக் காரியாலயத்தில் அநேக புதிய இலாக்காக்கள் ஏற்படுத்தப்பட்டன. கிழக்காசிய இந்திய சர்வ ஜனசக்தி சாதனங்களையும் திரட்ட வேண்டுமென்ற சர்வாம்சப் படைதிரட்டல் கொள்கைக் கிணங்க தலைமைக் காரியாலயமானது திருத்தி யமைக்கப்பட்டது. தலைமைக் காரியாலயம் திருத்தி யமைக்கப்பட்ட பின்னர், கிழக்காசியாவிலுள்ள சகல கிளைக் கழகங்களும் இதே அஸ்திவாரத்தின் பேரில் திருத்தியமைக்கப்பட்டதுடன் 'சர்வாம்சப் படை திரட்டல்' என்ற கொள்கையானது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதற்கடுத்தாற்போல் ஆஸாத் ஹிந்த் பௌஜை (இந்திய தேசிய ராணுவம்) திருத்தியமைப்பதில் நான் எனது கவனத்தைச் செலுத்தினேன். இதே நோக்கமாகத்தான் நமது ராணுவத்தின் தலைமைப் பதவியை நான் எடுத்துக் கொண்டேன். அன்றையிலிருந்து நமது ராணுவத்தில் அநேக மாறுதல்கள் செய்யப்பட்டுவிட்டன; இனிமேலும் அநேக புது மாறுதல்களும் செய்யப்படும். இப்புதிய மாறுதல்களைத் தொடர்ந்தாற்போல் நமது ராணுவத்தின் உற்சாகம் அதிகரித்திருப்பதுடன் பலமடைந்துமிருக்கிறது.

ஷோனனிலிருந்து ஏதாவதொரு படை வடக்கு நோக்கி அனுப்பப்படும்பொழுது நமது ராணுவத்தினர்களின் முகத்தில் காணப்படும் சந்தோஷமும், உற்சாகமுமே இதற்கோர் உதாரணமாகும். ஆஸாத் ஹிந்த் பௌஜ் வீரர்கள் ஒவ்வொருவரும்

'டில்லி செல்வோம்' என்ற சுலோகத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கிறரென்பதை நான் சந்தோஷத்துடன் உங்களுக்குக் கூறுகிறேன். இந்தியாவின் எல்லைக்கு மாற்றப்படும் நன்னளையே நம் ராணுவம் பேராவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதெனக் கூறுவது மிகையாகாது.

தற்சமயமிருந்துவரும் ராணுவத்திற்கு இயந்திரப் பயிற்சி அளித்து அதை செயலுக்குத் தயார்செய்து வருவதுடன் ராணுவத்தை விஸ்தரிக்கும் வேலையும் நடைபெற்று வருகிறது.

ராணுவத்தில் புதிதாகச் சேர்ந்துள்ளவர்களின் உற்சாகமும் நாம் எதிர்பார்த்த அளவிற்கு இருந்து வருகிறதென்பதை நான் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் உங்களுக்கு அறிவிக்கின்றேன்.

மலாய் முழுவதும் நமது பயிற்சி முகாம்கள் நிறைந்திருந்த போதிலும் ஏராளமான புது வாலண்டியர்களுக்கு நம்மால் பயிற்சி யளிக்கக்கூடிய நிலைமையில் நாம் இல்லையென்றே புதிதாகச்சேர முன்வரும் வாலண்டியர்களின் எண்ணிக்கையைப் பற்றி நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஆனுல் வாலண்டியராக முன்வரும் ஒவ்வொருவரின் தேவையும் இனிமேல் உடனுக்குடன் கவனிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென நாம் நம்புகிறோம். இதை மனத்தில் கொண்டுதான் கிழக்காசியாவின் இதர இடங்களிலும், உதாரணமாக தாய்லாந்து, பர்மா பயிற்சி முகாம்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

எல்லா விடங்களிலும் நம் யுவர்கள்மட்டும் வாலண்டியர்களாகச் சேர முன்வரவில்லை. எந்தவித தேச சேவையும் செய்யத் தயாரென நம் இளம் மாதர்களும் உற்சாகத்துடன் முன்வந்து கொண்டிருக்கிறர்கள், ஆகையால், ஜான்ஸி ராணி ரெஜிமெண்டை நாம் ஆரம்பிக்க வேண்டியதற்கவசியமாயிற்று. இப்படையில் நம் சகோதரிகளுக்கு ராணுவப் பயிற்சியும் செஞ்சிலுவைப்பயிற்சியும் அளிக்கப்படும். ஜான்ஸி ராணி ரெஜிமெண்டிற்குப் பயிற்சி அளிக்க மத்திய பயிற்சி முகாமொன்றும் இம் மாதம் 22-ந் தேதி திறந்து வைக்கப்படும்.

'சர்வாம்சப் படைதிரட்டல்' திட்டத்திற்கிணங்க சுதந்தர இயக்கத்திற்கு வேண்டிய பணம் திரட்டும் முயற்சியும், நம் ராணுவத்திற்கவசியமான சப்ளைப் பொருள்களை வாங்குவதும், சேகரிப்

பதும் மும்முரமாக நடைபெறுகின்றன. மொத்தத்தில் ஜனங்கள் காட்டிய உற்சாகம் குதூகலத்தை அளித்துள்ளது. மத்திய, எளிய வகுப்புக்களைச் சார்ந்த மக்களிடையே காணும் தியாக உணர்ச்சி பெருமிதமென்பதுடன் சுதந்தரம் விரும்பும் இந்தியர் ஒவ்வொருவருக்கும் அது பெருமையும் திருப்தியும் அளித்துள்ளது. செல்வந்தர்களும் சிறிது சிறிதாக முன்வந்து கொண்டிருக்கிறார்கள். தேசிய சேவையிலும் தியாகத்திலும் இவர்களும் சமூகத்தின் இதரர்களுக்குக் கொஞ்சங்கூடப் பின்வாங்க மாட்டார்களென்று நம்புகிறேன்.

கடந்த ஜூலை மாதத்திலிருந்து இந்திய சமூகத்தினிடம் விரிவான முறையில் பிரசாரம் நடைபெற்று வந்திருப்பதுடன், சென்ற காலங்களில் அலட்சியமாக விருந்த நம் சமூகத்தின் ஓர் சில பகுதியினரிடமும் நாம் கவனஞ் செலுத்திவந்தோம். இவ்வகையிலும் நாம் போதிய அபிவிருத்தி யடைந்திருப்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய சுதந்திரத்திற்கான வகையில் எல்லாவித உதவியும் செய்ய கிழக்காசிய இந்திய சமுதாயத்தினரிடையே ஒருவித பேராவல் இன்று நிலைபெற்று வருகிறது. இவ்வழியில் அதிகப்படியான நடவடிக்கைகளை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

மக்கள் படும் கஷ்டநஷ்டங்கள் அதிகமாகியே வந்திருந்த போதிலும் கடந்த சில மாதங்களாகவே இந்தியாவினுள்ளிருந்துவரும் நிலைமையும் நமக்குச் சாதகமாகவே அபிவிருத்தி யடைந்து வருகிறது.

உயர்தர உத்தியோகஸ்தர்கள் சிலர் சிற்சில சமயங்களில் சமாதானத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்த போதிலும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் அரசியல் கொள்கை எப்பொழுதும்போல் தானிருந்து வருகிறது.

பிரசித்தி பெற்ற இந்திய தேசியவாதிகள் அனைவரும் ஏராளமான ஊழியர்களுடனும் வீரர்களுடனும் சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்கின்றனர். இந்திய மக்களைப் பிரிட்டனுடன் அகௌரவமானதொரு சமாதானம் செய்துகொள்ளச் செய்வதற்கான வீண் முயற்சிகள் யாவும் செய்யப்படலாம். இதைத் தவிர உள்நாட்டு நிலைமையில் வேறெவ்வித மாறுதலும் ஏற்படாது.

இந்தியாவிலுள்ள அரசியல் கொந்தளிப்பை இந்தியாவின் பல பாகங்களிலும்—அதிலும் வங்காளத்தில்—காணப்படும் பஞ்ச நிலைமை அதிகரிக்கச் செய்துள்ளது. இந்தியாவின் உணவுப்பொருட்களையும், இதர மூலப் பொருட்களையும் பிரிட்டன் தனது போருக்காகச் சென்ற நான்கு ஆண்டுகளாகக் கொண்டு போனதே இப்பஞ்சத்திற்கடிப்படையான காரணமென்பதற்குக் கொஞ்சங்கூடச் சந்தேகங் கிடையாது. நமது கழகத்தின் சார்பில் நான் முதல் தடவையாக ஒரு லக்ஷம் டன் அரிசியை வறுமையால் வாடும் நம் மக்களுக்கு அளிப்பதாகக் கூறினது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் இதை ஒப்புக்கொள்ளாதது மட்டுமல்ல; இதற்கு மறுமொழியாக நாம் ஏளனஞ்செய்யப்பட்டோம். ஆனால் கல்கத்தா நகர சபைபோன்ற பொது ஸ்தாபனங்கள் ஜனதிபதி ரூஸ்வெல்டிற்கும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலுக்கும் வறுமை நோய்க்குட்பட்டு லக்ஷக்கணக்கான மக்களுக்கு உணவுப்பொருள் அனுப்பவேண்டுமென விடுத்த வேண்டுகோள்கள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாயின. புரட்சியை வளர்ப்பது பட்டினி நோய் என்பதே, நாம் மனம் வெடிக்கும் இந்நிலைமையிலிருந்து கற்ற பாடமாகும்.

அச்சு-எதிர்ப்பு நாடுகள் வட ஆப்பிரிக்காவிலும், இத்தாலியிலும் சில அற்ப வெற்றிகளடைவதற்கு முன்னர் உலக நிலைமை நமக்கு எவ்வளவு சாதகமாக விருந்ததோ அதே போன்றுதான் இன்றுமிருந்து வருகிறதென்பதை நான் உங்களுக்குக் கூற மகிழ்ச்சியடைகிறேன். தாய்நாட்டிலுள்ள நம் சகோதரர்களும் இதை உணர்ந்திருக்கின்றனர். ஆகையினல், வட ஆப்பிரிக்காவிலும், இத்தாலியிலும் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் விளைவு இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் எதிர்ப்பு உணர்ச்சியை வலுவடையச் செய்திருப்பதுடன் பிரிட்டிஷ் நுகத்தடியினின்றும் விடுபடுவதென்ற மக்களின் தீர்மானத்தையும் உறுதியடையச் செய்திருக்கிறது. உலகத்தில் எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் கிழக்காசியாவிலுள்ள இந்திய சுதந்தரக் கழகம், இந்திய தேசிய ராணுவம் சம்பந்தப்பட்ட மட்டில் போரிட்டு வெற்றி பெறுவதென்ற உறுதியானது நாளுக்குநாள் வலுவடைந்து வருகிறது.

மலாய், தாய்லாந்து, பர்மா, இந்தோ—சீன ஆகிய இடங்களுக்கு நான் கடந்த ஜூலை மாதத்திலிருந்து சுற்றுப்பிரயாணஞ்

செய்திருப்பதைப்பற்றி நீங்கள் ஒருவேளை அறிந்திருக்கலாம். நான் மேற்கூறிய இடங்களில் எங்கெங்கெல்லாம் எனது தாய் நாட்டு அன்பர்களைச் சந்தித்தேனோ அங்கெல்லாம் அவர்களி டையே தோன்றிய வைராக்கிய மனோபாவமானது, எனக்கு உற் சாக மூட்டக்கூடியதாய்மட்டுமல்லாது எனது நம்பிக்கை மனோ பாவத்திற்கும் சர்வானுகூலத்திற்கும் பெரும் பக்க உதவியாயு மிருந்தது. தாய் நாட்டிலும் சரி, அல்லது வெளிஇடங்களிலும் சரி, தங்கள் தாய்நாட்டின் உரிமைக்காகப் போரிட்டுக்கொண்டிருக் கும் இந்தியர்களுக்கு, கடந்த ஆகஸ்ட் மாதம் பர்மா சுதந்தர மடைந்த செய்தியும், இம்மாதம் (அதாவது அக்டோபர் மாதம்) பிலிப்பைன் சுதந்தர நாட்டாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள செய்தியும் ஒருவித மகத்தான உத்வேகத்தை அளிக்கக்கூடிய வையாக விருக்கின்றன. கிழக்காசியா முழுவதிலும் வசியும் இந்தியர்கள் சகலரும் இவ்விரண்டு வைபவங்களையும் பிரும் மாண்டமான கூட்டங்கள் கூட்டியும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி யும் விமரிசையாகக் கொண்டாடியதுடன் பர்மிய, பிலிப்பைன் சுதந்தர அரசாங்கங்களுக்குத் தங்களது மனப்பூர்வமான வாழ்த்துறைகளையும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்திய மண்ணிலிருந்து பிரிட்டிஷாரையும் அவர்களது சகாக்களையும் அடித்தொதுக்குவதுமூலம் ஆசியாவின் இறுதி விடுதலையை எற்படுத்தும் பொறுப்பு இப்பொழுது இந்திய மகா ஜனங்களையே சாரும். ஷை இரண்டு நர்டுகளின் சுதந்தரதினக் கொண்டாட்டங்களை நடத்திய இந்தியர்கள் அதே சமயத்தில் இம் மகத்தான பொறுப்பைப்பற்றியும் முன்னிருந்ததைக் காட்டி லும்பன்மடங்கான அளவில் நன்கு உணர்ந்திருக்கின்றனர். தாய் லந்திற்கும், பர்மாவிற்கும் விஜயஞ்செய்திருந்தபோது நான் தாய்லந்தின் பிரதம மந்திரியுடனும் இன்னும் இதர தாய் மந்திரிகளுடனும் பர்மியப் பிரதமமந்திரி டாக்டர் பா மா, இன்னும் இதர பர்மிய மந்திரிகளுடனும் பிரத்யேக முறையில் சந்தித்துப்பேசும் பாக்கியத்தைப் பெற்றது எனது அதிர்ஷ்டமேயாகும். இவ்விரண்டு அரசாங்கங்களிடமிருந்து நான் நமது போராட்டத்திற்கான அனுதாபத்தையும் நல் லெண்ணத்தையும் மட்டுமின்றி ஒவ்வொரு துறையிலும் செய்யக் கூடிய அத்தியாவசியமான உதவியின் வாக்குறுதியையும் பெற் றிருக்கிறேன்.

நடக்க விருக்கும் போராட்டத்திற்கும், போருக்குப் பின்னருள்ள புனருத்தாரண வேலைகளுக்கும் உரிய திட்டங்களையும், தயாரிப்பு நடவடிக்கைகளையும் நாம் செய்துகொண்டு வருகிறோமென்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பிரிட்டிஷ்-அமெரிக்கர்களும் அவர்களுடைய சகாக்களும் நமது நாட்டிலிருந்து துரத்தப்பட்ட பின்னர் நம் பாரத பூமியில் ஏற்பட்டிருக்கும் நிலைமை என்னவாயிருக்குமென்பதை நாம் முன் கூட்டியே அறிந்துக்கொள்ளக் கூடும். ஆகவேதான் நமது தலைமைக் காரியாலத்தில் புனர் நிர்மாண இலாகா ஒன்றை நாம் ஏற்படுத்தியுள்ளோம். இவ்விலாகாவில் யுத்தத்திற்குப் பின்னருள்ள புனருத்தாரணப் பிரச்னைகள் பற்றி கலந்தாலோசிக்கப் படுகின்றன. இந்தியாவினுள் செய்யவிருக்கும் புனர் நிர்மாண வேலைகளுக்கான பயிற்சிகள் ராணுவ நடவடிக்கைகளின் அபிவிருத்தியையொட்டி மக்களுக்கு ஏககாலத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன. சுருங்கக் கூறுமிடத்து, வரவிருக்கும் போராட்டம், இனிமேல் நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய மகத்தான காரியம் ஆகியவைகளுக்குத் தேவையான ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் தயார்செய்துகொண்டே யிருக்கிறோம். எந்த திருஷ்டியால் பார்த்தாலும் நமது போராட்டத்தின் அடுத்த கட்டம் இப்பொழுது சமீபித்து விட்டதென்றே சொல்லவேண்டும். நாம் இச்சமயம் அரசியல், ராணுவத் தன்மையிலான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக விருக்கிறோம்.

ராணுவ நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டமட்டில் கிழக்காசியாவிலுள்ள இந்தியர்கள் அதிலும் குறிப்பாக ஆஸாத் ஹிந்த் பௌஜ் (இந்திய தேசிய ராணுவம்) வீரர்கள், இந்திய எல்லைப்புறத்தைக் கடந்து நமது இறுதி விடுதலைப்போரை நடத்தும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றனர். அந்நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு முன் நாம் ஒரு சில அரசியல் திட்டங்களை வகுத்தாகவேண்டும். உதாரணமாக ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தை (சுதந்தர இந்திய தற்காலிக அரசாங்கம்) ஸ்தாபித்து அவ்வரசாங்கத்தின் தலைமையில் நாம் நமது போராட்டத்தைத் துவங்கவேண்டும். இந்நேரத்தில் இம்மாதிரியான அரசாங்கம் ஸ்தாபிக்கப் படுவதானது உலகமெங்கும் வசிக்கும் இந்தியர்களிடையே ஒருவித உத்வேகத்தையும் விசேஷப் பலனையும் அளிப்பதுடன் தாங்கள் நடத்த விருக்கும் போராட்டத்தில் அவர்களுக்கு மகத்தான

சக்தியையும் வீராவேசத்தையும் கொடுக்கும். உண்மையில், ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்க ஸ்தாபித தினத்தை கிழக் காசியாவிலுள்ள இந்திய மகா ஜனங்கள் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்திய சுதந்தரக் கழகம் கிழக்காசிய இந்தியர்களின் ஒரே பிரதிநிதி சபையாகவும், இந்திய சமூகத்தினரின் முழு நம்பிக்கையைப் பெற்றும் இருக் கிறபடியால், அம்மாதிரியான ஒரு அரசாங்கத்தை ஸ்தா பிக்கத் தகுதிவாய்ந்ததாயிருக்கிறது. இந்திய சுதந்தரக்கழக அமைப்பின்கீழ் எனக்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறபடியால் ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் வேலை யானது எனது கடமையாகும்.

இதுமாதிரியான அரசாங்கம் ஒன்று இந்தியாவினுள் ஸ்தாபிக்கப்பட்டிருந்து, அவ்வரசாங்கம் தனது இறுதி விடு தலைப் போராட்டத்தை ஆரம்பித்திருக்குமாகில் அது ஒரு மகத் தான விஷயமாயிருந்திருக்கும். இந்தியாவினுள் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாலும் நமது மாபெருந் தலைவர் களெல்லாம் காராகிருகத்தில் அடைபட்டுக் கிடப்பதாலும் இந்தியாவின் உட்பாகத்தில் ஒரு தற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபிப்பதென்று எதிர்பார்ப்பது முடியாத காரியமேயாகும். அத்துடன் நமது தாய்நாட்டினுள் இந்தியாவின் விடுதலைப் போர் ஏற்படுத்துவதையோ அல்லது ஆரம்பிப்பதையோ பற்றி எதிர்பார்த்து நிற்பதும் பகற்கனவேயாகும். இந்தப் புனித கைங்கரியத்தை எடுத்து நடத்துவது கிழக்காசிய இந்தியர் களால்தான் முடியும். ஒரு நாட்டின் எல்லைப்புறங்களுக்கப்பால் தற்காலிக அரசாங்கமொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு சரித்திர வாயிலாகப் பல்வேறு உதாரணங்களிருக்கின்றன வென்று நான் இச்சந்தர்ப்பத்தில் சொல்லலாம். நாட்டின் வெளிப்புறங்களி லிருந்து சுதந்தர யுத்தத்தை நடத்துவதற்கும் சரித்திரத்தில் பல சான்றுகள் உள. ஆனால், இந்தியாவின் எல்லைப்புறங்களி லிருந்துகொண்டு அரசியல், ராணுவ ரீதியான ஆரம்ப நடவடிக் கைகள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலுங்கூட வெளி நாட் டில் நடைபெற்றுவரும் சுதந்தர இயக்கமானது, தாய்நாட்டு இயக்கத்தின் நெருங்கிய சம்பந்தத்துடனேயே வேலை செய்து கொண்டுவருகிறதென்பது இன்று சகலருக்குந் தெரியும் ஓர் உண்மையே. வெளியிலிருந்து நாம் செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் இந்தியாவிலுள்ள நம் மக்களிட

மிருந்தும் பிரிட்டனின் கீழுள்ள இந்திய ராணுவத்தினர் பெரும் பாலோரிடமிருந்தும் மகத்தான ஆதரவு கிடைத்துக்கொண்டு தானிருக்கிறது.

இந்தியாவில் வேலை செய்துவரும் தேசபக்தர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்துகொண்டு தாய்நாட்டிற்காகச் சேவை செய்துவரும் இந்திய தேசபக்தர்களுக்குமிடையே நிரந்தரமான தொடர்பு இருந்துகொண்டிருப்பதும் இன்று சகலருக்கும் வெட்டவெளிச்சமாக அறியக் கிடக்கின்றது. நம்முடன் தொடர்பு கொண்டிருக்கும் ஏஜண்டுகளில் சிலரை பிரிட்டிஷ் அதிகாரிகள் அடிக்கடி கைதுசெய்தும், துன்புறுத்தியும், கொன்றும் வருகின்றனர். ஆனல் பிரிட்டிஷாரின் இந்நடவடிக்கைகளால் நமக்கிருக்கும் தொடர்பிற்கு எந்த வழியிலும் பங்கம் எற்பட்டதே கிடையாது. இத்தியாதி உண்மைகளைக் காணுமிடத்து, நாம் நமது ராணுவத்துடன் இந்திய எல்லையைத் தாண்டி நமது தேசியக் கொடியைப் பாரத புண்ணிய பூமியில் பறக்கவிட்டதும் நாட்டினுள் உண்மையான புரட்சி, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவை ஏற்படுத்திவிடும். புரட்சி மிக உக்ரத்துடன் நடைபெறும் என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

நண்பர்களே! இப்பொழுது நாம் செய்துகொண்டிருக்கும் காரியங்கள் யாவும் இறுதிப் போருக்கான தயாரிப்பு வேலைகளைத் தவிர வேறொன்றுமில்லை. நாம் இந்திய எல்லைப்புறத்தைத் தாண்டியவுடன்தான் நமது போராட்டம் ஆரம்பமாகும். அதன் பின் சரித்திர பிரசித்திபெற்ற நமது "டில்லி மார்ச்" தொடங்கி பிரிட்டிஷாரின் கடைசி நபர் துரத்தியடிக்கப்படும்வரையோ அல்லது சிறையில் தள்ளப்படும்வரையோ நடைபெறும். அத்துடன் இந்தியாவின் தேசீய்க்கொடி வைஸ்ராய் மாளிகைமீது பறக்கவிடப்பட்டு ஆஸாத் ஹிந்த் பௌஜ் தன்னுடைய வெற்றி அணிவகுப்பை இந்தியாவின் தலைநகரிலுள்ள பழைய செங்கோட்டையினுள் நடத்தும்வரை இந்த டில்லி மார்ச் நடைபெறும்.

நண்பர்களே! நமக்கு மகத்தான ஆதரவளித்து நம்முடன் மனப்பூர்வமாக ஒத்துழைக்கும் நிப்பொன் அரசாங்கத்திற்கும், நிப்பொன் வாசிகளுக்கும், இம்பீரியல் நிப்பொன் ராணுவத்திற்கும் நமது ஹிருதயபூர்வமான வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது சரித்திரத்தின் நெருக்கடியான சமயத்

தில் இதுவரை நாம் பெற்றிருக்கும் உதவிகளுக்கும் இனிமேல் பெறவிருக்கும் மகத்தான உதவிகளுக்கும் நமது நன்றியறிதலை தகுந்த முறையில் தெரிவிக்கும் நன்னாள் வந்தே தீரும். அதுவும் நம்மை நெருங்கிக் கொண்டுதானிருக்கிறது. நாம் இதுவரை பெற்றுக்கொண்டிருக்கும் ஆழ்ந்த அனுதாபத்திற்கும் மகத்தான உதவிகளுக்கும் கைமாருகச் செய்யக்கூடியது, நாம் அனைவரும் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுவதுதான்! நமக்கு அளிக்கப்பட்டுவரும் அரிய உதவியைப் பாராட்டுவதற்காக நான் இந்திய சுதந்தரக் கழகத்தின் சார்பாக இம்பீரியல் நிப்பொன் படைகளுக்காக ஐந்து விமானங்களைக் கட்டுவதற்குச் செலவாகும் ஒரு தொகையையும், இம்பீரியல் நிப்பொன் கடற்படைக்காக ஐந்து விமானங்களைச் செய்துகொள்ளும் செலவிற்காக ஒரு தொகையையும் நன்கொடையாக அளித்திருக்கின்றேன். இந்தப் போராட்டம் எவ்வளவுதான் நீண்டதாகவும், கடினமாகவுமிருந்தாலும் சரி, நமது பொது எதிரி முற்றிலும் தோற்கடிக்கப்படும்வரை இந்தியர்களாகிய நாம் நிப்பொனியர்களுடன் தோள்கொடுத்து நின்று போரிட உறுதி பூண்டிருக்கிறோம் என்பதை நிப்பொன் அரசாங்கத்திற்கும் நிப்பொன் வாசிகளுக்கும் உறுதிகூற விரும்புகிறேன். நிப்பொனுடையதும் அதன் நேச நாடுகளினுடையதுமான இறுதி வெற்றியிலும் நமது சொந்த தேசிய விடுதலைப் போராட்டத்திலும் நாம் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நண்பர்களே! ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தின் மந்திரிசபை அமைப்புப்பற்றி நான் இன்றைய பிற்பகல் மகாநாட்டின்போது அறிவிப்பேன்.

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 4

அரசாங்க அமைப்புப்பற்றி நேத்தாஜி அறிக்கை

"ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம் (சுதந்தர இந்திய தற்காலிக அரசாங்கம்) ஸ்தாபிக்கப்பட்டதைக்கொண்டு இந்திய சுதந்தர இயக்கமானது வெற்றிக்கு வேண்டிய பூர்வாங்க அம்சங்களனைத்தையும் பெற்றுவிட்டது. இனி சுதந்தரத்திற்கான இறுதிப்போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி" என நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் 21-10-43-ல் விடுத்த அறிக்கையொன்றில் கூறினர்.

அவ்வறிக்கையின் விவரமாவது: "சரித்திரத்தையும், விசேஷமாக உலகின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற புரட்சிகளையும் பற்றி ஆராச்சியுள்ளவனென்ற முறையில் என் மனதில் நான் பொதுவாழ்வில் ஈடுபட்ட 22 வருஷ காலமாகவும் எப்போதும் ஒரு விஷயம் உறுத்திக்கொண்டேயிருந்தது. இந்தியாவுக்கு அதன் சுதந்திரப் போராட்டத்திலுள்ள குறைகள் இரண்டென்பதும், ஒரு தேசிய ராணுவமும், அந்த ராணுவத்தைப் போருக்கு நடத்திச் செல்லக்கூடிய ஒரு தேசிய அரசாங்கமுமே அக்குறைகளென்பதுந்தான் என் மனதை உறுத்திக்கொண்டு வந்தன. தற்போதைய யுத்தத்தில் நிப்பொன் ஆயுதப்படைகள் அடைந்த மகத்தான வெற்றிகள் உதவியால் கிழக்காசியாவிலுள்ள இந்தியர்கள் இந்திய சுதந்தரக் கழகத்தையும் இந்திய தேசிய ராணுவத்தையும் அமைக்க முடிந்தது.

ஒரு தேசிய ராணுவம் ஸ்தாபிக்கப்பட்டதானது, கிழக்காசிய இந்திய சுதந்தர இயக்கத்திற்கு ஒரு உண்மை யெளியும் உறுதியுமளித்தது. இந்த ராணுவம் ஸ்தாபிக்கப்பட்டிராவிடில் கிழக்காசிய இந்திய சுதந்தரக் கழகம் ஒரு சாதாரண பிரசார ஸ்தாபனமாகவே போயிருக்கும். தேசிய ராணுவம் ஸ்தாபிக்கப்பட்டதைக்கொண்டு ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபிப்பது சாத்தியமும் அவசியமுமாயிற்று. இந்திய விடுதலைக்கான இறுதிப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்துவதாக இவ்வரசாங்கமானது இந்திய சுதந்தரக் கழகத்தி

லிருந்து ஜெனித்துள்ளது. இத்தற்காலிக அரசாங்க ஸ்தாபிதத்தைக் கொண்டு நாம் இந்திய நிலைமையின் நெருக்கடிகளைச் சமாளிப்பதோடு சரித்திர தோரணையையும் பின்பற்றுகின்றோம். சமீபகாலச் சரித்திரத்தைக் கவனிப்போம். ஐரிஷ் மக்கள் அவர்களுடைய தற்காலிக அரசாங்கத்தை 1916-ல் ஸ்தாபித்தனர். ஜெக் நாட்டினர்களும் கடந்த உலக யுத்தத்தின்போது இதே மாதிரிச் செய்தனர். கடந்த உலக யுத்தத்திற்குப் பிறகு துருக்கியர்கள் முஸ்தாபா கமாலின் தலைமையின் கீழ் அவர்களுடைய தற்காலிக அரசாங்கத்தை அனடோலியாவில் ஸ்தாபித்தனர். நம்மைப் பொறுத்தவரையில் ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கமானது ஒரு சாதாரண சமாதானகால அரசாங்கத்தைப் போன்றிராது. இதன் அமைப்பும் நடவடிக்கைகளும் ஒரு நிகரற்ற முறையிலிருக்கும். இது ஒரு போர் ஸ்தாபனமாக விளங்கும். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாருக்கும் அவர்களுடைய நேசதேசத்தாருக்கும் எதிராக இறுதி யுத்தத்தை ஆரம்பித்து நடத்துவதே இதன் பிரதான நோக்கம். ஆகவே விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்துவதற்கான இலாகாக்களைமட்டும் இவ்வரசாங்கம் கொண்டிருக்கும்.

இவ்வரசாங்கத்தில் சிவில் இலாகாக்களின் பிரதிநிதிகளாகவும், ஆயுதந்தாங்கிய படைகளின் பிரதிநிதிகளாகவும் சில மந்திரிகள் இருப்பர். சுதந்தரத்திற்காகப் போரிடுவதே அரசாங்கத்தின் நோக்கமாதலால் ஆயுதந்தாங்கிய படைகளுக்கு மந்திரி சபையில் அதிகப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டிருக்கிறது. மந்திரி சபையைச் சேர்ந்த சாதாரண மந்திரிகளைத் தவிர, மந்திரி சபைக்குப் பல ஆலோசனையாளர்களை நியமிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதமாக தற்காலிக அரசாங்கமானது கிழக்காசியாவிலுள்ள இந்திய சமூகத்திரளைவருடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களுடைய சக்தி, சாதனங்களனைத்தையும் அடுத்துவரும் போராட்டத்திற்காகத் திரட்டும். இத்தற்காலிக அரசாங்கம் இந்திய பூமிக்கு மாற்றப்பட்டவுடன் சொந்தப் பிரதேசத்தில் இயங்கும் ஒரு சாதாரண அரசாங்கத்திற்குரிய அம்சங்களைப் பெறும். அதன் பிறகே பல புதிய இலாக்காக்களும் ஆரம்பிக்கப்படும்.

ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைக் கொண்டு இந்திய சுதந்தர இயக்கமானது வெற்றிக்கு

வேண்டிய பூர்வாங்க அம்சங்களனைத்தையும் பெற்றுவிட்டது. இனி விடுதலைக்கான இறுதிப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கியுள்ளது. இந்திய தேசீய ராணுவம் இந்தியாவின் எல்லையைத் தாண்டி டில்லிக்கு அதனுடைய சரித்திர பூர்வமான "மார்ச்" சைத் தொடங்குவதைக் கொண்டு இப்போராட்டமும் ஆரம்பித்துவிடும். அந்த டில்லி "மார்ச்" சானது இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ்—அமெரிக்கர்கள் ஒழிக்கப் பட்டு புதுடில்லியிலுள்ள வைஸ்ராய் மாளிகையில் இந்திய தேசீயக்கொடி பறக்க விடப்பட்டால்தான் நிற்கும்."

இ. சு. க. பிரதிநிதிகளிடம் நேத்தாஜி பிரசங்கம்

கிழக்காசியா அனைத்திலுமிருந்து வந்திருந்த இந்திய சுதந்தரக் கழக ஸ்தாபன பிரதிநிதிகளுக்காக 22-10-1943 அன்று ஷோனன், கோனன் கிளப்பில் நடைபெற்ற விருந்தில் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் நிகழ்த்திய பிரசங்கமாவது:—

நண்பர்களே!

கிழக்காசியாவின் பல பாகங்களிலிருந்தும் நீங்கள் வந்து இன்று இங்கு கூடியிருப்பதைக்காண நான் பெரிதும் பரவச மடைகிறேன். பர்மா ஹிக்காரி கிக்கான் தலைவரான லெ. கர்னல் கித்தாபேயும் இன்று நம் மத்தியிலிருப்பதானது எனக்கு மேலும் அதிக சந்தோஷத்தை அளித்திருக்கிறது. உங்கள் அனைவரையும் நான் ஏற்கனவே சந்தித்துப் பேச இயலாதது பற்றிப் பெரிதும் வருந்துகிறேன். அது என்ன காரணத்தினு லென்பதை நீங்களே அறிவீர்கள். இன்று நான் ஓர் நீண்ட பிரசங்கம் செய்வதாகவோ அல்லது அது மிக அவசியந்தான் என்பதாகவோ நான் கருதவில்லை. ஆனுல் இதுவரை நமக்கு இன்றியமையாதிருந்த ஒன்றை நேற்று நாம் பரிபூர்ணமாக அடைந்து விட்டோமென்பதை மட்டுமே உங்களுக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அது இந்தியாவுக்கு ஓர் புதிய சகாப்தத்தைக் குறிக்கும் சம்பவமாகும். நாட்டின் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டுள்ள எவருக்கும் அது விசேஷமான தொரு சம்பவமாயிருக்குமென்றே நான் கருதுகிறேன். இந்த ஒரு மார்க்கத்தினுல் மட்டும் ஒரு புரட்சி இயக்கம் வெற்றிபெற முடியும். இந்த உண்மையைப் புரட்சி இயக்க அறிவுகொண்ட எவரும் நன்கு உணருவர்.

நேற்று நாம் பூர்த்தி செய்து கொண்ட சம்பவமானது நமக்குப் புதியதோர் பொறுப்பை அளித்திருக்கிறதென அடுத்த படியாக நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன். இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நம்மிடத்துள்ள சகலவற்றையும் நாம் தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. அதை நாம் உண்மையான புரட்சிக்கொள்கைப் பிரகாரம் நோக்குவோமாயின் நமக்கு அவசியமான சகலமும் நம்மிடத்திலிருக்கிறதென்றே கூறவேண்டும். முதலில் நமக்குச் சொந்தமான ஓர் ராணுவம் அவசியமா யிருந்தது. அத்தகைய ராணுவமொன்றை உள் நாட்டில் திரட்டுவது அசாத்தியமாயிற்று. ஆனால் அந்த ராணு வத்தை இப்போது நாம் வெளிநாட்டில் திரட்டி விட்டோம். இரண்டாவதாக, அந்த ராணுவத்தைப் போர்க்களத்திற்கு நடத்திச் செல்லுதற்குப் பொறுப்பு வாய்ந்த ஓர் தலைமை ஸ்தாபனம் இன்றியமையாதிருந்தது. அதுவும் இப்போது தயாராகி விட்டது. கடைசியாக, நமது சுதந்தரப் போராட்டத்தை ஆரம்பிப்பதொன்று தான் பாக்கியுள்ளது.

மேலும் நமது ராணுவத்திற்கு அவசியமான ஒரு சிறிய மந்திரி சபையையும் நாம் ஏற்படுத்திவிட்டோம். அதனால் மந்திரி சபையிலில்லாத மற்றைய இந்தியர்களுக்கு அதில் எந்த பொறுப்பு மில்லையென ஒருபொழுதும் அர்த்த மாகாது. இந்தியாவை மீட்பிக்க விரும்பும் சகல இந்தியர்களுக்கும் அதுவோர் பெரும் பொறுப்பாகவே யிருக்கும். மந்திரி சபையில் இடமிருக்குமாயின் இன்னும் அனேகர் அதில் கட்டாயமாக இடம் பெற்றிருப்பார்கள். எவராயினும் ஒருவர் தனக்கு மந்திரி சபையில் பதவி யளிக்கவில்லை யென்றும் அதனால் இந்திய சுதந்தர இயக்கத்தில் தனது பொறுப்பு மிகக்குறைவானதென்றும் எண்ணி தூரவிலகி நிற்கக்கூடாதென அனைவருக்கும் நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அதே போல் மந்திரி சபை அங்கத்தினர்களும் தாங்கள் பெரிய மனிதர்களாகி விட்டதாக ஒருபொழுதும் கருதிவிடக்கூடாது. அவர்களும் மற்றவர்களைப்போன்று இயக்கத்தில் சமபங்கு எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாகும். நமது இயக்கம் என்னென்ன அபிவிருத்திகளையெல்லாம் இப்பொழுது அடைந்திருக்கிறதோ அவை யாவும் சகல இந்தியர்களினதும் ஏகோபித்த ஒத்துழைப்பினால் ஏற்பட்டதென்றே கூறவேண்டும். அதை இன்று நடத்தி வருபவர்கள் கிழக்காசிய இந்தியர்களும், ஆஸாத் ஹிந்த்

பௌஜு"மெனக் கூறுவது மிகையாகாது. நமது இயக்கத்தில் கிழக்காசியாவிலுள்ள இந்திய மக்கள் சேர்ந்திருக்காவிடில் நாம் இப்போது கண்முன்பாகக் காணும் அபிவிருத்திகளை ஒரு பொழுதும் எதிர்பார்த்திருக்க முடியாது. நேற்று நாம் பூர்த்தி செய்த சம்பவமே நம்முடைய கடைசியான பூர்வாங்க தேவையா யிருந்தது. ஓர் தற்காலிக இந்திய அரசாங்கத்தை ஏற்கனவே நாம் ஸ்தாபித்திருந்தால் அது அர்த்தமற்றதென்பதாகவே ஜனங்கள் நினைத்திருப்பார்கள். ஆனால் நம் எதிரிகள் கூட இப்பொழுது நமது அரசாங்கத்தை மட்டமாக மதிக்க முடியா திருக்கிறது. இது நான் உலக சரித்திர ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மையாகும். ஆண்டவனின் கருணையும் நமக்கு இருக்கிற தெனவே கூறலாம். கடந்த உலக மகா யுத்தத்தின் போதும் இதுபோன்ற ஓர் புரட்சி இயக்கம் தோன்றி வேலை செய்து வந்திருக்கிறது. ஆனால் அதற்குப்போதிய ஆதரவு அக்காலத் திலில்லாததால் அது தன் கடமையைப் பூர்த்திசெய்ய முடியாது போயிற்று. இந்த மகா யுத்தத்திலோ நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். கிழக்காசியாவில் நிப்பொன் போர் தொடுக் காது பிரிட்டனையும் உதைத்து வெளியேற்றியிருக்காவிடில் நமது இயக்கமும் உதயமாயிருக்காதெனவே கூறவேண்டும். நமது விடுதலை லட்சியத்தில் நாம் படிப்படியாக முன்னேறிச் செல்வதைக் காண்பதில் உண்மையில் நான் மெருமகிழ்ச்சி யடைகிறேன். முதலில் இந்திய சுதந்தரக் கழகம் உதயமான பின் இரண்டாவதாக நம் ஆஸாத் ஹிந்த் பௌஜ் உருவெடுக்க லாயிற்று. கடைசியாகத் தற்பொழுது ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கமும் ஏற்பாடாகி விட்டது.

ஒரு புரட்சிக்கு முக்கியமான அம்சங்கள் அனைத்தும் ஏற்பாடாகிவிட்டதால், அடுத்துவரும் இறுதிப் போராட்டத் தையே நாம் இப்பொழுது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போராட்டத்திற்குப் போதுமான சப்ளைகளும், பொருள் வசதிகளும் தேவைப்படுகின்றன. விசேஷமாக நான் நமது இந்திய வியாபாரிகளைக் கேட்டுக்கொள்ளும் ஒரே ஒரு விஷயம் என்னவெனில், இந்தியாவின் பொது லட்சியத்திற்காகப் போர் எவ்வளவு காலத்துக்கு நீடித்துப் போயினும் அவர்கள் தங்களிட முள்ள ஆஸ்தி சகலவற்றையும் கொடுத்துதவப் பூரண சித்தமா யிருக்கவேண்டுமென்பதே யாகும். இத்தியாகத்தில் சகல

இந்தியர்களும் ஜாதி, மத வேறுபாடின்றி ஏகோபித்து ஒத்துழைக்கவேண்டும்.

சில காலத்திற்கு முன்னர் யுத்தகளத்திலுள்ள சிப்பாய்கள் மட்டுமே போர் செய்ய வேண்டியவர்களென ஜனங்கள் கருதினர். ஆனால் அந்த கருத்து இந்த மகா யுத்தத்தில் முற்றிலும் மாறிவிட்டது. உள்நாட்டு நிலைமையைக் கவனிக்கும் பொறுப்பு ஒன்றும் உண்டாயிருக்கிறது. இப்பொறுப்பைப் பெரும்பாலும் போர்முனைக்குப் பின்னால் உள்ளவர்களும், மற்றைய வீட்டு வாசிகளுமே கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். போர் முனைக்கு சப்ளைச் சாமான்கள் அனுப்பிக் கொண்டிருப்பவர்களும் போர்முனைச் சிப்பாய்களாகவே மதிக்கப் படுவார்கள். இவ்விரண்டும் இரு தேசியப் போர்முனைகளாகவே கருதப்படுகின்றன. அவற்றிலுள்ள ஒரேயொரு வித்தியாசமென்னவெனில், சிலர் போர்முனை முன்னணியிலும், சிலர் பின்னணியிலும் நின்று சேவை செய்வது தான். போர்முனைக்குப் பின்னால் நிற்பவர்கள் தங்களது பொறுப்பு மிகக்குறைவானதென்பதாக மட்டும் நினைக்கக் கூடாது. முன்னணி யுத்த வீரர்களைப்போன்று அவர்களும் தங்கள் கடமையைச் சரிவர செய்து வரவேண்டும்.

ஓர் நீண்டகால யுத்தத்தை நாம் செய்யவேண்டியிருப்பதால் நல்ல ராணுவமும், பொருள் வசதியும், போதிய சப்ளை சாமான்களும் நமக்கு வேண்டியதா யிருக்கின்றன. ஆகவே யுத்தம் முடியும் வரை நமது ராணுவத்திற்குத் தேவையான சகலவற்றையும் நாம் வசதிசெய்து கொடுத்தே தீரவேண்டும். அதற்கு போதுமான பொருளும், யுத்த சாமான்களும் தேவைப் படுகின்றன.

நம் நேசதேசமான நிப்பொனுடன் நமது சிநேகப்பான்மையானது எதிர்காலத்தில் மென்மேலும் அதிகரிக்குமென்றே நான் இறுதியாகக் கூறுகிறேன். கிழக்காசியாவில் எந்தெந்தப் பகுதியிலிருந்து கொண்டுதான் நாம் வேலை செய்து வந்தாலும் நிப்பொன் மீது நமது சிநேகத்தையும், அன்பையும் அதிகமாக வளரச்செய்யவேண்டும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் விரைவில் சீர்குலைந்து சிதைந்துபோகுமென நான் உறுதியாகக் கூறுகிறேன்.''

அனுபந்தம் 5

இந்தியர் சர்வத்தியாகம் செய்க

(அகில மலாய் தனவந்தர் மகா நாட்டில் நேத்தாஜி பிரசங்கம்)

ஷோனனில் 25-10-1943 திங்கட்கிழமை யன்று நடைபெற்ற அகில மலாய் இந்திய தனவந்தர்கள் மகாநாட்டில் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் நிகழ்த்திய பிரசங்கம் வருமாறு:—

"நண்பர்களே !

இந்த மகாநாட்டிற்கு மலாயின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்து சேர்ந்திருக்கும் நமது சகோதர, சகோதரிகளை நான் முதலில் மனமார வரவேற்கின்றேன். பிரசித்தி பெற்றதும், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததுமாக விளங்குமென்று நான் நம்பிக்கையுடன் எண்ணிக்கொண்டிருக்கும் இம் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக நீங்கள் இங்கு வந்துசேர்ந்திருக்கிறீர்கள். நமது மகத்தான லட்சியத்தின்மீது விசுவாசமுள்ளவர்களாக விருப்பதாக நாம் போதிய அளவு பிரதிக்ஞை கொண்டிருக்கிறோம். அவ்விசுவாசத்தை பரிசோதிப்பதற்காகவே இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. நீண்டதோர் பிரசங்கம் செய்யவேண்டுமென நான் தீர்மானிக்கவில்லை. ஏனெனில் நீண்ட பிரசங்கங்களெல்லாம் பிரயோஜனமற்றவைகளாகும். இந்தியாவை விடுதலைசெய்யும் பொறுப்பு உங்கள்மீது இருக்குமாகில் உங்களில் ஒவ்வொருவரும் என்ன செய்வீர்களென்பதை உணரும்படி நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். இந்தியாவை விடுவிக்கும் பொறுப்பு கிழக்காசிய இந்தியர்கள் அனைவரையும் பொருத்ததாகும். ஆகவே உங்களைச் சார்ந்திருக்கும் இம்மகத்தான பொறுப்பை நீங்கள் உணருவீர்களென்று நான் நம்புகிறேன்.

போர்க்களத்திற்கு ஒரு ராணுவம் செல்கின்றது; அப்பொழுது போரிடும் பொறுப்பும் போரில் வெற்றிபெறும் பொறுப்பும் அந்த ராணுவத்திலுள்ள ஒவ்வொரு சேனி

ஜரையும் பொருத்ததாகும்; அவர் ஒரு உத்யோகஸ்தராயினும் சரி, கமிஷன் பெருத உத்யோகஸ்தராயினும் சரி அல்லது ஒரு சாதாரண சோல்ஜராயினும் சரி, பொறுப்பு எல்லாருடையதேயாகும். அவரவர் கடமையை வழுவாது செய்யத் தயாராயிருக்கும் சோல்ஜர்களைக்கொண்ட ராணுவமே வெற்றியடையும். கிழக்காசியாவிலுள்ள இன்றைய இந்தியர்கள் அனைவரும் போரிட்டு வெற்றிபெறும் ஒரு ராணுவமாக மாறிவிட்டனர் என்பதை நீங்கள் நன்கு உணரவேண்டும். போர்முனையிலுள்ள ஒவ்வொரு சோல்ஜருக்கும் எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அதைப்போன்று கிழக்காசியாவிலுள்ள இந்தியர் ஒவ்வொருவர் மீதும் இன்று மகத்தான பொறுப்பு விழுந்திருக்கிறது. உங்களில் சிலர் பணக்காரர்களாகவும், சிலர் ஏழைகளாகவுமிருப்பதை நான் அறிவேன். உங்களில் சிலர் கல்வியறிவுள்ளவர்களாகவும், சிலர் படிப்பில்லாதவர்களாயுமிருப்பதும் எனக்குத் தெரியும். உங்களிடையே எவ்வளவுதான் வேற்றுமைகள் காணப்பட்டாலும் உங்களுடைய கடமை சம்பந்தப்பட்டமட்டில் நீங்கள் அனைவரும் சரிசமமானவர்களென்பதை நீங்கள் மனதிலிறுத்திக்கொள்ளுமாறு நான் கோருகிறேன். நீங்கள் இதை நன்கு உணரவேண்டும்; கிழக்காசியாவிலுள்ள ஒவ்வொரு இந்தியரும் அவரவர் கடமையைச் செய்யவேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். ராணுவத்தில் ஒருவர் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டால் அவருடைய கடமைதான் முன்னேக்கிச் சென்று மற்றோரையும் முன்னேக்கி நடத்திச் செல்லவேண்டியதாகும்.

நமது போராட்டத்திற்குக் கிழக்காசியாவில் ஷோனன் முக்யத்துவம் வாய்ந்த ஸ்தலமாக விளங்கிவருகிறது. கிழக்காசிய இந்திய சுதந்தர இயக்கத்தின் தலைமைக்காரியாலயம் இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இந்திய தேசீய ராணுவத்தின் தலைமைக் காரியாலயமும் இங்குதானிருக்கிறது. ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கங்கூட சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும் இவ்விடத்தில்தான். ஷோனன் ஒரு காலத்தில் பிரிட்டனின் கோட்டையாகவிருந்தது; ஆனால் இன்றோ இந்நகர் கிழக்காசியா இந்திய சுதந்தரக் கழகத்தின் தலைமைக் காரியாலயமாக மாறியிருக்கிறது. ஒரு தளபதிக்கும் அவருடைய ரெஜிமெண்டைச் சேர்ந்த துருப்புகளுக்கும் எவ்வளவு பந்தம் ஏற்படுகிறதோ அதே போன்றுதான் ஷோனனும் கிழக்காசியா

வின் இதர ஸ்தலங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. ஒரு போரில் கிடைக்கும் வெற்றியானது, ஒவ்வொரு சோல்ஜரின் கடமையை மாத்திரம் சார்ந்ததல்லாது அந்த ராணுவத்தின் பிரதம சேனாதிபதி எடுத்து நடத்தும் சரியான வழி முறைகளை யும், அவர் எடுத்துக்காட்டும் உதாரணச் செய்கைகளையும் பொருத்ததாயிருக்கிறது. ஆகவே ஷோனனிலிருந்து வெளி வரும் சங்கநாதம் எல்லாம் கிழக்காசியாவெங்கும் எதிரொலி செய்யுமென்பதை நீங்கள் உணருவீர்கள். அத்துடன் இங்கு நீங்கள் எடுத்துக்கொள்ளும் எந்த நடவடிக்கையும் கிழக்காசியா வெங்கும் போதிய வேலைகளைச் செய்துவரும். கிழக்காசியா வின் பல்வேறு பாகங்களிலும் வசியும் இந்தியர்கள் பெற விருக் கும் மகத்தான பங்கானது, ஷோனனிலிருந்து நீங்கள் முன்னு தாரணமாக எடுத்துக்காட்டும் செய்கையையே பொருத்ததாக விருக்கும். நீங்கள் அனைவரும் முன் நடத்திச்செல்ல வேண்டி யிருப்பதாலும், கிழக்காசியாவின் இதர பாகங்களில் வசியும் இந்தியர்களுக்கு நீங்கள் உத்வேக உணர்ச்சியை ஊட்ட வேண்டியிருப்பதாலும் உங்களுடைய பொறுப்பே மகத்தான தாகுமென்பதை நீங்கள் அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

அன்னியர்களின் படையெடுப்பைப் போன்றதொரு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும்பொழுது ஒரு சுதந்தர இந்திய அரசாங்கம் என்னச் செய்திருக்குமென்பதை நீங்களே நினைத்துக் கருத்தூன்றிப் பார்க்க வேண்டுமென நான் விரும்பு கிறேன்.

இந்தியா ஒரு சுதந்தர நாடாக விருக்கிறதென்றும் அன் னிய எதிரித் தாக்கு நடைபெறலாமென்ற அபாயம் ஏற்படுகிற தென்றும் வைத்துக்கொள்வோம். அப்பொழுது சுதந்தர இந்திய அரசாங்கம் என்ன செய்யும்? அச்சமயத்தில் அவ்வரசாங்கம் சர்வாம்சப் படை திரட்டலை ஆரம்பித்திருக்காதா? இதுவே எந்தவொரு சுதந்தர அரசாங்கத்தின் இயல்பான கடமையாகு மென்பதை நீங்கள் எளிதில் அறிந்துகொள்ளக் கூடும். இதை மனதிற்கொண்டு நமது சுதந்தரத்தை அடைந்து அதை நிர் வகிக்கும் மகத்தான முயற்சியில் நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை நன்கு உணருவீர் என நம்புகிறேன்.

ஒரு சுதந்தர நாடானது யுத்த நெருக்கடிக்குள்ளாயிருக்கும் பொழுது அங்குள்ள நிலைமை எவ்வாறிருக்குமென்பதைப் பற்றி

யும் சற்று யோசித்துப் பாருங்கள். இதுகாறும் நம்மிடையே நடைபெற்றவைகளைப்போல் கூட்டங்களும் வேண்டுகோளுமிருக்குமா? இல்லை. ஒரு சுதந்தர அரசாங்கம் தன் கீழுள்ள வயது வந்த திடகாத்திர முள்ளவர்களுக்கு ஒரே ஒரு அறிக்கைதான் விடுக்கும். அவ்வறிக்கையின் பிரகாரம் திடகாத்திரமுள்ளவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு ஸ்தலத்திற்கு ஒரு கிழமையன்று குறிப்பிட்டதோர் நேரத்தில் கூடியிருப்பர். தானுகவும் முணுமுணுக்காமலும் மக்கள் தங்கள் அரசாங்கத்தின் சங்கேதத்திற்கு உடனடியாகப் பதிலளிப்பர். ஏன்? தங்களுடைய உரிமைக்காகத் தாங்கள் தியாகம் செய்யத்தான் வேண்டுமென்பதை சுதந்தர நாட்டுமக்கள் நன்கு தெரிந்துகொண்டிருப்பதால் தான் அவர்கள் அவ்விதம் செய்கின்றனர்.

ஒரு சுதந்தர அரசாங்கம் தனது சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்காகப் பணம் தேவைப்பட்டால் கூட்டங்கள் கூட்டிக் கெஞ்சிக் கூத்தாடும் நடவடிக்கை யெதையும் எடுத்துக்கொள்ளாது. அதற்குமாருக சுதந்தர அரசாங்கங்கள் தங்களின் யுத்த தேவைகளுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்; மக்களின் பொருளாதார நிலைமையை மனத்திற்கொண்டு பணத்தை எவ்விதம் சேகரிக்கலாமென்ற வழிவகைகளைச் செய்யும்; அத்யாவசியமான வரிகளை உடனடியாக விதிக்கும். ஒரு சுதந்தர நாட்டில் சோல்ஜராகச் சேருவதற்கோ அல்லது யுத்த வரி செலுத்துவதற்கோ எவராவது மறக்க முடியுமாவென்பதை நான் உங்களிடம் கேட்கிறேன். இந்தியா இன்னும் சுதந்தரமடையவில்லை. ஆனல் நாம் உள்ளும் புறமும் விடுதலையடைந்துவிட்டோம். அத்துடன் தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைக் கொண்டு நாம் சுதந்தர மக்களாய் மாறிவிட்டோம். இந்தியாவை விடுவித்து அங்கு சுதந்தர இந்திய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே இப்பொழுது நமது பொறுப்பாகும். சுதந்தரம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களென்று நாம் உணர்ந்தோமாகில், சுதந்தரம் வேண்டுமென்று நாம் மனப்பூர்வமாக விரும்பினேமாகில் நாம் அதை உடனடியாகப் பெறுவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். நமது நாடு சுதந்தரமடைந்திருக்கும்பொழுதும் அப்பொழுது நம் நாட்டிற்கு அபாயம் ஏற்பட்டபொழுதும் நாம் எவ்விதம் நடந்துகொள்வோமோ அதைப்போன்றே நாம் இப்பொழுதும் செய்து தீரவேண்டும்.

சுதந்தர இந்திய அரசாங்கம் விடுக்கும் அறிக்கைக்கு நாம் சுதந்தர இந்தியாவில் என்னென்ன செய்வோமோ அவை யாவற்றையும் உடனடியாகச் செய்து முடிப்பதே நமது புனிதக் கைங்கரியமாயிருக்கின்றது. ஜெர்மனி, நிப்பொன் ஆகிய நாட்டு மக்களைப் பாருங்கள்! அந்நாட்டு மக்களின் சகல சாதனங்களும் அரசாங்கத்தாரால் எவ்விதம் திரட்டப்படுகின்றன! தனது சொந்த சுதந்தரத்தை காப்பாற்றுவது அந்நாட்டு அரசாங்கத்தின் கட்மையாக இருக்கும்பொழுது அவ்வேலையை எவ்விதத்திலேயாயினும் செய்தேதான் தீரும். தங்களுடைய நாட்டில் கிடைக்கும் சாதனங்கள் அனைத்தையும் அவைகள் பொது நிதியாகத் திரட்டத்தான் செய்யும். சட்ட பூர்வமாக பேசுவோமாகில் ஒரு தேசம் யுத்த நிலைமையிலிருக்கும்பொழுது பொது மக்களுக்கென்று பிரத்தியேகமாக சொத்துக்களொன்றுமிருக்காது. அம்மாதிரியான நெருக்கடி நேரங்களில் அந்நாட்டு மக்களும் அம்மக்களின் சொத்து சுகங்களும் அரசாங்கத்தைச் சேருவதற்கு பூரண உரிமையுண்டு. நமக்கு ஒரு சுதந்தர அரசாங்கம் இருப்பதையொட்டி நாமும் கூட சுதந்தர மக்கள்தான். உங்களுடைய சொத்துக்களும் பணமும் உங்களுக்குத்தான் சொந்தமென்று நீங்கள் நினைப்பீர்களானால் அது தவறான எண்ணமேயாகும். நாடு யுத்த நிலைமையிலிருக்கும்பொழுது ஒவ்வொருவருடைய சொத்துக்களும் அரசாங்கத்தையே சாரும். உங்களுடைய சொத்து சுகங்களும் இப்போது உங்களுக்குச் சொந்தமாகா; அவை யாவும் இந்தியவைத்தான் சேரும்; அதுவும் இந்தியா ஒன்றுக்குத்தான் சொந்தமானதாகும்.

எந்த வழியிலாயினும், எவ்விதத்திலாயினும் நாம் நமது சுதந்தரத்தை அடைந்தே தீரவேண்டுமென்பதும், நாம் இப்பொழுது ஒரு சுதந்தர யுத்த அரசாங்கப் பிரைஜைகளாக விருக்கிறோம் என்பதுமான உண்மையை நீங்கள் உணருவீர்களாகில், உங்களுக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை யென்று மனமார உணர்ந்து கொள்வீர்களென எனக்குப் பரிபூர்ண நம்பிக்கை இருக்கின்றது. இந்த சுலபமான உண்மையை உணர்ந்து கொள்ள உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் அதெற்கென்று மற்றொரு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. ஷை உண்மையை நீங்கள் விரும்பா விட்டால் ஒரு சுதந்தர அரசாங்கத்தின் கீழ் ஒரு சுதந்தர இயக்கப் பிரஜையாகவிருந்து கடமைகளைச் செய்ய

இஷ்டப் படாவிட்டால், சுதந்தரம் வேண்டாமென்று நீங்கள் விரும்பினால், சுதந்தரத்திற்கான விலையைக் கொடுக்க நீங்கள் தயாராயிருக்க விரும்பாவிடில், உங்கள் முன்பு ஒரே ஒரு வழிதா னிருக்கிறது. ஆங்கிலேயரால் கையாளப்பட்டு வந்த பாதை தான் அது! ஒரு காலத்தில் அவர்கள் இங்கு அரசாளுபவர் களாக வாழ்ந்து வந்தனர். ஆனால் அவர்களுக்கு இன்று ஒரே ஒரு ஸ்தலந்தானிருக்கிறது; அதுதான் காராக்கிருகம். உங் களுக்கும் அந்த ஸ்தலம் வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அச்சிறைகளுக்கு நீங்கள் செல்லலாம்; போய் அங்குள்ள ஆங்கிலேயர்களுடன் சிநேகிதர்களாக வாழலாம். ஆனால் இதை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்: யுத் தம் முடிவுற்று இந்தியாவும் சுதந்தர மடையும்பொழுது உங் களுக்கு சுதந்தர இந்தியாவில் இடமில்லை.

இந்திய அரசாங்கம் உங்கள்மீது கருணை புரிந்து இரக்கம் காட்டுமாகில், சுதந்தர இந்திய அரசாங்கம் காட்டக்கூடிய உயர் தர இரக்கமானது இந்தியாவின் புனித பூமியிலிருந்து வெளி யேற்றி உங்களை இங்கிலாந்திற்கு மூன்றும் வகுப்பு டிக்கட்டு களுடன் அனுப்பி வைப்பதாகும். மலாய் நாட்டில் வாழும் சில பணக்கார இந்தியர்களை நான் தொந்தரவு செய்துகொண்டிருக் கிறேன் என்று அவர்கள் முணுமுணுப்பதாக எனக்குத் தெரியவருகிறது. இனிமேல் இவர்கள் உடனடியான வழியைப் பின்பற்றும் பொருட்டு நான் அவர்களுடன் நேர்முகமாக நின்று பேச விரும்புகிறேன். இந்திய சுதந்தர லட்சியத்திற்காக நன் கொடை வழங்குவதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தங்களுடைய இனத்தையே மாற்றிக்கொண்டு விடலாமென சில பணக்கார இந்தியர்கள் ஆலோசித்து வருவதாகவும் நான் கேள்விப்பட்டேன். சிலர் தங்களுடைய சொத்துக்களை எதிரி சொத்துக்களின் பாதுகாப்பாளர் இலாகாவிடம் ஒப்புவித்து விட்டு யுத்தம் முடிவடைந்ததும் அவைகளைத் திரும்பப் பெற்று விடலாமென்று பலமாக யோசனைசெய்து வருகின்றனரென்றும் எனக்குத் தெரிகிறது. மற்றொரு விஷயமும் நான் கேள்விப் பட்டேன். சிலர் பணம் கொடுப்பதாக—அதாவது ஒரு கோடி ரூபாய்கள்வரை கொடுப்பதாக தந்திரமாய். வாக்களிப்பது, பின்னர் நாம் பர்மாவிற்குப்போய் பிறகு இந்தியாவிற்குள் நுழை யும்வரை வாக்களித்த பணத்தை சிறு சிறு தவணையுடன் கொடுப்பதுபோல் பாசாங்குசெய்து இறுதியில அதைத்

தட்டிக்கழித்துவிடுவது ; இவ்விதமாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர். நாம் ஷோனனில் இருந்தாலும் சரி, பர்மாவிலிருந்தாலும் சரி, அல்லது இந்தியாவிலேதான் இருந்தாலும் சரி நமது ஸ்தாபனம் இங்கு தங்கியே தானிருக்கும். ஏனெனில் இந்தியா பரிபூர்ண சுதந்தரமடையும் வரையும் இந்தியாவிலிருந்து இறுதி ஆங்கிலேயர் துரத்தப்படும் வரையும் இதற்கான வேலைகளை நடத்துவதற்கு ஸ்தாபனம் இங்கு இருந்து தானுக வேண்டும்.

ஒவ்வொரு இந்தியரும்—அவர் ஹிந்துவானுலும் சரி, சீக்கியரானுலும் சரி, அல்லது முஸ்லிம், கிறிஸ்துவராயினும் சரி—அவரவர் கட்மையை தவருது செய்ய வேண்டுமென்பதையே நான் அவர்களைக் கேட்டுக் கொள்வதாகும். யார் யார் தனது கடமையைச் செய்து வருகிருர்கள், யார் யார் அதைத் கட்டிக் கழிக்கின்றனர் என்பதை நான் அறிவேன். நான் வருவதற்கு முன்னர் தாங்கள் வெகு குஷியாகக் காலந் தள்ளிவந்ததாக நினைத்த மக்கள் ஷோனனில் வசித்துவருவதையும் நான் நன்கறிவேன். நீங்கள் என்ன நினைத்தாலும் சரி அதைப்பற்றி எனக்குச் சிறிதும் அக்கரையில்லை. ஏனெனில் நான் உங்களைப் பணம் வேண்டுமென்று கேட்பது என்னுடைய சொந்த உபயோகத்திற்கல்ல. இந்தியாவை நான் விடுவிக்க வேண்டியவனுயிருப்பதால் எந்த வழியினுலும், எவ்விதத்திஞலும் இந்தியாவை நான் சுதந்தர மடையச் செய்தே தீருவேன். உங்களுக்கு இஷ்டப்பட்டாலும் சரி, அல்லது இஷ்டமில்லாவிட்டாலும் சரி அந்தப் பொறுப்பை நீங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை நீங்கள் உணருமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை ஏற்றுக்கொள்ள உங்களுக்கு இஷ்ட மில்லையானல் அதைப் பகிரங்கமாக 'எங்களுக்கு சுதந்தரம் வேண்டாம்' என்று சொல்லிவிடுங்கள். உங்களுக்குத் தகுதியான பாதை உங்கள் எதிரேதானிருக்கிறது. நீங்கள் இந்தியர்களாயிருக்கும் வரையில், இந்தியர்கள் என்று சொல்லிக்கொண்டு கிழக்காசியாவில் பணம் திரட்டிக்கொண்டிருக்கும் வரையில், சுதந்தர இந்தியர்கள் என்ற ஹோதாவில் உங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் கடமைகளை நீங்கள் ஒருக்காலும் தட்டிக்கழிக்க முடியாது.

உங்கள் கடமையைச் செய்து முடிப்பதோ அல்லது செய்யாதிருப்பதோ உங்களுடைய இஷ்டந்தானென்று நீங்கள் நினைக்க

வேண்டாம். இதுவே எனது கடைசி வேண்டுகோளென்று ஷேர்னனில் நான் இறுதியாக நிகழ்த்திய பிரசங்கத்தின் போது ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மற்றொரு முறை வேண்டு கோள் விடுப்பதற்காக நான் இன்று இங்கு வந்திருக்கவில்லை. நான் கைகளிரண்டையும் விரித்துக்காட்டிக் கொண்டு உங்க ளிடம் பிச்சை கேட்க வேண்டுமென்ற மனதுடன் இங்கு வர வில்லை. உங்களின் உயிர்களையும் உங்களுக்குச் சொந்தமாயிருக் கும் சகலவற்றையும் எடுத்துக்கொள்ளும் உரிமையையுடைய ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தின் பிரதிநிதியாக நான் இன்று இங்கு நிற்கிறேன்.

நண்பர்களே !

நீண்ட நேரம் பேசியோ அல்லது பயனற்ற பயமுறுத்து தலைக்காட்டியோ செய்யும் வழக்க முடையவன் நானல்லவென் பதை உங்களுக்கு உறுதியுடன் கூறுகிறேன். பரிபூரணமாக ஆலோசித்த பின்னர்தான் நான் எப்போதும் பேசுவது; அத் துடன் நான் எதைக் குறித்துச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேனே அதையேதான் சொல்வது. எனக்குத் தெரியாததைப்பற்றி நான் சொல்வது மிகவும் அரிதென்பதை எனது எதிரிகள் கூட அறிவர். சகல துறைகளின் மூலமாகவும் எந்த விதத்திலாயினும் இந்தியாவின் சுதந்தரத்தை அடைந்தே தீர வேண்டுமென்றும், கூடுமாகில் வாலண்டியர்களாகச் சர்வாம் சப் படைதிரட்டுவது, இன்னும் அவசியமேற் பட்டால் கட்டாயத்தின் பேரில் படைதிரட்டுவதென்றும் நான் சொல்லி விட்டேன். நான் அறிவித்தது எதைக் குறித்ததென்பதை உங்களுக்கு மீண்டுமொரு முறை சொல்லுகிறேன். வேறெந்த தப்பான எண்ணமும் இல்லாமலிருக்கும் பொருட்டும் வாலண்டியர்களாக முன்வருவதற்கு உங்களுக்குப் பூரண சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை யென்று நீங்கள் பின்னர் சொல்லாமலிருக்கும் பொருட்டுமே நான் விஸ்தாரமாகப் பேசு கிறேன். நீங்கள் தானகவே முன்வந்தீர்களாகில் அது உங்களு டைய யோக்கியதையைக் காப்பாற்றுவதுடன் எனக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தரும். ஆனல் நீங்கள் அவ்விதம் முன்வராவிடில் பின்னர் அது விஷயத்தில் நாங்கள் ஒருக்காலும் அடிமைகள் போன்றிருக்க மாட்டோம்.

கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு பல ஆண்டுகளாகுமென்றும் பின்னர் தங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டிருக்கும் ஒரு சில மக்களிருப்பதைக் கேட்பதில் எனக்கு உண்மையில் அதிக ஆச்சரியமாகவே இருக்கிறது. இது விஷயத்தில் அவர்கள் தியாகம் செய்ய மறுப்பார்களாகில் சுதந்திர இந்திய அரசாங்கத்தின் கீழுள்ள சுதந்தர இந்தியாவில் அவர்களுக்கு என்ன நேரிடலாமென்பதைப்பற்றி சற்று யோசித்துப் பாருங்கள். நிச்சயமாக அவர்கள் எதிரிகளென்று கருதப்பட்டு எதிரிகளை நடத்துவதுபோல் நடத்தப்படுவர். நீங்கள் ஒரு நண்பராகவோ அல்லது ஓர் எதிரியாகவோ தானிருக்கமுடியும். பிரிட்டிஷாருக்கு உதவி புரியும் ஒவ்வொருவரும், நமது லக்ஷியத்திற்கு உதவி புரிய மறுக்கும் ஒவ்வொருவரும் நமது எதிரியேயாவர். ஏனெனில் நாம் இன்று இருப்பதா அல்லது இறப்பதா என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்திருக்கும் வாலண்டியர்களையும் அவர்கள் இப்போது பெற்றுவரும் அத்யாவசியப் பயிற்சியையும் பாருங்கள்! சுதந்தர இந்தியாவைக் காண அவர்களில் எத்தனை பேர்கள் உயிருடனிருப்பார்களென்று அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அவர்கள் தங்களிடமுள்ள இறுதிச் சொட்டு ரத்தம் இருக்கும்வரை போரிடுவதென்ற ஒரே எண்ணத்துடன் தான் தயாராகிவருகின்றனர். ஒன்று, சுதந்தர இந்தியாவிற்குச் செல்வது, அல்லது போகும் வழியில் இறப்பது என்ற நோக்கத்துடன் அவர்கள் தங்களைத் தயாரித்துக் கொண்டு வருகின்றனர். பின்வாங்குவதென்ற பயிற்சியே அவர்களுக்குக் கிடையாது.

அவ்விதம் பின்வாங்கி ஓடும் பயிற்சி வேவலுக்கும், அவருடைய ராணுவத்திற்கும் மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கட்டும்! பின்வாங்கி ஓடுவதில் நிபுணன் என்ற மகத்தான பெயருடன்தான் வேவலின் பெயர் சரித்திரத்தில் இடம்பெறும். அவர் பின்வாங்கி ஓடியோடித் தனது சொந்த உயிரைக் காப்பாற்றிக்கொள்வதில் முதல் ஸ்தானம் பெற்று விட்டதால் அவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் பட்டங்களையும், பதவிகளையும் அளித்திருப்பதோடு, அவரை இப்போது வைஸ்ராயர்கவும் நியமித்திருக்கிறது. பின்வாங்கி ஓடுவதின் மூலம் தனது உயிரைக் காப்

பாற்றிக்கொள்ளும் திட்டம் இந்திய தேசிய ரராணுவத்தினிடம் கிடையவே கிடையாது.

வெற்றியை நோக்கி முன்னேறுவதில் அல்லது தன்னுடைய இறுதிச் சொட்டு ரத்தமிருக்கும் வரை போரிடுவதில் தான் இந்திய தேசிய ராணுவம் பயிற்சி பெற்றிருக்கும்போது, பணக்காரர்கள் என்னைப்பார்த்து 'சர்வாம்சப் படைதிரட்டென்பது 10 சத விகிதமா அல்லது 5 சத விகிதமா' வென்று கேட்கின்றனர் !

நமது போர்வீரர்களை 10 சத விகிதம் போரிடுவதுடன், 10 சத விகிதம் ரத்தத்தை மட்டும் சிந்தி விட்டு மீதியை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள முடியுமாவென விகிதாச்சாரத்தைப்பற்றி பேசுபவர்களை நான் கேட்க விரும்புகின்றேன்.

சோல்ஜர்களாகச் சேர்ந்திருக்கும் நமது இளைஞர்களிடத்திலும் இப்பொழுது ஒன்றுசேர்ந்து நிற்கும் நமது சகோதரிகளிடத்திலும் கரைபுரண்டோடும் உத்வேக உணர்ச்சியை நீங்கள் உங்களுடைய கண்முன் பார்க்கக்கூடும். அதிர்ஷ்டவசமாக நமக்கு ஆள் பலம் அதிகமாகத்தானிருக்கிறது. ஒரு நீண்ட கால யுத்தத்திற்குக் கூடத் தயாராயிருக்கும்படியான நிலைமையில் நம்மிடமுள்ள ஏராளமான வாலண்டியர்களை நிர்வகிப்பது மகத்தான பொறுப்பாகும். நாம் விரும்பி நிற்பது பணமும், சாதனங்களுமேதான். நாம் அனைவரும் ஏழைகளாக விருப்போமாகில் பின்னர் நாம் வெளிநாட்டு உதவியை நாடுவதில் நியாயமிருக்கிறது. ஆனால் நம்மிடையே பணக்காரர்கள் வாழ்ந்து வருகின்றனர்; இதை நமது வெளிநாட்டு நண்பர்களும் அறிந்திருக்கின்றனர். நம்முடைய சொந்த மக்களிடத்தில் அபரிமிதமான சாதனங்களிருக்கும்பொழுது நாம் அயலாரின் உதவியைக் கோரி கை நீட்டிக்கொண்டு நிற்பது நமக்கு அவமானத்தையும், வெட்கத்தையுமே அளிக்கும்.

நமது சகோதர, சகோதரிகள் தங்களுடைய உயிர்களையே அர்ப்பணஞ்செய்ய முன்வந்துகொண்டிருக்கும்பொழுது, தங்களுடைய உயிர்களைத் தியாகஞ்செய்ய விரும்பாதவர்கள் தங்களது சொத்துக்களை விட்டுப்பிரிய ஏன் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை. பணம் என்பது என்ன? உயிருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பணம்

என்பதற்கு மதிப்பே கிடையாது. உதாரணமாக, ஒரு வெளி நாட்டு அரசாங்கம் உங்களைப் பார்த்து நீங்கள் வைத்திருக்கும் பணத்தையாவது அல்லது உயிரையாவது கொடுக்க வேண்டு மென்று கேட்டால் நீங்கள் உங்களுடைய உயிரைக் கொடுக்க விரும்பாது, உங்களுடைய பணத்தையேதான் கொடுக்க முற்படு வீர்கள். இது நிச்சயம்.

இளைஞர்கள் தங்களுடைய உயிர்களைத் தியாகஞ்செய்ய முன் வருவதைப் போன்று ஏழை வகுப்பினரும் தங்களிடமுள்ள சகல வற்றையும் தானகவும், உற்சாக உணர்ச்சியோடும் அர்ப்பணஞ் செய்ய முன்வருகின்றனர். காவலாளிகள், சலவைத் தொழி லாளர்கள், மருத்துவர்கள், ஒட்டுக்கடை யாளர்கள், யாதவர்கள் (குவாலர்கள்), இவர்களைப் போன்ற எளியவர்கள் தங்களிட மிருக்கும் சகலவற்றையும் தியாகஞ்செய்ய முன்வருகின்றனர். அத்துடன் அவர்களில் சிலர் வாலண்டியர்களாகவும் சேருவதற் குத் தங்களைத் தியாகஞ் செய்து கொண்டிருக்கின்றனர். நான் உபயோகித்துவரும் 'சர்வாம்சப் படை திரட்டு' என்ற வார்த் தைக்கு என்ன அர்த்தமென்று சில நண்பர்கள் என்னைக்கேட் கின்றனர். 'சர்வாம்சப் படைதிரட்டு' என்ற வார்த்தையின் பொருள், தங்களுடைய சொத்து சுகங்களையும், உயிரையுங் கூடத் தியாகஞ்செய்ய முற்பட்டிருக்கும் இந்த மனிதர்கள் செய்துகாட்டும் முன்னுதாரணமே யாகும்.

இந்த ஏழை மக்களில் சிலர் தங்களுடைய பணம் எல்லா வற்றையும் என்னிடம் கொண்டுவந்து கொடுத்ததுமல்லாது அவர்கள் தற்சமயம்வரை சேமித்து வைத்திருக்கும் சேவிங்ஸ் பாங்க் பணம் அனைத்தையும் கொடுப்பதற்காகத் தங்களது தபாலாபீஸ் பாஸ் புத்தகங்களையும் என்னிடம் கொடுத்து வருகின்றனர். இந்தியாவின் சுதந்தர லக்ஷியத்திற்காக "இதோ என்னுடைய பாங்க் பாஸ் புத்தகம்" என்று அதே உற்சாகத் துடன் முன்வரும் பணக்கார இந்தியர் ஒருவர்கூட இம் மலாய் நாட்டில் இல்லையா?

தன்னலத்தியாகம் என்ற லக்ஷியத்தில் இந்தியர் அனைவருக் கும் நம்பிக்கையுண்டு. ஹிந்துக்களிடையே சந்நியாசிகள் என்ற சம்பிரதாயம் இருந்துவருகிறது. முஸ்லிம்களில் பக்கிரிகள் இருக்கின்றனர். நம்பிக்கை, நியாயம், சத்தியம் இவைகளை நிலை நிறுத்துவதற்காக தங்களைப் பக்கிரிகளாக மாற்றிக் கொண்

டுள்ள பல அரசர்களைப்பற்றி நமது சரித்திரத்தில் பல்வேறு சான்றுகள் உள. 38 கோடி மக்களின் ஆன்மாக்களை விடுதலை செய்வதைக் காட்டிலும் வேறு ஏதாவது ஓர் மகத்தான லக்ஷியம், ஒரு உன்னத லக்ஷியம், ஒரு புனித லக்ஷியம், இருக்க முடியுமா? இம்மாதிரியான மகத்தானதோர் லக்ஷியத்திற்காக 'இதோ இருக்கிறது எனது பாங்க் புஸ்தகம்' என்று அளிக்க முன்வரும் பணக்காரர் ஒருவர்கூட இல்லையா? உங்களுடைய உயிர்களை அர்ப்பணம் செய்வது மூலம் நீங்கள் சுயத்தியாகம் புரியவில்லை யென்றால் "எங்களுடைய உயிர்களை மாத்திரம் கேட்கவேண்டாம்; ஆனால் எங்களிடமுள்ள மற்ற எதையும் நாங்கள் கொடுக்கின்றோம்" என்று சொல்லக்கூடிய ஒருவர்கூட உங்களிடையே ஏன் காணப்படவில்லை என்று எனக்கு விளங்க வில்லை.

ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தின் திட்டங்களை நான் இப்போது உங்களுக்கு தெரிவித்து விடப் போகிறேன். அத்திட்டங்களை அமுலுக்குக்கொண்டு வருவதில் வேறெந்த அரசாங்கமும் செய்வதைப்போல் அவசரப்படாமலும், அமைதி யுடனும், படிப்படியாகவும் நாம் வேலை செய்துவர வேண்டும். யுத்தத்திற்கு முன்னுள்ள மதிப்புப் பிரகாரம் மலாயிலுள்ள இந்தியர்களின் பணம் 100 கோடியாக விருந்தது. நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பது போல் அப்பொழுதிலிருந்து அத் தொகையும் அதிகரித்துள்ளது. வழக்கமாக ஒரு அரசாங்க மானது ஒரு வருஷ காலத்திற்கான வரவு செலவுத் திட்டத் தையே தயாரித்துவரும். அப்படி ஏதாவது அவசியமேற் பட்டால் மேற்கொண்டும் சில திட்டங்களையும் அவ்வருஷத்தில் தயாரிக்கும். அதேமாதிரியாகத் தான் நானும் தயாரிக்க உத்தேசித்துள்ளேன்.

சர்வாம்சப் படைதிரட்டு என்ற உத்வேகத்துடன் தானாக நீங்கள் முன்வந்தாலும் சரி, அல்லது யுத்தம் முடிவடையும்வரை படிப்படியாக எங்களால் விடுவிக்கப்படும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்தாலும் சரி அவை யாவும் உங்களையே பொருத்ததா கும். மலாயிலிருந்து 10 கோடி ரூபாய் கொண்ட தொகையே நான் முதலில் கோருகிறேன். இத்தொகையானது மலாயிலு ள்ள இந்தியர் சொத்துக்களின் மதிப்பில் சுமார் 10 சத விகிதமே யாகும். மலாய் நாட்டிலுள்ள பணக்கார மக்களில் பலர் இப்

பொழுது இம்மகாநாட்டிற்கு வந்திருப்பதால் அவர்களிடமிருந்து நான் உடனடியாக குறைந்த பக்ஷம் ஒரு கோடி ரூபாயை எதிர்பார்க்கின்றேன். அத்துடன் இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் மலாயிலிருந்து 10 கோடி எனக்குக் கிடைக்குமென நான் எண்ணுகிறேன்.''

அனுபந்தம் 6

உணர்ச்சி மிகுதியால் நேத்தாஜி கண்ணீர்!

கிழக்காசியாவில் வசியும் முப்பது லக்ஷம் இந்தியர்களால் தனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு சுதந்தர இந்திய தற்காலிக அரசாங்கத்தை நேத்தாஜி 21-10-1943 அன்று மாலே மணி 4-15க்கு கூட்டத்தினருக்கும், உலகிற்கும் பிரகடனஞ் செய்தபோது மண்டபம் முழுவதும் உணர்ச்சிப் பிரவாகம் கரைபுரண்டோடிற்று. இயல்பான அடக்கத்துடனும் தணிந்த குரலுடனும் நேத்தாஜி தனது பெயரை உச்சரித்து தான் பிரதம மந்திரியாகவும், யுத்த மந்திரியாகவும், அயல்நாட்டு விவகார மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறிய போது மண்டபம் முழுதும் அதிரும்படியான ஆரவாரம் கிளம்பிக் கொண்டிருந்தது; மண்டபத்தில் திரண்டிருந்த அனைவரும் தங்கள் தங்கள் ஆசனத்திலிருந்து எழுந்து 'நேத்தாஜி ஜிந்தாபாத்', 'சுபாஷ் சந்திரபோஸுக்கு ஜே' என்ற கோஷங்களால் வான்முகட்டைத் தொடச் செய்தனர். பின்னர் நேத்தாஜி இதர மந்திரிகள், ஆலோசகர்கள் ஆகியவர்களின் பெயரை ஒவ்வொன்றாகப் படித்தார். ஒவ்வொருவரின் பெயர் வெளியிட்டபோதும் சபையினர் பெருத்த குதூகலத்துடன் அதை அங்கீகரித்தனர்.

மந்திரிகளும், ஆலோசகர்களும் மேடைமீதேறி நேத்தாஜிக்குப் பின்னிருந்த ஆசனங்களில் அமர்ந்தனர்.

அடுத்தபடியாக ஏற்பட்ட நிகழ்ச்சி இந்தியாவிலோ, கிழக்காசியாவிலோ இதற்குமுன் ஏற்பட்டிராத வகையில் அமைந்தது இக்காட்சி மிக்க உருக்கமாகவுமிருந்தது. அன்றையக் கூட்டத்திற்கு வந்திருந்தோரது உள்ளக்கமலத்தைவிட்டு இந்த மகத்துவமும் புனிதமும் நிறைந்த காட்சி என்றென்றும் அகலாது.

திடீரென நேத்தாஜியின் முகபாவம் முற்றிலும் மாறுபட்டது. கம்பீரமும், திடசித்தமும் அவரது வதனத்தில் தவழ்ந்தது; மேடைக்கு வெகு தொலேவிலிருந்த ஆடவர், பெண்டிர் அனே வருங்கூட இம்மாற்றத்தை தெளிவாகக் காணமுடிந்தது. ஒவ்வொருவர் நாடி நரம்புகளிலும் அவருக்கேற்பட்ட உணர்ச்சி ஏறியது.

அவரவரும் அறியாமலே உணர்ச்சிப்பெருக்கில் மூழ்கினர்; திட சித்தங்கொண்டனர்; ஆசனங்களில் சிலேபோல் இருந்தனர்; மூச்சடைத்த பாவைபோல் விளங்கினர்; கண்களே அகலத்திறந்து நரம்பு முறுக்கேறி தலேயை நிமிர்த்தி நேத்தாஜியைப் பார்த்தவண்ணமேயிருந்தனர். மேடையிலிருந்த மின்சார விள்க்கொளி அவரது முகத்தை ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தது. நேத்தாஜி பதுமை போல் தனக்கு முன்னிருந்த ஜனங்களே நோக்கி சிங்க ஏறு போல் பார்த்தார். பின்னர் ஒரு சிறு துண்டுக் காகிதத்தை மேஜை மீதிருந்து எடுத்து அதை அழுத்தந்திருத்தமாகப் படிக்க முற்பட்டார்.

இந்தியாவிற்கு விசுவாசமாக யிருப்பதென்ற தனது பிரதிக்ஞையை (ஹிந்துஸ்தானியில்) நேத்தாஜி படிக்க ஆரம்பித்து சில வார்த்தைகள் கூறினர். "சுபாஷ் சந்திர போஸாகிய நான் ஆண்டவன் சாட்சியாக இந்த தெய்வீகம் பொருந்திய பிரதிக்ஞையை எடுத்துக்கொண்டு'' என்ற வார்த்தைகள் பிறந்தன. பின்னர் நெஞ்சடைத்தது..........மௌனம்.........மேலே வார்த்தைகள் வரவில்லே. அவரது உள்ளக் கேணியிலிருந்து பிறந்த வார்த்தைகளாதலால் இதன் புனிதத் தன்மை அவரை நாவெழவொட்டாது செய்தது. இந்த நெருக்கடியான தருணத்தில் தாம் எடுத்துக்கொள்ள விருக்கும் பொறுப்பு மகத்தானது என்பதை அவரது அந்தராத்மா கூறியது. சபை எங்கும் பூர்ண நிசப்தம்.......கூட்டத்தினரின் சப்த நாடி நரம்புகளெல்லாம் ஒடுங்கின தோற்றம்...ஆயிரக்கணக்கானவர் மௌனம்...ஆயிரக்கணக்கான கண்கள் மேடை மீது நிற்கும் அடலேறுமீது, வைத்த கண் வைத்தபடி பதிவாகியிருந்தன...இருதயத்துனூடே ஓர் மானசீகப் பிரார்த்தனே... அடுத்து என்ன நடக்கப்போகிறது? என்பதே அது...பின்னர் நேத்தாஜியின் மனவெழுச்சி குமுறிக்கொண்டிருந்தது. பின்

னர் மிகுந்த சிரமத்துடன் தனது பிரதிக்ஞையை தொடர்ந்தார். "இந்தியாவினதும் அதன் 38 கோடியுள்ள என் தாய்நாட்டினரதும் விடுதலைக்காக இப்புனித சுதந்தர யுத்தத்தை எனது உடலில் கடைசி மூச்சு இருக்கும்வரையும் தொடர்ந்து நடத்திவருவேன் என பிரமாண மெடுத்துக்கொள்கிறேன்..." உடனே மீண்டும் ஓர் உள்ளக் குமுறல்; தாங்கமாட்டாத உணர்ச்சி, உறுதி, வைராக்கியம் ஆகியவைகள் ஒருங்கே சேர்ந்த நிலைமை. நேத்தாஜி மீண்டும் தன்னையும் தனது சூழ்வையும் மறந்தார்...தனக்கு முன்னால் தைதோவா மண்டபத்திலுள்ள மக்களை மட்டும் அவர் காணவில்லை; இந்தியாவிலுள்ள ஆண், பெண் அடங்கலுமுள்ள 38 கோடி இந்தியர்களை அவர் மனக்கண் முன்னர் நிறுத்தினர்... தன்னை மதிக்கும், கண்ணியஞ் செய்யும் இந்தியர்களின் பரிதாபகரமான முகங்கள் அவர் முன்னால் தென்பட்டன!...அடிமையிலாழ்ந்து தினசரி மரணவஸ்தை யுற்றுவரும் கோர முகங்கள் அவர் முன்னால் காட்சியளித்தன...இந்திய சிறைகளில் இன்னலுறும் லட்சக்கணக்கான தோழர்களின் உருவங்கள் அவரை உற்று நோக்கின... தாய்நாட்டு பலிபீடத்தில் அஞ்சாது உயிரை நீத்த பல்லாயிர மக்களது உருவம் அவரை வீறுடன் பார்த்தன. ...தனது அருமைத் தாய்நாடு...இந்திய விடுதலையை மீட்க தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான உள்ளங்கள்...முதலிய காட்சிகள் அவருக்கு முன்னால் ஏற்பட்டன போலும்! கல்கத்தா எஸ்பிளனேட் மைதானத்திலோ அல்லது டில்லி சாந்தினி சௌக்கிலோ நின்றுகொண்டிருப்பதை யொத்த எண்ணம் அவருக்கேற்பட்டது.

ஆண்டவன் முன்னிலையிலும் மனிதர்கள் முன்னிலையிலும் தான் கொண்ட சபதத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் உள்ளபூர்வமாக ஏற்றுக்கொண்ட அர்த்தபாவம் அவரது செயலில் நிமிர்ந்து நின்றது. அவரது ஆழ்ந்த வர்த்தைகளில் இக்காட்சி மிளிர்ந்தது......அதனால்தான் அவரது உணர்ச்சி குமுறியது....அதனால்தான் அவரின் நர்த்தடுமாறியது......சில விநாடிகள் அச்சடித்த சித்திரம் போல் நின்றனர்......இது பல மணி நேரம் இப்படியே இருந்து விடுமோவென்ற நிலை ஏற்பட்டது......சபையினரின் நாடி ஒடிந்து விடுந்தன்மையை நிகர்த்திருந்தது...... நேத்தாஜியின் கண்களில் கண்ணீர் மல்கிற்று...... கண்ணீர்க்கடலில் அவரது கண்கள் மிதந்தன...... அதை அடக்க அவர் அதிகப் பிரயாசைப்பட்டார்; அதை நிறுத்தப்

பெரிதும் முயன்றார்; ஆனால் உள்ளக்குமுறல் அவர் சக்தியை மீறியது...... அப்புயல் அவரை அழுத்திற்று......கூட்டத்தினர் இதைக் கண்டு மலைத்தனர்; கலங்கினர். ஆனால் இது நடந்தது இரண்டொரு வினாடிகளேயாகும்...பின்னர் நேத்தாஜியின் மன வேதனையைக் கூட்டத்தினர் காணநேர்ந்தது...அவரது நிலையை எல்லோரும் அனுபவித்தனர். அதற்காக இரங்கினர்; வீறு கொண்டனர்......தாங்களும் அவரைப்போலக் கண்ணீர் மல்கி நிற்பது சரியா...அல்லது அவரை உற்சாகமூட்டி ஆரவாரிப்பதா? என்ற சிந்தனையிலாழ்ந்தனர்......சில நிமிஷங்கள் ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளத்தில் இதைப்பற்றிய சர்ச்சை ஏற்பட்டது......பின்னர் மௌன நிலை மாறியது......புயல் வீசியது...... சபை முழுவதும் ஏக ஆரவாரம் ஏற்பட்டது......சபையினர் தத்தம் ஆசனங்களிலிருந்து எழுந்து தங்கள் மகிழ்ச்சியை பல்வேறு வகையில் தெரிவித்துக் கொண்டனர். தங்கள் அனுதாபத்தைக் காட்டி எத்தகைய இடையூறுமின்றி முன்னேறிச் செல்லலாம் என்ற நம்பிக்கையையும், தைரியத்தையும் அவர்கள் தங்கள் செயல் மூலமாகக் காட்டிக் கொண்டனர்......பிரதிக்ஞையின் எஞ்சிய பாகத்தைப்படிக்க நேத்தாஜி முற்பட்டார்......அப்போது மிகுந்த மனவெழுச்சியுடன் பின்வரும் வாசகங்களைப் படித்தார் :

"நான் எப்பொழுதும் இந்தியாவின் தொண்டனாகவே இருந்து வருவேன். 38 கோடியுள்ள எனது இந்திய சகோதர, சகோதரிகளின் நலனைக் கவனிப்பதே எனது முழு முதல் கடமையாக விருக்கும்......." பின்னர் மீண்டும் மௌனமேற்பட்டது. இம்முறை இந்நிறுத்தம் மேலும் அதிக நேரம் பிடிக்குமோவென்ற கவலை சபையிலே ஏற்பட்டது.........பிரதிக்ஞை முழுதும் படித்து முடிக்கப்படுமோ வென்ற சந்தேகமேற்பட்டது........சபையினர் இவரது மனவெழுச்சியை அடக்கிக்கொள்ளாத படி கேட்டுக்கொண்டு பிரதிக்ஞையை செய்துமுடிக்கத் தூண்டுவார்களோ என்ற நிலை காணப்பட்டது. இந்நிலையில் நேத்தாஜியின் இடது கரம் அவரது ஜேபிற்குச் சென்றது. துள்ளிய வெண்மை நிறமுடைய கைக்குட்டையை அவர் எடுத்தார். முகத்தில் காணப்பட்ட கண்ணீர்த் துளிகளை துடைத்தார்......சபையிலிருந்து மீண்டும் இடியோசையொத்த ஆரவாரம் முகிழ்ந்தது... நேத்தாஜி நிலைமையை சரிப்படுத்திக் கொண்டார்......எப்படியோ சமாளித்தார்......ஒருவாறு பிரதிக்ஞையைப் படித்து முடித்

தார்......அவரது முகத்தில் கொஞ்சமேனும் சுருக்கம், தள்ர்வு இவைகள் காணப்படவில்லை......மீண்டும் தான் ஆரம்பத்தில் பிரதிக்ஞையைப் படிக்க முற்பட்டபோது எப்படி சிலையாக ஏறு போல் நின்றாரோ அதே நிலையில் காட்சியளித்தார்...ஆனால் கடவுளின் அனுக்ரகத்திற்கிணங்க அவர் தமது பிரதிக்ஞை யைப் படித்து முடித்துவிட்டார்...மண்டபம் முழுவதும் ஒரு நீண்ட பெருமூச்சு வந்தது! ஜனங்களின் மத்தியில் காணப் பட்ட கவலைத் தேக்கமும், துடிதுடிப்பும், நரம்பொடுக்கமும் யதார்த்தத்திற்கும் வந்தது. அப்போதுதான் அப்பாடா! என்ற பெருமூச்சு ஜனங்களுக்கு ஏற்பட்டு தர்மசங்கடமான நிலையிலிருந்த கூட்டத்தினர் மனச்சாந்தியடைந்தனர். இச் சம்பவத்தை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது. இக்காட் சியை நாம் என்றென்றும் நினைவுபடுத்திக்கொண்டால் நமது உற்சாகம் இவ்வுலகில் நீண்டநாள் நிலைத்திருக்குமென்பது திண்ணம்!

அனுபந்தம் 7

ஷாங்கை பத்திரிகை மகாநாட்டில் நேத்தாஜி

பர்மாவுக்கெதிராகக் கைகொள்ளப்படும் எதிர்த்தாக்குதல் ஆஸாத் ஹிந்த் ராணுவத்தை இந்தியாவிற்குள் கொண்டுவந்த தாகுமென்பதுடன், பிரிட்டிஷ் ராணுவத்திலிருக்கும் இந்தி யர்கள் தங்கள் தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்வதற்காக விடுத்தவோர் சமிக்ஞையாகவு 'மிருக்குமென ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் **21-11-1943** உ யன்று ஷாங்கையில் நடைபெற்ற பத்திரிகை மகாநாட்டில் கூறினர். நேத்தாஜி மேலும் கூறியதாவது: "பிரிட்டிஷார் தங்கள் வெற்றிகளைப் பற்றியும் பர்மாவைத் திரும்பப் பிடிப்பதைப் பற்றியும் பிரமாதமாக விளம்பரப்படுத்தி வந்தபோதிலும் அந்த எல்லைப் பிரதேசத்தின் நிலைமையை நன்கு அறிந்த எனது அபிப்பிராயம் என்னவெனில், பிரிட்டிஷா ரின் எதிர்த்தாக்குதலால் நமது ராணுவம் இந்தியாவினுள் செல்லுமேயன்றி பிரிட்டிஷ் ராணுவம் பர்மாவினுள் காலடி எடுத்து வைக்க முடியாதென்பதேயாகும். இந்தியாவினுள்

வேவல் திரட்டியுள்ள ராணுவம் இந்திய விடுதலைக்காகவே போரிடும். ஆஸாத் ஹிந்த் ராணுவத்தின் வலிமை பொருந்திய ஆயுதம், வெற்றியில் கொண்டுள்ள திடநம்பிக்கையேயாகும். டில்லிக்குச் செல்லவேண்டிய பாதையோ மிகவும் கரடு முரடான தாகுமென்பதுடன், போரும் வெகு கடுமையானதாகவே யிருக்கும். ஆனால் நாம் எதற்கும் அவசியமான முஸ்தீப்புகளைச் செய்துள்ளோம்.''

நேத்தாஜியை கௌரவிப்பதற்காக ஷாங்கை கிராண்டு தியேட்டரில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் அவர் வலியுறுத்திக் கூறியதாவது: ''சீனாவின் மக்கள் ஒற்றுமைப்படும் பாதையில் ஒன்றும் இடைஞ்சலாக விருக்கக்கூடாது. ஒற்றுமைப்படுத்துவதின் மூலமே சீனா உள்நாட்டு அமைதியைப் பெறுமென்பதுடன் நிர்மாண வேலைகளிலும் தனது கவனத்தைச் செலுத்த முடியும். சீனா ஒற்றுமைப்படுவதற்கு இடையூருக விருப்பது நிப்பொனல்ல; ஆனால் பிரிட்டனும், அமெரிக்காவுமே. நாங்கள் சுங்கிங்கின் அல்லது சியாங்கை ஷேக்கினுடைய விரோதிகளல்ல. ஆனால் சீனாவில் அமைதி நிலவி வருவதற்கு இடைஞ்சலாக பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் கைப்பொம்மையாக சுங்கிங் இருந்துவருவதைக் கண்டே நான் வருத்தப்படுகிறேன். சீனாவின் தேசீய புனர் நிர்மாணத்திற்கும், சீனப்போர் முடிவடைவதற்கும் ஒரே நிபந்தனை தான் உள்ளது. பிரிட்டிஷ், அமெரிக்கச் செல்வாக்கை அழிப்பதே அந்நிபந்தனையாகும்.''

அனுபந்தம் 8

இறுதிப் போருக்கு எல்லாம் தயார்

(டோக்கியோ ரேடியோ மூலம் நேத்தாஜி இந்தியாவிலுள்ள இந்தியருக்கு விடுத்த செய்தி)

இந்திய சுதந்தரத்திற்கான கடைசிப் போராட்டத்தைத் துவங்க அரங்கம் தயாராகிவிட்டதென ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத் தலைவரும் ஆஸாத் ஹிந்த் பௌஜின் ஸிபஹ் ஸாலருமான ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் பாரத நாட்டு மக்களுக்கு **17-11-1943** அன்று டோக்கியோ ரேடியோ மூலம் விடுத்த பிரசங்கத்தில் கூறினர்.

அவர் பேசியதாவது:—

"நமது வல்லமை பொருந்திய நண்பர்களின் உதவியுடன் கிழக்காசிய இந்தியர்கள் சகல பிரயத்தனங்களும் செய்து வருகின்றனர். இந்தியாவின் எல்லையை நாம் அதிவிரைவில் தாண்டுவதுடன் பாரத பூமியில் சுதந்தரக் கொடியையும் நாட்டவேண்டும். பாரத நாட்டிலுள்ள நீங்களும் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு இறுதிப்போராட்டத்தை ஆரம்பியுங்கள்."

சமீபத்தில் நடைபெற்ற மகா கிழக்காசிய நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளில் நேர்மையையும், அந்தரங்க சுத்தியையும், ஒற்றுமையையும், உற்சாகத்தையும் புகழ்ந்து நேத்தாஜி பேசியதாவது :—

"புதியதொரு ஒழுங்கை ஸ்தாபிப்பதற்காக விடுதலையடைந்த கிழக்காசிய நாடுகள் நெருங்கிய கூட்டுறவுகொண்டு முன் வந்துள்ளதென்பது நவீன சரித்திரத்திலேயே இது முதல் தடவையாகும். புதியதொரு சர்வதேச ஒழுங்கை ஸ்தாபிப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச சங்கத்திற்கு நேர் எதிரிடையாகவே கிழக்காசிய நாடுகளின் மகாநாடு காட்சியளித்து வருகிறது. உலகத்திற்கு ஓர் முன்னுதாரணமாக விளங்குமென எதிர்பார்த்த நாடுகளின் சுய நலத்தினுலும், பொருமையினுலும் பேராசையினுலும் இதற்கு முன்னர் செய்யப்பட்ட

முயற்சிகளனைத்தும் தோல்வியடைந்தன. ஆனால் கிழக்காசியாவில் தோன்றியிருக்கும் புதியதொரு சர்வதேச ஒழுங்கு அல்லது மகா கிழக்காசிய கூட்டு சுபிட்ச மண்டலம் நியாயத்தையும், தேசீய ஆதிபத்திய உரிமையையும், பரஸ்பர உதவியையும், ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டிய கடமையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆகையினால், உலகத்தின் இதர பாகங்கள் தோல்வியடைந்த விஷயத்தில் கிழக்காசியா வெற்றியுறுமென நான் திடமாக நம்புகிறேன். உலகத்தின் இப்பாகத்தில் புதியதொரு ஒழுங்கை ஸ்தாபிப்பதற்கான அஸ்திவாரமிடுவதில் மகாகிழக்காசிய நாடுகளின் மகாநாடு வெற்றியடைந்துள்ளது. இந்திய விடுதலைப் போருக்கு பூரண உதவி அளிக்குமோர் தீர்மானத்தை டாக்டர் பா மா பிரரேபித்ததும் அது ஏகமனதாக இம்மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது.

இந்திய சுதந்தர இயக்கம் இப்பொழுது தனக்கென ஓர் தற்காலிக அரசாங்கத்தையும், தேசீய ராணுவத்தையும் பிரதேசத்தையும் உடைத்தாயிருக்கிறது. ஆகையினால் நமது எண்ணங்களும், நோக்கங்களும் நிறைவேறுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டியதே இந்தியர்களாகிய நமது கடமையாகும். நமது கடமை எவ்வளவு மகத்தானதென்பதை கிழக்காசியாவிலுள்ள நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அடுத்து வரும் போர் எவ்வளவு கடினமானதாகவும், எவ்வளவு காலம் நீடித்து நடக்கக்கூடியதாகவும் இருந்தபோதிலும், எவ்வளவு கஷ்டத்திற்கும் தியாகத்திற்கும் நாங்கள் உட்படவேண்டியிருந்தபோதிலும் இறுதி வெற்றியிலும், முடிவான நமது மீட்சியிலும் நாங்கள் திட நம்பிக்கை கொண்டுள்ளோம்.''

ஐரோப்பாவிலுள்ள இந்தியருக்கு விடுத்த செய்தி

இறுதிப் போரைத் தொடங்கி இந்தியாவினுள் பிரவேசித்து, பாரத பூமியில் சுதந்தரக்கொடியை நாட்ட ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கமும் ஆஸாத் ஹிந்த் பௌஜும் தயாராயிருக்கின்றனவென்று நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் ஜெர்மனியிலும் இதர ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள இந்தியர்களுக்கு **17-11-1943** அன்று பிற்பகல் டோக்கியோ ரேடியோ மூலம் நிகழ்த்திய ஓர் உருக்கமான பிரசங்கத்தில் கூறினார்.

அவர் பேசியதின் சாரமாவது:—

"கடந்த ஐந்து மாதகாலத்தில் இந்திய சுதந்தர இயக்கம் சம்பந்தமான வேலைகள் வெகு தீவிரமாக நடைபெற்றிருக்கின்றன. இந்நடவடிக்கைகள் மிகுந்த பயனளித்திருக்கின்றன வென்பதைக் கூற நான் சந்தோஷமடைகிறேன். இந்திய சுதந்தரக் கழகம் திருத்தியமைக்கப்பட்டு, பலப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்திய தேசிய ராணுவம் விரிவு செய்யப்பட்டிருக்கிறது. ராணுவ சாஸ்திர நுணுக்க பயிற்சியும், ஆத்மீகப் பயிற்சியும் பன்மடங்கு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இந்திய நிலைமை தற்போது புரட்சிக்கு மிகவும் தகுதியாயிருக்கின்றது.

இறுதிப் போரை ஆரம்பித்து, இந்தியாவினுள் பிரவேசித்து, பாரத பூமியில் சுதந்தரக் கொடியை நாட்ட வேண்டியதுதான் இனி பாக்கி. அது பூர்த்தியானவுடன் டில்லிக்கு ஒரு நீண்ட சரித்திர பூர்வமான முன்னேற்றம் தொடங்கும். புது டில்லியிலுள்ள வைஸ்ராய் மாளிகையில் நம் தேசீயக்கொடி பறக்கவிடப்பட்டதும்தான் அந்த முன்னேற்றம் நிற்கும்.

டோக்கியோவில் நடைபெற்ற மகா கிழக்காசிய நாடுகளின் மகாநாட்டில் மிகவும் ருசிகரமான முக்கிய விஷயம் என்னவெனில், அதில் கலந்துகொண்ட தேசங்களனைத்துமே தற்போதைய யுத்தத்தை ஒரு வெற்றிகரமான முடிவுவரை நடத்த சம உறுதி கொண்டிருந்ததாகும். கிழக்காசிய தேசங்களின் ஐக்கியமும் ஒற்றுமையும் எதிர்காலத்தில் நம் விரோதிகள் எதிர்த்து நிற்கவேண்டிய மகா வல்லமை வாய்ந்ததோர் ஆயுதமாகும்.

சூரியன் நாளை மீண்டும் உதயமாவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நம் இறுதி வெற்றியும் நிச்சயமென நான் திண்ணமாக நம்புகிறேன்.

நம் விடுதலைப்போராட்டத்திற்கு அனுதாபமும் ஆதரவும் அளித்தும் அளித்துக்கொண்டும் வரும் ஐரோப்பாவிலுள்ள நண்பர்களனைவருக்கும் எனது வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பொது வெற்றி இறுதியாகக் கிடைக்கும் வரை கிழக்காசியாவிலுள்ள நாங்கள் நம் பொது விரோதிக் கெதிராக உங்களுடன் தோள்கொடுத்து நின்று போரிட உறுதிகொண்டிருக்கிறோமென்பதை உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்."

அனுபந்தம் 9

"நமது ஆக்க வேலைகள்" (போஸ் பிரசங்கம்)

ஒரு வருஷ காலத்திற்கு முன்பு கிழக்காசிய இந்திய மக்களின் முன் சமர்ப்பிக்கப்பட்ட சர்வாம்ஸப் படை திரட்டு ஒரு வருஷ காலத்தில் காரியாம்சத்தில் நிறைவேற்றப்பட்டதைக் குறித்து மேன்மை தங்கிய நேத்தாஜி 1944-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ந்தேதி யன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பின்வருமாறு கூறினர் :—

வருஷக் கடைசியில் தாய்நாட்டின் விடுதலைக்காக நம்மால் செய்யப்பட்ட தீவிர முயற்சிகளைப்பற்றி ஆராயவேண்டியதும், எதிர்காலத்திய திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டியதும் அத்யாவசியமாகும். கிழக்காசியாவிலுள்ள இந்தியர்களின் முன் சர்வாம்ஸப் படைதிரட்டு திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. நமது தேசத்தின் சுதந்திரத்தை அடைவதற்காக ஆயுதந் தாங்கிய போருக்கான தயாரிப்புகளைச் செய்து கொண்டு யுத்தத்தை நடத்துவதற்காக வேண்டிய ராணுவ வீரர்கள், பொருளுதவி, தளவாட உதவி எல்லாம் தடையின்றி கிடைத்துக்கொண்டே இருக்கவேண்டுமென நான் எனது தேச மக்களிடம் கூறினேன். அதே சமயத்தில் நமது ராணுவத்தைப் புதுப்பித்து பெரியதோர் சைன்யமாக்கி தீவிர பயிற்சி யளிக்கும் வேலையையும் ஆரம்பித்தோம்.

அச்சமயத்தில் எனது தேசத்தினரெல்லோரும் சர்வாம்ஸப படைதிரட்டை நிறைவேற்ற முன்வருவார்களாயின் இந்திய விடுதலைப்போரில் இரண்டாவது போர் முனையை ஸ்தாபிப்பது சாத்தியம் என்றும் கூறினேன். சர்வாம்ஸப் படைதிரட்டு பூரணமாக நிறைவேறுவதற்கு இன்னும் எவ்வளவோ தொலைவு உண்டென்றாலும் கிழக்காசிய இந்தியர்கள் எனது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து பெருந்தன்மையுடன் தம்மாலான உதவிகளை செய்துள்ளனரென்பதை நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளுகிறேன். மேலும் எனது வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இரண்டாவது போர்முனையை ஸ்தாபிப்பதற்கு

நம்மால் முடிந்ததென்பதையும் நமது புனிதத் தாய்நாட்டின் மண்ணில் தற்சமயம் நமது துருப்புகள் போரிட்டு வருகிற தென்பதையும் நன்றியறிதலுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு வருஷ காலத்திற்கு முன்பு இந்திய சுதந்திரக் கழகத்திற்கு பொருளுதவி அளிக்கப்படவேண்டுமெனக் கூறினேன். அன்று கேட்ட தொகையைவிட பன்மடங்கு அதிகமாகவே நான் அடைந்துள்ளேனென்பதை மகிழ்வுடன் கூறி, பெருமையடைகிறேன். இதனுல் நாம் போதுமான நிதியை பெற்றுவிட்டோமென்பதில்லை. எதிர்காலத்தில் நமக்குத் தேவைப்படும் தொகையில் ஒரு பகுதியே நாளதுவரை வசூலிக்கப்பட்டுள்ளது. நமது பொருளாதார நடவடிக்கைகளில் நமக்கென சொந்தமான ஆஸாத் ஹிந்த் பாங்கி லிமிடெட்டை 1944-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பித்துள்ளோம். பாங்கியின் கிளைகள் பலவிடங்களில் திறக்கப்பட்டுள்ளதையும் எதிர்காலத்தில் இன்னும் பலவிடங்களில் பல திறக்கப்படுமென்பதையும் சிந்திக்குங்கால் நமது பாங்கிற்கு பெருமிதமான ஆதரவு கிடைத்துவருகிறதென்பது தெளிவாகும். எதிர்காலத்தில் நமது சுதந்திர இயக்கத்தை இந்தயர்களின் பொருளைக்கொண்டே நடத்த முடியுமென்பதில் சந்தேகமில்லை.

கிழக்காசியாவின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இந்தியர்கள் ரொக்கமாகப் பொருளுதவி செய்வதுடன், பல்வேறுவகைப் பொருட்களாகவும் அளித்துவருகின்றனர். அவர்களுடைய பெருந்தன்மையினுலும், அபார உழைப்பினுலுமே நமது ராணுவத்திற்கும், சுதந்திர இயக்கத்திற்கும் தேவையான தளவாட சாமான்களை கிழக்காசியாவின் பல்வேறு பாகங்களிலுமிருந்து சேகரிக்க முடிந்தது. போக்குவரத்து வசதிக்குறை மட்டுமில்லாதிருந்திருந்தால் நாம் தற்சமயம் அடைந்துள்ள பல்வேறு வகை பொருட்களைக்காட்டிலும் பன்மடங்கிற்கதிகமான பொருட்களை அடைந்திருக்கக்கூடும். உண்மையில் கிழக்காசியாவின் பல்வேறு பாகங்களிலும் திரட்டப்பட்டுள்ள பொருட்கள் போக்குவரத்து வசதியை எதிர்பார்த்துள்ளன. எதிர்காலத்தில், இப்போக்குவரத்து வசதிக் குறைகள் பலவற்றில் குறைந்தபட்சம் ஒரு சிலவற்றையேனும் நாமே களைந்தெறிந்து சமாளிக்க வேண்டியவர்களாயிருப்போம்.

ராணுவத்தில் அதிகப்பேர் வந்து சேரவேண்டுமென்ற எனது கோரிக்கைக்கு மக்கள் செவிசாய்த்ததுதான் எல்லாவற்றிலும் சிறப்புற்றதாகும். இதற்குமுன் எப்பொழுதுமே நிகழ்ந்திராத வகையில் ராணுவத்தில் மக்கள் வந்து சேர்ந்த வண்ணமிருந்தால் படைதிரட்டில் எவ்வித கஷ்டமும் நேரவில்லை. கடந்த பனிரெண்டு மாதங்களுக்கு முன்பிருந்ததைவிட நமது ராணுவம் எத்தனையோ மடங்கு அதிகரித்துள்ள தென்பதை எண்ணி மகிழ்வடைகிறே னென்றாலும், பயிற்சி பெறுவதற்கு தருணம் எப்பொழுது வாய்க்குமோவென காத்திருந்தோரனை வரையும் பயிற்சி முகாம்களில் அனுமதிக்க முடிந்திருக்குமாகில் எனது சந்தோஷம் இன்னும் அதிகரித்திருக்கும். தேவைப்படும்பொழுது அழைத்துக்கொள்ளக்கூடிய ஏராளமான வீரர்கள் கிழக்காசியாவிலுள்ளனர். ஆகவே, நமது விடுதலைப் போரில் முடிவான வெற்றி கிடைக்கும்வரை ராணுவம் தடையேதுமின்றி பெரிதாகிக்கொண்டேவரும். நமது வெற்றிகளெல்லாவற்றிலும் கிழக்காசிய பெண்மணிகள் விழிப்புற்று ஜான்ஸி ராணிப்படையில் சேர்ந்துகொள்ள உற்சாகமுடன் முன்வந்த செய்கை மிகவும் சிறப்புற்றதாகும். பயிற்சி முடிவடைந்துள்ள ஜான்ஸி ராணிப் படையின் பல பிரிவுகளினது புரட்சி மனப்பான்மையும், ராணுவத்திறமையும் எல்லோர் மனதிலும் பரம திருப்தியை உண்டாக்கியுள்ளன. போரிலிறங்குங்கால் இந்தியாவிற்கும், இந்தியப் பெண்ணுலகிற்கும் மங்காப் புகழையும் கௌரவத்தையும் அளிக்கும்வகையில் அப்பெண்மணிகள் போர் புரிவரென்பதில் நான் எத்தகைய சந்தேகத்தையும் கொண்டிருக்கவில்லை. நடைபெறவிருக்கும் போராட்டத்திற்கான தேவைகள் யாவும் திருப்திகரமாக முன்னேறி நமது துருப்புகளெல்லாம் இந்தியா-பர்மா எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, உலகத்தில் இதற்குமுன் கையாளப்பட்ட புரட்சி முறைகளின்படி சரித்திரப் பிரசித்திபெற்ற நடவடிக்கையை 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் எடுத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. அச்சரித்திரப்பிரசித்தி பெற்ற நடவடிக்கை 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ந்தேதி அன்று ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதாகும். சுதந்திரப் போராட்டத்திற்கு அத்யாவசியமான இலாகாக்களின் பிரதிநிதிகளும் ராணுவ வீரர்களின் பிரதிநிதிகளுமான மந்திரிகளையும், ஆலோசனையாளர்களையும் கொண்ட

இந்த அரசாங்கம் ஓர் போரிடும் ஸ்தாபனமாக அமைக்கப் பட்டது. ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தை அங்கீ கரித்த ஜப்பான், ஜெர்மனி மற்றும் ஏழு நேசதேசங்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். தற்காலிக அர சாங்கம் ஸ்தாபிதமாகி நேச தேசங்களால் அங்கீகரிக்கப்பட்ட தின் பின்னர் உலக மக்களிடையே நமக்கு புதிய அந்தஸ்தும், புதிய கௌரவமும் ஏற்பட்டதோடு விடுதலை வீரர்களுக்கு அளவுகடந்த உற்சாகமுமேற்பட்டது. புதிதாக ஸ்தாபிதமான நமது தற்காலிக அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க முதலாவது நடவடிக்கை 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ந் தேதி யன்று பிரிட்டன், அமெரிக்கா நாடுகளின் மீது யுத்தப்பிரகடனம் செய்யப்பட்டதாகும்.

நமது தற்காலிக அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட சிறிது காலத்திற்குள்ளாகவே 1943-ம் வருஷம் நவம்பர் 5, 6 தேதிகளில் கிழக்காசிய சுதந்திர தேசங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மகாநாடொன்று டோக்கியோவில் நடைபெற்றது. மகாநாட் டில் பார்வையாளராக கலந்துகொள்ள வேண்டுமென்று தற்கா லிக அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு வந்தனத் துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மகா கிழக்காசிய சுதந்திர நாடுகளுக்கும், இந்தியாவிற்குமிடையே குறைவற்ற அந்நியோந் நியம் ஏற்படுவதற்கு இம்மகாநாடு பெருத்த உதவியாயிருந்தது. இம்மகாநாட்டில் மேன்மை தங்கிய நிப்பொன் பிரதமர் ஜெனரல் ஹிதேகி டோஜோ அவர்கள் அந்தமான், நிக்கோபார் தீவுகளை ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்திற்கு மாற்றிக்கொடுக்க தமது அரசாங்கம் தீர்மானித்துள்ள தென்ற முக்கியமான பிரகடனத்தை வெளியிட்டார். இவ்வறிவிப்படைத் தொடர்ந்து ஆஸாத் ஹிந்த் பௌஜின் உயர்தர உத்தியோகஸ்தரும், தற்கா லிக அரசாங்கத்தின் மந்திரியுமாகிய கர்னல் ஏ. டி. லோகநாத னவர்கள், அந்தமான், நிக்கோபார் தீவுகளின் முதலாவது பிர தம நிருவாகஸ்தராக (ஹை கமிஷ்னர்) நியமனம் செய்யப்பட் டார். கர்னல் லோகநாதன் 1943ம் வருஷம் பிப்ரவரி மாத ஆரம்பத்திலிருந்து தமது உத்யோகத்தை ஏற்றுக்கொண்டார்.

1943-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நமது ராணுவத்தைச் சார்ந்த அதிகாரிகளும் போர் வீரர்களும், பொதுவாக இந்தியா விலுள்ள தமது சகோதரர்களுக்கும், சிறப்பாக பிரிட்டிஷ் இந்

திய ர்ாணுவத்தினருக்கும் வானொலி மூலம் சொற்பொழிவுகளாற் றப்பட வேண்டி I. N. A. வானொலி நிலையமென்ற பிரத்தியேக நிலையமொன்று திறக்கப்பட்டது. நமது தலைமைக் கர்ரியா லயங்கள் பர்மாவிற்கு மாற்றப்பட்டதும், இந்திய-பர்மா எல்லைக் கருகில் மற்றுமோர் வானொலி நிலையம் ஸ்தாபிதமாயிற்று. அதி லிருந்து இவ்விரு வானொலி நிலையங்களும் தற்காலிக அரசாங்கத் தின் மற்றுமிரு நிலையங்களுடன் வேலை செய்து வருகின்றன.

1943 வருஷக் கடைசியில் நமது தயாரிப்புகளெல்லாம் முடிவு பெற்றதும் தற்காலிக அரசாங்கத்தினதும், இந்திய சுதந் திரக் கழகத்தினதும் தலைமைக் காரியாலயங்கள் ஷோனனி லிருந்து பர்மர்வுக்கு மர்ற்றப்பட வேண்டியது அவசியமென உணரப்பட்டது. 1944-ம் ஜனவரி மாத ஆரம்பத்தில் இவ்வேலை முடிவடைந்தது. அதுமுதல் நாம் பர்மிய சுதந்திர அரசாங்கத் தின் மகத்தான அனுதாபத்தையும் ஆதரவையும் அடைந்து வந்ததால் நமது வேலைகள் யாவும் மிகவும் சுலபமாக நிறை வேறின.

1943-ம் வருஷம் ஜனவரி மாதம் முழுதும், பிரிட்டன், அமெரிக்க நாடுகளின் மீது செய்யப்பட்ட யுத்தப் பிரகடனத் தின்படி செயலில் இறங்குவதற்கான தயாரிப்பு வேலைகள் மிக வும் மும்முரமாக நடைபெற்றன. அதன் பிறகு பிப்ரவரி மாதம் 4-ந் தேதியன்று பர்மாவிலுள்ள அரக்கான் பிரதேசத்தில் சுதந் திரப் போர் துவக்கப்பட்டது; அரக்கான்முனைப் போரில் ஆஸர்த் ஹிந்த் பௌஜ் நமது எதிரிகளுக்கு முதலாவது கொள் ளியை மூட்டி, வெற்றிமாலையை சூட்டிக்கொண்டது. ஆஸாத் ஹிந்த் ராணுவம் மலைபோன்ற கஷ்டத்திற் கிடையேயும் வீர முடன் போரிடுமென்பதில் சந்தேகங்கொள்பவர் இனி யாரும் கிடையாது. அரக்கான் போரில் புகழுக்குரிய வகையில் போரா டிய அதிகாரிகள், போர் வீரர்கள் ஆகியோருக்கு தற்காலிக அரசாங்கத்தின் சார்பில் விருதுகளை அளிக்கும் பாக்கியத்தை நான் அடைந்தேன்.

ஒரு மாதத்திற்குப் பிறகு அதாவது மார்ச் மாதம் 8-ந் தேதி யன்று, இந்தய-பர்மிய எல்லையில் மற்றோர் பகுதியாகிய திடிம் பகுதியில் யுத்தம் ஆரம்பமாகியது. ஒரு வாரத்திற்கப்பால் மணிப்பூர், அஸாம் பகுதியில் போர் ஆரம்பிக்கப்பட்டது. பல்

வேறு பகுதிகளில் இந்திய எல்லை கடக்கப்பட்டது. ஆஸாத் ஹிந்த் ராணுவத்தின் பல பிரிவினர் நிப்பொன் சாம்ராஜ்யப் படைகளுடன் மணிப்பூர், அஸாம் பிரதேசங்களுக்குள் பிரவேசித்தனர். அதிலிருந்து இந்திய பிரதேசத்திற்குள்ளாகவே கடும் போர் நிகழலாயிற்று. கலட்ரான், ஹாகா பகுதிகளிலும் நமது படைகள் போர்புரிந்து வந்திருக்கின்றன. ஒரு சில நாட்களாக நமது முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாயில்லை யெனினும், மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறி வருகிறோம். யுத்தத்தில் சகஜமாக ஏற்படக்கூடிய நஷ்டங்களும், மாரிகாலக் கஷ்டங்களும், மலேரியா போன்ற கொடிய வியாதிகளாலுண்டாகும் தொல்லைகளும் நமது துருப்புகளின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்த போதிலும் நமது துருப்புகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்து வந்துள்ளன. அத்துடன் அவர்களது போர் உணர்ச்சியும் அதிகரித்துள்ளது.

1944-ம் வருஷம் நமது துருப்புகள் இந்திய எல்லைக்குள் பிரவேசிக்கவும், எதிரிகள் பின்வாங்கியதால் விடுதலை யடைந்த பிரதேசங்களில் நிர்வாக, புனருத்தாரண பிரச்னைகள் ஏற்படலாயின. அதிர்ஷ்டவசமாக இந்திய சுதந்திரக் கழகத்தின் புனருத்தாரண இலாகாவின் மூலம் இதற்கான தயாரிப்புகள் யாவும் முன்கூட்டியே செய்யப்பட்டிருந்தன. கடந்த மார்ச் மாதத்தில் விடுதலையடைந்த பிரதேசங்களுக்குள் முன்னணித் துருப்புகளுடன் பிரவேசித்து அந்தந்த பிரதேசங்களின் நிர்வாக புனருத்தாரணங்களைத் தாமதமின்றி ஆரம்பிப்பதற்கென ஆண், பெண் இருபாலரையும் கொண்ட ஆஸாத் ஹிந்த் தால் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. இப்பிரிவு அநேகமாக ஓர் ஸிவில் ஸ்தாபனமே யாயினும், சண்டையிடும் துருப்புகளைப் போன்றே இப்பிரிவிலுள்ளோரும் சகலவிதக் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு இப்பிரிவின் சட்ட திட்டங்கள் ராணுவ முறைப்படியே அமைந்துள்ளன. ஆஸாத் ஹிந்த் தால் பிரிவினரின் பெரும்பாலோர் இதற்குமுன் ராணுவப் பயிற்சி எதையும் பெற்றிருக்க வில்லையெனினும், ஆண், பெண் அனைவரும் இப்பிரிவில் சேர்ந்துகொள்ள உற்சாகமுடன் முன் வந்தது, பெரிதும் பாராட்டத்தக்கது. கிழக்காசியாவில் வசிக்கும் இந்திய மக்களெல்லோரும் தியாக உணர்ச்சியால் தூண்டப்பட்டு, சுதந்திரமடைவதற்கு சர்வ வழிகளிலும் பாடுபட முன் வந்துள்ளனர் என்பதற்கு இது ஒரு அரிய உதாரணமாகும்.

வெற்றி அல்லது மரணம் என்ற தீவிர உணர்ச்சி ஆஸாத் ஹிந்த் பௌஜைச் சார்ந்த வீரர்களிடையே மட்டுமின்றி சாதாரண பொதுமக்களிடையேயும் நிலவுவதால் போர் முனையிலுள்ள மனோ உற்சாகம் உள்நாட்டிலும் மிகுந்துள்ளது.

சென்ற பனிரண்டு மாதங்களுக்கிடையே நாம் அடைந்த வெற்றிகளை அடியிற் கண்டவாறு சுருக்கிக் கூறலாம் :—

1. நமது சர்வாம்ஸப் படைதிரட்டு திட்டத்திற்கேற்ப ஆள், பணம், பொருள், யாவையும் திரட்ட முடிந்தது.

2. நவீன யுத்தத்தை நடத்துவதற்கேற்ற வகையில் நமது ராணுவம் பயிற்சி பெற்று பெரியதோர் சைன்யமாயிற்று.

4. நமது ராணுவத்தில் ஜான்ஸி ராணிப்படை யென்ற மாதர் பிரிவு ஒன்றும் ஆரம்பமாயிற்று.

4. ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபனஞ் செய்தோம். 9 நேச வல்லரசுகளின் அங்கிகாரம் நமது அரசாங்கத்திற்குக் கிடைத்தது.

5. நிப்பொனின் பெருந்தன்மையின் மூலம் அந்தமான், நிக்கோபார் தீவுகள் நமக்குக் கிடைத்தன.

6. நமது தலைமைக் காரியாலயங்கள் பர்மாவிற்கு மாற்றப்பட்டு 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் சுதந்திரப்போர் துவக்கப்பட்டது. மார்ச் மாதம் 21-ந் தேதியன்று நமது துருப்புகள் இந்தியாவிற்குள் பிரவேசித்து விட்டதென்பதை உலகிற்கு அறிவித்தோம்.

7. நமது பிரசுர, பிரசார, விளம்பர இலாகா மிகவும் பெரிதாக்கப் பட்டது.

8. சுதந்திர இந்தியாவில் நிர்வாக, புனருத்தாரண வேலைகளைக் கவனிப்பதற்கென ஆஸாத் ஹிந்த் தால் நிறுவப்பட்டது.

9. நமக்குச் சொந்தமாக ஆஸாத் ஹிந்த் பாங்கி ஒன்று பர்மாவில் ஸ்தாபிக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவிற்கென தயாரிக்கப்படும் நமது நாணயங்களை வெகு விரைவில் அடையக் கூடுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

10. கஷ்டங்கள், துயரங்கள் யாவையும் பொருட்படுத்தாது நமது துருப்புகள் மெதுவாக, ஆனல் உறுதியாக, இந்தியாவுக்குள் முன்னேறி வருவதால் போர் முனையின் ஒவ்வொரு

பகுதியிலும் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளோம்.

நமது எதிர்கால வேலைகளைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம்:—

(1) போர் முனைகளில் மேலும் பல வெற்றிகள் அடைந்து இந்தியாவுக்குள் மேலும் முன்னேற வேண்டுமாதலால் நாம் போர் முனைகளுக்கு உதவித் துருப்புகளையும் தளவாட சாமான்களையும் அனுப்பிக் கொண்டேயிருத்தல் வேண்டும்.

(2) நமது ராணுவம் மேலும் மேலும் இந்தியாவுக்குள் பிரவேசிக்கத் தொடங்குங்கால் இன்னும் பல வேலைகளைச் செய்ய வேண்டியிருக்குமாதலால் ஆஸாத் ஹிந்த் தால் பெரிதாக்கப் படவேண்டும். சுதந்திர இந்தியாவில் நடைபெறவேண்டிய நிர்வாக, புனருத்தாரண தயாரிப்புகள் யாவும் செவ்வனே பூர்த்தி செய்யப்படவேண்டும்.

(3) ஆள், பொருள், சாதனத்திரட்டு இன்னும் விரைவாக்கப்பட்டு உள்நாட்டு நிலை உறுதியுடன் விளங்கவேண்டும்.

இம்மூன்று முக்கிய வேலைகளையும் நிறைவேற்றுங்கால், எதிர்காலத்தில் பின்வரும் பிரச்னைகளில் நாம் அதிகமான கவனஞ் செலுத்தவேண்டி நேரிடும் :—

[அ] இந்தியாவிற்குள் புரட்சி வேலை தீவிரப் படுத்தப்பட வேண்டும்.

[ஆ] எதிரிகள் கைவசமுள்ள இந்தியத் துருப்புகளிடையே தீவிரமான பிரசாரம் செய்யப்படவேண்டும்.

[இ] உள்நாட்டில் உள்ள சிக்கல்களில், குறிப்பாக போக்குவரத்து வசதிகளிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதில் தீவிர முயற்சிகள் பல புதிதாக செய்யப்படவேண்டும்.

அனுபந்தம் 10

"ஐரோப்பிய 2-ம் முனையால் இந்தியாவுக்கு நல்லது"
(போஸ் பிரசங்கம்)

1944-ம் வருஷம் ஜூலை மாதம் 2ந் தேதி நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேன்மை தங்கிய நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் அன்றைய நிலைமையை விளக்கி பின் வருமாறு கூறினர்:

" கனவான்களே!

தற்காலத்தில் நிலவிவரும் பொதுவான நிலையைப் பற்றி எனது அபிப்பிராயங்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக தற்சமயம் உள்ள நிலை நம்பிக்கைக்கு இடந்தருவதாகவே இருக்கிறதென ஆரம்பத்திலேயே கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, கடந்த ஒரு வருஷகாலத்தில் மிகவும் தீவிரமாகப் பாடுபட்டு எவ்வளவு பலன்களை யடைய முடியுமென்பதை தெளிவாக அறிந்து கொண்டதால் எதிர்காலத்தில் இன்னும் எவ்வளவு தூரம் வெற்றியடைய முடியுமென்பது நமக்கு நன்கு தெரிகிறது.

இந்த அனுபவத்திலிருந்து கிழக்காசியவாழ் இந்தியர் அனைவரும் நம் சார்பிலேயே உள்ளனர் என்பதையும், சர்வாம்ச சேகரிப்பு திட்டத்தை கிரியாம்சையில் நிறைவேற்ற அவர்கள் நம்முடன் பூரணமாக ஒத்துழைப்பார்களென்பதையும் அறிந்து கொண்டோம்.

இதற்கு அனுசரணையாக மற்றும் ஒரு கடினமான பரீட்சையில்-அதாவது இந்திய எல்லையைத் தாண்டி பல்வேறு போர்க்களங்களில் எதிரியை முறியடிப்பதில் நாம்—வெற்றிபெற்றுள்ளோம். இந்திய தேசிய ராணுவம் போர்த்துறையில் இறங்கி எதிரித்துருப்புகளைத் தோறகடிப்பதில் வெற்றியடையுமா என்பதைக் குறித்து ஒரு சில சந்தேகம் கொண்டிருந்தனர். அந்தப் பரீட்சையிலும் நாம் தேறிவிட்டதால் நமது சக்திகளில் நமக்கு அளவு கடந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் புனித பூமியில் போர் ஆரம்பமானதிலிருந்து அந்த யுத்தம் நமது சொந்த யுத்தமாகிவிட்டது. இந்த நிலையின் காரணமாக போர்முனையிலுள்ள நமது துருப்புகளுக்கும், பின்னணி வரிசையிலுள்ளோருக்கும் புதியதோர் உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக நமது அபிவிருத்தி குறிப்பிடத்தக்கதாக இல்லையென நம்மீது குறை கூறுவோரும் உண்டு. ஆனால் அதைக்குறித்து நாம் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. விரைவில் நாம் இந்தியாவை நோக்கி முன்னேற இயலுமென கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நான் முதன் முதலாகக் கூறியதிலிருந்தே இந்திய எல்லையைத் தாண்டிய பின்னர்தான் மிகக் கடுமையான போராட்டம் ஆரம்பமாகுமென, குறிப்பாக இந்திய தேசீய ராணுவ வீரர்களுக்கும், பொதுவாக கிழக் காசியாவிலுள்ள எனது தேசமக்களுக்கும் அடிக்கடி கூறிவந் துள்ளேன். கடுமையான போராட்டத்திற்கு நாம் தயார் செய் திருப்பதினாலும், நமது வீரர்களும் பொதுமக்களும் நீண்ட கடினமான யுத்தத்தை நடத்துவதற்கு தயாராகியுள்ளோம் என எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாலும் எதிரிகளின் தீவிரமான எதிர்ப்பு நமக்கு எத்தகைய ஆச்சரியத்தையும் விளைவிக்கவில்லை. நாம் எதிர்பார்த்தபடியே எதிரிகள் தமது நடவடிக்கையை நடத்துகின்றனர். இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் நம்மால் எதிர்பார்க்கப்பட்டவைகளே. எனவே, நாம் இந்தியாவிற்குள் பிரவேசிக்க ஆரம்பித்தபொழுது எத்தகைய நம்பிக்கை கொண் டிருந்தோமோ, அதே நம்பிக்கையையே தற்சமயமும் கொண்டுள் ளோம்.

இதுவரையில் நமது துருப்புகளடைந்துவரும் கஷ்டங்கள், தொல்லைகளைப்பற்றிய புகார் எதையும் நான் பெறவில்லை. போர்முனைக்குத் தங்களை அனுப்பிவைப்பதில் தாமதம் செய்யப் படுவானேன் என்ற குறையையே அவர்கள் என்னிடம் அடிக்கடி கூறிவந்திருக்கின்றனர். காயமடைந்தோ, மலேரியா அல்லது பிற நோய்களால் பீடிக்கப்பட்டோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நமது துருப்புகளில் ஒரு சிலரை கொஞ்ச நாட்களுக்கு முன்பு நான் பார்த்தேன். அவர்களெல்லோரும் தாம் குணமடைந்தவுடன் திரும்பவும் போர் முனைக்கு அனுப்பப் படவேண்டுமென்ற தமது விருப்பத்தை என்னிடம் தெரிவித் தனர். இவ்வீரர்கள் அனைவரும் சமரிட்டவராகையால், நிலவும் விஷயங்கள் யாவற்றையும் நன்கறிவர். எனினும் இவர்கள்

பூரண உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் இருக்கின்றனர். இதே உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் கிழக்காசியாவில் வசிக்கும் எல்லா இந்தியர்களும் வாழ்ந்துவருகின்றனரென நான் கூறுவதில் மிகையேதுமில்லையென்பேன். எதிரியின் கடுமையான எதிர்ப்பு நமக்கு எவ்வித ஆச்சரியத்தையும் கொடுக்கவில்லையென்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ராணுவ ரீதியில் கவனிக்குங்கால் எதிரிகள் மணிப்பூர், கிழக்கு வங்காளம், அஸ்ஸாம் ஆகியவிடங்களை இழந்துவிடின், அவர்கள் பிரம்மபுத்ரா ஆற்றுப் பகுதியையடையும்வரை, நம்மை எதிர்க்க இயலாதென்பது தெளிவாகிறது. இவ்வாற்றின் எதிர்க்கரையில் நின்றுதான், அவர்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ள முடியும். அப்பகுதி மிகவும் சிக்கலான, ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாதலின் அவ்விடம் எதிரி தனது பூரண வல்லமையைக் காண்பிக்க முயலுவது இயல்பேயாகும்.

சுருங்கக் கூறுமிடத்து, நமக்கு அளவுகடந்த நம்பிக்கை ஏற்பட்டதற்கு மூன்று அம்சங்கள் பிரதானமாகும். கடந்த பன்னிரண்டு மாதங்களில் நம்மால் நிறைவேற்றப்பட்ட ஆக்க வேலைகள் ஓர் அம்சமாகும். நாம் எல்லையைத் தாண்டி இந்திய பூமியிலேயே எதிரித்துருப்புகளைத் தோற்கடித்தது, இரண்டாவது அம்சமாகும். மூன்றாவது, தற்போது நாம் போர் தொடுக்கும் பகுதி ராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததென்பதாகும். இதைக் கவனிக்குமிடத்து, இந்தப்பகுதியை நாம் கைவசப் படுத்துவதற்கு மிகக்கடுமையாக போரிடவேண்டுமென்ற உணர்ச்சியே நமக்கு உண்டாகிறது. இந்தியாவிலுள்ள நிலையாவையும் இன்றைய உலக நிலையையும் நாம் ஆராயுங்கால் நம்பிக்கை உணர்ச்சி இன்னும் வலுவடைகிறது. உலகநிலையை ஆராய்ந்து பார்த்தால் நமது எதிரிகள் உலகப் போர் முனையின் பல்வேறு பகுதிகளிலும் தமது துருப்புகளை ஈடு படுத்தவேண்டியவர்களாயிருக்கிறார்களென்பது தெரியவரும். ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனை ஸ்தாபிதம் நமக்கு மறைமுகமான உதவியாகும். ஏனெனில் ஆங்கிலோ—அமெரிக்கர்கள் ஐரோப்பாவில் நீண்ட காலத்திற்கு தமது முயற்சிகளை செய்துகொண்டே வருவர்.

இந்திய மக்களாகிய நாம் தற்போதைய நிலையை கவனிக்குங்கால் நமது சுதந்திரத்தை அடைவதற்கு இப்பொழுது ஏற்பட்

டுள்ள சாதகமான சந்தர்ப்பங்கள்போன்று எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை என்பது தெரியும். அச்சு தேசங்கள் ஏதேனும் ஓர் பகுதியில் பின்னடைவதெல்லாம் நம்முடைய நிலையைப் பாதிக்காது. ஆனல் எதிரி எல்லா யுத்தப்பகுதிகளிலும் பூரண முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது நமக்கு முக்கியமானதாகும். ஏனெனில் இதனல் நமது சுதந்திரத்திற்காகப் போராடி அதைப் பெறுவதற்கு இந்திய மக்களாகிய நமக்கு பொன்போன்ற சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

சில சமயக்களில் என்னிடம் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் எனக்கு நகைப்பை அளிக்கின்றன. ரோமாபுரி கைவசப்படுத்தப்பட்டதுபற்றி எனது மனோபர்வம் யாதென அன்று ஒருவர் கேட்டார். இந்தியாவினுள் நடைபெறும் போர்ராட்டத்திற்கு, இதனல் பாதகமேதும் ஏற்படப்போவதில்லையென நான் கூறினேன். எதிரிகள் இதுகால் பல்வேறு போர்முனைகளில் பூரணமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதால், இந்தியாவுக்கு அனுப்ப வேண்டுமென அவர்கள் உத்தேசித்துள்ள படைகளை, ஐரோப்பாவின் இதர போர்முனைகளுக்கு அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே, அச்சு தேசங்களுக்கு எந்த ஒரு யுத்த முனைப் பகுதியிலும் ஏற்படும் சொற்ப தோல்விகள், நம்மை பாதிக்கும்வகையில் உலக நிலையை மாற்றப் போவதில்லையென் பதை நான் மீண்டும் கூற விரும்புகிறேன். செர்பரோவை எதிரிகள் கைப்பற்றியதின் சம்பந்தமாக எனது மனோபாவம் என்னவென அன்று என்னிடம் கேட்கப்பட்டது. அப்பொழுதும் அவ்வாறே பதில் கூறினேன். என்னைப் பொறுத்தவரை இதன் முக்கியத்துவம் என்னவெனில்இந்தியாவில் நமக்கு எதிரிடையாக உபயோகப்படக் கூடிய படைகள் ஐரோப்பாவில் போர் புரிந்து மகத்தான நஷ்டங்களை அனுபவித்து வருவதேயாகும். ஜெர்மனியரின் வல்லமையை நான் நன்கு அறிவேனுதலால் ஆங்கிலோ-அமெரிக்க்ர்கள் ஐரோப்பாவிலிருந்து விரட்டப் படுவரென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அவர்கள் தமது பயனற்ற ஐரோப்பிய போரிலும் அபாரமான நஷ்டங்களை அனுபவிக்க வேண்டி நேரிடும்.

நமது எதிர்கால நம்பிக்கையை, ஸ்திரப்படுத்த இந்திய்வினுள் நிலவும் நிலை பிறிதோர் காரணமாகும். இதுவரை காங்கிரஸ் கட்சிக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்குமிடையே எத்தகைய சம

ரசமும் ஏற்படவில்லையென்பது உங்கள் அனைவருக்கும் நன்ருகத் தெரியும்.

மகாத்மா காந்தி திடீரென சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பொழுது அவர் விடுதலைக்கு காரணம் தேக நலனை யொட்டியதா, அன்றி சமரசம் செய்து கொள்வதற்கு முன்கூடிய ஏற்பாடா வென பலர் ஆலோசிக்கலாயினர். ஆனால் மகாத்மா திடீரென விடுதலை செய்யப்பட்டது வைத்திய காரணங்களை யொட்டியது தானெனவும், அரசியல் காரணமெதுவும் கிடையாதெனவும் இப்பொழுது தெளிவாகிறது. மாகாத்மா காந்திக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே சமரஸம் ஏற்படாதவரை, நாம் கவலைப்பட வேண்டிய காரணம் எதுவுமில்லை. எது எப்படியாயினும் யுத்தத்தை நடத்தியே தீரவேண்டும். மகாத்மா காந்தி சமரசம் செய்துகொண்டபோதிலும் நாம் போரைத்தொடர்ந்து நடத்தியே தீருவோம். ஆனால் காங்கிரஸாருக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே இந்தியாவினுள் சமரஸம் ஏற்படாதவரையில் நமது வேலைகள் அதிக சிரமமில்லாமலிருக்குமென்பதில் சந்தேகம் சிறிதுமில்லை. இதுவரை சமரஸத்திற்குறிய அறிகுறி எதையும் காண்பதற்கில்லை. மகாத்மா காந்தியால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் யாவும் ஒரே லக்ஷியத்தை குறிப்பிடுவது நமக்கு ஊக்கமளிக்கிறது. அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் "இந்தியாவை விட்டுவெளியேறு" என்ற தீர்மானத்தை சமர்ப்பித்தபொழுது கொண்டிருந்த மனோபாவத்தை மாற்றக்காரணமெதுவுமில்லை யென்பதை உணர்ந்துகொண்டார். நிலை இவ்வாறிருப்பதால் காங்கிரஸாருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குமிடையே சமரஸம் ஏற்படுவது சாத்யமேயில்லை. எனவே, நமது கடமை இன்னும் சுலபமாகிறது.

இந்தியாவின் சுதந்திரத்தைப் பெறுவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அதுதான் போரிடுவதாகும். அஹிம்ஸைப் போரின் மூலம் சுதந்திரம் பெறலாமென ஒருகாலத்தில் நினைத்திருந்தவர்கள் ஆயுதபலத்தை நாம் பிரயோகிக்காதவரை, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியரின் கோரிக்கைகளுக்கு இணங்க மாட்டார்களென்பதை உணர்ந்துவிட்டனர். ஆகவே மக்கள் விடுதலையில் நாட்டங்கொள்ளும் பட்சத்தில் ஒன்று அவர்கள் முன்வந்து ஆயுதந்தாங்கிப் போரிடவேண்டும்; இன்றேல் இந்தியப் போருக்கு ஆயுதபலம் கொடுத்துதவவேண்டும்.

காங்கிரசுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்குமிடையே சமரஸம் ஏற்படுவது சாத்தியமாவென்ற பிரச்னை உங்கள் மனதில் தோன்றலாம். சொல்லளவில் சமரஸம் செய்துகொள்வது எப்பொழுதும் சாத்தியமேயாகும். ஆனால் கிரியாம்சையில் சமரஸம் ஏற்படுவது அநேகமாக இயலாத காரியம். பேச்சளவில் காங்கிரஸாருக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே சமரஸம் சாத்தியமென நான் கூறுவதின் தத்துவம் என்னவென்றால், பிரிட்டிஷார் உண்மையாக சமரஸம் செய்துகொள்ளத் தயாரானால், இதனால் அவர்களுக்குச் சாதகமும், இந்திய மக்களுக்குப் பாதகமும் ஏற்படும். இந்திய மக்களுக்கு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும். அந்த சர்க்கார் யுத்தத்தில் பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் ஒத்துழைக்கவேண்டுமென்ற அடிப்படையை யொட்டியே சமரஸம் செய்துகொள்வது சாத்தியமாகும். இதை அடிப்படையாகக்கொண்டு பிரிட்டிஷார் சமரஸம் செய்துகொள்ளலாம். ஆனால் சாதகம் அடைவோர் அவர்கள். பாதகம் அடைவோர் நாம்.

கிரியாம்சையில் கவனிக்குங்கால் சமரஸம் செய்துகொள்வது பெரும்பாலும் இயலாத காரியம். பிரிட்டிஷார், இந்தியாவின் அரசாளும் பொறுப்பை இந்திய மக்களிடம் ஒப்படைக்க முன்வரமாட்டார்களாதலால் கிரியாம்சையில் சமரஸம் செய்துகொள்வதென்பது இயலாத காரியம். தக்க பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்திய சர்க்காரை ஸ்தாபிக்கக்கூடிய அதிகாரம் பெறும் பட்சத்தில் பிரிட்டிஷாருடன் சமரஸம் செய்துகொள்ளவும், யுத்தத்தில் அவர்களுடன் ஒத்துழைக்கவும் சில இந்தியத் தலைவர்கள் தயாராகவுள்ளனர். ஆனால் அதிகாரத்தை இந்தியரின் கையில் ஒப்படைப்பதில் பிரிட்டிஷாருக்கு நம்பிக்கை கிடையாது. ஏனெனில், பிரிட்டிஷார் இந்தியர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்த பின்னர் இந்தியர்கள் தமக்கு உதவிசெய்ய மறுத்தால் நிலை கேவலமாகி விடுமோவென பிரிட்டிஷார் எப்பொழுதுமே நினைக்கக்கூடியவர்கள்.

ஆகவே, செயல்முறையில் சமரசம் சாத்தியமில்லை. மகாத்மா காந்தியோ வேறு எந்த காங்கிரஸ் தலைவரோ பிரிட்டிஷ் சர்க்காரிடம் சரணடைந்து "இந்தியாவைவிட்டு வெளியேறு" என்ற தீர்மானத்தை வாபஸ் வாங்குவாராவென்பது மற்றோர் கேள்வியாகும்.

இதை ஆராயுங்கால் மகாத்மா காந்தியின் போக்கில் இது வரையில் எத்தகைய பலஹீனமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவர் வயோதிகராயிருந்த போதிலும், தேகம் மிகப் பலஹீனமாக இருந்தபோதிலும் அவரது அரசியல் போக்கில் எத்தகைய தளர்வையும் காண்பதற்கில்லை. அதற்கு மாருக தமக்கும் மகாத்மா காந்திக்கு மிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்தை பிரசுரிப்பதில் பிரிட்டிஷார் அதிக ஆவலுடன் உள்ளனர். இதிலிருந்து அவர்கள் மகாத்மாஜியை மீண்டும் கைது செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயத்தை இந்தியாவிலும் நேச நாடுகளிலுமுள்ள பொது ஜனங்களிடையே உண்டுபண்ணுவதற்கு முயற்சிக்கின்றன ரென்பது நன்கு புலனுகும். பிரிட்டிஷார் 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் மகாத்மாஜியைக் கைது செய்தபொழுது அவர் சமரஸம் செய்துகொள்ளும் மனோபாவத்துடனில்லை என்பதை விளக்க தஸ்தாவேஜிகளைப் பிரசுரிக்க பிரிட்டிஷார் முற்பட்டனரென்பதை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

இந்த கடிதப்போக்குவரத்துகளைப் பிரசுரிப்பதின் மூலம், காந்திஜியைக் கைது செய்வதைத் தவிர வேறு வழியில்லையென்ற அபிப்பிராயத்தை மக்களிடையே புகுத்த வேண்டுமென அவர்கள் விரும்புகிருர்கள். இத்தியாதி காரணங்களாலே மகாத்மா காந்தியோ அன்றி இதர காங்கிரஸ் தலைவர்களோ பிரிட்டிஷ் சர்க்காரிடம் நிபந்தனையற்ற சரணுகதியடைவாரென்பது சாத்தியமல்லவெனக் கூறுவேன். ஆகவே, காங்கிரஸார் பிரிட்டிஷார் சர்க்காரிடம் சமரஸம் செய்துகொண்டு சரணடையாத வரையில், இந்திய மக்கள் பிரிட்டிஷ் எதிர்ப்பு உணர்ச்சியுடனேயே வாழ்ந்து வருவாரென்பதை யாவரும் அறிந்து கொள்ளலாம். நமது போர் முயற்சிகள் அபிவிருத்தியடைய அடைய சுதந்திரத்தைப்பெற போரிடுவதைத் தவிர்த்து வேறு வழியில்லை, யென்பதை உணர்ந்து, ஒன்று இந்த யுத்தத்தில் கலந்து கொள்வார்கள்; அன்றேல் நமது யுத்தத்தை நடத்த போதிய உதவிகளைப் புரிவார்கள். கிழக்கு ஆசியாவிலும், போர் முனைகளிலும் நாமடைந்த வெற்றிகளும், உலகத்திலும், இந்தியாவிலும் நிலவும் சாதகமான நிலையும் ஒன்று கூடி, நமது எதிர்காலப் போராட்டத்தில் சுதந்திரத்தை அடைவோமென்ற நம்பிக்

கையைக் கொடுக்கின்றன என்று முடிவாகக் கூற விரும்பு கிறேன்.

அடிமை இந்தியாவைப் பார்த்தும், அயர்ந்து உறங்கும் இந்தியன் அந்நியனே !

அனுபந்தம் 11

"எதிர்கால வேலைத்திட்டம்"

(போஸ் அறிக்கை)

4-7-1944-ந் தேதியன்று மேன்மைதங்கிய நேத்தாஜி தமது அரசாங்கத்தின் எதிர்கால திட்டம் பற்றிப் பின்வரும் அறிக் கையை வெளியிட்டார் :—

இன்றைக்கு பன்னிரண்டு மாதங்களுக்கு முன்னர் கிழக் காசிய இந்திய சுதந்திர இயக்கம் புத்துணர்ச்சி பெற்றதால், அதனுடைய நடவடிக்கைகளனைத்தும் முக்கியமானதோர் லட்சி யத்தை அடையும் விதத்தில் ஐக்கியப்படுத்தப்பட்டன. ஆயுதந் தாங்கிய போரை ஆரம்பித்து சுதந்திரத்தை அடைவதே அந்த லட்சியமாகும். ஆஸாத் ஹிந்த் ராணுவம் இந்திய எல்லையைக் கடந்து தற்சமயம் விடுதலைப் போரை இந்திய மண்ணில் நடத்தி வருகிறது.

இப்புதிய அபிவிருத்தியின் பயனாக செயலாற்றும் முறை களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்பெல் லாம் நமது நடவடிக்கைகளனைத்தும் கிழக்காசியாவில் மட்டும் பந்தத்துவமுடையனவாயிருந்தன. ஆனால் தற்கால நிலையோ பெரிதும் மாறுபட்டுள்ளது. விடுதலையடைந்த இந்திய பிரதேசங் கள் பலவற்றை நாம் அடைந்துள்ளது, அப்பிரதேசங்களின் நிர் வாக, புனருத்தாரணப் பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது. மகோன்னத வெற்றிகளோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நமது ராணுவ நடவடிக்கைகளால், இந்தியாவினுள் தொடர்ந்து முன் னேறுவதெப்படி, தேசத்தில் புரட்சியை உண்டாக்குவது எப்படி என்ற பிரச்னைகளெல்லாம் எழுந்துள்ளன. இக்காரணங்களி னல் எதிர்காலத்தில் நாம் மூன்று மண்டலங்களில் நமது நட வடிக்கைகளைக் கையாள வேண்டியவர்களாயுள்ளோம். முதலா வதாக, நமது அரசியல், ராணுவ அலுவல்களைக் கவனிக்கும்

அடித்தளமாக கிழக்காசியா இருந்துவரும். இரண்டாவது மண்டலம், விடுதலையடைந்த பிரதேசங்களாகும். நிர்வாக, புனருத்தாரண சிக்கல்களை அறுத்தெறிவதும் நமது நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதுமே இம்மண்டலத்தில் நடைபெறவேண்டிய வேலைகளாகும். மூன்றுவதுமண்டலம், எதிரிகளால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள பிரதேசங்களாகும். புரட்சி ஏற்படுத்தப்பட் வேண்டியதும் நமது ராணுவம் உட்புகவேண்டியதும் இப்பிரதேசத்தில் நடைபெறவேண்டிய நிகழ்ச்சிகளாகும்.

1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ந் தேதிவரை கிழக்காசியாவில் இந்திய சுதந்திர இயக்கம் இந்திய சுதந்திரக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்தது. ஆஸாத் ஹிந்த் பௌஜ் (இந்திய தேசிய ராணுவம்) கழகத்தின் ராணுவ சாதனமாக விளங்கி வந்தது. 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ந் தேதியிலிருந்து சுதந்திர இயக்கத்தின் தலைமைப் பதவியை தற்காலிக அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. எனவே, இந்திய சுதந்திரக் கழகமும், ஆஸாத் ஹிந்த் பௌஜும் அதன் தலைமையின்கீழ் வந்தன. சமீபகாலம்வரை ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்தின் அலுவல்களனைத்தும் கிழக்காசியாவில் கட்டுண்டிருந்தன. தற்கால நிலைமை பெரிதும் மாறுபட்டுள்ளதால் தற்காலிக அரசாங்கம் எதிர்காலத்தில் தனது அலுவல்களை புனருத்தாரணம் செய்து விஸ்தரித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது கிழக்காசியா, விடுதலையடைந்த பிரதேசம், எதிரிகள் ஆக்ரமித்துள்ள இந்தியா என்ற முப்பிரதேசங்களிலே தற்காலிக அரசாங்கத்தின் கவனம் ஈடுபடுத்தப்படும். எனவே, தற்காலிக அரசாங்கத்தினது மந்திரிகளும் ஆலோசனையாளர்களும் இம் முப்பிரிவுகளிலும் குறிப்பிட்ட பொறுப்புகளை பகிர்ந்தளிக்கப் படவேண்டியவர்களா யுள்ளார்கள். கிழக்காசியாவின் வேலைகளை ஒரு பிரிவினரும், விடுதலையடைந்த பிரதேசத்திய அலுவல்களை மற்றொரு பகுதியினரும், எதிரியின் கைவசமுள்ள பிரதேசங்களில் நடைபெறவேண்டிய காரியாதிகளை பிறிதொரு பிரிவினரும் கவனித்துக் கொள்ளவேண்டி நேரிடும்.

கிழக்காசியா நடவடிக்கைகளின் பொறுப்பை வகிக்கும் முதலாவது பிரிவினர் மந்திரி சபையின் கிழக்காசிய சபை (கமிட்டி) யென்றும், விடுதலை பெற்ற பிரதேசங்களில் அலுவல்

புரியும் இரண்டாவது பிரிவு மந்திரிசபையின் விடுதலையடைந்த பிரதேச சபையென்றும், மூன்றுவது பிரிவினர், மந்திரி சபையின் யுத்தசபையினர் என்றும் அழைக்கப் பெறுவர்.

கிழக்காசியாவில் ஆள், பொருள், தளவாட சாமான்கள் யாவும் எதிர்காலத்தில் மிகவும் மும்முரமாக திரட்டப்பட வேண்டியுளது. இதைக் காரியாம்சத்தில் நிறைவேற்றுவதற்காக பிரத்தியேகமாக மந்திரி இலாகாக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் அல்லது இருக்கும் மந்திரி இலாகாக்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும். நிதி மந்திரி இலாகா பெரிதாக்கப்படுவதோடு அதன் அலுவல்களும் அதிகமாக்கப்படும். ஆஸாத் ஹிந்த் பௌஜிற்கும், ஜான்ஸி ராணி படைக்கும், ஆஸாத் ஹிந்த் தால் பிரிவிற்கும், இந்திய சுதந்திரக் கழகத்தின் அன்றாட வேலைகளைக் கவனித்துக் கொள்வதற்கும், பற்பல பிரிவுகளைச் சார்ந்த ஆண், பெண் மக்களைத் திரட்டுவதற்கென படைதிரட்டு மந்திரி இலாகா புதிதாக அமைக்கப்படும். சமீப காலத்தில் நிர்மாணம் செய்யப்பட்ட சாதனத் திரட்டு மந்திரி இலாகா (சப்ளை இலாகா) விஸ்தரிக்கப்படவேண்டியிருக்கிறது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளதும், இனிமேல் புதிதாக ஏற்படப் போவதுமான மந்திரி இலாகாக்கள் தத்தம் கடமையை செய்து வரவேண்டியிருக்குமென்ருலும் முக்கிய பொறுப்பு, நிதி, படைதிரட்டு, சாதனத் திரட்டு மந்திரி இலாகாக்களேயே சார்ந்திருக்கும். மந்திரி சபையின் கிழக்காசிய சபையின் பொறுப்பு கிழக்காசிய நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டுவதாகும். சாதாரணமாக கிழக்காசியாவில் வேலை செய்கிறவர்களே இம்மந்திரி சபையில் அங்கம் வகிப்பர்.

இந்தியாவில் விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களின் நிர்வாகத்திற்கும், புனருத்தாரணத்திற்குமான திட்டங்கள் யாவும் வகுக்கப்பட்டுள்ளன. சந்தர்ப்பம் வாய்த்ததும் அவை யாவும் நிறைவேற்றப்படும். இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்காக ஆஸாத் ஹிந்த் தால் பிரிவில் போதிய அதிகாரிகள் தயாராயுள்ளனர். ஆஸாத் ஹிந்த் தால் பகுதியின் அங்கத்தினர்களில் அநேகர் தற்சமயம் இந்தியாவினுள்ளேயே இருந்துவருகின்றனர்; அல்லது போர்முனையை அடுத்த பிரதேசங்களில் இருந்துவருகினறனர். விடுதலையடைந்த பிரதேசங்களில் வேலை செய்வதற்கென்றே பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ள மந்திரி

களையும் ஆலோசனையாளர்களையுமே விடுதலையுற்ற பிரதேசங் களின் மந்திரி இலாகா கொண்டிருக்கும். அவர்களெல்லோரும் சமயம் வாய்த்தவுடன் அப்பிரதேசங்களுக்குச் செல்லத் தயாரா யுள்ளனர். விடுதலையடைந்த பிரதேசங்களில் செயலாற்றும் பொறுப்பு இம்மந்திரி சபையைச் சார்ந்ததாகும்.

எதிரிகளின் வசமுள்ள பிரதேசங்களில் யுத்தம் நடத்தப் படவேண்டிய முறைகளைப் பற்றியும், பிரசாரம், புரட்சிவேலைகள், நிர்வாகம், புனருத்தாரணம் ஆகியவைகளைப்பற்றியும் கவனஞ் செலுத்துவதில் ஈடுபடுபவர்களே மந்திரிசபையின் யுத்த சபை யில் அங்கம் பெறுவர்.

தற்கால நிலைகளைச் சமாளிப்பதற்காகவே மேலே கூறிய வாறு நமது மந்திரி சபை மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட் டுள்ளது. என்றாலும் அடையக்கூடிய பயன்கள் யாவையு மடைந்து, நமது முக்கிய குறிக்கோளாகிய இந்தியாவின் சுதந் திரத்தை அடையும் நோக்குடன் மந்திரி சபையின் இம்மூன்று பிரிவுகளும் ஐக்கியப் படுத்தப்படும் வகையில் நமது அரசாங்கத் தில் ஒற்றுமை பாதுகாக்கப்படவேண்டும்.

அனுபந்தம் 12

இந்திய தேசீய ராணுவம்

(இந்திய தேசீய ராணுவ முதல் வருஷ விழாவில் நேத்தாஜியின் ரேடியோப் பிரசங்கம்.)

தோழர்களே,

பனிரெண்டு மாதங்களுக்குமுன், இதே நாளில், இந்திய விடுதலை ராணுவத்தின் விஸ்தரிப்பை ஷோனனிலிருந்து உலகிற்கு ஒலிபரப்பும் பெருமையைப் பெற்றேன். இந்தியாவின் விடுதலைக்காக-இந்தியாவின் சார்பிலேயே, இதே ராணுவம் சண்டையிடுகிறது. இதற்காகவே நான் பெருமை கொள்கிறேன். இந்தியாவிற்குள்ளேயே, தேசீய சேனையை அமைக்க முடியாதென்று, நமது கடந்தகால அநுபவங்கள், திட்டமாய்த் தெரிவித்துவிட்டன. நமது நெஞ்சம் ஒவ்வாத அந்நியர்களிடம் நமது உரிமை தவியாய்த் தவிக்கிறது. இதை நாம் பறிப்பதற்கு, பலமுள்ள சேனுதிக்யம் அவசியம் தேவை. இத்தேவையை, அடுத்துள்ள நமது நேச நாடுகளில்தான் பூர்த்தியாக்க முடியும். நமது நேசநாடு, ஆங்கிலேயருக்கு எதிர்நாடாக இருக்க வேண்டும். இவை அப்படியப்படியே அமைவதற்கு உலக மகா யுத்தம் ஒன்று தோன்றவேண்டும். அதில்தான் நமது எண்ணம், செயலுக்கு வரமுடியும். இவைதான் நாம் இறுதியாகச் செய்த முடிவு!

1939-ல் உலக யுத்தம் எழுந்தது. நமது ஆசை நெஞ்சில், வெற்றியின் நிழல் படர்ந்தது. *1939*-ல் தோன்றிய உலக யுத்தம் விரிந்து, *1941*-ல் கிழக்காசியாவில் பரவியது. தோல்வி காணுத-ஜப்பானியர்களின் வீரக்கனல், ஆங்கிலோ-அமெரிக்க கிழக்காசிய ஆதிக்கத்தை எரித்துச் சாம்பலாக்கி காலக்காற்றில் ஊதிவிட்டது. பிறகுதான் இந்தியர்களின் மனதில் பல வருஷங்களாகப் புதைந்துகிடந்த தீவிரம், எதேச்சைடையும் சந்தர்ப்பம் வாய்ந்தது. கிழக்காசியாவின் முப்பது லட்சம் இந்தியர்களின்

ஹிருதயங்கள் புதிய உணர்வில் பொங்கியது. இதை அவர்கள் உபயோகித்துக்கொள்ளத் தாமதிக்கவில்லை. இந்திய சுதந்தரக் கழகத்தை ஸ்தாபித்தார்கள். இதோடு, இந்திய தேசிய சேனையை அமைக்க முயன்றார்கள். இம்முயற்சி பயனளித்தது.

இந்திய தேசிய ராணுவ ஜெனனம், பிரிட்டிஷாரை கதி கலங்கச் செய்தது. நெருங்கிவரும் முடிவு நாளைக் கண்டு மருண்டார்கள். இந்திய விடுதலை ராணுவ விஸ்தரிப்பை ஒரு சமயம் மறைக்க முயன்றார்கள். ஆனால் உண்மையான நிலைமைகளை நம் ரேடியோச் செய்திகள் எங்கும் பரப்பிவிட்டன. இதில், எதிரிகளின் சர்துர்யம் பயன்காண முடியவில்லை. எனவே டில்லி இந்திய எதிர்ப்பு ரேடியோ பிரசாரம் வேறுவழியில் திரும்பியது. கிழக்காசியாவின்பல பாகங்களிலுமுள்ள இந்திய பொதுமக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு, விடுதலை ராணுவத்தோடு இணைந்துவிட்டார்களென்ற விசேஷச் செய்தியை, திரித்துக் கூறினார்கள். "இந்திய யுத்தக் கைதிகள், கட்டாயப்படுத்தப்பட்டு, நிப்பன் ஆதிக்கத்தில் ராணுவமாகச் சேர்ந்திருக்கிறார்கள்'' என்று கூறினார்கள். பிறகு இந்தியப் பொதுமக்களும் தைரியமாக ராணுவத்தில் சேருகிறார்கள் என்ற செய்தியை அகில இந்தியாவும் கேட்டுவிட்டது. ஆகவே, எதிரிகளின் பிரசாரம் நீடிக்கமுடியவில்லை. அவர்கள் யுக்தி, மற்றொரு முறையைக் கையாண்டது. "யுத்தக் கைதிகள் இந்திய தேசிய சேனையில் சேர மறுத்துவிட்டதால், பொது ஜனங்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்'' என்று புரளி செய்தார்கள்.

யுத்தக் கைதிகளை இணைக்க முடியாதபோது, ராணுவமல்லாத பொதுஜனங்களை யுத்த சைன்யத்தோடு சேரவைக்க முடியுமா? இந்த உண்மையை டில்லி, பேர்லி மேதாவிகள் உணர முடியவில்லை. இம்மாதிரியான அறிவற்ற பிரசாரங்கள், எதிரிகளிடமிருந்து வெளிவருவதில் ஆச்சரியமே இல்லை. பொய் வழக்கை விவாதிக்கும் ஒருவன், சொந்த அபிப்பிராயத்தை வெளியிடுவதில் வெற்றியை எதிர்பார்க்கவே மாட்டான். எதிர்ப் பிரசாரம் எப்படி இருந்தாலும், இன்று நமது ராணுவத்தில், பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் சேர்ந்திருந்தவர்களும், பொது ஜனங்களும் கலந்தே, கம்பீரமாகக் காட்சியளிக்கிறார்கள் என்பதைச் சொல்லும் நிலையிலேயே இருக்கிறேன். கூலிப்படைகளை ராணுவத்திற்கு கட்டாயமாய் இழுக்க முடியும். ஆனால், தொண்டர்

படையை பலாத்கரிப்பதென்பது முடியவே முடியாது. ஒருவனை கட்டாயப்படுத்தி துப்பாக்கியை தோளில் தாங்கவைக்க முடியும். ஆனால், அவனுக்குச் சொந்தமில்லாத காரியத்திற்கு உயிரைக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்க முடியுமா? ஒருதுளியேனும் பகுத்தறிவு உள்ளவன், இதைச் சிந்தித்து முடிவுக்கு வந்துவிடுவான்.

இப்பொழுது நமது ராணுவ வீரர்களும், அதிகாரிகளும், அரக்கானிலிருந்து அஸ்ஸாம்வரை தெற்கு-வடக்குப் பரப்புகளிலுள்ள ஒவ்வொரு யுத்த முனையிலும், தங்கள் வாழ்வை மறந்து போராடுகிறார்கள். இவர்களை, "பலாத்காரச் சேவகர்கள்" என்று எவராவது எண்ணமுடியுமா? இவ்வுண்மை எதிரிகளுக்கும் தெரிந்ததே. இதனால்தான் அவர்களின் பிரசார உபாயம், வெறும் நிந்தனையில் நிலைத்திருக்கிறது. வழக்கின் முடிவு, தோல்வியை நாடிவிட்டால், பிறகு எழுவது நிந்தனைதான். இந்திய தேசிய ராணுவம், உண்மையான ராணுவமல்ல; அது வெறும் பிரசாரத் தந்திரம், அதனால் சண்டையிடவே முடியாது, என்று கொஞ்ச நாள் முன்பு பிதற்றினார்கள். பிறகு இந்திய விடுதலை ராணுவம் அவர்கள் திட்டப்படி இந்தியாவின் எல்லையை கடக்கவில்லை என்றார்கள். இப்பொழுது நமது தேசிய ராணுவம், இந்திய எல்லையைத் தாண்டி, இந்திய பூமியிலேயே போரிடுகிறது. இதைப் பார்த்து எதிர்ப் பிரசாரகர்கள், தங்களுடைய கடைசி முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். நாம் உபயோகிக்கிற 'டில்லி செல்வோம்" என்ற வார்த்தைப்படி, நமது டில்லிப் பிரயாணம் குறித்தகாலப்படி முடிவடையவில்லை யென்று ஏளனம் செய்து நிந்திக்கிறார்கள். இந்திய எல்லையைக் கடக்கிற விஷயத்தில் மிகச்சிறிய தவக்கம் ஏற்பட்டதென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் கடந்த பன்னிரெண்டு மாதங்களில் நமது முன்னேற்ற வேலைகள் கொஞ்சமும் தயங்காமல், திட்டத்தை அனுசரித்தே வந்திருக்கின்றன. எதிர்காலத்தில் நமது வேலைகள் திட்டப்படி நடந்தே தீரும் என்பதை தீர்க்க திருஷ்டியுடன் கூறுகிறேன்.

அன்பர்களே! இந்திய எல்லையைக் கடந்த பிறகுதான் நமது போரின் உண்மையான நிலை, மிக உன்னத தசையை அடைந்து, கஷ்டமான-நீண்ட போராட்டம் நடக்கவிருக்கிறதென்று சென்ற ஆகஸ்ட்டிலிருந்து நான் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன். இந்தியாவை இழந்துவிட்டால், பிரிட்டன் மங்கிவிடுமென்பதை நமது எதிரிகள் உணர்ந்து விட்டார்கள்.

இந்த யுத்தம், அவர்களது மேலாதிக்கத்தை சமாப்தி செய்து விடும். ஆகவே அவர்கள் சுயரூபத்துடன் பலமாகவேதான் எதிர்த்துப் போர்புரிவார்கள். எனவே நாம் நீண்ட-கொடிய போரை நடத்த தயாராயிருக்கவேண்டும். நமது டில்லிப் பிரயாணம் எளியதல்ல. சரித்திரம் அறியாத போரை நடத்தி நமது முழு பலத்தையும் செலுத்தித்தான், நமது வழியைக் கடக்கவேண்டும். ஆனல் எத்தனை பெரிய போராயினும் இறுதி வெற்றி நம்முடையதே! டில்லி வைசிராய் மாளிகையில் நமது மூவர்ணக் கொடி பறப்பதைக் காண்பதற்கு பன்னிரண்டு மாதங்களல்ல, இருபத்துநான்கு மாதங்கள் நமது யுத்தம் நீடித்தாலும், அதில் நம்மில் ஒருவர் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

ராணுவ வீரர்களும், பொதுஜனங்களும் கூட்டாக உள்ளதே நமது விடுதலை ராணுவம் என்பதை ஏற்கனவே தெரிவித்து விட்டேன். இதில் ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் சேர்ந்திருக்கிறுர்களென்பதையும் அறிவிக்கிறேன். இன்று இந்தியாவுக்குள் போரிட்டுக் கொண்டிருக்கிற நமது வீர ஆண்களோடு ஜான்ஸி ராணி பெண் படையினரும் சேர்ந்து வெற்றிப் போரை நடத்த போர்முனை செல்லும் நாள் சமீபத்திலேயே இருக்கிறது. நமது ராணுவத்தினருக்கு புதிய புதிய உதவியாளர்கள் கிடைக்கிறுர்கள். ஆரம்ப தசையிலிருந்து நமது ராணுவத்தில் சேரவருகிறவர்களின் தொகை ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே வருகிறது. அவர்களுக்குச் சரியான பயிற்சியளிக்கும் விஷயத்தில்தான் நமது கஷ்டம் கொஞ்சம் வளர்ந்திருக்கிறது. நமது போர்முடிவு காணும் வரை, படை வீரர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே இருக்கும்.

அன்பர்களே! இந்தியர்கள் நிறைந்த, இந்தியர்களாலேயே பயிற்றுவிக்கப்பட்டதுதான், விடுதலை ராணுவம். இந்த ராணுவம், இந்தியத் தலைமை அதிகாரிகளின் கீழேயே போரிடுகிறது. எதிரிகளின் பொய்ப் பிரசாரத்திஞல் விடுதலை ராணுவத்தைப் பற்றி சிலர் வேறு விதமாகக் கூட எண்ணலாம். ஆனல் இந்திய பூமியில் நமது தேசிய ராணுவத்தை இந்திய பொதுமக்கள் நேரில் பார்க்கிறபோதுதான் அளவு மீறிய ஆனந்தத்தில் மூழ்குவார்கள்.

அன்பர்களே! இனியொரு செய்தியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நமது தேசிய ராணுவம், மகத்தான ஏற்பாடுக

ளுடன் இருக்கிறது. அதன் பொருளாதாரத்துறையை, இந்தியர்களின் சொந்தப்பணங்களே, பலப்படுத்துகிறது. ஆனால், நிப்பன் அரசாங்கம், ராணுவம், இவ்விரண்டின் ஆதரவும் நமக்கு அவசியத் தேவையாயிருக்கின்றன. சென்ற வருஷம் நான் விரும்பிய தொகைகளுக்கு அதிகமான தொகைகளை, கிழக்காசிய இந்தியச் செல்வர்கள் அள்ளிக் கொடுத்து வருகிறார்கள். நமது விடுதலைப்போரின் முடிவுவரை, நமது பண ஊற்று, பொங்கி வழிந்துகொண்டே இருக்கும். இது மாத்திரமல்ல. நமது படையினருக்கு வேண்டிய சாதனங்களை, கிழக்காசிய இந்தியர், வியாபாரிகள் சளைக்காமல் அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். இதிலிருந்து இந்திய சுதந்திர இயக்கம் முழுவதும், சுத்தமான, கலப்பில்லாத இந்தியர்களின் சர்வ சக்திமயம் என்பது தெளிவுபடுகிறது. பரிபூரண வெற்றி கிடைக்கிறவரை உடையாத உறுதியுடனும், தளராத ஆண்மையுடனும் நமது போர் நடக்கு மென்பதைத் தெரிந்து, அதற்கு ஆயத்தமாகவே இருக்கிறோம்.

நண்பர்களே! முடிவாகச் சொல்லுகிறேன். நமது தேசீய ராணுவம் தனித்தொகுதியைச் சார்ந்ததல்ல; சர்வாம்ஸப் படை திரட்டின் திட்டத்தை ஒப்பி—தமது வாழ்வை விடுதலை இந்தியாவுக்கு நிவேதிக்க இசைந்து—தாமாகவே முன்வந்த முப்பது லட்சம் கிழக்காசிய இந்தியர்களால் அமைக்கப்பட்டதுதான் ஆஸாத் ஹிந்த் பௌஜ்! ஆகவே விடுதலை இந்தியாவை விரைவினில் காணமுடியுமென்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை. இந்தியாவுக்குள், நமது ராணுவப் பிரதிநிதிகள் சென்று மௌனமாக, உருப்படியான வேலைகளைச் செய்து வருகிறார்கள். இந்தியாவுக்குள் புகைந்து கொண்டிருக்கிற புரட்சி நெருப்பு, ஜ்வாலை எழும்பிப் பரவி, நமது பிரவேசப் படைகளுடன் கலக்கவைக்கும் தினத்தைக்கொண்டுவர அவர்களது முயற்சி தீவிரமடைந்து வருகிறது. கிழக்கிந்தியாவின்எல்லைவரை—வடக்கு-மேற்கு பரப்பு வரை—இருக்கிற யுத்தமுனை ஒன்றை, இன்று நாம் இந்திய தேசீய யுத்த முனையாக ஆங்கிலோ—அமெரிக்கருக்கு எதிராக அமைத்துக்கொண்டு விட்டோம்.

இந்திய விடுதலை இயக்க அபிமானிகளும், அதிகாரிகளும், தேசீய ராணுவத்தார்களும் ஒன்றுபட்ட மனதோடு எனக்கு தலைமைத்தளபதி ஸ்தானப் பெருமையை அளித்தது, என் வாழ

வின் அற்புதமான அந்தஸ்து என்பதை எண்ணி உள்ளம் குளிர்கின்றேன். தேசிய ராணுவம், தற்காலிக சர்க்காரின் ஜீவன். தற்காலிக சர்க்கார், அதன் ராணுவம், இந்துஸ்தான வர்க்கத்தின் ஊழிய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வேலை, விடுதலை இந்தியாவை காண்பிப்பது! இந்தியா பூர்ண சுயராஜ்யம் பெற்ற பிறகு, அரசியல் அமைப்பிற்கு திட்டம் வகுக்கும் பொறுப்பு, அகில இந்திய பொது மக்களைச் சார்ந்தது. தற்காலிக சர்க்காரின் லட்சியம், நிறந்தர சர்க்கார் இரண்டும் கைகூடியதும் இந்தியர்களின் விருப்பப்படி தற்காலிக சர்க்கார் கலைக்கப்படும். இந்த புனித நாளின் உதயத்திற்காக நாம் அரும்பாடுபடுகிறோம். வியர்வையைக் கொட்டுகிறோம்! போராடுகிறோம்!

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 13

‘கிழக்காசியப் போர் இன்று நமதே’!
(போஸ் பிரசங்கம்)

உபதளகர்த்தர் லெப். பியாரா சிங் அவர்களுக்கு “VIRE-E-HIND” என்ற கௌரவப்பட்டத்தை 4-7-44-ல் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் பரிசளித்துச் செய்த பிரசங்கம்:

பெருமை மிக்க சகோதரி, சகோதரர்களே!

இந்திய விடுதலை ராணுவத் தோழர்களே!

நமது பரம்பரை விரோதிகள் மீது உண்மையான நடவடிக்கைகளை நமது ராணுவ வீரர்கள் அரக்கானில் எடுத்துக் கொண்ட தினம் 4-2-1944! இத்தினந்தான், நமது இறுதிப் போரின் ஆரம்ப நாள். இந்நாளின் பெருமை, உரிமைச் சரித்திர வரிகளுடன் கலக்கவேண்டியதே! ஆனால் அத்தனை பெரிய அம்சம் அரக்கான் யுத்தத்திற்கு அமையவில்லையாயினும், அதன் சிறப்பின் பொலிவிற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நமது எதிர்ப்பின் அலைகள் எதிரிகளை மோதியது முதன் முதலில் அரக்கானில் தான்! மற்றுமொன்று, நமது ராணுவ வீரர்களை வெற்றி ஒளியில் குளிப்பாட்டியது; சுதந்திரத்தின் முதற்படியில் அடிவைக்க

விட்டது; எதிர்கால வெற்றியை, கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது. இவையெல்லாம் அரக்கான் யுத்தத்தின் பலன்கள்! இந்திய தேசியராணுவத்தின் தளராத ஆண்மை, தாய்த் திரு நாட்டின் விடுதலைக்காக அவர்கள் இறங்கியுள்ள காரியத்தின் விறுவிறுப்பு—இதில் ஒரு விநாடி கூட அவர்கள் அயர மாட்டார்களென்ற உறுதி—இவைகளை படம் பிடித்துக் காட்டியது அரக்கான் யுத்தந்தான்!

தாளிட்டுக்கிடந்த அரக்கான் யுத்தமுகப்பைத் திறந்தாய் விட்டது. இதற்குள் வெற்றிக்கொடியுடன் ராணுவ வீரர்கள் பிரவேசித்துவிட்டார்கள். இதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்று காரியத்தில் காட்டியவர் மேஜர் எல். எஸ். மிஸ்ரா. இவருக்கு "SARDAR-E-JANG" என்ற பதக்கத்தைப் பரிசளிக்கும் பாக்கியம் மார்ச் 22-ல் எனக்குக் கிட்டியது. அதன் பிறகு, அதே யுத்தகளத்தில் ஆர்வமுடன் போராடிய ஒருவரைப்பற்றி, உங்கள் முன் பேசும் கௌரவம் எனக்கில்லை. நமது ராணுவத்தார்கள், கடமையில் பிறழாதவர்கள். இவர்கள் தொகுதியில், இன்று இங்கிருக்கிற லெப். பியாரா சிங் தனிச்சிறப்புடன் இயங்குகிறார். இவர், நமது சேனை வீரர்களுக்கு சிறந்த வழிகாட்டி. இவருடைய சுதந்திர ஆர்வம் எந்தப் பிடிப்பிற்கும் கட்டுப்படவில்லை. நமது நிர்வாகத் திறமையை உச்சத்தில் வைத்து, நடக்கவிருக்கிற அத்தனை யுத்த களங்களிலும் போரிடப்போகிற வீரர்களுக்கு வெற்றியின் நிழலாக, லெப். பியாரா சிங்கின் வீரம் படிவாகிறது. 5-2-44-ல் நமது ராணுவ வீரர்கள் எதிரிகளுடன் நடத்திய போரில், லெப். பியாரா சிங் காட்டிய வீரமும், அடைந்த வெற்றியும், உயர்ந்த ஸ்தானத்திற்குரியவை. இதற்காக அவருக்கு "VIRE-E-HIND" என்ற கௌரவப் பதக்கம் அளிக்கப்படுகிறது. இப்பதக்கம், தனிப்புகழ் சூடும் முதல்தர வீரர்களுக்கே அளிக்கப்பெறும் பெருமையுள்ளது. பிப்ரவரி மீ 5உ சம்பவத்திற்குப் பிறகு, லெப். பியாரா சிங், மற்றும் இரண்டு மகத்தான எதிர்ப்போராட்டங்களில் கலந்துகொண்டார். ஒன்று பிப்ரவரி 16ல்; மற்றொன்று 20-21 தேதிகளில். கடைசி எதிர்ப்பில், ஒரு பீரங்கித் தாக்குதலால், அவருடைய இரண்டு கால்களும் புண்பட்டு, உபயோகப்படாத நிலையில் இருந்தன. அப்பொழுது அவரின் உடல் நிலை அபாயகரமாகத் தோன்றியதால், யுத்த முனையிலிருந்து, சிகித்ஸைக்காக கொண்டுவரப்பட்டார். இப்

பொழுது நமது ஆஸ்பத்திரியில் குணமடைந்து வருகிருர் என்பதைச் சொல்ல மகிழ்கிறேன்.

லெப். பியாரா சிங், இந்த கௌரவப் பதக்கத்தைப் பெறுவதற்கு முற்றும் தகுந்தவர். இவர் வார்த்த ரத்தத்தின் விளைவுதான் இப்பரிசு! இவருக்கு என் கைகளாலேயே இப்பரிசை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. என்னுடைய அரசாங்கம், ராணுவம், என் சொந்தம், அவ்வளவிலும் லெப். பியாரா சிங்கின் மகாத்மியம் பரிமளிக்கிறது.

நமது ராணுவத்தின் வீர நிலையைப்பற்றிச் சில வார்த்தைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அரக்கான் யுத்த வெற்றிக்குப் பிறகு, நமது ராணுவங்கள், இந்தோ-பர்மிய முனையில் இன்னும் பல பாகங்களிலும் போர் தொடுத்திருக்கின்றன. நாகா, டிடிம், காலடன் பகுதிகளில் நிப்பன் வீரப்படைகளுடன், நமது வீரர்கள் கூடிப் போரிட்டு, இப் பகுதிகளைக்கடந்து, மணிப்பூர், அஸாம் பகுதிகளுக்குள்ளே பிரவேசித்துவிட்ட விசேஷச்செய்தி மார்ச் மத்தியில் வந்தது. இப்பொழுது நம் படையினர், தாயாக-தியாக பூமியில் சண்டையிட்டு, எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கிருர்கள். நமது சொந்த இந்திய எல்லைக்குள் பிரவேசித்த நமது வெற்றிவீரர்கள், தனி உணர்ச்சியில் நீந்துகிருர்கள். 1941 டிஸம்பரில் இந்த யுத்தம் நிப்பனுடையதாயினும், இன்று இந்தியாவின் சொந்த-விடுதலை யுத்தமாக மாறி பரிணமிக்கிறது. எனவே, தியாகம், கஷ்டங்கள், சிக்கல்கள் இவைகளை எதிரிகள் கடினமாக்கினுலும், அவற்றை நாம் சுலபமாக கடந்து விடுவோம். நமது உரிமைக்கு சரியான விலையையே கொடுத்து வருகிறோம். இந்த யுத்தத்தின் ஆரம்ப தசையிலிருந்து, மங்கள வாழ்த்துச் செய்திகள் நிப்பன் ஏகாதிபத்திய ராணுவத்திடமிருந்து குவிந்துகொண்டே இருக்கின்றன. எதிர்காலத்தில் நமது வெற்றி வேலைகள் சோபித்து, வீரத் தேர்ச்சி முதிர்வதற்கு, அந்த ஒவ்வொரு வாழ்த்துச் செய்திகளும், புதிய உற்சாகத்தை ஊட்டுகிறது. இருப்பதா அன்றி இறப்பதா என்ற கேள்விகளுக்கு பதிலளிப்பதே இப்போராட்டத்தின் முக்கியத்துவம் என்பதை மறுபடியும் உங்களிடம் உறுதி கூறுகிறேன். நமது இறுதி வெற்றியில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. முடிவுவரை போராடுவதென்றே திட்டம் கட்டிவிட்டோம். இனி எத்தகைய தியாகத்தையும், கஷ்டங்களையும் மிகச் சரளமாக சமாளிக்க நம்மால் முடியும்.

இம்மகத்தான வைபவத்திற்கு விஜயமளித்து கௌரவித்த பர்மிய அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும், நிப்பன் ஏகாதிபத்திய ராணுவ அதிகாரிகளுக்கும் எனது மனப்பூர்வ நன்றி. நம் எல்லோருக்கும் உரிய வெற்றி கிடைக்கும்வரை, உங்கள் தேசமக்களோடும் ஒன்றுபட்டு குறித்த லட்சியத்தை நோக்கி முன்னேறியே தீருவோம்.

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 14

மகாத்மாவுக்கு நேத்தாஜியின் வானெலிச் செய்தி

(6-7-44-ல் சுபாஷ் போஸ் ஒலிபரப்பியது)

மகாத்மாஜி! தங்கள் தேக சுகம் விருத்தியுற்று, பொது விஷயங்களில் கலந்துகொள்ளும் நிலையில் இன்று இருக்கிறீர்கள். எனவே, இந்தியாவுக்கு வெளிப்புறமுள்ள, இந்திய விடுதலை அபிமானிகளின் திட்டம், செயல்களைப்பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். உடல் நலிவின் காரணமாக தாங்கள் சிறையிலிருந்து திடீரென்று விடுபட்ட பிறகு, வெகு நாட்கள்வரை உலகப் பொதுமக்கள் எந்தச் சிந்தையிலிருந்தார்கள் என்பதைப்பற்றி முன்னதாகவே தெரிவித்துவிடுகிறேன். அன்னை கஸ்தூரிபா, வெஞ்சிறையில் உயிர் நீத்த பிறகு, இந்திய மக்களின் துயர் முழுதும் தங்கள் உடல்நிலையில் நாட்டங் காட்டியது. இது இயற்கை. 38 கோடி இந்தியர்களுக்கும் தங்கள் தலைமையும் உபதேசமும் மிகப் பிரதானமல்லவா? இதனால், தங்கள் உயர்ந்த வாழ்வின் நீடிப்புக்கு மனங்குவிந்த பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. இந்தியாவுக்கு வெளியிலுள்ள பாரத மக்கள், தங்கள் மீது கொண்டுள்ள மனோபாவங்களைப்பற்றியும் கொஞ்சம் தெரிவிக்கிறேன். சரித்திரம்சமான போராட்டத்திலிருந்துதான் இந்திய உரிமையைக் கொண்டுவர முடியும். அஹிம்ஸை, ஒத்துழையாமை முதலிய ஆயுதங்களிடம், பிரிட்டிஷார் எவ்வகையிலும்—எப்பொழுதும் பணிய மாட்டார்கள். இதுவேதான் இந்தியாவுக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள இந்தியப் பெண்களும், ஆண்களும் கண்ட முடிவு.

இதையேதான் நானும் சொல்லுகிறேன். இதுதான் உண்மையுங்கூட. வெளிநாட்டிலுள்ள இந்தியர்களிடம், இன்று எந்த பேத எண்ணமும் தலைகாட்டவில்லை. ஒரே நினைவு! ஒரே இயக்கம்!

1929 டிசம்பரில், லாகூரில் கூடிய தேசிய மகாசபையில் பூர்ண சுயராஜ்யம் என்ற தீர்மானம் தங்களால் எழுந்து, அங்கிகாரமாகியது. அதன்பிறகு தேசிய சபையின் அங்கத்தினர்களின் மனதில், எந்த நிமிஷமும் பிரதிபலிப்பது அதே தீர்மானந்தான்! அன்று தாங்கள் தாயகத்தில் பிறப்புவித்த அதே தீர்மானத்தின் அம்சம்தான், இன்று இங்கேயுள்ள இந்தியர்களின் கைகளில் வாள்களைக் கொடுத்திருக்கிறது. இதற்கு ஆதி, தாங்களே! உலகின் உன்னதப் பீடத்தில் தங்களைத் தூக்கிவைத்து ஆராதிப்பது, தங்களின் இணையற்ற தலைமையே! எண்ணம், உறுதி, ஆசை எல்லாம் ஒன்ருய் நிற்கும் இந்தியர் பலரும், உலகக் கண்களுக்கு ஒரே ரூபமே. 1941-ல் நான் இந்தியாவைவிட்டு வெளியேறினேன். பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஐக்கியப்படாத பலநாடுகளைச் சுற்றினேன். "கடந்த நூறு வருஷங்களில் இந்தியாவில் தோன்றிய மேதாவிகள் பலர்; அவர்களிலெல்லாம் அற்புதமான அதிசக்தி வாய்ந்த தெய்வாம்சத் தலைவர் மகாத்மாவே" என்ற தனிப்புகழ் முடியை, தங்களுக்கிடுவதைக் கண்டேன். ஒவ்வொரு நாடும், அதனதன் அரசியல் துறைகளை பலமாக அமைத்துக் கொண்டுவிட்டன. ஆனல் நவீன சக்தி நிறைந்த முதல்தர ஏகாதிபத்தியத்தை, வாழ்வு முழுதும் எதிர்த்து, ஜனசமுதாயத்திற்கே உழைக்கும் தங்கள் சிறப்பிற்கு ஈடேயில்லை. ஜனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்கும் பாலம் போடுவதாய்ப் பாவனைக்காட்டும் பிரிட்டிஷாரின் எதிர்ப்பு நாடுகளிலெல்லாம், தங்களின் தூய செயல்களின் வெற்றிகள் வெகுவாய் போற்றப்படுகின்றன. 1942 ஆகஸ்டில், "இந்தியாவை விட்டு வெளியேறு" வைர வார்த்தையால், ஆங்கிலேயரின் ஹிருதயங்களைக் கிழித்தீர்கள். வெளியிலுள்ள இந்திய விடுதலைப் பிரியர்களையும், ஏனைய நாட்டார்களையும் சுதந்திர இந்திய நிர்மாணத்திற்கு அன்புகாட்டி ஆதரவளிக்க அவாவையும் வெற்றி மேடையில் ஆனந்த நர்த்தனம்செய்ய ஆசையையும் இந்த வார்த்தை தூண்டியது. நிகரற்ற தங்கள் கௌரவத்தை, உச்சிவானத்தின் மத்தியில் வைத்து, அகில உலகும் ஆராதனை செய்தது.

இந்தியாவுக்கு விடுதலை யளிக்கிற நோக்கம், பிரிட்டிஷாருக்கு இல்லவே இல்லை. நமது விடுதலையை அவர்கள் நிச்சயமாக அங்கீகரிக்கவே மாட்டார்கள். இது, இந்தியாவில் நான் அறிந்ததோடு அல்ல; வெளிநாட்டு என் வாழ்வில், ரகசியப் பிரதிநிதிகள் மூலம் நான் பிரிட்டிஷாரின் அபிப்பிராயத்தை அளந்து பார்த்த முடிவு. இந்தியாவை வறண்ட பாலைவனமாக்கினால் தான் இந்தப் போரில் வெற்றிபெற முடியுமென்ற கெட்ட எண்ணம், ஆங்கிலேயரின் நெஞ்சத்தில் பழுத்துவிட்டது. இந்த நடைமுறைப் போரில் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு பகுதி பிரதேசங்களை எதிரிகளிட்டும், மறு பகுதியை நேச தேசத்திடமும் பிரிட்டன் அர்ப்பணித்து விட்டது. இன்றைய யுத்தத்தில் ஒருக்கால் நேச நாடுகள் வெற்றியுறுமானால், அவ் வெற்றியின் அங்கம் முழுதும் ஐக்கிய அமெரிக்காவின் சொந்தம்! ஆங்கிலேயருக்கு அதில் பங்குகூட இல்லை. இந்த நாட்டு வேட்டையில், தலைமை நாயின் ஸ்தானத்தில் அமெரிக்கா அமர்ந்துகொண்டு, ஆங்கிலேயர்களைக் கட்டிப் போட்டு வளர்க்க ஆரம்பித்துவிடும். ஆகவே நஷ்டங்களை நிரவிக்கொள்ள, இந்தியாவைத்தான் இங்கிலாந்து நம்புகிறது. எஞ்சியுள்ள கொஞ்ச சத்தையும் உறிஞ்சி, இந்தியாவை எலும்புந் தோலுமாக ஆக்கிவிடுவதற்கு ஆங்கில ஆட்சி, தன் நெஞ்சில், மிருக நினைவைப் புகுத்துவதற்கு யோசிக்கவே மாட்டாது. இந்திய தேசீய இயக்கத்தை அடியோடு மாய்ப்பதில்தான், இந்தியச் சாரத்தைப் பிழிந்தெடுக்கும் வசதி இருக்கிறது என்ற முடிவு ஏற்கனவே லண்டனில் செய்யப்பட்டு, அதன் அமுலுக்கு திட்டமும் வகுத்தாய் விட்டது. இவ்விபரங்களை ரகசிய ஆட்கள் மூலம் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். இதை தங்களிடமும் தெரிவிக்கவேண்டிய கடமை என்னுடையது. இதைத்தான் இப்பொழுது செய்கிறேன். அமெரிக்காவைப்போல, பிரிட்டனிலும் இந்திய விடுதலையை விரும்பும் சிலர் இருக்கலாம். ஆனால், இவர்கள் தொகை மிக மிகக்குறைவு. இவர்களிலிருந்து பிரிட்டிஷ் சர்க்காருக்கும், அதன் பிரஜைகளுக்கும் உள்ள பேதா பேதங்களை நாம் எடைபோட்டு பார்ப்பதென்பது மகா சிரமசாத்தியம். எனினும் இந்தியாவின் விடுதலையில் விரிந்த நோக்குடைய சில பிரிட்டிஷார், பிரிட்டிஷாராலேயே அகௌரவிக்கப்பட்டு, அவஸ்தையுறுகிறார்கள். குறிப்பாக பிரிட்டிஷ் ராஜாங்கமும், அதன் ஜனங்

களும், இந்தியாவைப் பொறுத்த அளவில், ஒரே மனோபாவத்தி லேயே தான் இருக்கிறார்கள். இந்த யுத்த அரங்கத்தில், உலகாதிக்கிய ரூபத்தைக் கற்பனை செய்து, அதன் கர்த்தாவாக தன்னை நியமித்துக்கொள்ள வாஷிங்டன் அதிகாரவர்க்கம் கனவு கண்டு கொண்டிருக்கிறதென்று என்னால் சொல்ல முடியும். இந்த சகாப்தத்தின் உலகாதிக்க தலைமைப்பீடம் அமெரிக்காவுக்குத் தான் அமைக்கப்பட்டதென்று, அதிகார வர்க்கம் எண்ணியதோடு அல்லாமல், "ஐக்கிய அமெரிக்காவின் 49-வது மாகாணம் பிரிட்டன்" என்று வாய் விட்டுச் சொல்லவும் துணிந்துவிட்டது.

தங்கள் சிறந்த வாழ்வையே கவிந்து, கவர்ந்து கொண்ட அஹிம்ஸா சக்தியிலிருந்து, இந்தியசுதந்திரம், திரண்டு, உருவாகி, உபயோகத்திற்கு வந்துவிட்டால், அதை, இந்தியாவிற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள எல்லா இந்தியரும் கரங்கூப்பி வரவேற்று மகிழ்ந்தே தீருவார்கள். ஆனால், நமது தேசீய லக்ஷியம், இன்னும் நகரவில்லை. இருந்த இடத்திலேயே தான் இருக்கிறது. எனவே, நமது சுதந்திர லக்ஷியம், வெற்றியின் சிகரத்தை எட்ட வேண்டுமானால், நாம் நமது ரத்தப் பிரவாகத்தில் நீந்த வேண்டுமென்பதில் சிந்தனைக்கு வேலையில்லை. காரியத்தில் குதிக்க கச்சை யணியவேண்டியதுதான். இது என்னுடைய தீர்க்காலோசனையின் முடிவு.

நமது சொந்த பலத்தின் திரட்டால் இந்தியாவிற்குள்ளேயே, ஆயுதப் போரை ஆரம்பிக்கவேண்டு மென்பதுதான் நமது ஆசை. அதற்கு சாதனை கிட்டி இருந்தால், நடைக்கால அனுசரணை நம்முடையதென்று சந்தோஷிக்கலாம். ஆனால், மகாத்மாஜி! ஏனையோரைக் காட்டிலும், இந்தியரின் நிலை தங்களுக்கே தெளிவாகத் தெரியும். இந்தியப் பொது வாழ்வில், இருபது வருஷ அனுபவம் எனக்குண்டு. இந்தியாவைக் கடந்துள்ள இந்தியர்களால், வெளிநாடு அல்லது நாடுகளின் சக்தி நமக்குத் துணைவரவேண்டும். இல்லையேல் நமக்கு ஆயுத பலம் கிடைக்கவே முடியாது. நமது உரிமைக்கு அனுகுணமான, வெளி நாட்டின் ஆயுத பலத்தை நாம் சேமியாத வரையில், நமது விடுதலை, நம்மை நாடவே மாட்டாது. இம் முடிவைத் தான், என்னுடைய இருபது வருஷ அநுபவம் எடுத்துக் காட்டியது. வெளி நாடுகளிலுள்ள இந்தியர்களுக்கும், குறிப்பாக இந்தியாவுக்குமே, உலக யுத்தத்

தின் தோற்றுவாய், பிரிட்டிஷாரின் பகைவர்களிடமிருந்து ஆயுத-ராணுவ உதவியைத் தந்தது. இவ்வுதவிகளைப் பெறுவதற்குமுன், இந்திய விடுதலையைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தைத் தெரிய எண்ணினேன். அச்சு நாடுகளும், அதன் நேச நாடுகளும், இந்திய சுதந்திரத்தின் விரோதிகள் என்று பிரிட்டிஷ் பிரசாரகர்கள், பல வருஷங்களாக நமக்குச் சொல்லி வந்திருக்கின்றனர். இது உண்மையா என்று என்னை, நானே கேட்டேன். திருப்தியான பதில் கிடைக்கவில்லை. அச்சுநாடுகள் நமது சுதந்திரப் போருக்கு உதவியளிக்க இசைகிறதா என்பதைத் தெரியவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. உடனே இந்தியாவை விட்டு வெளியேறினேன்.

நான், என் வீட்டையும், நாட்டையும் விட்டு வெளியேறுமுன் வெளிநாட்டு உதவியைப்பெற்று சுதந்திரம் பெறுவது நேர்மையா? என்பதை சிந்தனையின் அபிப்பிராயத்திற்கு விட்டேன். ஏனைய நாடுகள் சுதந்திரமடைய எந்த முறைகளைக் கையாண்டதென்பதைப் பற்றி உலகின் புரட்சிச் சரிதைகளில் படித்துத் தெரிந்திருந்தேன். ஆனால், அடிமைப் படுத்தப் பட்ட எந்த நாடும், வேறு நாட்டின் உதவிகளை ஏதேனுமொரு வகையிலாவது பெறாமல், சுதந்திர மடைந்ததாய், சரித்திரத்தில் ஒரு வரியுமில்லை. 1940-ல் மறுபடியும் சரிதை ஏடுகளைப் பக்கம் பக்கமாய்ப் புரட்டினேன். வெளி நாட்டின் உதவியின்றி விடுபட்ட நாட்டைக் காணவே யில்லை. ஆகவே ஒருவருடைய சொந்தப் பொறுப்பில், வெளி நாட்டின் உதவிகளைப் பெறுவதும், திரும்பக் கொடுப்பதும், நியதிதான் என்ற பதிலை முந்திய என் கேள்விக்கு, நானே சொன்னேன். சகல சக்திகளும் நிறைந்த நாடுகளில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் ஒன்று. இதுவே, உலகைச் சுற்றி உதவிப்பிச்சை எடுத்து வருகிறது. அடிமைப் பட்டு, ஆயுத மற்ற நாடுகளில் நமது இந்தியா ஒன்று. இது, வெளி நாட்டு உதவியை, கடனாகப் பெறுவதில் என்ன தவறு? இதுதான் என் தீர்மானம். இந்தக் கடினமான போராட்ட இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முன், நான், வாரம், மாதக் கணக்காய் கவளமாக அலசி அலசி ஆராய்ந்தேன். பிறகு என் சிந்தனையில் இவ்வியக்கத்தின் வெற்றிச் சாயை படர்ந்தது. அப்புறந்தான், அபாயமான—ஆனால் வெற்றி முற்றிய, இந்த இயக்கத் துறையில் இறங்கினேன். மகாத்மாஜி! இவ்வார்த்தைகளை உங்கள் நம்பிக்கைக்கு நிவேதிக்கிறேன். என் சக்திக்கியன்ற

வரையிலோ, அதற்கு மேற்பட்டோ, என் தாயகச் சமுதாய வெற்றிக்கு உழைத்திருக்கிறேன்—உழைத்தும் வருகிறேன். பிறகு என் தேசத்திற்குத் துரோகியாகவோ, அன்றி தேசத் துரோகியென்று எவரும் சொல்லுவதற்கு சந்தர்ப்பமளிக்கவோ, நான் சம்மதிக்கவில்லை.

எப்பொழுதும் போல் இந்தியாவிலேயே நான் இருந்து கொண்டு வேலை செய்யலாம். சிறை செல்லலாம். சண்டைத் துவக்கத்தில் நான் இருந்த சிறையிலேயே இருந்துவிடலாம். இவை யெல்லாம் மிகச் சுலபமாக நடக்க முடிந்த காரியம். என் சொந்த ஹோதாவில் நான் இழப்பது ஒன்று மில்லை. இந்தியப் பொதுவாழ்வில் தலையிட்ட எவருக்கும் கிடைக்க வேண்டிய சிறப்பையே, நானும் அடைய உதவிய எனது தாய கத்தாரின் கனிந்த அன்பிற்கு, கரங் கூப்புகின்றேன். என் அன்பிற்குரிய—என்மீது உண்மைப் பற்றுள்ள, அபிமானிகள் நிறைந்த சபை ஒன்றையும் அமைத்திருக்கிறேன். நான் என் எதிர்காலம், என் உயிர், என் தோழர்கள் கோஷ்டி எல்லா வற்றிற்கும் ஆபத்தான—நெடிய பாதையைக் கடக்க முயன்று, கிரியாம்சையில் இறங்கிவிட்டேன். வெளியுதவி இன்றியே நமது சுதந்திரம் வந்துவிடும் என்றே நம்பிக்கை, என்னிடம் துளி யாவது இருந்திருந்தால், கஷ்டம் நிறைந்த சமயத்தில் நான் இந்தியாவை விட்டு வெளியேற எண்ணவே மாட்டேன்.

இரண்டு விஷயங்களில் நான் தெளிந்தேன். ஒன்று இவ்வளவு அருமையான சந்தர்ப்பம், அடுத்த நூற்றுண்டு வரையில் கூட நம்மை நாடாது. மற்றொன்று, வெளியிலிருந்து நடவடிக்கை எடுக்காமல் இந்தியாவுக்குள்ளேயே நமது சொந்த முயற்சியால் மாத்திரம் உரிமைப் போராட்டத்தில் வெல்லுவதென்பது முடியவே முடியாது. ஆகவேதான், நான் இச் செயலில் தைரியமாக இறங்கினேன்.

இறைவனின் அன்பு என்னை அணைத்தது. அநேக சிக்கல்களுக்கிடையில் என் திட்டம் வெற்றியுற்றது. நான் இந்தியாவை விட்டு வெளியான பிறகு என் முதல் முயற்சியை பயன் படுத்திக் கொள்ள, என் தேச மக்களின் ஒருமித்த அபிப்பிராயத்தை அங்கங்கே கண்டேன். இந்தியாவின் வெற்றிக்காக இயன்ற வரை எதையும் செய்ய கட்டாயமின்றி முன்வந்த இந்தியரின்

ஆர்வம் குறித்து சந்தோஷிக்கிறேன். நமது எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கிற அரசாங்கங்களை அணுகி, இந்தியா வைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள நோக்கங்களைத் தெரிந்து கொண்டேன். பிரிட்டிஷ் பிரசாரங்கள் பல வருஷங்களாக நம்மிடம் செய்த பிரசாரமெல்லாம் வெறும் சூழ்ச்சியும் பகைமை யும் என்பதை உணர்ந்தேன். அச்சு நாட்டு சக்தி முழுதும், இந்தியாவின் சுதந்திர நேயர்கள் என்பது இப்பொழுது தெளி வாகிறது. நாம் விரும்புகிற உதவிகளை, அவர்கள் சொந்த பலத்திலிருந்து வேண்டிய மட்டும் அள்ளிக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்களென்பதை பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறேன்.

நமது எதிரிகளின் பிரசாரம், எனக்கெதிராக நடத்தப் படுகிறதென்பதை நான் அறிகிறேன். ஆனால், என்னைப்பற்றி சரிவரத் தெரிந்துகொண்ட என் நாட்டினர், அதை ஏற்கமாட் டார்களென்பதும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். தேசிய சுயமரியாதைக்காக, வாழ்வு முழுதும் அளவுமீறிய தொந்தரவு களை அனுபவித்த ஒருவன், கடைசியில் அந்நிய சக்தியில் பணிய மாட்டான். தவிர, அந்நிய ஆதரவைப் பெறுவதின் மூலம், என் சொந்தமாய் நான் பெறும் பயன் எதுவுமில்லை. என் சொந்த நாட்டு மக்களின் பரிபூரண அநுசரணையும், உயர்ந்த பெருமையும், என்னிடம் நிறைந்திருக்கிறபோது, அந்நிய சக்தி யின் கௌரவத்தில் என்ன பெருமை இருக்க முடியும்? சுய உணர்வும், சுயமரியாதையும், தனக்காக ஒரு ஸ்தானத்தை அமைத்துக்கொள்ள முடியாத ஒருவன்தான், அந்நிய பலத் திடம் ஐக்கியப்படுவான்.

நான், என்னுடைய தேசீய கௌரவத்தையும், சொந்த மரியாதையையும், வந்த விலைக்கு விற்றுவிடுவேனென்று, நீசமான என் எதிரிகள் கூட சொல்லத் துணியார்கள். நான் என் சொந்த ஊரில் ஒருவருமற்ற அநாதையென்றோ, அன்றி அயல் நாட்டு உதவியால் என் சொந்தத்திற்கு ஒரு பதவியைத் தேட முயல்கிறேனென்றோ, என் ஜென்மவிரோதிகள் நினைக்கவும் அஞ்சுவார்கள். நான் இந்தியாவை விட்டு வெளியேறியதால், என் எல்லாவற்றையும் இழந்ததோடு, உயிரைப் பற்றியுங்கூட பயப்படவேண்டிய நிலைமையிலிருக்கிறேன்.

அச்சு நாட்டுடைய சக்தியைப்பற்றிய ஒரு கேள்விக்கு மாத்திரந்தான் நான் பதிலளிக்க வேண்டியது பாக்கியிருக்கிறது. நான் அவர்களால் ஏமாற்றப்படுவேனென்பது நடக்கும் செயலா? கபடமான அரசியல் நளினத்திற்கு மூலஸ்தானம், 'பிரிட்டிஷ்' என்பது அகில உலகின் அபிப்பிராயம். வாழ்வு முழுதும் பிரிட்டிஷாரோடு போராடிய ஒருவனை, இதர எந்த அரசியல் சூழ்ச்சியும் தோற்கடிக்க முடியாது. பிரிட்டிஷாரின் பிரபலமான ஏய்ப்பும், நிர்ப்பந்தமுமே என்னிடம் தோற்று விட்டது. இனி எந்தநாட்டு அரசியல் சதியும் என்னைத் தொட்டவே பயப்படும். பிரிட்டிஷ் அதிகார சக்தியிடம், அடி பட்டு உடல் நலிந்தேன்; நீண்ட நாட்கள் சிறையில் நைந்தேன். ஆனால் அத்தனை இடர்களும் என்புற உடலைத் தொந்தரித்ததே யன்றி, உள்ளுணர்ச்சியை நாடவும் முடியவில்லை. பிறகொரு அதிகார சக்தி, என்னைப் பணியவைத்து விட்லாமென நினைக்க வும் முடியுமா? உலகின் ஜனசமுதாய இயக்கங்களில் நான் நெருங்கிப் பழகிப்படித்திருக்கிறேன் என்பது தங்களுக்குத் தெரியும். இந்த யுத்தத் தோற்றுவாய்க்கு முன், ஜன சமுதாய இயக்க லட்சியத்தில் நான் நேர்முகமாக பங்கெடுத்துக்கொண்டு மிருக்கிறேன். எனவே, நான் இதற்குப் புதியவனல்ல. ஏமாற்ற எண்ணி, கபடம் புரியும் அரசியல் சக்திக்கு முன்னால், நான் பேதையாக நிற்கமாட்டேன். அச்சு நாட்டாரின் மனோ வியல் களைப்பற்றித் துருவி ஆராய்ந்து, என் வரையில் சரியான முடி விற்கு வருவதற்கு முன், அந்த நாட்டின் தேசிய இயக்கத்திற்கு மொறுப்புள்ள ஒவ்வொரு பிரதான தலைவர்களுடனும் நெருங்கிப் பழகி, அவரவரின் அபிப்பிராயங்களை அப்படியப்படியே கிரஹித் திருக்கிறேன். ஆதலால், அகில உலக ஜனசமுதாய இயக்கங் களைப் பற்றி, நான் கொடுக்கும் தீர்ப்பில் என் தேசத்தார் முழு நம்பிக்கையும் வைப்பார்களென்று தைரியமாய்ச் சொல்லு கிறேன். நான் இந்தியாவை விட்டு வெளியேறிய பிறகு, எனது நாட்டின் கௌரவத்திற்கும், உணர்ச்சிக்கும் எதிராக எவ்விதக் காரியமும் செய்யவில்லை யென்பதை வெளிநாட்டிலுள்ள, இந்திய மக்கள் அறிவார்கள். இந்தியாவின் சுதந்திரப் பாதையை விரைவில் கடந்து, உலகிற்கு முன்னால், பாரத நாட்டின் கீர்த்திப் பிரதாபத்தைக் கம்பீரமாய் நிமிர்த்தி நிற்கவைப் பதற்குறிய வேலையைத்தான் நான் செய்து வருகிறேன்.

மகாத்மாஜி! கிழக்காசியப் போர் ஆரம்பமானதிலிருந்து, நமது எதிரிகள், ஜப்பானியர்களை கொடிய போராட்டத்திற்கிழுத்து அதிக தொந்திரவுகளைத் தந்து வருவதாகப் பிரசாரம் புரிகிருர்கள். ஆகவே, ஜப்பானைப்பற்றி நான் கொஞ்சம் தங்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன். ஜப்பானிய அரசாங்கம், ராணுவம், பொது ஜனங்களின் பரிபூர்ண ஒத்துழைப்புடன், இப்போதைய இயக்க வேலைகளைச் செய்து வருகிறேன். ஆதலால் அவர்களைப்பற்றி நான் விரிவாய்ச் சொல்ல முடியும். நமது எதிரிகளுடன், ஜப்பான் நல்லுறவிலிருந்த காலமும் ஒன்று இருந்தது. ஆங்கிலோ-ஜப்பான் கூட்டுறவு ஒப்பந்தம் உயிர் பெற்றிருந்த வரையில் நான் ஜப்பானுக்கு வரவில்லை. அந்த இரண்டு நாடுகளுக்கும் இயல்பான ராஜீயத் தொடர்பு இருந்த வரையில், நான் ஜப்பானுக்குச் செல்ல எண்ணவுமில்லை. ஆங்கிலோ-அமெரிக்கர் மீது யுத்தப் பிரகடனம் செய்ததுதான், ஜப்பானியச் சரித்திரத்திலேயே பிராதன்ய அத்தியாயமாக அமையும் என்பது என் நினைவு. அதேபோல் யுத்தப் பிரகடனம் ஜப்பானியரால் செய்யப்பட்டது. பிறகுதான் நான் ஜப்பானைப் பார்வையிடத் தீர்மானித்தேன். எனது தேசத்தார்களைப் போல நானும் பல வருஷங்களாக ஜப்பானியருக்கு எதிர்ப் பிரசாரத்தைப் படித்து வந்திருக்கிறேன். அவர்களைப் போலவே நானும் 1937-ல் சைனுவோடு ஜப்பான் போர் தொடுத்த காரணம் தெரியாமலேயே இருந்தேன். எல்லோரையும் போலவே, எனது அநுதாபமும் 1937-38-ல் சுங்கிங்கின் மீதிருந்தது. நமது தேசிய மகாசபைத் தலைமையின் சார்பில், 1938 டிஸம்பரில், இந்தியாவிலிருந்து சுங்கிங்கிற்கு அனுப்பப்பட்ட வைத்திய தூது கோஷ்டிக்கு நான்தான் பொறுப்பாளியாகயிருந்தேனென்பது தங்களுக்கு நினைவிருக்கலாம். ஆனுல் நான் ஜப்பானைப் பார்வை யிட்ட பிறகு தான் என் சந்தேகம் தெளிந்து, இந்தியாவில் உள்ளவர்களுடைய சந்தேகம் தெளியாமலிருப்பதின் காரணத்தை அறிந்தேன். பொதுவாக உலகின் பேரிலும், குறிப்பாக ஆசியாவின் பேரிலும் ஜப்பானியர் கொண்டிருந்த மனோபாவம், ஆசியா யுத்த ஜெனனத்தினுல் மாறுபட்டுவிட்டது. இம்மாறுதல், ஜப்பான் அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல, பிரஜைகளுக்கும் கூட. இம் மாற்றம் ஆசியர்களிடம் புதிய உணர்ச்சியை ஊட்டி, ஜப்பானியர்

களின் தூய அன்பர்தரவில் அனைவரையும் ஆகர்ஷித்துவிட்ட தென்பதை நான் தெளிவுபடுத்த முடியும். பிலிப்பைன், பர்மா, இந்தியா, புதிய சைனு மீது, ஜப்பானியர் இன்று காட்டி வருகிற மனேவியலின் நடப்புதான், மாற்றத்தின் விவரம். நான் ஜப்பானைப் பார்வை யிட்டு, அதன் முக்கியத் தலைவர்களுடன் நெருங்கி உறவாடிய பிறகு, ஆசியாவிடம் ஜப்பானியர் கொண்டுள்ள நேர்மை போலியல்ல, உண்மையானதென்று திருப்தியுற்றேன். ஒரு நாடு முழுதும் ஒன்றுபட்டு புதிய உணர்ச்சியில் பொங்குவது, உலகச் சரிதைக்குப் புதிதல்ல. பிரான்ஸின் புரட்சி நடப்பையும், ரஷியாவின் போல்ஷ்விக்கையும் ஏற்கனவே நாம் தெரிந்துள்ளோம. 1943-நவம்பரில் நான் இரண்டாவது முறையாக ஜப்பானைப் பார்வையிடச் சென்று திரும்பியபோது, பிலிப்பைன் தலைவர்களைச் சந்தித்தேன். அங்கிருந்த நிலைமைகளை நானே பார்த்தேன். சுதந்திரப் பிரகடனம் செய்த பிறகு, பர்மாவின் வளப்பத்தை நீண்ட நாட்களாக நேரில் பார்த்து வருகிறேன். ஜப்பான், சைனுவின் மீது கொண்டுள்ள புதிய எண்ணம் உண்மையா,போலியா என்பதைத் அறிய, சைனுவுக்குச் சென்றேன். ஜப்பானுக்கும், தேசீய சைனுவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், தேசீய சைனுவின் தேவை முழுதையும் நிறைத்துக்கொண்டிருக்கிறது. யுத்தத்திற்குப் பிறகு, தனது துருப்புகளை அழைத்துக்கொள்வதாய் ஜப்பான் அந்த ஒப்பந்தத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறது.

பிறகு ஏன் சுங்கிங் சைனு, சண்டையிடுகிறது ? ஆங்கிலோ—அமெரிக்கர்கள் மனப்பூர்வமாக சுங்கிங்கிற்கு உதவியளிப்பதாய் எவரும் எண்ண முடியுமா? ஜப்பானுக் கெதிராக, சுங்கிங் போரைத் தொடர்ந்து நடத்துவதில், பிரிட்டிஷார்—அமெரிக்கருக்கு நன்மையாயினும் இப்பொழுது உதவுகிற அவ்வளவு சாதனங்களையும் பிரிட்டிஷார்—அமெரிக்கர் திரும்பக் கேட்காமல் விட்டுவிடுமா ? கடந்த பகைமையை வஞ்சம் தீர்ப்பதற்காக சுங்கிங், ஜப்பானிடம் போரிடுவதற்குரிய உதவிகளைப் பெறுவதற்காக பிரிட்டிஷ் அமெரிக்கரிடம் ஈடெழுதிக் கொடுத்திருக்கிறது என்பதை நான் நன்கு தெரிந்துள்ளேன். ஜப்பான் தற்சமயம் சைனு மீது கொண்டுள்ள புதிய மனேபாவம் எழாதிருந்தால், ஆங்கிலோ அமெரிக்கரோடு இணைந்து ஜப்பானுக்

கெதிராக சைனு போர்தொடுப்பதில் கொஞ்சம் நியாயமிருக்க லாம். ஆனால் இப்பொழுது சீன-ஜப்பான் உறவுச் சரிதையில் புதிய அத்தியாயம் எழுதப்பட்டுவிட்டதால், அர்த்தமற்ற சண்டையை ஜப்பானுக்கு எதிராக நடத்திக்கொண்டிருக்கிற சுங்கிங் சைனுவின் செயலுக்கு கொஞ்சமும் அர்த்தமே கிடையாது. இப்போரை சுங்கிங் நடத்துவது சைனு மக்களுக்கும், பொதுவாக ஆசியாவுக்குமே நல்லதல்ல. 1942-ஏப்ரலில், தங்களுக்குப் போதிய அவகாச மிருந்தால், சைனுவுக்கும் ஜப்பானுக்கு மிடையேயுள்ள பிணக்குகளைத் தீர்த்து வைக்க முயல்வேன் என்று சொன்னீர்கள். இந்த அறிவிப்பு, அருமையான தலைமைத்வத்தின் மேதா விலாசம்! சைனுவின் குழப்பத்திற்கு பொறுப்பாளி, இந்தியாவின் அடிமைதான். இந்தியாவை, பிரிட்டிஷார் ஆக்ரமித்து விட்டனர். ஆங்கிலோ-அமெரிக்கர்கள் சுங்கிங்கிற்குப் போதிய உதவியளிப்பதாய்ப் பொய் சொல்லி ஜப்பானுடன் போரிடத் தூண்டுகிறார்கள். மகாத்மாஜி! தங்களுடைய அபிப்பிராயம் மிகச் சரியானதே. சுதந்திர இந்தியா, ஜப்பான்-சைனு தகராறுகளைத் தீர்த்துவைக்க முயலும். சுதந்திர இந்தியா உருவானதும் ஜப்பானுக்கும், சைனுவுக்குமிடையே பரஸ்பர ஒற்றுமையை ஸ்தாபிக்கு மென்பதைப் பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. அப்பொழுது,சுங்கிங்கின் மடமையான இன்றைய எதிர்ப்பின் தவறை சொந்தமாகவே தெரிந்து வருந்தும். நான் கீழ் ஆசியாவிற்கு வந்த பிறகு, சைனுவைப்பற்றிய மேம்பட்ட பிரச்னைகளை அறிந்தேன். சுங்கிங்கில் சர்வாதிக்ய ஆட்சி தலைவிரித்தாடுவதை அறிந்தேன். இவ்வாட்சியை நான் எதிர்க்கவில்லை; ஆனால், அதன் வழி நேரானதாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறேன். ஆனால் சுங்கிங்கில் இன்று நடக்கிற ஆதிக்கம், அந்நிய அமெரிக்காவின் அதிகார ரீதியுமாக இருக்கிறது. ஜப்பான் தோற்கடிக்கப்பட்டு விட்டால், ஆசியாவில் சைனுவின் ஆதிக்கம் பிரபலமாகிவிடும் என்ற போதனையை ஆங்கிலோ-அமெரிக்கர்கள், சுங்கிங் அதிகார வர்க்கத்திடம் எப்படியோ திணித்துவிட்டார்கள். ஆனால் எவ்விதமேனும் ஜப்பான் தோல்வியுறுமானால், சைனுவின் முழு ஜீவிதமும், அமெரிக்காவின் ஆதீனத்தின்கீழ் அவதியுறும்; இப்படித்தான் இன்றைய உண்மை நட்பு இருக்கிறது. பிறகு சைனுவையும், அகில ஆசியாவையும் சோக மேகம் கவ்விக்

கொள்ளும். ஜப்பானை தோற்கடித்து, ஆசியாவை ஆதிக்கம் செய்யவேண்டுமென்கிற அபத்த ஆசை சுங்கிங் அதிகார வர்க்கத்தை, ஆங்கிலோ-அமெரிக்கரிடம் பாதம் பணிய வைத்துவிட்டது.

இந்திய மக்களின் அநுதாபத்தைப் பெறுவதற்காக சுங்கிங் கவர்னமென்ட்டார் இந்தியாவில் செய்யும் பிரசாரங்களைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால், ஆங்கிலோ-அமெரிக்காவிடம் ஈடு வைத்து புலம்புகிற, சுங்கிங் சர்க்கார்—(தேசிய சீனாவிடம் ஜப்பான் புதிய கொள்கையைப் பரப்பிய பிறகு)—இந்தியர்களின் அநுதாபத்தை எப்பொழுதும் பெறவே முடியாதென்பதை சொல்லுகிறேன்.

மகத்மாஜி! இந்தியர்கள் வெறும் வாய் உறுதியில், எவ்வளவு அவநம்பிக்கையுள்ளவர்களென்பதை எல்லோரைக் காட்டிலும் தாங்கள் நன்ருய்த் அறிவீர்கள். ஜப்பானியர்களின் பிரகடனம் வெறும் சொற்களோடு நின்று விட்டால் என் தேசத்தாரின் அவநம்பிக்கைக்கு நான் பொறுப்பாவேன். இந்த யுத்தத்தின் மத்திய காலத்தில், பிலிப்பைன், பர்மா, தேசிய சைனு போன்ற நாடுகள், ஜப்பானியர் பரப்பிய புரட்சியினுல், எவ்வித மாற்றமடைந்திருக்கிறதென்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஜெனரல் டோஜோவை நிப்பானியர், பிரதம மந்திரியாகவும், முக்கியத் தலைவராகவும் கொண்டிருக்கின்றனர். இவர், வார்த்தையில் பிரழாதவர்; சொல்லியதை அப்படியே கிரியாம்சையில் காட்ட கொஞ்சமும் தயங்காதவர்; சாதாரண சிப்பாயிலிருந்து, உயர்ந்த உத்தியோகஸ்தர் வரை புகழ்கிற பிரர்பல்யத் தலைவர் பிரதமர் டோஜோ.

இந்தியாவைப் பொறுத்த அளவில், ஜப்பான், நடைமுறையில்காட்டும் செய்கைகள், அதன் உண்மையான மனோ நிலையை உறுதியாக்குகிறது, என்று நான் திட்டமாய்ச் சொல்ல முடியும். இந்தியாவின் மீது, நிப்பானியர் சுயநலம் கொண்டிருக்கிருர்களென்று ஒருசமயம் ஜனங்களால் பேசப்பட்டது; அதன் நினைவு அவ்வாருனல், நமது தற்காலிக சர்க்காரை எதற்காக அங்கீகரிக்கவேண்டும்? அந்தமான், நிக்கோபார் தீவுகளை, நமது சர்க்காரிடம் ஒப்புவித்தது ஏன்? போர்ட் பிளேயரில், அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் தலைமை அதிகாரியாக இந்தியர் ஒருவர் இருப்பது எதற்காக? இந்தியாவின் உரிமைக்

காகப் போரிட், கிழக்காசிய இந்தியர்களுக்கு எவ்வித நிபந்தனையு மின்றி முக்கிய உதவிகளைத் தருவது ஏன்? ஜப்பானியரின் அந்தரங்க மனோவியலையும், அதனால் கிடைக்கும் பேருதவிகளை யும் நேரில்கண்டு, அநுபவிக்கும் இந்தியர்கள் கிழக்காசியா வில் நிறைந்திருக்கின்றனர். ஜப்பானியரின் விரிந்தநோக்கத் தின் நடவடிக்கைகளில் நம்பிக்கையற்றிருந்தால், கிழக்காசியா வின் 30 லட்சம் இந்தியர்களும் அவர்களோடு ஒத்துழைப்பா னேன்? ஒரே யொரு தனிமனிதனை, ஏமாற்றி தன் வசப்படுத்த முடியும்; ஆனால், முப்பது லட்சம் இந்தியர்களையும் பலாத்கார மாய் இணைப்பதென்பது இயலுமா?

கிழக்காசிய இந்தியர்கள், எவ்வித முயற்சியும் செய்யாமல் கூடிய அளவு தியாகமும் செய்யாமல் ஜப்பானுடைய உதவியி லேயே சுதந்திரம் பெற எண்ணி, வேண்டி நின்றால், அதைத் தோஷமாகக் கருதலாம். ஆனால், நடப்பு அப்படி யல்ல. இந்தியாவின் பூரண விடுதலைக்காக, கிழக்காசிய இந்தியர்கள் தங்கள் அவ்வளவையும் அள்ளிக் கொடுத்து விட்டு தங்களையே ராணுவ சேவைக்கு அர்ப்பணித்துவிட்டார்களென்பதைத் தெரிவிக்க பெருமை யடைகிறேன். தேசீய இயக்கத்திற்காக, பணம், பொருள், ஆட்களைத் திரட்டுவதில் எனக்கு இந்தியாவில் இருபது வருஷ அநுபவம் இருக்கிறது. இதில் கிழக்காசிய இந்தியர்களின் ஒருமித்த தியாக நோக்கத்தின் கிரியாம்சை மேன்மையுடையதாகும். அவர்களின் பேராதரவு, வரையில் நிறுத்தமுடியாத பெருமையாகும். அவர்களால் அர்ப்பணிக்கப் பட்ட கணக்கற்ற திரவியம், நாம் செய்துகொள்ள முடியாத யுத்த சாதனங்களை, நிப்பனிடமிருந்து, நான் பெறுவதற்கு பேருதவியளிக்கிறது.

மகாத்மாஜி! இங்கு எங்களால் நிருவப்பட்டுள்ள, தற்காலிக சர்க்காரைப்பற்றிக் கொஞ்சம் தெரிவிக்க விரும்புகிறேன். சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார், நிப்பொன், ஜெர்மன் வல்ல ரசுகளோடும், ஏனைய ஏழு உலக வல்லரசுகளின், அபிமான அங்கீ காரத்தைப்பெற்று, உலகப் பரப்பில், நிரவிநிற்கிற இந்தியர் களுக்கு புதிய உணர்வூட்டியிருக்கிறது. ஆயுதப்போரினால் இந்தியாவை பிரிட்டிஷ் பீடிப்பிலிருந்து மீட்க வேண்டு மென்ற ஒரு நோக்கம்தான், தற்காலிக சார்க்காருக்கு. நமது தாயகத் திலிருந்து, பகைவர்கள் ஒழிந்தூதும், தற்காலிக சர்க்காரின்

வேலை பூரணமாகும். அதன்பிறகு விருப்பமான நிரந்தர சர்க்காரை அமைப்பதும், அதன் பொறுப்பை வகிப்பதும், இந்தியர்களின் பொறுப்பு. மகாத்மாஜி! என்னுடன் ஒத்துழைப்பவர்களெல்லாம், பாரத சமுதாயத்தின் உயர்விற்காக உழைப்பவர்களென்பதை உங்களுக்கு உறுதி கூறுகிறேன். எங்கள் உழைப்பு, தியாகம், தொந்தரவுகளுக்கெல்லாம் நாங்கள் விரும்பும் பரிசு, தாய்நாட்டின் விடுதலையே! சுதந்திர இந்தியாவைக் கண்ட பிறகு, அரசியலிருந்து விலகியிருக்க விரும்புகிறவர்களில் பலர், எங்களுடன் இருக்கின்றனர். எஞ்சியுள்ளவர்கள், விடுதலை இந்தியாவில் எந்த ஸ்தானத்தையும் ஏற்கச் சித்தமாயுள்ளார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில், பெரும் பதவி வகிப்பதைக் காட்டிலும், சுதந்திர இந்தியாவில் தோட்டிவேலை பார்ப்பதில் அதிகக்கௌரவம் உண்டு என்ற உணர்ச்சியே எங்களிடம் பரவியிருக்கிறது. சுதந்திர இந்தியாவைக் காப்பதற்கு, ஆயிரமாயிரம் ஆண்களும், பெண்களும், பரந்த பாரதத்தில் இருக்கிறார்களென்பதை நாங்கள் அறிவோம்.

கடைசி ஆங்கிலேயன் இந்துஸ்தானத்தைவிட்டு விரட்டப்படுகிறவரையில், ஜப்பானிடமிருந்து எவ்வளவு உதவியைப் பெறவேண்டுமென்பது, இந்தியாவிலிருந்து நாங்கள் பெறுகிற உதவியையும், ஒத்துழைப்பையும் பொருத்ததாகும். ஜப்பான், தாமாகவே நமக்கு உதவியளிக்க முன்வரவில்லை. இந்தியர்களின் சொந்த சக்தியினால் விடுதலையை ஸ்தாபித்து விட்டால் ஜப்பான் சந்தோஷத்தையே அடையும். ஆங்கிலோ-அமெரிக்கர்கள், பிற நாட்டு உதவியை கெஞ்சிக் கேட்கிறார்கள். இவர்கள் மீது ஜப்பான் போர் தொடுத்த பிறகு, நாங்கள் அதன் உதவியைக் கோரினோம். நமது நாட்டு உதவி எங்களுக்குப் பெருகினால், நாங்கள் ஜப்பானியரைக் கோரும் உதவி குறையும். தங்களுடைய "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானத்திற்கு வெள்ளையர்கள் பணிந்தாலும், அல்லது இதர எவ்வழியிலேனும் இந்திய மக்களின் சொந்த முயற்சியினால் விடுதலையை அடைந்தாலும், ஏனையோரைக் காட்டிலும், நாங்கள் அடங்கா மகிழ்வில் ஆர்ப்பரிப்போம். ஆயுதப் போராட்டமின்றி, எவ்வகையிலும் உரிமையைச் சாதிக்க முடியாதென்ற உறுதியான எண்ணந்தான் எங்களை இக்காரியத்தில் இறக்கிவிட்டது.

மகாத்மாஜி! எனது இப் பிரசங்கத்தை முடிக்கு முன், இந்த யுத்தம் எவ்வித முடிவையடையும் என்பதைப்பற்றிச்

சொல்ல விரும்புகிறேன். இறுதி வெற்றியில் பூரண நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்வதற்காக, நமது எதிரிகள் செய்யும் பிரசாரத்தைப் பற்றி நான் நன்கு அறிந்துள்ளேன். ஆனால் அவர்கள் வார்த்தையில் ஏமாறவோ, அன்றி அவர்கள் வெற்றி உறுதியாய் சம்பவித்து விடுமோவென அஞ்சி, அவர்களுடன் சமாதான பேரம் பேசவேண்டுமென்ற நினைவோ எங்களுக்குத் துளியுமில்லை. நான், உலகின் யுத்த நிலைகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். இந்தியாவிற்குள்ளும், இந்தோ-பர்மா முனையிலும் நமது எதிரிகளின் பலம் தேய்ந்து குன்றிவிட்டதையும் பார்த்திருக்கிறேன். இதிலிருந்து, நமக்குத்தான் இறுதி வெற்றி என்ற முழு நம்பிக்கையும் எனக்கிருக்கிறது. நமது எதிரிகளின் பலத்தை, மிகத் தாழ்வில் வைத்துப் பேச, நான் அறியாதவனல்ல. பயங்கரமும், நெடிவுமான யுத்தமொன்று எங்கள் முன் நிற்கிறதென்பதையும் நான் உணருகிறேன். ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியம் இந்தியாவில் நிலைப்பதற்காக, அவர்கள் எதையும் எதிர்க்க துணிந்து நிற்பார்களென்பதையும் நான் அறிவேன். எவ்வளவு பெரிய கஷ்டங்களையும், நீண்ட நாட்களையும் கொண்ட யுத்தமாக இருந்தாலும், முடிவு ஒன்று. அதுதான், இறுதி வெற்றி நமதே என்பது! இந்தியாவின் கடைசி யுத்தம் துவங்கிவிட்டது! இந்திய விடுதலை ராணுவம், பெருத்த இடர்களைப் பிளந்துகொண்டு இந்திய பூமியில் போராடிக்கொண்டு முன்னேறுகிறது! கடைசி ஆங்கிலேயன் இந்தியாவை விட்டு ஒழிந்து, நமது தேசீய மூவர்ணக் கொடி டில்லி வைஸிராய் மாளிகையில் கம்பீரமாய்ப் பறக்கிற வரையில், இந்த ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டே இருக்கும்!

எங்கள் சமுதாயத் தந்தையே! இந்திய விடுதலைப் புனிதப் போரை நடத்துவதற்குத் தங்கள் ஆசியைத் தர மன்றுடுகிறோம்.

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 15

"ஐரோப்பிய நிலைமை"

(8-7-44-ல் நேத்தாஜி ரேடியோப் பிரசங்கம்)

இந்திய அன்பர்களே!

இன்று ஐரோப்பிய நிலைமையையும், அதற்கும் இந்தியாவுக்கும், நமது சுதந்திரப் போருக்குமுள்ள விசேஷக் குறிப்புகளையும் பற்றி உங்களிடம் பேச விரும்புகிறேன். இதில் நான் சொல்லப்போகும் அத்தனையும், என்னுடைய சொந்த அபிப்பிராயமே யன்றி பிறருடையதல்ல. இவை முழுமையும், எனது கவனத்தால் அளந்து பார்க்கப்பட்டவை; உண்மை நிலைகளை நீங்கள் தெரிந்து, அதிலிருந்து ஏதேனும் சிறிய விரிவையாவது பெறுவதற்கு, எனது இந்த மதிப்பு உதவுமென்பதே என் எண்ணம். இன்றைய நிலையில், அரசியல் அல்லது ராணுவ இயல்களைப்பற்றி நாம் ஆராய்கிறபோது, நமது அறிவுக்குத் தெரியாமலேயே, நமக்குச் சாதகமான முடிவைத் தந்துவிடுகிறதோடு, ஆபத்திலும் கொண்டுபோய் நிறுத்திவிடுகிறது. தவிர தனி மனிதனுடைய சொந்த விருப்பத்திலிருந்து வெளி தீர்ப்பு, அப்படியே உண்மையாகவும் இருக்க முடியாது. ஆனல் இப்பொழுது நான் சொல்லப்போகிற, 'ஐரோப்பிய நிலைமை' என் சொந்த தீர்ப்புக்கு கட்டுப்படாதவை; எல்லாம் உண்மையான நடப்புகள்! உண்மையான நடைமுறைகளைப்பற்றி அறிவிக்கிற விஷயத்தில் என்னுடைய சொந்தத் தீர்ப்பை மீறுவது எனக்குப் பெரிய சிரமமல்ல. இந்திய நிலைமைக்கும், ஐரோப்பிய ஸ்திதிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஐரோப்பிய நிலை எவ்வாருயினும், இந்தியர்கள், இந்திய உரிமைப் போரில் வெற்றி கர்ண முடியும். இது எனது தீர்மானம். எனவே எனது தீர்ப்பில் பாரபட்சம் இருக்க முடியாதென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

சென்ற மகாயுத்தத்தில், நேச தேசங்கள் வென்றதும், ஜெர்மனி தோற்றதும் ஏன்? சென்ற உலகப் போரின் முடி

விற்கு, இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று, பிரெஞ்சு மக்கள், இழந்துபோன அல்ஸேஸ் லாரைனை திரும்பப் பிடிப்ப தாக, சொந்த உணர்ச்சி யேறி, 'வெற்றி அல்லது மரணம்' என்ற ஒரே நோக்கத்தில் விம்மி, தளராமல் போரிட்டார்கள். மற்றொன்று, ஜெர்மன் ராணுவங்கள் போதிய வலுவையும், சரியான முஸ்தீபுகளையும் பெற்றும், இயந்திரம்போல் போராடி ஞர்களாயினும், பிரெஞ்சு ராணுவத்திடம் திரண்டிருந்த உணர்ச்சிப் பெருக்கம், ஜெர்மன் ராணுவத்திடம் மிகக் குறைவா யிருந்தது. இதன் நடப்புகளை சரிவரத் ,தெரிந்துகொள்வதற்கு, நேச தேசத்தின் தலைமைத் தளபதி மார்ஷல் போக்கின் ஜீவிதக் குறிப்பைப் படித்தால் நன்ருய்த் தெளிவாகும். தவிர, உள்நாட்டு நிர்வாகமும், நிலையும் மிகப்பலஹீனமாக இருந்ததால், அன்றைய ஜெர்மனியின் வேகம் நீடிக்க முடியவில்லை. சென்ற போரிய லுக்கு, இன்றையப் போரியல் முற்றிலும் மாருனவை. இன்றைய ஜெர்மனி, அதன் தேவையின் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு சரி யான திட்டத்துடன் போராடுகிறது. "இந்த யுத்தத்தில் தோல்வி யுற்ருல், ஜெர்மனி முழுதும் சர்வ நாசம்" என்ற மனோபாவம் ஒவ்வொரு ஜெர்மானியனிடமும் ஊறி, யுத்தத் தோற்றுவாய்க் குப் பிரார்த்தித்து, சரியான பயிற்சியையும் பெற்றிருக்கிருர்கள். முந்திய போரில் நேசநாட்டுடன் உராய்ந்து நின்ற நாடுகளில், குறிப்பாக பிரான்ஸ் தேசம், இந்தப் போரில் ஜெர்மானியரோடு இணைந்து நிற்கிறது. சென்ற யுத்தத்தில் கண்ட அநுபவங் களில் தேர்ந்து, இன்றையப்போரில், ஜெர்மன் உள்நாட்டு நிர் வாக முறையை நேர்மை செய்து, நான்கு வருஷக் கடுமையான போருக்கு எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொண்டு தயாராகிவிட்டது. தவிர, ஐரோப்பா முழுதிலும், ரஷ்யாவைத் தவிர்த்து, ஜெர்மனி, அதன் யுத்தகால உள்நாட்டு நிலையை அசைக்கவிடாமல் அமைத்துக்கொண்டிருப்பதால், இன்றைய ஜெர்மனி நீண்டகால போரை நடத்த சகல சாதனங்களையும் நிறைய வைத்துக்கொண்டிருக்கிறது.

சென்ற யுத்தத்தில், பிரான்சும், இத்தாலியும் சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்துப் போராடியதென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தவிர, பிரான்ஸ் பூரண வலிவை யும் காட்டி, நீண்டபோரை நடத்த பேருதவி புரிந்தது. அன்று ஐரோப்பாவில் பெரும் பாதகத்தைக்கொண்ட பிரான்ஸிலும், இத்தாலியிலும், ஜெர்மனியின் செல்வாக்கும், ஆதிக்கமும் பலம்

பெற்றிருக்க முடியவில்லை. அன்றைக்கும் இன்றைக்கும் உள்ள மாறுபாடு எவ்வளவென்பதை நாமே தெரிந்துகொள்ளலாம். ரஷ்யாவைத் தவிர்த்து, ஐரோப்பா முழுதுமே ஜெர்மன் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது. ஆனால் ரஷ்யா-ஜெர்மன் போராட்டம் ஒரு முக்கியமான கட்டமாக இருக்கிறது. இத்தாலியிலும், பிரான்ஸிலும், நேச தேசங்கள் பிரவேசம் செய்தது, ஜெர்மானியருக்கு புதிய விறுவிறுப்பை ஏற்றியிருக்கிறது. இவ்விஷயம் ஜெர்மன் மக்களுக்கு மற்றொரு தொந்திரவாயினும், அவர்களிடையில் பிரியாத கட்டுப்பாட்டை நிர்மாணித்துவிட்டது. இத்தாலியோ அன்றி பிரான்ஸோ, அவர்கள் நாட்டில் போர் நடத்துவதற்கு மனப்பூர்வமான வரவேற்பளிக்கவில்லை யென்பது தெரிந்த விஷயம். இத்தாலிய மன்னரையும், மாஜி பிரதமர் படோக்ளியோவையும் ரகசியமாக இணைத்துக்கொண்டு, நேச நாட்டார் துவக்கிய புதிய எதிர் நடவடிக்கைகளை, இத்தாலியப் பொதுமக்கள் வெறுக்கிறார்களென்பதும் உலகமறிந்த விஷயம். நேச தேசப் பிரவேசத்தினால் பிரெஞ்சு மக்கள் கொண்டுள்ள விரஸமும், இத்தாலிய மக்களின் பீதியும் ஒன்றே. என்னுடைய இந்த அறிக்கையை ஏற்காதவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் பிரான்ஸிலிருந்து அமெரிக்கரால் அனுப்பப்படும் யுத்தச் செய்திகளை மாத்திரம் நம்புகிறவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

காலநிலை பிரிட்டிஷாருக்கு எப்பொழுதும் சாதகமாகவே இருக்கும்; எனவே, இறுதி வெற்றி அவர்களுக்குத்தான் என்ற நினைவுள்ள தீயர்கள் சிலர் இருக்கிறார்களென்பது எனக்குத் தெரியும். ஆனால், எதற்கும் பயன்படாத குறுகிய மனோபாவமுடையவர்கள்தான் இத்தீய நினைவிற்கு இடமளிப்பார்கள். சரித்திரம், மகா சக்திபெற்றது; அதில் பதியப்பெறும் ஒவ்வொரு மகத்தான மாற்றங்களும் எளிதானதல்ல; ஒவ்வொன்றுக்கும் உரிய காரணங்களுண்டு. சென்ற யுத்தத்தில் நேச நாடுகள் வெற்றியுற்றது எதிர்பாராததல்ல. அதற்கு மூல காரணங்கள் இருக்கின்றன. ஆகவே, இன்று ஐரோப்பாவில் நடக்கும் வேலைகள் எந்த அஸ்திவாரத்தின் மீது நடக்கிறது; இதனால் என்ன காரியம் சாதனைக்கு வரும் என்பதைப் பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.

நான் இப்பொழுது 1939-ம் வருஷத்திலிருந்து 1942 வரை இருந்த ஐரோப்பிய ஸ்திதிகளைப்பற்றிச் சொல்லிய பிறகு, இன்

றைய ஐரோப்பிய நிலையையும் பற்றி கொஞ்சம் விமர்சிக்கிறேன். 1940 லிருந்து 42 வரை பிரிட்டிஷாருக்கு மிக ஆபத்தான கட்டமென்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். ஒவ்வொரு யுத்த களத்திலும் தோள்வியுற்றதும், தாளமுடியாத கஷ்டங்களை அநுபவித்ததும், இதற்கிடையில், அவர்கள் தேச மக்களை உற்சாக மூட்டி முன்னுக்கிழுக்க பட்ட பாடும், திரை மறைவில் நடந்த காரியமல்ல. அப்பொழுதெல்லாம், அமெரிக்கரின் விஞ்ஞானத் திறமையை ஆகாயத்தில் வைத்து, அதில் உற்பத்தியாகும் அபார யுத்த சாதனங்களைப் புகழ்ந்து, அதில் பூரிபூர்ண ஒத்துழைப்பு பரிணமிப்பதாய் பிரிட்டானியர் பிரபலம் செய்தார்கள். இங்கிலையில், இந்திய மக்களைத் தம் வசமாக்கி, பிரிட்டிஷ் யுத்த வெற்றியில் கவனத்தைத் திருப்புவதற்காக, பிரிட்டிஷ் பிரசாரகர்கள் தங்கள் வேலையைத் துவக்கினுர்கள். சண்டைக்குப் பிறகு, இந்தியாவைப் புனருத்தாரணம் செய்ய, சபைகளையும், க்ஷேம நிதிகளையும், அங்கங்கே அமைக்கப் போவதாய், ஓய்விற்றி பேசினுர்கள். ஆனுல் ஐக்கிய அமெரிக்கா போரில் இறங்குகிற வரையில், ஆங்கிலப் பிரசாரம் பயன்படவில்லை. அதன் பிறகு, நேச நாட்டார்களுக்கு ஐரோப்பாவில் சிறிய விரிவு பரவியது. நேசதேசங்களுக்கு ஐரோப்பாவில் கிடைத்த மிகச் சிறிய வெற்றிகளை, கவனமாக அலசி ஆராய்ந்தால், அதன் அடித்தளம், அமெரிக்காவைச் சார்ந்ததாகவே இருக்கும். இப்போதைய நேச தேசத்தின் உணர்ச்சி, இரண்டு வருஷங்களுக்கு முன் மிகத்தளர்ச்சியாகவே இருந்தது. இவ்வுணர்ச்சியின் ஆணிவேர், அமெரிக்காதான். பிரிட்டானியரின் நிலை, இன்னும் ஏழ்மையாகவேதான் இருக்கிறது. பிரிட்டிஷ் பிரதமர், அமெரிக்க ஜநாதிபதியிடம் எதற்காகப் பணிந்தார்? பிராபல்யம் பெற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், ஒவ்வொரு யுத்த களத்திலும் அமெரிக்க தளபதியின் அதிகாரத்திற்கு ஐக்கியப்பட சர்ச்சில் சம்மதித்ததோடு, முக்கியமான பிரிட்டிஷ் பிரதேசங்களுக்கு, அமெரிக்கரைப் பங்காளிகளாக்கி, பிரிட்டிஷ் நாட்டில், அமெரிக்கருக்கு அதிகச் சலுகையையும், தேசீய ஆதிக்கத்தையும் விட்டுக் கொடுத்து, கைகட்டி நிற்கிறுர். தவிர சர்ச்சிலின் அதிகாரக் கூட்டத்தாரும், அவருடைய மனதிற்குரிய தாஸர்களும், கொஞ்சமும் லஜ்ஜையின்றி அமெரிக்கர்கள் வாய் திறந்து சொல்லுகிற 'அமெரிக்க சகாப்தம்' என்பதை, அப்படியே ஒப்புகிறுர்கள். அதோடு, அமெரிக்க சக்தி, பிரிட்டனைக் காட்டிலும் மேம்பட்டி

ருப்பதால், அதற்குத் தேவையான ஸ்தலங்களை நிவேதித்தது போக, எஞ்சியுள்ள பாகங்களை அமெரிக்கரின் மனம் போல் தரப்படுவதை வாங்கிப் பாதுகாக்கும் வழியைத்தான் இன்று பிரிட்டன் பார்த்துக்கொண்டிருக்கிறது. இதனால்தான், இந்திய சுதந்திரத்தைப் பற்றிய பிரச்னையை, அமெரிக்கா அங்கீகரிக்க மறுப்பதோடு, பிரிட்டனையும் நெருக்குகிறது. எனவே, அமெரிக்காவிடம் இழந்தவற்றை நிறைத்துக்கொள்ள, இந்தியாவைப் பிழிந்து சக்கையாக்கும் வேலையை, பிரிட்டானியர் ஆரம்பித்து விட்டார்கள். முடிவாக, இந்த யுத்தம் முடிந்த பிறகு, இந்திய தேசீய இயக்கத்தைக் கலைத்துவிட வேண்டிய திட்டங்கள் லண்டனில் இப்பொழுதே வகுத்தாய்விட்டது. ஆனால், இந்த எண்ணத்தில் இப்பொழுதே மண் விழுந்தும்விட்டது. ஆகவே அவர்களின் கூடப் பிறந்த, பிரித்தாளும் நளினத்தை, முஸ்லிம் வகுப்பு, சமஸ்தானதிபதிகள், மதப் பாகுபாடு என்றெல்லாம் சொல்லி அமுலுக்கு எழுப்பி, காங்கிரஸின்மீது சுமத்தினார்கள். ஆனால் இதுவும் உயிரிழந்தது. இதைப் பரிகரிக்க பிரிட்டிஷ் ராஜீய வாதிகள் கொண்டுள்ள நினைவு, எதிர்காலத்தில் விபரீத மாற்றத்தை யளிக்கக் கூடியது. இதைப்பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாய்ப் பேசுகிறேன்.

அமெரிக்கரின் முழு உதவியும் நிறைந்திருந்தபடியால் தான் 1942-லிருந்து வட ஆப்ரிக்காவிலும், கடைசியாக இத்தாலியிலும், நேய நாட்டார் வெற்றியுற முடிந்தது. அமெரிக்க ராஜ தந்திரக் கலப்பு இல்லாதுபோனால், பிரஞ்சு அட்மிரல் டார்லான் கோஷ்டியாரின் உதவி,நேச நாட்டாருக்கு கிட்டியிருக்க முடியாது. அட்மிரல் டார்லான் கோஷ்டியாரின் ஆதரவு இல்லாதிருந்தால் வட ஆப்பிரிக்கப் போரில், நேச நாட்டாரின் வெற்றி, வேறு புறம் திரும்பி யிருக்கும். அட்மிரல் டார்லான் கோஷ்டியாருக்கெதிராக பிரிட்டானியர் ஜெனரல் டிகாலே இன்னும் வானளாவப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில், பிரிட்டானியருக்கும், அமெரிக்கருக்கும் இடையில் இன்னும் எவ்வித ஒப்பந்தமும் உண்டாகவில்லை. ஆயினும், ஆங்கிலேயரின் பிடிவாதத்தினால் ஜெனரல் டிகாலுக்கு அட்மிரல் டார்லான், ஜெனரல் கிராட் இடமிருந்து ஒரு வெற்றி கிட்டி இருக்கிறது. ஆங்கிலோ—அமெரிக்க ஒப்பந்தமின்மையால் சோவியத் ரஷியாவுக்கு, பிரஞ்சு வட ஆப்பிரிக்காவில் ஆதிக்கமும், செல்வாக்கும் ஓரளவு ஓங்கி யிருக்கிறது. பிரன்ஸின் உரிமைக்காக இப்போர் நடக்கிறதென்று

சொல்லப்படுகிறது. ஆனல், ஜெனரல் டிகாலுக்கு எவ்வித ஸ்தானமும் பிரான்ஸில் கொடுப்பதற்கு, நேசதேசத் தளபதி ஜெனரல் ஐஸன்ஹோவர் ஒப்பவில்லே. இதனுல், பிரான்ஸில் ஏதாவதொரு பாகத்தை நேச தேசங்கள் கைப்பற்றினல், அதன் ஆதிக்கம் ஜெனரல் டிகால் கோஷ்டியாரிடம் தரப்பட மாட்டாது. அதன் ஆதிக்கம் முழுதும், நேசதேச ராணுவ சர்க்காராலேயே அமுல் நடத்தப்படும் என்ற நம்பிக்கை ஜெனரல் டிகாலே வாட்டுகிறது. இது ஆங்கிலோ—அமெரிக்க ஒப்பந்த மின்மையின் மற்ருேர் முடிவு. மறுபுறம், பிரான்ஸின் உரிமை என்ற பெயரால், ஜெனரல் டிகாலே, இத்தாலியில் போரிடும்படி நேச நாட்டார் தூண்டுகிருர்கள். ஆங்கிலோ—அமெரிக்க—சோவியத்தாருக்கிடையில் எவ்வித ஒப்பந்தமும் இல்லே யென்பது அகில உலகிற்கும் தெரியும். அப்படி இருந்தாலும், அம் மூன்று நாட்டினரும் ஐக்கிய வேறுபாட்டுடனும், ஒருவருக்கொருவர் வெவ்வேறு மனேநிலேயுடனுமே தான், ஒன்றுபட்டிருக்கிருர்கள். அவர்களுக்கிடையில் ஒருமுக நோக்கமே இல்லே. இந்த நேச நாட்டார் எந்த முடிவையோ அல்லது யுத்த வெற்றியையோ காண நினேப்பது நடுப்பகல் நட்சத்திரம்தான்! சென்ற உலகப் போரில், பிரிட்டன், அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்ஸ் எல்லாம் ஒன்றுபட்டு ஒரே ரூபத்தில் 1918-ம் வருஷப் போரின் நேச நாட்டுத் தளபதி மார்ஷல் போக்கின் உருவில் ஜீவ களேயோடு பிரகாசித்தன. ஆனல் இன்றைய போரில் அவை அத்தனேயும் நொறுங்கி, அங்கங்கே சிதறித் தனிமையர்க நிற்கின்றன.

நேச நாட்டாரின் ஐரோப்பாக் கண்டப் பிரவேசத்தினல் புறச் சாயைதான், வெற்றியே யன்றி, அடித்தளம் போலி யாகவேதான் இருக்கிறது. ரஷ்யாவில் நுழைந்து, மாஸ்கோவிலிருந்துகொண்டு ராஜ்யாதிகாரம் புரிய, நெப்போலியன் கட்டிய திட்டத்தின் வெற்றிதான், நேச நாட்டாரின் தற்போதைய ஐரோப்பிய வெற்றி! ஜெர்மானியர்கள், இங்கிலாந்தில் பிரவேசித்து ஆட்சி பெற்றிருந்தால், பிரிடிஷார் வீறுடன் சிங்கம் போல் எதிர்த்து போராடியே இருப்பார்கள். ஆனல், அவர்களுக்கு சம்பந்தமற்ற—ஐரோப்பியப் பொதுக் கண்டத்தில் இன்றையப் போர் நடைப்பதால், ஆங்கிலேயர்கள் அதிக வெறியேறிப் போராடமாட்டார்கள்; போரிடவும் முடியாது. பிரிட்டிஷ் ராணுவம், ஆவியற்ற வெறும் இயந்திரமல்ல; அதற்கும் மனிதார்த்தம் உண்டு. எதற்காக—எப்படி—

போரிடவேண்டுமென்பதைப் பாகுபடுத்தி, அங்கங்கே தேவையான முக்கியத்தை அறிந்து செயலில் இறங்கும் பகுத்தறிவும் உண்டு. முக்கியமற்ற வீண் வீர்யத்திற்கு அதை உபயோகிப்பதென்பது முடியாத வேலை.

நெப்போலியன் அனுபவமற்ற லட்சியவாதி; ஆனால், பழுத்த உணர்ச்சியுள்ள இளைஞன். இவன் தலைமையில் யுத்தப் பயிற்சியற்ற பிரெஞ்சு ராணுவங்கள் திரண்டன. உலகம் எதிர்த்த பிரெஞ்சுப் புரட்சியைப் பாதுகாப்பதற்காக பெரும் போரிட்டு, ஐரோப்பா முழுதிலும் அபூர்வமான வெற்றியை நாட்டினார்கள். ஐரோப்பா முழுதையும் ஆக்ரமித்து ஆட்சி புரிந்த சக்கரவர்த்தி நெப்போலியனும், அவனுடைய பயிற்சி பெறாத ராணுவமும், முடிவில் எதிரிகளிடம் பணிந்தனர். பயிற்சி பெறாத ஆனால், வாலிபம் நிறைந்த நெப்போலியனுடைய தலைமையில், முதிர்ந்த அநுபவம் பெற்ற எதிரிகளை ஆட்டி வைத்த பிரெஞ்சு ராணுவங்கள் மனமாற்றத்தால் தோற்றன. ஒரே லட்சியத்தில் எழுந்த புனிதப் போர், நேப்போலியனின் ஐரோப்பிய ஆட்சியின் ஆசையால் விழுந்தது. பிரெஞ்சுப் படையினரின் மனோவியலில், நெப்போலியனின் பேராசை, விரஸமாகப் பரவிவிட்டது. அநுபவமற்ற ஆண்மையின் வெற்றி, தலைவனுடைய ஆசையால், எதிரிகளின் பசிக்கு உதவியது. இவ்வுதாரணம் ஆங்கிலோ—அமெரிக்கருக்குப் பொருந்தியது. எனவேதான்,இங்கு விஸ்தரித்தேன். ஆங்கிலோ—அமெரிக்கா நடத்தும் போரின் நோக்கம், உலகாதிக்யத்தைக் கவரவேயன்றி, புனித லட்சியத்திற்காக அல்ல. அவர்களின் மனோபலம், நெடிய போரைத் தாளுவதென்பது முடியாது. எனவே, நேச தேசங்களை, அதளத்தில் ஆழ்த்துவதற்காகவே, இந்தப் போரை, ஐரோப்பியக் கண்டத்திற்கு இழுத்திருக்கிறதென்று நான் தீர்க்கதர்சனத்துடன் கூறுகிறேன்.

ஆங்கிலேயர்களின் மனோவீரம் இன்னும் க்ஷீணதசையிலேயே இருக்கிறதென்று ஏற்கனவே தெரிவித்துவிட்டேன். ஆயினும், ஐரோப்பாவில் இருக்கிற அமெரிக்கத் துருப்புகளின் பலம் தளருகிற வரையில், நேச நாட்டாரின் போர் வீரம் நீடிக்கலாம். ஆனால், அதுவும் எத்தனை நாள்தான் நீடித்து நிற்க முடியும்? அரசாங்கத்தின் ஆதாரமான புள்ளி விபரப்படி, அமெரிக்கருக்கு சென்ற யுத்தத்தின் நஷ்டத்தைக் காட்டிலும்,

இந்த யுத்தத்தில் அளவு மீறிய நஷ்டம் நேர்ந்து விட்டதென்று திட்டமாய்த் தெரிகிறது. ஐக்ய அமெரிக்கா அதிகமான ஜனத் திரளைக் கொண்டது என்பதில் ஆக்ஷேபனை யில்லை. ஆனால், அவர்கள் யுத்த முறையில் தேர்ந்தவர்களல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கைத்தொழிலிலும், வேளாண்மையிலுந் தான் அவர்கள் சிறந்தவர்கள். தவிர, ஐரோப்பிய யுத்தம், அமெரிக்காவிற்கு அதிக தூரத்திற்கப்பால் நடக்கிறது. எனவே இதில் அமெரிக்கர்களின் முழுச் சலுகையும் சுரக்கவில்லை. ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மீது அபிமானமுள்ளவர்கள், யூதர்கள், உலகாதிக்கத்தை வகிக்க கனவு காணும் பணக்காரர்கள், வியாபார வர்க்கத்தார் இவர்கள் தான் ஐரோப்பியப் போருக்கு ஆதரவளிப்பவர்கள். அமெரிக்காவில் செல்வாக்குள்ள சில தனித்து நிற்கும் மனப்பான்மையார்கள், ஐரோப்பிய யுத்தத் திற்கு பரிவு காட்டாமலிருக்கிறார்களாயினும், அவர்களின் அபிமானம், ஒரு சமயம் பஸிபிக் யுத்தத்தின்பக்கம் திரும்பவும் செய்வதோடு, ஐரோப்பிய முனையிலுள்ள சக்திகளையெல்லாம் திரட்டி, ஒன்று சேர்த்து பஸிபிக் போரில் கலக்கவிட வேண்டுமென்ற ஒரே மூர்க்கவெறியில், ஓயாமல் கூக்குரலெழுப்புகிறார்கள். இக் கூக்குரல் கிரியாம்சையில் இறங்கிவிட்டால், அமெரிக்கரின் நஷ்டம் விரியும்; முணுமுணுப்பு ஜெனிக்கும். பிறகு தளர்வு, முடிவைக்காட்டிவிடும்! மேலும், ராணுவ தந்திரப்படி பார்க்கிற போது போக்குவரத்துப் பாதை அகண்டு, அதிக சிக்கலையும், தொந்திரவுகளையும், அமெரிக்கருக்குக் கொண்டு வந்துவிடும். அமெரிக்கரின் தளர்ச்சி ஏற்பட்டுவிட்டால், அவர்களின் முடிவும் மறுபுறம் பிறந்துவிடுவதோடு, ஆங்கிலோ—அமெரிக்கரின் யுத்தத் தேர்ல்வியும் கூடப் பிறந்துவிடும்!"

இப்பொழுது சோவியத் ரஷியாவைப் பற்றிய கேள்வி ஒன்றுதான் பாக்கி. ரஷியர்கள், ஜெர்மனிக்குள் பிரவேசித்து, ஜெர்மனியின் ராஜீயக் கொள்கையை மாற்றும் திறமையைப் பெற்றிருக்கிறார்களா? நேச தேச பிரசாரகர்கள் ஓயாமல் பெருமையடிப்பது போல், ரஷியர்கள் பெர்லினை அடையத்தான் இயலுமா? இக்கேள்விக்கு பதில் கொடுக்க வேண்டுமானால், இப்போரில் ரஷியர்கள் அடைந்துள்ள அபார நஷ்டத்தையும், அவர்களின் யுத்த சாதன விளைவுகளையும் நன்றாய்க் கவனிக்க வேண்டும். ரஷ்யர்களுக்கு, ஆள் பொருள் சேதங்கள் அதிகம் என்பதை எவரும் மறைக்க முடியாது. எனவே அவர்களின்

முயற்சி முழுமைக்கும் ஒரு எல்லை உண்டு. மார்ஷல் ஸ்டாலினுடைய உயர்ந்த பிரசார சக்தி, ரஷியர்களுக்கு நஷ்ட சிந்தையை நீக்கி, விடாப்போருக்கு விறுவிறுப்பை ஏற்றியிருக்கிறது. ஆனால், இவர்களின் போர் நோக்கம், தந்தை நாட்டின் உயர்வையே பற்றி நிற்கிறது. ரஷ்யர்களுக்கு சம்பந்தமற்ற போரில், அவர்கள் உணர்ச்சி அவ்வளவாக பக்குவம் பெறாது. அதோடு ஸ்டாலின்கிராட் பிரவேசத்தின் போது ஜெர்மன் ராணுவம் அடைந்த கஷ்டத்தைப்போல், ரஷியாவும் வேறு நாட்டுப் பிரவேசத்தினால் அடையும். ஆதலால், 1939-ல் ரஷியர்கள் சொந்தப் போர்முனைகளுக்கு வந்த பிறகு இன்னொரு நாட்டில் பிரவேசிக்கக் கூடிய அளவிற்கு திறமைபெற்றிருக்கிறார்களென்று நான் நம்பவில்லை. ஆங்கிலோ - அமெரிக்க - சோவியத்திற்கிடையில் எவ்வித ஒப்பந்தமுமில்லை. எனவே, நேச தேசங்களின் வெற்றியால் ஐரோப்பாவின் விதி, எப்படி அமையப் போகிறதென்பது எவருக்கும் தெரியாது. இதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலோ-அமெரிக்க முயற்சியும், சோவியத்தின் முயற்சியும், ஐரோப்பாவின் பல பாகங்களிலும், வேறுபட்ட மனோபாவத்துடன், எதிரிடையாகவே இருக்கின்றன. இன்னொரு வேடிக்கையான விஷயம்: ஆங்கிலோ—அமெரிக்கர்கள் ஐரோப்பிய பிரதேசத்தைப் பற்றி, வாய்கிழியக் கூவினார்கள். ஆனால், வெளி நாட்டு 'யுத்த வேலைத்தரம்' என்ற ரஷிய அறிக்கை, ஆங்கிலோ—அமெரிக்க இரண்டாவது போர்முனை மிக அற்பமானதென்றும், பிரான்ஸில் யுத்தப் படைகளை விரிவு செய்யாதிருந்தால், ஜெர்மன் ராணுவங்களால் கொடுக்கப்படும் மீள முடியாத பேராபத்தைப் பெற நேரும் என்றும் சொல்லுகிறது.

இன்னொன்று, நினைவில் நிற்கவேண்டிய விஷயம்: ஆப்ரிக்கா, ஆசியா, பிரஞ்சு வட ஆப்ரிக்கா, சிரியா, எகிப்து, இரான் முதலிய இடங்களில், சோவியத் சர்க்காரின் எதிர்ப்பு எண்ணத்தின் மீது, ஆங்கிலோ—அமெரிக்கருக்கு அபிப்பிராயமே இல்லை. அதோடு, போலந்து, பின்லந்து, பால்டிக் நாடுகள், பால்கன் நாடுகள், டார்டனல்ஸ் ஜலசந்தி முதலிய இடங்களில் சோவியத்தார்கள் புரியும் போர் நடவடிக்கைகளுக்கு, ஆங்கிலோ—அமெரிக்கர் சரியான ஆதரவளிக்க விரும்பவேயில்லை. ஆனால் 1912-ல் துருக்கிப்போரில் பால்கன் நாடுகளுக்கு அமைந்த ஸ்திதியைப் போல் நேச தேசங்களுக்கும் ஸ்திதி ஒருக்

கால் அமைந்தாலும் அமையும். இவ்வமைப்பில் சோவியத் ரஷியா 1939-ல் இருந்த போர் முனையைக் கடந்து முன்னே வருவதை ஆங்கிலோ — அமெரிக்கர் வெறுப்பார்கள். இவ் வெறுப்பு முற்றி, பிறகு, ஆங்கிலோ — அமெரிக்கருக்கும், சோவியத் ரஷியாவுக்கும் இடையில் உண்டாகும் மனப்பிணக்கு, செயலுக்கு வந்தாலும் வரும்.

இது, நம்மிடம் துருக்கியைப்பற்றிய ஒரு கேள்வியை எழுப்பு கிறது. துருக்கியினுடைய பலம் முழுதும் நேச நாட்டுடன் கலக்கப் போவதாய், பிரிட்டிஷ் பிரசாரகர்கள் உலகை ஏய்க்க முயலுகிறார் கள். இப்பிரசாரம், இந்திய முஸ்லிம்களை பிரிட்டிஷ் அபிமானிக ளாக்குவதற்குப் புரியும் பெரிய கபடம் என்பதை நாம் அறிய வேண்டும். நவீன துருக்கியைப்பற்றி நன்றாய்த் தெரிந்தவர்கள், இச்சூழ்ச்சியில் சுழல மாட்டார்கள். துருக்கியில் பிரிட்டிஷ் அபி மான வட்டாரங்கள் இருந்தாலும்—அங்கோராவின் வானொலி, பிரிட்டிஷ் அபிமானத்திடம் ஒட்டிக் கூவினாலும், இந்த யுத்தத் தில், துருக்கி எவருடனும் இணையாது. என்னவாயினும், துருக்கி நிற்பதும், நிற்கப்போவதும் நடுநிலைமையே!

நான் முன்பு சொல்லியதைப் போலவே, அமெரிக்க யுத்த சாதன விளைவுகளைப் பற்றி, எதிரிகளின் புகழ்ப்பிரசாரம் பிர மாதமாகவேதான் இருக்கிறது. நேச தேசத்தாக்களின் மனோ உறுதியை பலப்படுத்துவதுதான், அப்பிரசாரத்தின் மர்மம். ஆனால், அமெரிக்காவின் யுத்த சாதன உற்பத்தி, எல்லையை நாடிவிட்டதென்பதை நாம் மறக்கக் கூடாது. தவிர, அதன் விளைவு முற்றி, தேவையும் விரிந்துவிட்டது. இனி அமெரிக்கா வுக்கு, இலையுதிர் காலமேயன்றி இளவேனிற் காலமல்ல. ஜெர் மனியை எடுத்துக்கொண்டால் அதன் விளைவு அபாரமாகவே இருக்கிறது. விமானத் தாக்குதல்கள் நடந்துகொண்டிருந் தாலும், ஜெர்மானியின் யுத்த சாதன விளைவு தளரவே யில்லை. சில முக்கியமானவற்றில், பலபடிகள் முன்னேறியே இருக்கிறது. ஆதலால், யுத்தத் தேவைக்குப் போதிய சாதனங்கள் முழு வதையும், சளைக்காமல் சப்ளை செய்துகொடுக்க, ஜெர்மன் பரி பக்குவமாய் நிற்கிறது.

இப்பொழுது ஐரோப்பிய ஸ்திதிகளைப் பற்றித் திட்டமாகக் கொஞ்சம் விவரிக்கிறேன். கிழக்கு முனையில் ரஷியர்களும், ஜெர் மானியர்களும் சம நிலையிலேயேதான் நிற்கிறார்கள். ஒரு வரை ஒருவர் தோற்கடிக்க முடியவில்லை. ஒருவேளை, இவ்விரு

தரத்தாருக்கும், சில ரீதியில் ஏதேனுமொரு நெருக்கடி நேரலாம். மேற்கு ஐரோப்பாவில், கொஞ்சகாலத்தில் ஜெர்மானியருக்கு சாதகம் விளையும். அப்பொழுது பிரான்ஸில் அடிகோலியுள்ள ஆங்கிலோ—அமெரிக்கரை அப்புறப்படுத்துவது ஜெர்மானியரால் எளிதில் முடியும்.

இத்தாலி, பிரான்ஸ் போர் முனைகளை எடுத்துக்கொண்டால், நேச நாட்டாரின் ஆத்ம பலம் அயர்ந்து, பாதாளத்தில் ஆழ்கிறவரைவில் ஜெர்மானியரின் வீராவேசம் தணியப்போவதில்லை யென்று நான் உறுதியாக நினைக்கிறேன். தவிர, ஜெர்மனியின் ஆத்ம பலம் தளருமென்று என்னால் நினைக்கவே முடியவில்லை. முன்பிருந்து ஜெர்மன்மீது நடந்துவரும் விமானத் தாக்குதல், ஜெர்மானியரின் திறமை மிக்க போர் விமானங்களின் எதிர்ப்பினால் குறைய ஆரம்பித்துவிட்டது. இவ்வொன்றே, ஜெர்மானியரின் குன்றா வலிவுக்குச்சான்று. அடுத்த சில மாதங்களில் ஜெர்மனிக்கு நெருக்கடிகள் நேரலாம். ஆனால். அந்நெருக்கடியை அது சமாளித்து வெற்றியின் எல்லைக்கு வந்துவிடும். இப்போரின் கடைசிக் கட்டத்தில், ஜெர்மானியரின் ஆத்ம வீரம் திடீரென்று சிதைந்தால் என்னுடைய இந்தக் கருத்து முறிய முடியும். ஆனால், அப்படி எதுவும் நேரப் போவதாக என் சிந்தையில் எதிரொலிக்கவில்லை. ரஷியாவில் மார்ஷல் ஸ்டாலினுடைய செயல்களைப் போலவே, ஜெர்மானியரின் உள்நாட்டு எதிர்ப்புகள் எவ்வகையிலும் சிதறாதவாறு சர்வாதிகாரி ஹிட்லர் பாதுகாத்து வருகிறார்.

இன்றைய ஐரோப்பிய யுத்தம், வெறும் ஆயுத பலத்தினால் மட்டும் நடக்கவில்லை; உணர்ச்சிப் பெருக்கினாலேயேதான் நடக்கிறது. எவர் சார்பில் உணர்ச்சி ஊற்று அடைபடாமல் ஊறுகிறதோ அவர்களுக்குத்தான் நிரந்தர வெற்றி—இவ்வுணர்ச்சியின் நிறைவு இன்று ஜெர்மானியரிடந்தான் ததும்புகிறது. ஆகவே, வெற்றி அவர்களுக்கே! ஐரோப்பிய போரின் முடிவில் தான், சுதந்திர இந்தியாவின் விடிவு இருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் இத்தாலியிலும், பிரான்ஸிலும் நேச நாட்டார் பிரவேசியாதிருந்தால், இந்தியாவிலும், இதர கிழக்காசியப் பாகங்களிலும், நேச தேசப்படை பலம் முழுதும் பரவி நிற்கும். இப்பொழுது அவர்களின் கவனம் முழுதும் ஐரோப்பாவிலிருப்பதால், ஆசியாவின்மீது அதிகப் பாதுகாப்பைப் பரப்ப முடியாது.

ஆதலால் ஆங்கிலோ—அமெரிக்கரின். இன்றைய ஐரோப்பிய எதிர் நடவடிக்கையில், இந்திய விடுலே தளிர்க்கிறது.

முடிவாக, ஐரோப்பிய ஸ்திதியில்தான், இந்திய சுதந்திரம் வேரூன்றப் போகிறதென்று மீண்டும் தெரிவிக்கிறேன். ஐரோப்பாவின் எதிர்கால விளைவைப் பற்றி நமக்குக் கவலே யில்லே. நமது விடுதலேயை ஈட்டும் சந்தர்ப்பத்தை இறைவன் காட்டிவிட்டான். எனவே, ஐரோப்பியப் போரலேகள், நமது விடுதலேத் துறையை மோதிக் கரைக்க முடியாது. அவ்வலேகள் நமது உற்சாகத்திற்கு உயிர் கொடுக்கின்றன. அதன் கதியைப் பற்றியசிரத்தை நமக்கு வேண்டாம். நமது உரிமை நம்மை நாடி ஓடி வந்துகொண்டிருக்கிறது. அதற்கு வரவேற்பளிக்க நாம் தயாராகக் காத்திருக்க வேண்டும். நமது உரிமைக் கனி, முற்றிப் பழுத்துத் தொங்குகிறது. அதைப் பறித்துச் சுவைக்க அழைப்பு ஏன்?

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 16

கிழக்காசிய நிலேமை

(9-7-44-ல் நேத்தாஜி ரேடியோப் பிரசங்கம்)

தாயக நேயர்களே!

நேற்று ஐரோப்பிய நிலேமைகளேப்பற்றிப் பேசினேன். இன்று, கிழக்காசிய நிலேமைகளே, இந்தியாவிற்குரிய விசேஷ குறிப்புகளுடன் பேசப்போகிறேன். நேற்றையைப் போல, எனது சொந்த அநுபவங்களில் கண்டவற்றையே இன்றும் உங்களிடம் நீண்ட நேரம் பேசப் போகிறேனே யன்றி, நடப்பிற் குப் பொருந்தாத—கற்பனேகளேயல்ல.

கடந்த யுத்தத்திலும், இன்றைய யுத்தத்திலும், இருந்த—இருக்கிற நிலேமைகள் ஒன்றிட்ட பீடிகையைக் கொண்டே இன்று பேசப் போகிறேன். கடந்த யுத்தத்தில் பிரிட்டானியரின் பகைவர்கள், ஐரோப்பாவிலும், சமீப கிழக்கிலும்,

(மேற்கு ஆசியா) மாத்திரந்தான் இருந்தார்கள். அப்பொழுது நிப்பொனின் பலம், நேச நாட்டாரைக் கார்த்து நின்றது. இந்நிலையில் இந்தியாவிற்கு வெளியிலிருந்த புரட்சியாளர்கள், உள்ளே நடக்கும் விடுதலைப் போருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய எவ்வளவோ வருந்தி முயன்றனர். "கோமா காட்டா—மாரு" முதலிய சில கப்பல்கள் மூலமாக இந்தியாவுக்கு உதவி யளிக்க முயன்றனர். ஆனால், இம் முயற்சிகளால் பயன் காண முடியவில்லை. காரணம், இந்தியாவிலிருந்து வட-மேற்குப் பாதைகளில், பிரிட்டிஷாரின் பாதுகாப்பு பலமாயிருந்ததால்தான். இன்றையப்போர், கிழக்கு முகப்பைத் திறந்து வைத்திருக்கிறது. எனவே, எல்லையைக் கடப்பதும், தாயகத்திற்குள் புகுவதும் மிக மிக எளிது. சென்ற மகா யுத்தத்தில், ஆசியாவின் பெரும் பாங்களிலும், நேச நாட்டாரின் ஆதிக்கம் அமுலிலிருந்தது. இதனால் நமது விரோதிகள், அன்று ஐரோப்பாவிலும், சமீப கிழக்கிலும் மட்டிலுமே போரிடுவதற்கு கவனம் காட்ட லகுவாயிருந்தது. ஆனால், இன்றைய நிலை அப்படியல்ல. 1941 டிஸம்பரிலிருந்து ஐரோப்பா, சமீப கிழக்கு மட்டுமின்றி, ஆசியா முழுமையுமே போரிட வேண்டிய அவசியம், நேச நாட்டாரைச் சார்ந்துவிட்டது. இன்றைய நிலையில் நேச நாட்டாரின் சக்திக்கு மேல் தேவை அதிகமாகி விட்டது. அதோடு, நிப்பொன் தரை, கடற் படைகள் அங்கங்கே கொடுத்த தோல்வி மூட்டைகளின் பாரம் வேறு அழுத்துகிறது. இதிலிருந்துதான் இந்தியப் போராட்டத்திற்கு வேண்டிய உதவிகள் ஊறுகின்றன. சாம்ராஜ்யத்தின் மீது ஒரு சமயம் இந்தியர்களுக்கு கொஞ்சம் நம்பிக்கை இருந்தது. ஆனால், 1939 செப்டம்பரில் பிறந்த ஐரோப்பியப் போரும், 1941 டிஸம்பரில் ஆரம்பமான கிழக்காசியப் போரும், முந்திய நம்பிக்கையை உடைத்து, பிரிட்டிஷ் ஏதேச்சாதிகாரம், உயிர் மட்டுமுள்ள சவம் என்ற உண்மையைத் தெரிவிக்கிறது. உலக வெளியில் தடையின்றி தாறுமாறாக வளர்ந்து கொண்டிருந்த பிரிட்டிஷாரின் கௌரவ வளர்ச்சியை வேரோடு சாய்த்து, அதன் அலங்கோல நிலையை இந்தியர்களுக்குக் காட்டியது ஜெர்மனியின் ஜெயக்கொடியும், நிப்பொனின் நிறைந்த வலிமையுமே யாகும். இந்த யுத்தத்தில், பிரிட்டனின் பலம் தேய்ந்து, கௌரவம் சாய்ந்துவிட்டது. எனவே, இதன் முடிவு நாள் கணக்கில் இருக்கிறது.

எதிர்காலத்தில், பிரிட்டனின் உலகாதிக்கம் உயிரோடிருக்குமா? என்ற கேள்விக்கு பதில் சொல்லுவது இந்தப் போரின் வேலையல்ல. பதில், ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டது. சரித்திர ஆர்வ மாணவனொருவன், எதிர்காலத்தில் சரித்திர ஏடுகளைத் திருப்புகிறபோது, அதில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அத்தியாயம் அழிபட்டுப் போயிருப்பதைக் காண்பான். வருங்காலத்தில், உலகாதிக்யம் ஐக்ய அமெரிக்காவிடம் தாவுமா, அன்றி புதிய சகாப்தம் தோன்றி, அதில் இதர வல்லரசுகளுக்கு நிழல் கிடைக்குமா என்ற ஒரே பிரச்னைக்குத்தான் இன்று தெளிவு காணவேண்டும். யுத்தத்திற்குப் பிறகும் பிரிட்டிஷ் ஆதிக்கம் ரூபம் பெற்று, அதன் கீழேயே இந்தியா இருக்குமென்று என் தாயகத்தாரில் சிலர் கனவு காண்கிருர்கள். ஆத்ம பலத்திற்கும், உணர்ச்சிப் பெருக்கிற்கும் அதிக தூரத்திற்கு அப்பால் இன்னமும் நின்றுகொண்டிருக்கும் இவர்களை நினைக்கும் எனக்கு வருத்தமும், இரக்கமும் ஏக காலத்தில் உதிக்கின்றன. அடிமையின்மை இருள், அவர்களின் கண்ணொளிகளில் கவிந்திருப்பதால், இன்று புலர்ந்து, உச்சியில் ஏறிக்கொண்டிருக்கும் விடுதலை ஜோதியின் ஜீவ ஒளியை அவர்கள் பார்க்க முடியவில்லை.

அறிவில் முதிர்ந்த இந்தியர்கள் கூட சில சமயங்களில், அடிமை மோகத்தில் மோதி, வாழ்வுப்பாதையைக் குறுக்கிக் கொள்ளுகிருர்கள். ஒரு முறை மூப்பிற்கு இடம்கொடுத்துவிட்டால், அது யௌவனத்தைப் பெயர்த்தெறிந்துவிடும். வாலிப நரம்புகளையும், வாலிப சக்திகளுக்குரிய மருந்துகளையும் கொடுத்து, ஒரு வயோதிகனை வாலிபனுக ஆக்கிவிடுவதென்பது ஆகாத வேலை. அமெரிக்காவின் உதவிக் கோலை ஊன்றிக்கொண்டு, முதுகு வளைந்த சர்ச்சிலும், அவருடைய சாம்ராஜ்யமும் நிமிர்ந்து நிற்க முயலுகிறது. ஆனுல், ஹாங்காங்கிலிருந்து, சிந்து நதிக் கரைக்கு மிகச் சில மாதங்களுக்குள் ஒடிப் பதுங்கிய சாம்ராஜ்யத்தை, இனி தெய்வ சக்தி கூட வாழ்விக்க முடியாது.

கிழக்காசியாவில் ஆங்கிலோ—அமெரிக்கர்களின் தோல்வியினுல் அடைந்த பெரு நஷ்டத்தை, அமெரிக்காவில் வலிமையும், இதர சாதனங்களும் சேர்ந்து திரும்பப் பெற்று விடுமா? இந்தியாவின் எதிர்கால விதி என்ன? அமெரிக்காவின் ஆதரவைப் பெற்று, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்தியாவில் இன்னும் உயிரோடிருக்குமா? இவைதான் இன்று, உலகின் இப்பகுதியில் தவிர்க்கப்படவேண்டிய தொல்லை.

பிரஸிடென்ட் ரூஸ்வெல்ட் பிரதமர் சர்ச்சிலைச் சந்தித்த பிறகு ஆங்கிலோ-அமெரிக்கரின் ஒருமிப்பு முழுதும், ஐரோப்பிய அரங்கில்தான் முதலில் கூடப்போகிறதென்று உலகிற்கு ஒலி பரப்பியதைக் கேட்டு நான் சந்தோஷித்தேன். அவர்களின் யுத்த நடிப்பு, பஸிபிக் மேடையில் ஏறி இருந்தால் உண்மையில், எனது நினைவு, வேறு பக்கம் திரும்ப நேர்ந்திருக்கும். ஆங்கிலோ-அமெரிக்கர்கள் இத்தாலியிலும், பிரான்ஸிலும் பிரவேசியாமல், அவர்களின் முழு பலத்தையும் பஸிபிக்கிற்கு அனுப்பி இருப்பார்களானல், ஜப்பான் நெருக்கடியுடன் பிணைய வேண்டி வந்திருக்கும். தவிர அமெரிக்க சமுதாயத்தின் அநுசரணையும், அபிமானமும் தலைவர் ரூஸ்வெல்டைத் தொடர்ந்து, அவரின் பிரசாரத்திற்கு அகில அமெரிக்க மதிப்பும் குவிந்திருக்கும். ராஜீய-பொருளாதார முறையில், அமெரிக்கா ஜப்பானை வெறுப்பதோடு, நிறத்துவேஷமும் ஓங்கி நிற்கிறது. இதே காரணத்தைக் கொண்டு, அமெரிக்கா ஜப்பானை நோக்கி இருந்தால், ரூஸ்வெல்டின் தலைமைத்துவம் பலபடிகள் முன்னேறியுமிருக்கும். ஆனல் காலக்காற்று, ஜப்பான்-ஆசியா-இந்தியாவில் வீசுவதால், ரூஸ்வெல்டின் செயல் இப்பக்கம் திரும்பவில்லை.

நேசநாட்டாரின் விதி, தோல்வியை நாட விரும்புவதால்தான், ரூஸ்வெல்டின் படைப்பாய்ச்சல் ஐரோப்பாவைப் பற்றியது. தவிர, ஐரோப்பியப் போரில், அகில அமெரிக்காவும் ஒன்றுபட்டில்லை. அங்கங்கே அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. இதைப் பற்றிய முழுவிபரங்கள் நமக்கு இப்பொழுது வேண்டியதில்லை. அமெரிக்கப் பொதுமக்களின் நோக்கம் ஒரே மாதிரி இல்லாததால், ஐரோப்பியப்போரில் அமெரிக்க சக்தி முழுதும் கலந்து கொள்வதற்கில்லை. அகில ஜப்பானிலும், "செயல் அல்லது மரணம்" என்ற வைராக்கியம் இறுகிவிட்டது, அமெரிக்கரின் பிடிப்பில்லாத உறுதி நிப்பொனின் உருக்கு மலையை உடைத்துவிடுவதென்பது, சிந்திக்க முடியாத விஷயம். இன்றையப் போருக்கு வேண்டிய மனப் பக்குவம், ஜப்பானில் பழுத்து நிற்பதால், இங்கு வெற்றி சமையும் என்பதற்கு கேள்விக்கே இடமில்லை.

ஐரோப்பியப் போரை முதலில் முடித்துக்கொண்டு, பிறகு அவ்வளவு பலத்தையும், ஆசியா—நிப்பொன் மீது ஏவுவோம் என்று ஆங்கிலோ—அமெரிக்கர்கள் ஓயாமல் சொல்லிவருகிறார்

கள். சமீபத்தில் நடந்த சுங்கிங்—ஜப்பான் போரின் ஏழாவது வருஷ விழாவிற்கு, பிரதமர் சர்ச்சில் இச்செய்தியையே சியாங்கை ஷேக்கிற்கு அனுப்பினர். ஆனல் ஐரோப்பியப் போரின் முடிவும், எங்கே, யாரால் முடியப்போகிறதென்பதை நாம் பார்க்கவே போகிறோம். ஐரோப்பியப் போரின் ஆங்கிலோ—அமெரிக்கரின் பலம் முக்காலும் தேய்ந்துவிடும். பிறகு ஆசியாவில் நிப்பொனைத் தோற்கடிப்பதென்பது வெறும் நினைவு என்பதை எனது தீர்க்கதரிசனம் இன்றே காட்சியளிக்கிறது. மறுபடியும் இரண்டு பெரிய யுத்தமுனைகளில் நடக்கப்போகிற தற்கொலைக் கொள்கையின் கோரத்தை சரித்திரம் காட்டப்போகிறது.

ஐக்கிய அமெரிக்காவின் யுத்த சாதன விளைவுகள் ஆங்கிலோ—அமெரிக்கரின் வெற்றிக்கு அஸ்திவாரம் போடுவதாக, எதிரிகளின் பிரசாரம் கத்துகிறது. ஆனல், அமெரிக்காவின் சாதனங்கள் எல்லைக்கு வந்து விட்டது. இனி எதிர்காலத்தில் அதன் சாதனங்கள் வளருவதற்கு மார்க்கமில்லை. எனவே, அதன் உற்பத்தி ஸ்தானம் அளவுக்கோட்டுக்குள்ளேயே அடங்கி இருக்கத்தான் வேண்டுமென்பதை நாம் நம்பமுடியும். அளவுக்குக் கட்டுப்பட்ட அமெரிக்க சாதனங்கள் எதற்கும் கட்டுப்படாத ஜப்பானின் தயாரிப்போடு போட்டியிடுவது சாத்தியமில்லை. ஜப்பானின் யுத்த சாதன விளைவுகள், எதிர்காலத்தில் எந்த வறட்சியிலும் ஊறிக்கொண்டே இருக்கும். இதைத் தவருக நினைப்பவர்களுக்கு, வந்துகொண்டிருக்கும் நாட்கள், சரியான நடைமுறையோடு செய்து காட்டி மெய்ப்பிக்கும்.

இப்பொழுது அமெரிக்கரின் ஆத்ம பலத்தைப்பற்றி ஒரு பிரச்னை இருக்கிறது. அதையும் சர்ச்சை செய்து விடுவோம். பிரிட்டனின் ஆத்ம சக்திக்கு அமெரிக்காவின் ஆத்ம சக்தி உயர்ந்தது. இதில் சந்தேகமே இல்லை. ஆனல், இந்தப்பலம் எவ்வளவு நாள்தான் தேயாமலிருக்கமுடியும்? 'முதலில் பஸிபிக்' என்ற கொள்கையை ரூஸ்வெல்ட் செயலுக்குக் கொண்டுவந்திருந்தால், அமெரிக்கரின் பூரணபிமானத்தையும் பெற்று, அவருடைய பதவியைப் பலப்படுத்திக் கொண்டிருக்க முடியும். இதில் எத்தனை ஏற்றத்தாழ்வுகள் ஏறி, இறங்கி இருந்தாலும் அமெரிக்க மக்களின் மனோநிலை கலையாதிருக்கும். ஆனல் ரூஸ்வெல்ட் அப்படிச் செய்யவில்லை. ஆகவே இன்று நடக்கும் ஐரோப்பியப் போரின் மீது, அமெரிக்கரின் அபிமானம் ஒட்டவேயில்லை. தவிர,

ஜெர்மனியும், ஜப்பானும் தங்கள் வாழ்வின் விரிவுக்காகப் போரிடுகின்றன; அமெரிக்காவும்,பிரட்டனும் அவ்வாறல்ல. எதிர்கால ஆதிக்கத்தின் ஆசையிலேயே பிரிட்டன் போரிடுகிறது. இதை அப்படியே கவிழ்ந்து, அகில உலக எஜமானத்துவத்தை வகிக்க அமெரிக்கா போரிடுகிறது. எனவே, அமெரிக்கரின் ஆத்ம பலம், அதிக நாள் நிலைக்குமென்று நினைப்பதற்கே காரணமில்லை. உற்பத்திகளும் தேசீய மனோ உணர்ச்சியைப் பற்றி நிற்க முடியாது. தவிர, யுத்த முஸ்தீபுகள் நிறைவு பெற்று, வெற்றிக்கு உறுதியளிப்பதாயிருந்தால், ஜெர்மனியிடம் பிரான்ஸ் பணிந்திருக்காது. ஐரோப்பிய யுத்த முனைகளில், ஆங்கிலோ—அமெரிக்கரின் நஷ்டம் அதிகமாகி விட்டது. இதில் அமெரிக்க சக்தியும், ஆத்ம வலிவும், கிழ்நோக்கி நிற்கிறது. பிறகு ஆங்கிலோ—அமெரிக்கர்கள், முழு பலத்தையும் திரட்டிக் கொண்டு கிழக்காசிய மேடைக்கு வந்தால், நிப்பொனுக்கு பாதிக்கும் ஆபத்துக்கள் எதையும் கொடுப்பதற்குறிய நிலைத்த வாய்மை அவர்களிடம்—ஒன்றுபட்டு நிற்காது. இவைகளை நாம் எதிர்காலத்தில் காண முடியும். நிற்க, ஆங்கிலோ—அமெரிக்கர்கள், ஐரோப்பியப் போரில் வெற்றி—தோல்வி யடைவதைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை. ஆனல் அவர்களுக்கு ஐரோப்பியப் போரில் வெற்றியடைய ஏதாவது இருக்கிறதா? என்ற கேள்விக்கு என்னுடைய நேற்றைய பேச்சில் பதில் இருக்கிறது.

கிழக்காசிய யுத்தம், கஷ்டத்தையும்—காலத்தையும் பெருக்கியேதான் நிற்கிறது. இது எல்லோரைக் காட்டிலும், ஜப்பானுக்கு நன்ருய்த் தெரியும். தனது தேவையை அளந்து பார்த்து பூரணமாக்கிக்கொண்ட பிறகுதான், நிப்பொன், அமெரிக்க—பிரிட்டனுக்கெதிராக வாள் ஏந்தியது. போர் தொடுத்ததிலிருந்து, ஜப்பான் தனது ஸ்தானத்தை கிழக்காசியாவில் பலப்படுத்திக்கொண்டு, யுத்த சாதனங்களையும் விரைவில் விரிவு செய்து கொண்டது. இதோடு, நிப்பொன் பொது மக்கள்—ராணுவங்களின் ஆத்ம பலமும் பக்குவத்தோடு இணைந்து கொண்டது. எனவே, எதிர்காலத்தில் நிப்பொனைத் தோற்கடிக்குந் திறமை அமெரிக்கருக்கு உண்டென்று நான் நினைக்கவில்லை. நிப்பானியரால் பஸிபிக்கில் ஆக்ரமிக்கப்பட்ட சில தீவுகளில் அமெரிக்கர் ஓரளவு வெற்றிபெற்ருர்களென்பது எனக்குத் தெளிவாய்த் தெரியும். ஆனல், இத்தீவுகள் நிப்பொன் பாதுகாப்பிற்கு அப்பால் உள்ளவை. பாதுகாப்பிற்

குட்பட்ட பகுதிகள், எவ்வித தொல்லையுமின்றி பத்திரமாகவே இருக்கின்றன. இதை அமெரிக்கத் திறமை, தொட்டுவிடுவது என்பது முடியாத வேலை. அமெரிக்கர்கள், நிப்பொனின் பாதுகாப்பில்லாத பகுதிகளில் வெற்றி காணக்காண, பாது காப்பிற்குட்பட்ட பகுதிகளில் நிப்பொனின் பலம் மிகைப்பட்டு வருகிறது. முடிவில் அமெரிக்க ஆத்மபலம் அழுகிப் போகும். இன்றைய யுத்தம் ஆயுத சக்தியோடு மாத்திரம் நிற்கவில்லை. உணர்ச்சியையும் பற்றியதாகும். இதைப்பற்றி நான் நேற்று விஸ்தரித்துள்ளேன். நிப்பொனின் மனோபலம், அமெரிக்கா வுக்கு மேம்பட்டது. வருகிற போரின் எல்லைவரை, நிப்பொனின் ஆத்ம சக்தி தளராமல் அமெரிக்கரை முந்திக்கொண்டு செல் லும் தன்மை யுடையதென்பதை எவரும் தர்க்கிக்க முடியாது.

கிழக்காசியாவில் நேச நாட்டின் வெற்றி பரவுவதற்கு சுங்கிங் சைனு எந்த உதவியைச் செய்ய முடியும்? என்னுடைய அபிப் பிராயத்திலிருந்து இந்தக் கேள்வி எழலாம். நீண்டகாலமாக ஜப்பானை எதிர்த்துச் சுங்கிங் போராடுகிறது. இதன் ராணுவ வலிமையைக் கீழ்த்தரமாக எவரும் மதிக்க முடியாது. நிப்பொன் மக்களும்—ராணுவமும் கூட கேவலமாக மதிக்கவில்லை. ஆனால், தேசிய சைனுவில் பரவி நிற்கிற ஜப்பானின் புதிய கொள்கை, யுத்தத்திற்குப் பிறகு தமது படைகளைத் திருவித்துக்கொள் வதாய் தேசிய அரசாங்கத்திற்கு நிப்பொன் செய்து கொடுத்த ஒப் பந்தம்—ஆகியவைகளால் சுங்கிங்கின் மனே உறுதி உடைந்து, கீழ்த்தரமாகவே மாறி வருகிறது. இந்த ஒப்பந்தம் சைனு மக்க ளின் தேவைகளை சரளமாக நிறைக்கிறது. பிறகு, சுங்கிங் எதற் காக இப்பொழுது சண்டை யிடுகிறது? இந்தக் கேள்விதான் இன்று கிழக்காசிய மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் எழுந்து நிற் கிறது. ஜப்பானின் புதிய கொள்கை, சீன மக்களுக் கிடையில் நிரந்தர அமைதியைக் கொடுத்ததோடு, தேசிய புனர் நிர்மாண இயக்கங்களுக்கு விரிவையும் கொடுத்திருக்கிறது. இப்பொழுது தேசிய சைனு, அதன் புனர் வளர்ச்சியில் பக்குவப்பட்டு, நிலைத்த நிம்மதியை சைனு முழுதும் பரப்ப முயலுகிறது. எனவே, சுங்கிங் ஆத்ம பலம் குன்றி வருகிறது. இத் தேய்வு, சுங்கிங்கின் உள் நாட்டுக் குழப்பத்தை முதிர வைத்துவிட்டது.

"ஏழு வருஷங்கள் கடுமையாகப் போராடியதில், சுங்கிங்கின் பலம் தளர்ந்துவிட்டது. இத்தளர்வோடுதான் எட்டாவது வருஷத்தில் பிரவேசிக்கிறது. இவ்வருஷத்தில்

இருக்கிற பலமும் கருகிவிடும் சின்னம் இப்பொழுதே தெரிகிறது. பொருளாதாரம், ராணுவம், இவைகளில் சுங்கிங்கின் துயரம் அகண்டு விட்டது. கடந்த வருஷமே, சுங்கிங்கின் கஷ்டம் முழுமை பெற்றுவிட்டது. இவ்வருஷம் அதற்கும் மேம்பட்ட கஷ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. விலைவாசிகள் உச்சம் பெற்று, ராணுவத் தேவை பூர்த்தியாவதைத் தடை செய்கிறது. இதனால் ராணுவ பலம், ஜீவனின்றிச் சோர்ந்து விட்டது. இந்நிலையில் தென்—கிழக்குச் சைனாவில் நிப்பொனின் எதிர் நடவடிக்கை சுங்கிங்கின் சக்தியை எழவிடாமல் செய்து விட்டது. பொது மக்களின் மனோ நிலை, போர் நடவடிக்கையின் தளர்வை ஆராய்ந்து, ஆதரவையும் நிறுத்திக்கொண்டது. எனவே, சுங்கிங், ஆற்ற முடியாக் களைப்பில் அவஸ்தைப்படுகிறது.''

இந்தத் தீர்ப்பு என்னுடையதல்ல. அச்சு நாடு—அல்லது நிப்பொனைச் சார்ந்த விமர்சகர்களின் தீர்ப்புமல்ல. ஒரு அமெரிக்க எழுத்தாளரின் தீர்ப்பு. 'சிகாகோ டெய்லி நியூஸி'ன் நிருபர் சில தினங்களுக்கு முன், சுங்கிங்கின் உள் நாட்டு நிலையை மேற்கண்டவாறு தந்தி மூலம் அனுப்பிய விவரங்களைத்தான் மேலே சொன்னேன்.

பல தந்திர முறைகளைக் கையாண்டு, சுங்கிங்கின் உணர்ச்சியைப் பக்குவப்படுத்தி, உள் நாட்டு நிலையைத் திருத்தி விடலாமென்று அமெரிக்கர் ஒவ்வொரு முறையும் முயன்றார்கள். அமெரிக்க அபிமான வட்டாரச் சீனர்கள் மூலம், சுங்கிங்கைப் பலப்படுத்தப் பார்த்தார்கள். பர்மாப் பாதையைத் திறந்து, அதன் மூலம் இந்தியாவிலிருந்து அநேக உதவிகளை அனுப்பப் போகிறோமென்று உறுதி கூறினார்கள். இவ்வுறுதியை ஊர்ஜிதம் செய்வதற்காக, பர்மாவில் வடக்கிலும், தெற்கிலும் அபாரமாய்த் தாக்கினார்கள். ஆனால் இவை பயன் பெறவில்லை. பிறகு, ஜப்பானைத் தோற்கடித்துவிட்டால், ஆசியாவின் ஆளும் சக்தி சுங்கிங்கிற்கே என்ற ஆசையை புதிய மோஸ்தரில் கிளப்பினார்கள். உண்மையில் ஜப்பானியர் தோற்றுவிட்டால், சீனாவின் ஆதிக்கம் அமெரிக்கரின் பாதத்தடியில்தான் கிடக்கும். சுங்கிங்கின் நிலை திருப்திகரமாக இருந்தால், அமெரிக்க நளினம் பயன் கண்டிருக்கும். ஆனால், சாங்ஷா முதலிய இடங்களின் வீழ்ச்சியில், சுங்கிங் உணர்விழந்து தள்ளாடுகிறது. எனவே, அமெரிக்கப் பிரசாரம், நீடித்து நின்று, உருப்படியான எதையும் பெற

முடியாது. மிகப் பரிதாபகரமான நிலைமையில், சுங்கிங் ஆங்கிலோ—அமெரிக்கரின் உதவியை வேண்டி நிற்கிறது. இந்நிலையில் நிப்பொனுேடு எதிராடும் ஆங்கிலோ—அமெரிக்கருக்கு சுங்கிங்கின் உதவி ஒரு பயனையும் அளிக்க முடியாது.

கிழக்காசிய நிலையைப்பற்றி நான் மேற்கூறிய விமர்சனத்திலிருந்து, ஆங்கிலோ—அமெரிக்கரால், நிப்பொனை ஜெயிக்கவே முடியாதென்பது தெளிவாகும். முடிவில் வெற்றி மாலையோடு வெளிவருவது ஜப்பான் தான். ஐரோப்பிய யுத்த அரங்கில் என்ன நிகழுமென்பதைத் தெரிந்தே தான் இதை விவரித்தேன்.

இன்றைய சிக்கலான நிலையில் இந்தியா என்ன செய்ய முடியும்? இது நமது இரண்டாவது கேள்வி. இப்பொழுது இதற்கு விடையளிக்கிறேன்.

பிரிட்டிஷாரின் சேனு முகப்பும், ராணுவ பலமும் இந்தியாவின் வட மேற்கில்தான் இருந்ததாக அவர்களின் கடந்த காலச் சரிதையில் காண்கிறது. எதிரிகளின் தாக்குதல் வட மேற்கில் தான் இருக்குமென்பது அன்றைய ஊகம். இன்று இந்தியாவின் கிழக்கு முகப்புத்திறந்துகிடக்கிறது. கடவுள் கிருபையால் இந்தியாவின் கிழக்கில் முப்பது லட்சம் இந்திய விடுதலை அபிமானிகள் வாழுகிருர்கள்.

முப்பது லட்சம் இந்தியர்களும், அரசியல், ராணுவ பலத்தையும் பெற்று, சொந்த அரசாங்கத்தையும் அமைத்து, அதற்கு உலக வல்லரசுகளின் அங்கீகாரத்தையும் பெற்று விட்டார்கள். கிழக்காசிய இந்தியர்கள், ஒரு தலைவனின்கீழ் ஒன்றுபட்டு விட்டார்கள். இந்தியாவில் பிரிட்டிஷார், மதம் முதலிய பாகுபாடுகளைக் கிளறி, பாதுகாக்க முயலுகிருர்கள். ஆனல் இந்திய விடுதலைப்போரை ஆயுதமேந்தி நடத்துவதற்கு, கிழக்காசிய இந்தியர்கள் சர்வாம்ஸப் படை திரட்டுச் சட்டத்திற்கு சம்மதத்தோடு கட்டுப்பட்டு விட்டார்கள். நவீன ராணுவம் சொந்தத்தில் இருக்கிறது. அது கடந்த மார்ச் மாதத்திலிருந்து இந்திய பூமியில் போரிட்டுக்கொண்டுமிருக்கிறது.

இனி ஒரே கேள்விதான் பாக்கி. நிப்பொனுடைய ராணுவ உதவியையும், விடுதலை வேட்கை கொண்ட (இந்தியாவிலுள்ள) இந்தியர்களின் துணையையும் கொண்ட இந்திய தேசிய ராணுவம், பிரிட்டிஷாரின் இந்திய ராஜரீகத்தைப் பெயர்த்தெரிந்து விடுமா? இதுதான் கேள்வி. முடியும்! இதுவே என் பதில்.

என்னுடைய அநுபவத்தின் நடப்புகளைத்தான் நான் பேசுகிறேன். இந்தியாவில் பிரிட்டிஷாருக்கிருக்கும் சக்தியும் இந்திய மக்கள் சொந்த நாட்டில் பெற்றிருக்கும் பலமும், எனக்கு நன்ருய்த் தெரியும். இந்தோ—பர்மா முனையிலும், மணிப்பூர், அஸாம் பிரதேசங்களிலும், ஆங்கிலோ—அமெரிக்கரின் படைத் திறமையை நான் அளந்து பார்த்துவிட்டேன். கடந்த பிப்ரவரியிலிருந்து நடக்கும் போர்க்காலத்தில் நமது பக்கம் வந்து சேர்ந்துள்ள யுத்தக் கைதிகள் சொல்வதையும் நான் கேட்டிருக்கிறேன். அதோடு இப்பொழுது இந்தியாவிற்குள் சேவை செய்துவரும் நமது சகாக்கள்—பிரதிநிதிகளிடமிருந்து நான் பல செய்திகளைப் பெற்றுள்ளேன். இவை யெல்லாம் எனது நம்பிக்கைக்கு புதிய பலத்தைக் கொடுக்கின்றன. எனவே, அந்நிய ஆதிக்கத்திலிருந்து தாயகத்தை விடுவிக்கும் சக்தி நமக்கு உண்டு என்பதில் எனக்கு சந்தேகமே தோன்றவில்லை.

ஆனுல், நீண்டகால, கடினப் போராகவேதான் இருக்கும். தங்கள் ராஜ்யாதிகாரத்தைக் காத்துக்கொள்வதற்காக, இந்தியாவில் பிரிட்டானியார், கடுமையாகவேதான் போரிடுவார்கள். ஆயினும், அவர்களுக்கும், அவர்களுடைய கூலிப்படைகளுக்கும் மேம்பட்ட போர்த் திறமை நம்மிடம் நிறைந்திருக்கிறது. தவிர, உண்மை—நியதிகளின் ஆதாரத்தைக்கொண்டே நமது உணர்ச்சிப் போர் உருவாகி இருக்கிறது. நாம் நமது விடுதலைக்குச் சரியான விலை கொடுக்கத்தயாராக இருக்கிருேம். நவீன ராணுவமும் பக்குவப்பட்டுத் துடிக்கிறது. நமது வெற்றிக்காக,உலகின் எந்தச் சக்தியோடும் நாம் இன்று போரிட முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா விடுபட்டே தீரும்! இது நமது அசையா உறுதி! கடவுளின் விருப்பம்!!

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 17

"இந்திய நிலைமை"

(10-7-44-ல் நேத்தாஜி ரேடியோ பிரசங்கம்)

நண்பர்களே! என் நாட்டு மக்களே!!

கடந்த சில நாட்களாக, நான் இந்திய நிலை பற்றி குறிப்பிட்ட விஷயங்களை இன்றைய பிரசங்கத்தில் சுருக்கிக் கூறுவதுடன், நமது எதிர்கால திட்டம் பற்றியும் சொல்லப்போகிறேன். நமது லட்சியத்தை நாடி நாம் இவ்வளவு தூரம் அபிவிருத்தி யடைந்துள்ளதாலும், நமது இறுதி வெற்றியில் மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாலும், அவ்வாறு செய்வதில் ஆட்சேபனை எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சில சமயங்களில் மிகச் சிறந்த அரசியல் தந்திரம், நமது திட்டங்களை வெளிப்படையாக்குவதில் அடங்கியுள்ளதே யன்றி, உங்களது திட்டங்களை ஒளிமறைவாக வைத்திருப்பதில் அடங்கவில்லை.

இன்று இந்தியாவில் மூன்றுவிதமான மனோபாவமுடைய மக்களை நாம் காண்கிறோம்: முதல் இனத்தவர், தம் கனவில் கூட சுதந்திரத்தைப்பற்றி சிந்திக்கவும் சக்தி யற்றிருக்கின்றனர். அவர்கள் பொருட்படுத்தக்கூடிய எண்ணிக்கையில் இல்லை. இவர்களில் சிலர் கல்வி ஞானமுடையவர்களாகவும், அறிவு விலாச முடையவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களை நாம் லக்ஷியம் செய்யவேண்டியதில்லை. இரண்டாவது இனத்தவர், சுதந்திரத்தில் பற்றுடையவர்கள். இவர்கள் மனதில் பிரிட்டிஷ் துவேஷம் உண்டு. ஆனால், மனிதர்களுக்குரிய சில பலஹீனமான அம்சங்களின் காரணமாக இவர்கள் மும்முரமாக உழைக்க முன் வருவதில்லை. ஆனால் இவர்கள் நமக்கு அவ்வப்பொழுது மறைமுகமாக ஒத்தாசை செய்கின்றனர். இத்தகைய மனோபாவமுடையவர்களை, சர்க்கார் அதிகாரிகளிடையேயும், எல்லாப் பிரிவுகளையும் சார்ந்த உத்தியோகஸ்தர்களிடையேயும் காணலாம். ஓர் சாதாரண மனிதருக்குக்கூட நமது வெற்றி நிச்சயம் எனத் தெரியும்போது, அவர் பகிரங்கமாக நம்முடன் கூட்டுறவு கொள்வர். ஓர் புரட்சிக்குப்பின் இத்

தகைய மனேபாவ முடையவர்கள் புதிய ஒழுங்கை ஆதரிக்க முன் வருவதை நான் ஐரோப்பாவில் பார்த்திருக்கிறேன். புதிய சுயேச்சை நாடுகளாகிய குரோஷியா, சுலோவோகியா ஆகியவற்றிலும், ஜெர்மனியுடன் இணைந்த பின்னர் ஆஸ்திரியா தேசத்திலும் இப்படி நிகழ்வதை கவனித்திருக்கிறேன். பர்மாவிலுங்கூட மாஜி ஐ. ஸி. எஸ். ஆட்களும், மாஜி ஐக்கோர்ட் நீதிபதிகளும், எல்லா இலாக்காக்களேயும் சார்ந்த மாஜி அதிகாரிகளும் பர்மாவின் சுதந்திர சர்க்காரால் அமைக்கப்பெற்றுள்ள புதிய நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொண்டுள்ளதையும் நான் பார்த்திருக்கிறேன். இந்த இனத்தைச் சார்ந்தவர்கள் சுதந்திர இந்தியாவின் புதிய சர்க்காருக்கு ஆதரவளிப்பரென நாமும் எதிர்பார்க்கிறோம். அவர்களே நமது குழுவில் சேர்த்துக்கொள்ளுவோம். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் பிரிட்டிஷாருக்குச்சாதகமாக நடந்தவர்களென குற்றம்சாட்டப்பட்டவர்களாய் இருக்கக் கூடாது. தற்சமயம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் வேலே பார்ப்போர்கள், தமது வேலேகளில் திறமையுடையவர்களாயிருப்பின் அவர்களே சுதந்திர இந்தியாவின் சர்க்கார் ஏற்கத் தயாரென உண்மையில் நான் உத்தியோக அறிக்கை யொன்றை வெளியிட இயலும். ஆனல், இவர்கள் ஹிருதய பூர்வமாக பிரிட்டிஷாருக்கு ஆதரவு அளிப்பவர்களாக இருந்திருக்கக் கூடாது. தவிரவும், இவர்கள் பிரிட்டிஷ் ஊழியத்தில் ஈடுபட்டிருக்குங்கால் வழி தவறி சுதந்திர இயக்கத்திற்கு தீங்கு விளேவித்தவர்களாகவும் இருந்திருக்கக் கூடாது. இந்த சுதந்திரப் போரில் நமது சார்பில் சேர்ந்துள்ள, சேரவிருக்கும் பிரிட்டிஷ் இந்திய ராணுவ வீரர்கள் சம்பந்தமாக, சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார் ஏற்கனவே விடுத்த அறிக்கையில் அவர்கள் இந்திய தேசிய ராணுவத்தின் இதர அங்கத்தினர்களுடன் சமமாக நடத்தப்படுவர் என்றும், அவர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் ஊழியம் செய்த காலமும், இந்திய தேசிய ராணுவத்தில் ஊழியம் செய்த காலமும் சேர்த்துக் கணக்கிடப்படும் என்றும் உத்தியோகத்திலிருந்து விலகிய பின் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது. இந்தியாவிலுள்ள மூன்ருவது இனத்தவர், சுதந்திரப்பற்றுக் கொண்டுள்ளதுடன் சுதந்திரம் பெறுவதற்காக ஏதாவதொரு திட்டமான முயற்சியில் ஈடுபடுகின்ருர்கள். இந்த இனத்தைச் சார்ந்தவருக்குத்தான் எனது இப் பேச்சு :—

சுதந்திரப் பற்றுடைய இந்தியர்களுக்கு வேறு வழிகள் என்னென்ன? முதல் வழி பிரார்த்தனையே! யுத்தத்திற்குப் பின் பிரிட்டிஷார் சுதந்திரத்தை ஓர் பரிசாக வழங்குவார்களென்று அவர்கள் நம்பிக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். இவ்வழி சாத்தியமில்லை. ஏனெனில் சுயமதிப்புள்ள இந்தியர் இதில் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

இரண்டாவது வழி என்ன? பொறுத்துப் பார்ப்போம் என்ற கொள்கையேயாகும். பிரிட்டிஷாரின் நிலை எதிர்காலத்தில் வரவர ஆபத்தாகிவிடுமாதலால் யுத்த நிலையின் காரணமாக நமது சுதந்திரக் கோரிக்கையை ஏற்று, பூர்த்திசெய்யும்படியான நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுமென்பதில் நம்பிக்கையுடன் விளங்குவதாகும். இவ்வழி பற்றுவோர் பக்குவ காலத்தில் சுதந்திரம் பழுத்த பழமாக நம் முன்னிலையில் வந்து விழுமெனவும், ஆகவே குறிப்பிட்ட எதையும் செய்யாமல் பொறுமையுடன் காலங் கடத்துவதே சரியெனவும் நினைக்கின்றனர். இந்த மாற்று வழியும் சாத்தியமில்லை. எது வந்தபோதிலும், கடைசி வரை இந்தியாவைப் பற்றி நிற்பதென்று பிரட்டிஷார் ஒரேயடியாக தீர்மானித்திருக்கிறார்களென்பதை எனது தேசமக்களுக்கு அடிக்கடி கூறி வந்துள்ளேன். பிரிட்டிஷாரின் நிலை, இதர இடங்களில் சீர்கேட்டை அடைய, அவர்கள் இன்னும் அதிகப் பேராசையுடன் இந்தியாவைப் பற்றி நிற்பார்கள். பிரிட்டனுக்காக எவ்வழியிலேனும் இந்தியாவைக் காப்பாற்றிக்கொண்டால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நாசத்திலிருந்து தவிர்க்கப்படுமென அவர்கள் நம்பிக்கையுடனிருப்பார்கள்.

சுதந்திரத்திற்கு மூன்றாவது சுற்றுப் பாதை சத்தியாக்கிரஹம், அல்லது சாத்வீக எதிர்ப்பு. 1921-ம் ஆண்டிலிருந்து இந்திய தேசிய காங்கிரஸ் இவ்வழியையே தழுவி வந்தது. இம்முறையின்மூலம் சுதந்திரம் கிட்டுமா? கிட்டாதென்பதே எனது திடமான அபிப்ராயம். கடந்த இருபது வருஷச் சரித்திரமும் இந்த உண்மையையே நமக்குப் போதித்து வருகிறது. 1921-ம் ஆண்டில் காங்கிரஸிலுள்ள பலர் சத்தியாக்கிரஹ முறை சுயராஜ்யத்தை அளிக்குமென நம்பியிருந்ததையும் நான் அறிவேன். அந்த எண்ணம்—நம்பிக்கை—இரு ஹேஷ்யங்களை ஆதாரமாகக் கொண்டதாகும். இந்த இரு ஹேஷ்யங்களும் பொய்யாக்கப் பட்டுவிட்டன. பிரிட்டிஷ் சர்க்காரின் மனோபாவம் மாறுமென்

பது முதல் ஹேஷ்யம். சத்யாக்ரஹ இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக பிரிட்டிஷார் தமது வழிகளின் தவறை உணர்ந்து, பலாத்காரத்தின் மூலம் பழைய ஒழுங்கை நீடித்து நடத்த இயலாதென்பதைக் கிரஹித்து, கானடாவிலும் தென் ஆப்ரிக்காவிலும் நடந்துகொண்டது போன்றே உண்மை அரசியல் வாதிகளாக நடந்துகொள்ளக் கூடுமென்பது இரண்டாவது ஹேஷ்யம். சர்க்காருக்கு ஈவிரக்கமில்லாததை நாம் அறிந்தோம். ஆகவே, ஈவிரக்கமில்லாதபொழுது மனமாற்றம் ஏற்படுமா? தவிரவும், வெள்ளை நிறத்தவர் சார்பாக பிரிட்டிஷ் கொள்கைக்கும், வெள்ளையரல்லாதார் சார்பாக அது கையாளும் கொள்கைக்கும் வித்தியாசமிருப்பதையும் நாம் உணர்ந்துகொண்டோம். மேலும் இந்தியா, பிரிட்டிஷ் கையினின்றும் நழுவினுல் அவர்களது ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரக் கல் உடனே கீழே விழுந்துவிடுமெனவும், ஏகாதிபத்தியம் மறைந்தொழியுமெனவும் பிரிட்டிஷார் உணருகின்றனர். இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்பட்டபோதிலும், அது இறுதியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விலகத்தான் செய்யும். ஏனெனில் கானடா, தென் ஆப்பிரிக்கா போன்று இந்தியாவை ஏகாதிபத்தியத்துடன் பிணைக்கக்கூடிய அம்சம் எதுவும் இல்லை. எனவே, இந்தியா டொமினியனுக்குரிய அந்தஸ்தை யடைந்தால் அது அடியோடு ஏகாதிபத்தியத்திலிருந்து விலக முயற்சி செய்யும். இது சம்பந்தமாக அயர்லாந்தின் சமீப சரித்திரம் பிரிட்டிஷ் மனோபாவத்தில் எவ்வளவோ மாறுதல்களை உண்டுபண்ணி விட்டது. இதை இந்தியர்கள் இன்னும் உணர்ந்தபாடில்லை. பல்வேறு ராஜீயக் கொள்கைகளையுடைய பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் 1921-ம் ஆண்டில், ஆங்கிலோ-ஐரிஷ் ஒப்பந்தத்திற்கு ஆதரவளித்தபொழுது ஐரிஷ் பிரச்னையே தீர்க்கமாகத் தீர்ந்து விட்டதாக நினைத்தனர். ஆனுல், 1932-ம் ஆண்டில் பிரஸிடெண்ட் டீ வேலரா தோன்றியபொழுது ஐரிஷ் பிரச்னை மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்தது. பிரஸிடென்ட் டீ வேலரா அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து அவரை வீழ்த்த பிரிட்டிஷார் எவ்வளவோ முயன்றபோதிலும், அவர்கள் அதில் வெற்றிபெறவில்லை. டொமினியன் சர்க்காருக்குரிய அதிகாரத்தையும், சக்திகளையும் பெற்ற பிரஸிடென்ட் டீ வேலரா, இதுவரை பிரிட்டிஷாரை எதிர்த்துப் போர்புரிந்து வந்திருக்கிருர். 1916-ம் ஆண்டிலிருந்து 1921-ம் ஆண்டு வரை புரட்சிக்காரராக விளங்கி

போரிட்டதைவிட், இப்பொழுது இன்னும் அதிக வல்லமை யுடன் போராடி வருகிருர். ஆகவே, இந்தியா, அயர்லாந்தின் வழியைப் பற்றி நிற்குமெனவும், இந்தியாவிற்கு உரிமைகள் அளிக்கப்பட்டால், அதைக்கொண்டே எதிர்காலத்தில் தம்மை யின்னும் வன்மையுடன் எதிர்த்துப் போரிடக் கூடுமெனவும் பிரிட்டிஷார் நினைக்கின்றனர். ஆகவே, எவ்வளவுதூரம் இந்திய சுதந்திர இயக்கத்தை நசுக்க முடியுமோ, அவ்வளவுதூரம் செய்வது புத்திசாலித்தனமென பிரிட்டிஷார் கருதுகின்றனர். சத்தியாக்ரஹத்தின் மூலம் பிரிட்டிஷாரை வீழ்ச்சி யடையச்செய்யவோ, அன்றி, அவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றவோ இயலவே இயலாது. பிரிட்டிஷாருடன் கௌரவமான வகையில் சமாதானம் செய்துகொள்வதன் மூலம், அமைதியான வழியில் சத்தியாக்ரஹம் சுதந்திரத்தைக் கிட்டச் செய்யும். ஆனல், பிரிட்டிஷார் மிருக பலங்கொண்டு சத்தியாக்கிரக இயக்கத்தை நசுக்குவதென்ற திட உறுதியுடன் உள்ளதால், முன்குறிப்பிட்ட விஷயம் சாத்தியமில்லே. எனவே, சுதந்திரத்தை விரும்புவோர் போர் செய்து பெறுவதைத் தவிர்த்து வேறு மாற்று வழி எதுவுமில்லே. எனவேதான் நான்காவது முறை—கடைசி மாற்று முறையாகிய ஆயுத பலத்தை உபயோகித்து சுதந்திரத்தை நாம் அடைய வேண்டியுள்ளது.

குறிப்பாக இந்திய வாலிபர்களும், இந்திய மக்களில் பெரும் பாலோரும் இவ்வுண்மையை உணர்ந்துள்ளனர். இதுபற்றித் தான் கடந்த நாற்பது ஆண்டுகளாக ஓர் அந்தரங்கப் புரட்சி இயக்கம் உற்சாகத்துடன் தேசத்தில் நடைபெற்று வருகிறது. இந்தப் புரட்சியின் போக்கில் யுத்தக் கருவிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வெடி குண்டுகளும், வெடி மருந்துகளும், ரகசியமாகத் தயார் செய்யப்பட்டன. சத்யாக்ரஹ உதவிகொண்டோ, உதவி இல்லாமலோ புரட்சி இயக்கத்தின் மூலம் சுதந்திரத்தைப் பெற இயலுமென்பதற்கு எவ்வளவு நம்பிக்கையுள்ளது? பழைய சரித்திரம் இக் கேள்விக்கு பதிலளிக்க வல்லதாகவிருக்கிறது. சரிவர அமைப்பில்லாத ஒரு கோஷ்டி மனிதரின் லேசான ஆயுதப் பிரயோகம், மிருக பலத்தை அடிப்படையாகக் கொண்டு தேவை யானபொழுதெல்லாம் ஈவிரக்கமற்ற வகையில் உபயோகிப்ப தென உறுதிகொண்டுள்ள அந்நிய சர்க்காரை வீழ்ச்சியுறச் செய்வது சாத்யமன்று. சுதந்திரத்தைப் பெறுவதற்கு சாதா

ரண ஆயுதங்கள் மாத்திரம் போதுமானவை யன்று. நவீன ஆயுதங்கள் தேவை. அவற்றை நவீன முறையில் அமைத்துள்ள ராணுவம் பிரயோகித்தல் வேண்டும்.

இந்தியாவினுள் நவீன ராணுவத்தை அமைப்பதும், அதற்கென ஆயுதங்களைப் பெறுவதும் சாத்யமாக இருந்திருப்பின் வெளியுதவி தேவையே இல்லை. அதுவே இந்தியர்களுக்குச் சிறந்த வழியாகவும் இருந்திருக்கும். ஆனால் இந்திய நிலையையும், 1857-ம் ஆண்டிற்குப் பின், இந்திய மக்கள் எவ்வாறு நிராயுத பாணிகளாக்கப்பட்டனர் என்பதையும் அறிந்திருப்பவர்கள், தேசத்தினுள்ளாகவே புரட்சி சேனையை அமைப்பதும் அதற்கென ஆயுதங்களை பெறுவதும் சாத்தியமில்லை யென்பதை ஒப்புக்கொள்வார்கள். ஆனால், இந்த நிலைமையானது நம்பிக்கையில்லையெனக் கூறி, போரைக் கைவிட ஓர் காரணமாக மாட்டாது. வியாதி எவ்வளவு கடினமாயிருந்தபோதிலும் பரிகாரம் இருப்பது போன்றே, ஒவ்வொரு பிரச்னையையும் தீர்த்து வைக்கவும் மார்க்கம் இருக்கிறது. அதனை நாம் கண்டு பிடித்தாக வேண்டும். தற்போதைய நிலைக்கு பரிகாரம் என்ன? வெளியில் ஓர் ராணுவத்தை அமைத்து அதற்கென அவசியமான ஆயுதங்களைச் சேகரித்து, பின்னர் நாட்டிற்குள் நுழைவதேயாகும். இதையே கிழக்காசிய இந்தியர்கள் செய்து வருகின்றனர்.

கிழக்காசிய இந்தியர்களின் தற்போதைய நடவடிக்கைக்கு உலகச் சரித்திரத்தில் உதாரணம் எதுவும் இல்லையெனக் கூறுவதற்கில்லை. உதாரணமாக, கடந்த உலக யுத்தத்தில் அயர்லாந்தில் சின் பீன் கட்சியினர் அமெரிக்காவிலிருந்து பணமும், ஆயுதமும் பெற்றதுடன், ஜெர்மனியிலிருந்தும் ஆயுதங்களைப் பெற்றனர். 1859-ம் ஆண்டில் இத்தாலியர் நடத்திய சுதந்திரப் போரில், இத்தாலியில் உள்ள ஆஸ்திரிய சேனையை விரட்டி யடிப்பதற்கு மூன்றுவது நெப்போலியனின் பிரெஞ்சு ராணுவத்தின் உதவியைக் கோரினர். துருக்கியின் பிடியிலிருந்து விடுதலை பெற பால்கன் போரில், ரஷிய ராணுவத்தின் உதவியினால் பல்கேரியா விடுதலை பெற்றது. உண்மையில் நான் ஏற்கனவே கூறிய பிரகாரம் வெளி நாடுகளிலிருந்து எத்தகைய உதவியேனும் பெறுமல் எந்தத் தேசமும் சுதந்திரம் பெற்றதாகப் புரட்சிச் சரித்திரத்தில் ஓர் உதாரணத்தைக் கூட கண்டு பிடிக்க இயலவில்லை.

அஹிம்சைப் போரின் மூலம் இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற இயலாதென நான் ஏற்கனவே கூறியுள்ளேன். ஏதேனும் ஓர் விசேஷ அற்புதத்தின் பயனாக இது சாத்தியமானால், சத்தியாக்ரஹம் நம்மை நமது லட்சியத்திற்கு அழைத்துச் சென்றால், நம்மைவிட மகிழ்ச்சி யடைவோர் எவருமே இருக்க மாட்டார்கள். அப்படியானால் கிழக்காசியாவில் நாம் செய்து வரும் பெரிய முயற்சிகள் தேவையற்றதாகும்.

வேறு எல்லா முறைகளும் பலன் தராததால் சுதந்திரத்தில் உண்மைப் பற்றுக்கொண்டு அஹிம்ஸை முறையின் மூலம் பாடு பட்டு வந்தோர் அனைவரும் தற்சமயம் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமென நான் கூற விரும்புகிறேன். நமது வாலிபர்கள் அவ்வாறே செய்து வருகின்றனர். எதிர்காலத்தி லும் அப்படிச் செய்வார்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் வயது முதிர்ந்த தலைவர்கள் பற்றி விஷயம் யாது? அவர்களும் அவ்வாறே செய்யவேண்டும். நமது பழைய காங்கிரஸ் தலைவர் களில் சிலர், ஏற்கனவே மிதவாதிகளால் கையாளப்பட்டு புறக் கணிக்கப்பட்ட கொள்கையையும், முறையையும் ஆதரிக்கும் மனோபாவத்துடன் விளங்குகின்றனர். இது பெரிதும் வருந்தத் தக்கது.

நமது இயக்கத்தின் நுட்பம் பற்றி சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவம், வெளி யிலிருந்து தாக்கப்படாதவரையில் அது தேசத்தில் புரட்சி இயக்கத்தை நசுக்கிக் கொண்டே யிருப்பது சாத்தியமாகும். எனவே, இந்திய விடுதலைப் போரில், இந்திய தேசிய ராணுவம் இரண்டாவது போர் முனையை அமைத்துள்ளது. நாம் இந்தியா விற்குள் வெகு தூரம் முன்னேறி பிரிட்டிஷ் படைகள் பின்னடை வதை இந்திய மக்கள் தம் கண்களாலேயே பார்க்கும் பட்சத் தில், பிரிட்டனின் வீழ்ச்சி வெகு சமீபத்திலுள்ளதென்பதில் நம்பிக்கை கொள்வார்கள். அப்பொழுதுதான் அவர்கள் தம் உயிரைத் தத்தஞ்செய்ய உறுதி கொண்டு, தேச விடுதலைக்கு முன்னேறும் நமது ராணுவத்துடன் ஐக்கியப்படுவார்கள். பின்னர், இருவரும் ஒன்றுபட்டு பிரிட்டிஷ்ரை விரட்டி யடிக்கும் வரையில், அவர்களைப் பின் தொடர்ந்தே செல்லுவோம்.

அரசியல் அன்றி ராணுவ தந்திரோபாயங்களைக் கையாளும் பொழுது, எவரும் முதன் முதலில் மக்களின் மனோபாவத்தைக்

கிரஹித்தாகவேண்டும். எந்தப் போராட்டத்திற்கும் இது முக்கியமான அடிப்படையாகும். ஒரு சில மாதங்களுக்குள்ளாக ஹாங்காங்கிலிருந்து சிண்ட்வின் ஆறுவரை பரவி நின்ற ஓர் ஏகாதிபத்தியம் மறைவதைக் கிழக்காசியாவிலுள்ள இந்தியர் கண்ணாரக் கண்டனர். இது காரணம் பற்றித்தான் இவர்கள் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாரைத் தோற்கடித்து, அவர்களை வீழ்ச்சியுறச் செய்யலாமென்பதில் பரம நம்பிக்கையுடன் உள்ளனர். நமது சுய தேச மக்களுக்கு இத்தகைய அனுபவம் கிடையாது. இதன் காரணமாக அவர்கள், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சக்தியை தகர்க்க முடியுமென்பதில் சந்தேகங் கொண்டுள்ளனர். புரட்சி ஆரம்பத்தை நாம் எதிர்பார்ப்பதற்கு முன்னதாக அவர்கள் மனத்தில் கொண்டுள்ள இந்தத் தவருன அபிப்ராயத்தை அகற்றியாக வேண்டும். இந்தத் தவறை தகர்ப்பதற்கும், பீதியடைந்துள்ள இந்திய மக்களிடையே தன்னம்பிக்கையை யூட்டுவதற்கும், இந்திய தேசிய ராணுவம் போர் புரிந்து ரத்தம் சிந்தியாக வேண்டும். மலேயாவிலும், பர்மாவிலும் ஓட்டம் பிடித்தமாதிரி, ஒருமுறை பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்தும் ஓட்டம் பிடிக்க வைத்துவிட்டால், இந்திய தேசீய ராணுவம் தனது பிரதானமானதும், மிக்க கடினமானதுமான கடமையைச் செய்து முடித்ததாகக் கருதலாம்.

இந்திய தேசீய ராணுவத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற சேவைகளைக் கவனிக்கும்பொழுது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இடுகாட்டில்—ஒரு காலத்தில் தகர்க்க முடியாத கோட்டையென உலகமறிய பறைசாற்றப்பட்ட சிங்கப்பூரில்—இந்த ராணுவம் அமைக்கப்பட்டதென்பதை ஞாபகத்திலிறுத்துதல் ரஸமாகவிருக்கும். எனவே, விதி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு மரண தண்டனைத் தீர்ப்புக் கூறிவிட்டதென்ற அசையா நம்பிக்கையின் பேரிலும், விதியின் கட்டளையை நிறைவேற்றதான ஓர் கருவி என்ற நம்பிக்கையின் பேரிலும் இந்திய தேசீய ராணுவம் தனது வாழ்க்கையை ஆரம்பித்தது.

நமது இப்போருக்கு நிப்பொனின் உதவி ஏன் தேவை என்ற பிரச்னை இவ்விடம் எழுகிறது. பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டுடன் கூடிய 50,000 துருப்புகளை எதிர்த்து போரிடுவதற்கு அயர்லாந்திலுள்ள சின் பீன் கட்சியினரிடம் 5,000 பயிற்சி பெருத சகாக்களே இருந்தனர். இத்தாலியில் கரிபால்டி,

ஆயிரம் தொண்டர்களுடனேயே தமது ராணுவப்போரை நடத்தினர். ஆகவே, நமக்கு ஏன் நிப்பனின் உதவி தேவையெனக் கேட்கலாம். இதற்குப் பதில் தெளிவாக இருக்கிறது. யுத்த காலத்திற்கு முன் இந்தியாவில் இருந்த மாதிரியில் பிரிட்டிஷ் ராணுவத்தை எதிர்த்துப் போரிடவேண்டி யிருந்தால், நமக்கு எத்தகைய வெளி உதவியும் தேவைப்பட்டிருக்காது. ஆனல், இந்தப் போரின் காலப்போக்கில் பிரிட்டிஷார் நமது தேசத்தில் பிரம்மாண்டமான ராணுவமொன்றை அமைத்துள்ளனர். தவிரவும், அவர்கள் உலகம் பூராவாகவுமிருந்து—இங்கிலாந்து, அமெரிக்கா, ஆப்பிரிக்கா உள்பட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலுமிருந்தும், நேபாளத்திலிருந்தும்—அதிகப்படியான துருப்புகளையும், ஆயுதங்களையும், பிற சாதனங்களையும் கொண்டு வந்து சேர்த்துள்ளனர். ஒரு காலத்தில் சர்வ வல்லமைமிகுந்த பிரிட்டிஷாரே, இன்று தமது உதவிக்காக உலகம் பூராவாகவும் சுற்றிப் பிச்சை யெடுக்கிறார்கள். ஆகவே, நாம், தாராள மனோபாவ மிகுந்த நிப்பனின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவம் யுத்தத்திற்கு முன்பிருந்த தொகைக்கு குறைக்கப்பட்டால் நிப்பானிய ராணுவ உதவியின்றியே இந்தியாவில் பிரிட்டிஷ் செல்வாக்கை—அதிகாரத்தை—இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழியச் செய்ய இயலுமென நான் உத்திரவாதம் அளிக்கிறேன். பிரட்டிஷார், மஹாத்மா காந்தியின் “இந்தியாவை விட்டு வெளியேறு” என்ற தீர்மானத்தை யேற்று, அதைக் கிரியாம்சையில் கொண்டு வரட்டும். இந்தியப் பூமியில் மேற்கொண்டு ஓர் நிப்பானியப் போர்வீரன் கூடக் காலடி வைக்கமாட்டானெனவும், ஏற்கனவே இந்தியாவில் உள்ள நிப்பன் போர் வீரர்கள் உடனே நமது தாய் நாட்டிலிருந்து மகிழ்ச்சியுடன் பின் வாங்கிக்கொள்வார்களெனவும் நான் உத்தரவாதமளிக்க முடியும்.

நமது போரின் சாகசங்கள் யாவையும் நான் தெளிவாக்கிவிட்டதால், நமது இறுதி வெற்றியில் நான் ஏன் நம்பிக்கையுடன் உள்ளேனென இப்பொழுது எனது தேச மக்களுக்குக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, சரித்திர ரீதியான நியதிகளின்படி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அழியும் கட்டத்தில் உள்ளது. அமெரிக்க உதவி போன்ற செயற்கை உத்வேகத்தால், அது பழைய காலப் புகழையும், யௌவனத்தையும் பெற முடியாது.

ஆனால், அழியும் தோரணையில் உள்ள ஓர் ஏகாதிபத்தியம் திடீரென மரணமடையாது. மரண தேவதை அதை நெருங்கிய போதிலும், உயிர்,மரணத்தினிடம் தஞ்சம் புகுவதற்கு முன்பதாக கடினமான போராட்டம் ஏற்படவே செய்யும். இது காரணம் பற்றித்தான் பிரிட்டிஷார் இன்னும் போராடி வருகின்றனர். அவர்கள் வீழ்ச்சியடையு முன் எதிர்காலத்தில் கடுமையாகவே போராடுவார்கள்.

இரண்டாவதாக, இந்திய மக்கள் போதிய அளவு அபி விருத்தி யடைந்துள்ளதால், தமது விவகாரங்களைத் தாமே கவனிப்பதற்கு போதிய சக்தியைப் பெற்றிருக்கின்றனர். இதற் குரிய அனுபவத்தையும் பெற்றுவிட்டனர்.

மூன்றுவதாக, தேசம் முழுதிலும் தேசிய வழிப்பு நிலை ஏற் பட்டிருப்பதால் சுதந்திரத்தை அடைவதற்கு அவசியமான தியாகம் செய்து, துன்பம் அனுபவிக்கத் தேச மக்கள் தயாராக உள்ளனர். தவிரவும், அரசியல் ரீதியில் அவர்கள் ஒழுங்கு பெற அமைந்து கட்டுப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர்.

நான்காவதாக, இது வரை நமக்கிருந்த ஓர் குறை நிவர்த்தி யாகி, விடுதலை சேனை உருக்கொண்டுவிட்டது.

ஐந்தாவதாக, இந்தியாவின் கிழக்கு வாயிற்படி திறக்கப் பட்டுவிட்டதாலும், கிழக்காசியா இந்தியர்களின் தீவிர முயற்சி யின் காரணமாகவும், இந்தியாவின் விடுதலைக்கு அத்தியாவசிய மான வெளி நாட்டினரின் ராணுவ உதவி பெறுவது இதுகால் சாத்தியமாகிவிட்டது.

ஆறுவதாக,யுத்த நிலையில் திடீரென்று அபிவிருத்திகள் ஏற் பட்டதின் காரணமாக வட மேற்குப்பாகத்தில் இந்தியாவின் தற்காப்புக்காக, பிரிட்டனின் முஸ்தீபுகள் யாவும் உருப்படா தொழிந்தது. பூகோள ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் கவனிக்குமிடத்து, கிழக்குப் பாகத்திலிருந்து இந்தியாவுக்குள் நமது முன்னேற்றம் நமக்குச் சாதகமாகவும், பிரிட்டனுக்குப் பாதகமாகவும் விளங்குமென்பது நிச்சயம்.

ஏழாவதாக, இந்தியாவில் நமது போராட்டத்திற்காக, கிழக் காசியாவில் ஓர் வலிமை மிக்க படைத் தளத்தை அமைப்பது நம்மால் சாத்தியமாயிற்று. கிழக்காசியாவிலுள்ள 30 லட்சம் இந்தியர்கள், சர்வாம்சப் படை திரட்டு திட்டம் மூலம், தமது,

ஆள், பணம், பிற சாதன சக்திகளை ஒன்று படுத்தி, ஓர் வல்லமை மிக்க சக்தியாக விளங்குகின்றனர். இவர்கள், இந்தியாவினுள் நாம் நடத்தும் போருக்கு ஆக்கமளித்துக் கொண்டே இருப்பார்கள்.

எட்டாவதாக, நிப்பனின் ஆதரவை நாம் பெற்றிருப்பதால், நமக்கு, முதல்தரமான நவீன தேசத்தின் ஆதரவு கிடைத்துள்ளது. குறிப்பாக இந்தியாவிலுள்ள நேசதேசங்களின் ஐக்ய சக்தியை, நம்மால் சமாளிக்க முடியாதவகையிலிருந்தால், அத்தகைய நெருக்கடியான நிலைகளில் இவர்களின் உதவியை நாம் பூர்ணமாக நம்பலாம்.

ஒன்பதாவதாக, நாம் பர்மாவிலிருந்து இந்தியாவிற்குள் நுழையும்பொழுது, சுங்கிங் நம்மைப் பின் பாரிசத்தில் தாக்குமென்ற அபாயம் ஏற்படுவதற்கில்லை.

பத்தாவதாக, நமது சொந்த சர்க்கார் நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. நமது சர்க்காரை 9 நேச தேசங்கள் அங்கீகரித்துள்ளன.

யுத்த நிலை பொதுவாக நமக்குச் சாதகமாக இருக்கிறது. ஐரோப்பாவில் நிலவும் நிலை பற்றி நமக்குக் கவலை யில்லை. அங்கு எதிர்காலத்தில் என்ன நடந்தபோதிலும், அதைப்பற்றி நாம் கவலை கொள்ளாமல் வெற்றி கண்டே தீருவோம். இது, பதினோராவது அம்சமாகும்.

இறுதியாக எதிரியின் பலமும், நமது பலமும் இன்னதென்பது நமக்குத் தெரியும். நீதி, வாய்மை, நமது பிறப்புரிமையாகிய சுதந்திரம் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கே நாம் போராடுகிறோமென்ற உணர்வு நம்மிடம் உள்ளது. ஆனால், நமது எதிரிகளுக்கு அத்தகைய உணர்வு கிடையாது. ஆகவே, இறுதிவரை போராடுவதென்ற நமது மனோ உறுதி தகர்க்க இயலாத வகையில் உள்ளது. இது தவிர, சுதந்திரத்தின் முழு விலையை—ரத்தத்தை—கொடுக்க நாம் தயாராயிருக்கிறோம்.

இன்று எனது பேச்சை முடித்துக்கொள்ளு முன்னர், இந்தியா—பர்மா எல்லையிலும், இந்தியாவின் உள்ளும் நடைபெறும் போராட்டத்தைப பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பர்மாவை மீண்டும் ஜெயிப்பதற்குரிய பிரிட்டிஷாரின் திட்டங்கள் யாவையும், தற்போதைய நமது போராட்டம் அலசி யெடுத்து

விட்டதானது,விசேஷத்துவம் வாய்ந்ததாகும். பிரிட்டிஷார் தமக் கேற்பட்ட மன அதிருப்தியை மறைப்பதற்காக, நாம் டில்லியை அடையத் தவறிவிட்டோமென இது சமயம் கூறுவதுடன், நாம் டில்லிக்குள் நுழைவதற்கு போலித் தேதிகளையும் குறிப்பிடு கின்றனர்.

நண்பர்களே! விவேகமில்லாத ஒருவனே எதிரியின் பலத் தைக் குறைவாக மதிப்பான். அரக்கான், கலாடான், ஹாக்காப் பகுதிகளிலும், டிட்டிம் பிரதேசத்திலும், மணிப்பூர், அஸ்ஸாம் பிரதேசங்களிலும், நமது எதிரியின் கலப்பு மிகுந்த ராணுவத் தைப் பார்வை யிட்டிருக்கிறோம். அவர்கள் நம்முடன் போராடு வதற்காக, இந்தியாவைச் சுரண்டியுள்ளதால் அவர்களது உண வுப் பொருள்களும், போர்ச் சாதனமும், நம்முடையதை விட் விசேஷமானதாகவே உள்ளன. இது நாம் எதிர்பார்த்ததே யாகும். எனினும், நாம் அவர்களை எல்லாவிடங்களிலும் தோற் கடித்துவிட்டோம். உலகின் எல்லாப் பாகங்களிலும் புரட்சி சேனைகள், நம்மைப்போன்ற நிலைகளிலேயே போரிட வேண்டி யுள்ளன. ஆனால், இறுதியில் அவர்கள் வெற்றியையே காண்கி றார்கள். பீர், ரம் முதலிய லாகிரி வஸ்துக்களும், டின்களில் அடைக்கப்பெற்ற பன்றி, மாட்டிறைச்சியும், அவர்களுக்கு வலு வளிப்பதில்லை. ஆனால்,நம்பிக்கை—தியாகம்—வீரம்—பொறுமை முதலிய குணங்கள் இவர்களுக்கு வலுவை யூட்டுகின்றன. இந் திய தேசிய ராணுவம், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் இந்திய ராணு வத்தைப் போலல்லாது மகத்தான கஷ்ட நிஷ்டூரங்களுக் கிடையே போரை நடத்திச் செல்ல பயிற்சி பெற்றுள்ளது. இந்த ராணுவம் இந்தியாவின் 38 கோடி மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு வருவதால், அவர்களின் நலன்களை நிலைநாட்டுவதி லேயே கண்ணுங்கருத்துமாயிருக்கும்.

மணிப்பூர், வடகிழக்கு அஸ்ஸாம் ஆகிய இடங்கள் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாதலின், பிரிட்டிஷார் அப்பகுதிகளில் கடுமையாக எதிர்க்க முற்படுவது இயற்கையே. மணிப்பூர் விடுதலை பெற்றால் பிரிட்டிஷார் பெருத்த விஸ்தீரணமுள்ள பிரதேசத்திலிருந்து வெகு தூரம் பின் வாங்கவேண்டி நேரிடு மென்பது இரு சாராருக்கும் நன்கு தெரியும். ஆனால் நாமும் நமது அதிகாரிகளும், இந்தியாவினுள் நடத்திய போரிலிருந்து பெற்ற அனுபவத்தையும், அவகாசத்தையும் பயன் தரும்

வகையில் உபயோகித்து வருகிறோம். நீண்டதும், கடினமானது மான போராட்டம் நமது லக்ஷியத்திற்கு நன்மை அளிக்கவல்ல தாகும். ஏனெனில் ஓர் புதிய புரட்சி சேனையும் நமது அதிகாரி களும் தக்க அனுபவம் பெறுவதற்கு அதுதான் ஒரே மார்க்க மாகும். நாம் தற்சமயம் இந்தியாவை விடுவிப்பது ஓர்புறமிருக்க, இந்தியாவின் சுதந்திரத்தை எக்காலத்தும் நிலைநாட்டவல்ல ராணுவத்தையும், ராணுவ அதிகாரிகளையும், சேனாதிபதிகளை யும் சிருஷ்டித்தாக வேண்டும். ஆகவே மணிப்பூரிலும் அஸ் ஸாமிலும் இன்று நடைபெறுவதெல்லாம் நமது நன்மைக்கே யாகும்.

இந்தியாவினுள் நடைபெறும் யுத்தம், பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எதிரிடையாக நடத்தப்பெறும் யுத்தமன்று. இந்த யுத்தம் இந்தியாவின் சொந்த விடுதலை யுத்தமாகும். இதுபற்றியே நாம் பொறுமையிழக்கவும், பீதிகொள்ளவும் காரணம் இல்லை. மணிப்பூரிலிருந்து டில்லி நீண்ட தூரத்தில் உள்ளது. நமது போராட்டம் எவ்வளவு நீண்டதாகவும், கடின மானதாகவுமிருந்தபோதிலும், அதன் முடிவு ஒன்றே—அதாவது வெற்றியே—என்பதை நாம் அறிந்திருப்பதால், நமது தலை நகரில் மூவர்ணக் கொடியைப் பறக்க விடுவதற்குமுன் இரண்டு வருஷங்கள் பூரணமாகப் போரை நடத்தத் தயாராக உள்ளோம். இதற்கிடையில் 1942-ம் ஆண்டிலேயே இந்தியாவைக் காலி செய்வதற்குத் தயாரித்துள்ள எதிரிகள் இன்னும் கொஞ்ச காலத்திற்கு உல்லாசமாக வாழ்க்கை நடத்தி புதிய டில்லியி லுள்ள ராஜப்பிரதிநிதி மாளிகையின் உச்சி மீதிருந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சாவுமணி அடிக்கப்படும் தினம் வரும் வரை தமது கொள்ளையை தொடர்ந்து நடத்தட்டும்.

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 18

"தேசீயப் புரட்சித் தலைவன்"

மன்னர் பகதூர் ஷாவின் நினைவு நாளன்று 11-7-44-ல் அவரது கல்லறையில் நேத்தாஜி பேசியது.

நண்பர்களே!

இந்திய உரிமைப் போருக்கு, முதல் அங்கம் வகிப்பது 1857ல் நடந்த புரட்சி; இந்தியாவின் 'முதல் சுதந்திர யுத்தம்' என்ற கௌரவத்தைப் பெறுவதும் அதுதான். அன்றையப் புரட்சிக்கு முன்னணியில் நின்றவர்—தலைமைத் தளபதியாக இயங்கியவர்—மன்னர் பகதூர் ஷா. கடந்த செப்டம்பரில், இங்கு—பகதூர்ஷாவின் கல்லறையில்—நினைவு நாள் கொண்டாட்டம் நடந்தபோது, இந்திய விடுதலை ராணுவத்தோடு நாமும் கலந்து கொண்டோம். இச்சம்பவம், நமது சரித்திர ஏடுகளில் ஏறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது. 1857க்குப் பிறகு உண்மையான புரட்சி ராணுவம் தமது ஆதித் தலைவரின் ஆன்மாவுக்கு மனங்குவியத் தலைவணங்கி நிற்பது இதுதான் முதல்தடவை. எனவேதான், இந்நிகழ்ச்சி, சரித்திர ஏடுகளில் ஏறவேண்டுமென்று சொன்னேன். சென்ற செப்டம்பரில் நாம் எல்லோரும் இங்கு கூடினோம்; மன்னர் பஹதூர் ஷாவின் ஆத்மாவுக்கு வந்தனையளித்தோம்; அவர் விட்டுச் சென்ற புரட்சிப் போரைத் தொடர்ந்து நடத்தி, "இந்தியாவை இங்கிலாந்தின் நுகத்தடியிலிருந்து மீட்போம்" என்ற உறுதியை நமது நரம்புகளில் ஏற்றிக்கொண்டோம். நமது பிரதிக்கினை, வெற்றியின் ரூபத்தைப் பெற்றுவிட்டதென்பதை விஸ்தரிக்கும் என் நெஞ்சில் மகிழ்வும் பெருமையும் மலர்கிறன்றன. கடந்த நினைவு நாளில் இங்கு கூடியிருந்த நமது ராணுவம் இப்பொழுது எல்லையைக் கடந்து, நமது தாயகத்தில் போரிட்டுக்கொண்டிருக்கிறது.

மன்னர் பஹதூர் ஷாவின் சிரார்த்த தின விழாவும், நேத்தாஜி வாரவிழாவும் ஒரே காலத்தில் கூடுகின்றன. கிழக்

காசிய இந்தியர்களின் போர் பிரதிக்கினையும் அதோடு சேர்ந்து இந்திய வெற்றிக்குச் சோபை கொடுக்கிறது. இவை இறைவன் கருணையென்றே கொள்ள வேண்டும். முதல் சுதந்திர யுத்தத்தை நடத்திய பகதூர் ஷாவின் மரண பூமி, கடைசி சுதந்திரப் போரை நடத்துவதற்கு அடித்தளமாக உதவுகிறது. இதுவும் தெய்வ கடாக்ஷமே! கடந்த வருஷம் நாம் இங்கு செய்து கொண்ட பிரதிக்கினையை ஓரளவு நிறைவுசெய்து விட்டோம். இதனால் நமது உள்ளம் மகிழ்வில் விரிகிறது. இதை, சாகாது சுற்றும் பஹதூர் ஷாவின் ஆன்மாவிடம் காட்டி, நமது விருப் பத்திற்குப் புறம்பான பிரிட்டிஷாரை, இந்தியப் பூமியிலிருந்து துரத்துகிறவரை நமது போரைத் தொடருவதாகப் பிரதிக்கினை எடுத்துக்கொள்ளவே திரும்பவும் நாம் இங்கு இன்று சந்தித் திருக்கிறோம்.

1857ன் நடப்புகளைப் பற்றி சில வார்த்தைகள் இங்கு குறிப் பிடுவது அவசியமென்று படுகிறது. உண்மையில், 1857ல் நடந்த புரட்சி, இந்திய ராணுவத்தாரும், பொது மக்களும் கலந்த தேசியப் புரட்சிப் போராகும். ஆனால் இதை பிரிட்டிஷ் சரித் திரக்காரர்கள், 'சிப்பாய்க் கலகம்' என்று பிரசாரம் செய்து விட்டார்கள். பல சமஸ்தானாதிபதிகளும், அன்றையப் போரில் கலந்து, போரின் போக்கிற்கு பாதை காட்டினார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக சிலர் அதில் சேரவில்லை. அன்றையப் போரின் ஆரம்ப தசையில், நமக்கு வெற்றிமேல் வெற்றி திரண்டு கொண்டுதான் வந்தது. முடிவில் எதிரிகளின் பலம் ஏகமாய்க் கூடி விட்டது; தோற்றோம். இந்தத் தோல்வி, புரட்சிச் சரிதை யின் இயற்கைக்கு மாறல்ல. முதல் போராட்டத்திலேயே முழுவெற்றியும் கண்ட ஒரு நாட்டை, உலகச் சரிதையில் காண்ப தென்பது சாத்தியமில்லை. ஒரு முறை தோன்றிய சுதந்திரப் போர், வம்சபாரம்பரை முழுதும் பிரகாசித்துக்கொண்டேதான் இருக்கும். புரட்சி இயக்கங்கள் இடையில் கலையலாம்; அழிக்க வும் படலாம்; ஆனால் அதன் அருமையான பாடங்கள் அழிவ தில்லை. அழிக்கவும் முடியாது. அதே பாடங்கள் நமது அறி வில் ஏறுகிறது; புதிய உணர்ச்சி பொங்குகிறது. போதிய சாதனங்களைச் சேகரித்து விடுகிறோம். முதல் சுதந்திரப் போர் தோற்றது; ஆனால் அதன் தோல்வியில், ஒரு அனுபவ விளக்கு ஒளி வீசுகிறது; அவ்வொளியில் நாம் குளித்தோம்; கடைசிச் சுதந்திர யுத்தம் காட்சியளிக்கிறது; வேண்டிய சாதனங்களோடு

மார்தட்டிப் போர்க்களத்தில் குதித்து, எதிரிகளை மாய்க்கவலிவு பெற்றுவிட்டோம்.

1857 புரட்சியின் ஆரம்பத்திலேயே இந்தியர்கள் ஆயுதமேந்தி ஆங்கிலேயரை எதிர்க்கவில்லை என்று எண்ணுவது தவறு. அவசரமாகவோ அன்றி ஒழுங்கீனமாகவோ எந்தப் புரட்சியும் நடப்பதில்லை. 1857-ல் நமது தலைவர்கள், சண்டையிடுவதற்குரிய தயாரிப்புகளை முறைப்படி சேகரித்துத்தான் வைத்திருந்தார்கள். பிறகு சேகரிப்புகள் போதவில்லை. அன்றையப் புனிதப்போரின் சிறந்த தலைவர்களில் நானா சாஹிப் ஒருவர். இவர் ஐரோப்பாவுக்குச் சென்றார். வேண்டிய வெளிநாட்டு உதவியைப் பெற முயற்சித்தார். ஆனால் பயன் காண முடியவில்லை.

போதிய அமைதி; கவலையற்ற உலக நிலை; திரண்டபலம்; இவைகள் பிரிட்ஷாரிடம் நிரம்பி இருந்த சமயந்தான், (1857) இந்தியப் புரட்சி பிறந்தது. இதனால் இந்திய மக்களை வீழ்த்தும் நடவடிக்கை பிரிட்டிஷாருக்கு எளிதாக இருந்தது. அன்று உள்நாட்டில் நடந்த பிரசாரம் உபயோகமாக இருந்தது. முடிவில் சைகை காட்டியவுடன் பல பாகங்களிலும் ஏக காலத்தில் போர் மூண்டது. வெற்றிக்கு வெற்றியாகக் குவிந்தது. வட இந்தியாவில் பல முக்கிய நகரங்கள், பிரிட்டிஷாரிடமிருந்து விடுபட்டன. புரட்சி ராணுவங்கள், இந்தியாவின் தலை நகரில் விருதுக்கொடிகளுடன் பிரவேசித்தன. புரட்சியின் முதல் தோற்றம் வெற்றியாக உயிர் பெற்றது. ஆனால், எதிரிகளின் அடுத்த எதிர்ப்பு, வலிமையோடு தாக்கியதால், புரட்சியின் மறு தோற்றம், வெற்றிக் களையைப் பெற முடியவில்லை. பிறகு, தேசீய சேனாதிக்ய முனைகளும், அதை நிர்வகிக்க பொறுப்புள்ள தலைவரும் அவசியமெனத் தெரிந்தது. இந்நிலையில், அங்கங்கே இருந்த சில சமஸ்தானாதிபதிகள், மௌனமாகவும், புரட்சியில் கவனங் காட்டாமலும் இருந்தார்கள். இதைக்குறித்து வருந்திய பஹதூர் ஷா, கீழ்க்காணும் கடிதத்தை, ஜெய்ப்பூர், ஜோத்பூர், பிகானீர், ஆழ்வார் முதலிய சமஸ்தானாதிபதிகளுக்கு அனுப்பி, தன் ஹிருதயத்தைத் திறந்து காட்டினார்.

"அகில இந்துஸ்தானமும் சுதந்திரத்தில் நிலைக்க வேண்டும்; பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து தொலைய வேண்டும்: இவைதான் என் அவா. மக்களிடம் ஐக்கிய பாவத்தை ஊட்டி, பலப்பட்ட தேசியத்தை ஒன்றாக்கி, இயக்

கத்தின் முழுப்பொறுப்பையும் சுமக்கும் ஒரு தலைவன் வேண்டும். அப்பொழுதுதான் நடக்கும் புரட்சிப்போர், வெற்றியில் போய் நிற்கமுடியும். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு ஒழிந்த பிறகு அகில இந்திய ஆட்சியை என் வசமே ஒப்புவிக்க வேண்டுமென்று நான் நினைக்கவே இல்லை. உங்கள் கத்தி முனைகள், எதிரிகளின் உயிரைக் குடித்த பிறகு, என் எதேச்சாதிகாரத்தை, உங்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரிடம் விட்டுவிடுகிறேன்.''

இக்கடிதம், பஹதூர் ஷாவின் விடுதலை வேகத்தையும், தியாக சீலத்தையும் ஏக உருவில் நம்முன் நிறுத்துகிறது. இவருடைய உயர்ந்த எண்ணத்திற்கு, விடுதலையை விரும்பும் இந்தியர்கள் தலை வணங்கி மரியாதை செலுத்த வேண்டும்.

தள்ள முடியாத—பயங்கரமான முதுமை, பகதூர் ஷாவை கட்டிப் பிடித்துக்கொண்டு, அவருடைய புரட்சிப் போரை நடத்தும் வலிவைத் தளர்த்திவிட்டது. எனவே, அறுவர் கொண்ட (மூவர் ராணுவஸ்தர், மூவர் ராணுவமல்லாதார்) ஒரு கமிட்டியை நியமித்து, போரின் பொறுப்பை ஒப்புவித்தார். எனினும் பயன் காண முடியவில்லை. ஏனெனில், பூரண ஸ்வாரஜ்யத்திற்கு அன்றைய இந்தியர் நிறைவுபெறவில்லை. எனினும் வயோதிகத் தலைவரின் சுதந்திர வேட்கை மாத்திரம் கொஞ்சமும் தணியவில்லை. மத்திய மாகாணத்தில், பெரெய்லி நகரின் சுவர்களில், அன்று பஹதூர் ஷாவின் ஆர்வம் பிரதிபலித்ததைப் பாருங்கள்:—

"நமது ராணுவத்தில், உயர்வு—தாழ்விற்கு இடமில்லை. எல்லோருக்கும் ஏக சமதையே! இந்தப் புனிதப் போரில் வாளேந்தும் எவரும் சமமே. எல்லோரும் ஒரே குடும்பத்தார். அவர்களிடையில் ஏற்றத் தாழ்வு தலைகாட்ட முடியாது. எனவே, என் இந்திய மைந்தர்களே! எழுங்கள்! போர்க்களத்தில் எகிறிப் பாயுங்கள்! இதுதான் நமது முக்கிய கடமை.''

இன்றைய நமது தேசிய ராணுவ அமைப்பு, 1857லிலேயே உருவாகிவிட்டதென்பதைக் காட்டவே, இங்கு அன்றைய நடப்புகளை விஸ்தரித்தேன். கடைசிச் சுதந்திரப் போரை நடத்தும் நமக்கு, 1857-ல் தோல்வியுற்ற முதல் சுதந்திர யுத்தப் பாடங்கள் நல்ல உணர்ச்சியைக் கொடுக்கின்றன.

இன்று தெய்வ கடாக்ஷம் நமது பக்கமிருக்கிறது. நமது எதிரிகள் பல போர்முனைகளிலும் உயிரைக் கக்கிக் கொண்டிருக்கிறார்கள். நமது தாயக மக்கள் விழித்து வீறுகொண்டு விட்டார்கள். நமது தேசிய ராணுவம், சாகா சக்தி பெற்றது. அதன் அதிகாரிகள் விடுதலை இந்தியாவைத் தவிர, வேறெதையும் நினையாதவர்கள். கடைசி வெற்றிவரை கம்பீரமாய் நின்று போராட ஒரு பொது சேனா முகப்பையும் பெற்றிருக்கிறோம். நமது அடிப்படை, ஒழுங்கின் நியதிப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் அசைவுகாண ஹேதுவில்லை. பஹதூர் ஷாவின் வீரச்செயல்கள், நமது நினைவில் பழுத்து விட்டன. இனி இறுதி வெற்றி நமதே என்பதில் ஏதேனும் சந்தேகம் இந்தியரின் மனதில் ஒரு ஓரத்திலாவது ஒட்ட முடியுமா?

1857-ல் நடந்த நடப்புகளையும், அதை அடியோடு அழித்த வெள்ளையரின் அநீதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். ஒன்றோடொன்று ஒட்டவில்லை; உள்ளம் துள்ளியது; உணர்ச்சி நரம்புகள் திமிறின; குளிர்ந்த ரத்தம் நெருப்புக் குழம்பாக மாறி, என் உடலைக் கனலாக்கியது! சுதந்திரத்தை விரும்பியதற்காக நமது மக்கள், போரில் மாத்திரமல்ல பிறகும் ரத்தம் பிழியப்பட்டார்கள். எதிரிகள் மீது நமது பகைமை இன்னும் முதிரவில்லை. உங்கள் தாயகத்தார் உயர்ந்த ஸ்திதியில் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமென்ற நினைவு உங்களுக்கிருந்தால், உடனே எழுங்கள்!

நமது வீரர்கள் இன்றையப்போரில் வடிக்கும் ரத்தம், முன்னையப் பாபத்தைக் கழுவி, நம்மைச் சுத்தப்படுத்திவிடும். நமது வீரர்களின் ரத்தந்தான் நமது தாய்நாட்டு விடுதலைக்குச் சரியான விலை. நமது தீரர்களின் தீவிரார்த்தம்-வலிமையில் வடியும் ரத்தம், அந்நிய ஆக்ரமிப்பாளர்களை வஞ்சந் தீர்த்து, இந்தியப் பரம்பரையை சௌந்தர்ய ரூபத்தில் மின்னவைக்கும்.

வயோதிக பஹதூர் ஷாவின் தோல்வியில், அவருடைய தீர்க்கதரிசனம் போட்டிருக்குங் கோலம் ஒளிவீசுவதைப் பாருங்கள்!

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 19

"எதிரிகளின் பிரசாரம்"

(12—7—44-ல் நேத்தாஜியின் ரேடியோப் பிரசங்கம்)

நண்பர்களே! சுதேச மக்களே!!

கிழக்காசியர்வில் நமது நடவடிக்கையின் பலன், சென்ற பன்னிரண்டு மாதங்களில் நாம் சாதித்தவை, நமது எதிர்காலத் திட்டங்கள் இவைகளைப் பற்றி, கடந்த சில தினங்களாக உங்களிடம் பேசினேன். பெரிய அளவில் உருக்கொண்டிருக்கும் ஒரு தேசியப் புரட்சியில், அதன் சேனு வலிமை—திட்ட விஸ்தாரங்களை வெளி விடாமல், ஒளித்து வைக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. அகில இந்திய மக்களை ஒன்று திரட்டி, நமது சார்பில் நிறுத்துவதைப் பொறுத்துத்தான் நமது திட்டத்தின் வெற்றி இருக்கும். எனவே, வெறும் வேடிக்கைச் செயல்கள், நம்மைத் தற்கொலையில் கொண்டு போய் நிறுத்திவிடும். நாம் கலப்பற்ற நேரிய திட்டத்தோடு, முன்னேற்ற வழியில் சென்றுல்தான், நமது தேச மக்கள் நம்மைத் தொடருவார்கள். நியதி, உண்மை, பிறப்புரிமை (விடுதலை) இவைகளுக்காகவே நாம் போராடுகிறோம். இதை நமது எதிரிகள் கூட ஒப்புக் கொள்ளுவார்கள். இந்திய மக்களின் பூரண அநுதாபமும், நம்மைச் சூழ்ந்து நின்று பாதுகாப்பளிக்கிறது. ஆனல், நமது திட்டம் வெற்றிக்கு வந்து விடுமா என்ற பிரச்னை தான் அவர்களைக் கொஞ்சம் உலுக்குகிறது. இவ்வுலுக்கல் நின்றதும், அவர்கள் நேர் முகமாக நம்முடன் இணையத் தயங்கமாட்டார்கள். ஆனல், கொடிய அடிமைக் கயிறு அவர்களை இறுக்குவதின் பயனுக, அவர்களின் மனே நிலைகள் வறண்டு கிடக்கின்றன. எனவே, நமது போரின் இறுதியில் அவர்களுக்கு உரமுள்ள நம்பிக்கை ஊறுவதற்கு ஹேதுவில்லை. இது கலைபட்டு நம்பிக்கை முளை கூட்டுகிற வரை நமது தாயகத்தார்கள், உயிர்த் தியாகத்திற்கு தயங்கவே செய்வார்கள்.

நமது எதிரிகளின் செயல்கள் நமக்கு முற்றும் வேறுபட்டவை. நமது தேசத்தையும், நம் மக்களையும், ஐக்கியமாக்கி

ஆளும் நியதி அவர்களுக்கில்லை. மிருக வேகம், ஏமாற்றல், சூழ்ச்சி ஆகியவைகள் தான் அவர்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள். எதேச்சாதிகார வெறி யேறிய எந்த நாடும், இந்தியாவைச் சொந்தமாக்க எந்த முறைகளையும் கையாளுமென்பது எனக்குத் தெரியுமாதலால், நான் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால் ஒன்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஸ்தானத்தில் ஒட்டிக்கொள்வதற்காக ஒழுங்காபாசமான வேலைகளைச் செய்ய நம் மக்களில் சிலர் முந்திக்கொண்டு வருகிறார்கள். இதுதான் என் நெஞ்சில் மிகப் பெரிய வேதனையை உண்டாக்குகிறது. மாதம் ஒன்றுக்குச் சில நூறு ரூபாய்களைப் பெறுவதற்காக நம் தேச மக்கள், தம்மைத் தாமே ஏன் அற்ப விலைக்கு விற்கிறார்கள், என்று எழும் கேள்விக்கு, பதில் கிடைக்கவில்லை. கடந்த யுத்தத்தில் பிரிட்டிஷாரின் பிரசார ஒழுங்குகளை ஒன்று விடாமல், பிரிட்டிஷ் மக்களே அழகாகப் பின்னி வைத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் பிரசாரம் செய்யக் கூடிய ஒவ்வொன்றையும், Ponsonby என்பவர் தாம் தொகுத்த Secrets of Crewe House, Wartime Falsehoods என்ற இரு புத்தகங்களிலும் உரித்து வைத்திருக்கிறார். "ஜெர்மானியர் இறந்துபோன போர் வீரர்களின் சவங்களிலிருந்து **கொழுப்பை** இறக்குகின்றனர்" என்ற வதந்தியை, சென்ற யுத்த காலத்தில், ஆங்கிலேய ஜெனரல் **சார்**டேரிஸ் என்பவர் கொஞ்சம் உயிர்கொடுத்து வெளியுலகில் விட்டுவிட்டார். இது ஒரு சுத்தமான உயர்ந்த ரக பச்சைப்புளுகு என்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். 'இந்தப் புளுகு இவ்வளவு தூரம் வேரூன்றுமென்று நான் நம்பவே இல்லை' என்று அந்த மனிதரே, யுத்தத்திற்குப் பிறகு மனம் விட்டுச் சொல்லி விட்டார். ஆனால் எதையும் எளிதாய் நம்பிவிடும் உலக மக்களில் சிலர், பெரிய அதிகாரியின் திருவாயிலிருந்து உதிரும் வார்த்தைகள் பொய்யாக இருக்க முடியாதென்று அதையும் நம்பினார்கள். ஆகவே அந்தப் புளுகு சீக்கிரம் சாகவில்லை. இன்றைய உலக மக்கள் அப்படி அல்ல. தவிர, என்றுமே ஒரே நிலையில் உலக மக்கள் இருக்கமாட்டார்கள். இன்றைய ரீதியே வேறு. விரிந்த உலகின் ஒவ்வொரு மூலைகளிலிருந்தும் எல்லாத் தரப்பினருடைய செய்திகளையும், உலகிற்குச் சொல்ல வானொலியும் கம்பியில்லாத் தந்தியும் இன்று நல்ல வேலைகளைப் புரிகின்றன. இன்றையப் போரில் பிரிட்டிஷ் பிரசாரம், பயன்படாமல் போனதற்கு இதுவோர் முக்கிய காரணம். இவ்வகையில், ரேடியோவுக்கும்-கம்பியில்லாத் தந்திக்

கும் என் நன்றி உரித்தாகுக. பிரிட்டிஷ் பிரசாரம் வடிகட்டிய பொய் என்பது உலக உண்மை. இது அவர்களும் அறிந்தது தான். ஆயினும் புலி, தன் புள்ளிகளை மாற்றிக்கொள்ள முடியாதல்லவா? ஒரு பொய்யன், தன்னுடைய வார்த்தைகள் பொய், அதனை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதை உணர்ந்து விட்டாலும், புளுகு மூட்டைகளை அவிழ்ப்பதில் சளைக்கவே மாட்டான். ஏனெனில், தன் புளுகுகளை நம்புகிற பிரகஸ்பதிகள் இந்த உலகில் இன்னும் இருந்துகொண்டிருப்பதாகவே அவன் நம்பிவிடுகிறான். ஆனால் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் தாஸர்களில் சிலர், இந்தக் கீழ்த்தர வேலைகளைச் செய்வதில் திறமையை அங்கவாரியாக காட்ட முற்படுகிறார்கள். இதுதான், என்னை விசனிக்க வைக்கிறது. பொருளாதாரக் குறைவும், பசித்தொல்லையும் இந்தியாவில் நாட்டம் காட்டுகிறதென்பது எனக்குத் தெரியும். இதற்காக அறிவு விரிந்த இந்திய ஆண்கள் மாத்திர மின்றி பெண்களும், தங்களை வந்த விலைக்கு விற்பதில் அர்த்தமே இல்லை. சில சந்தர்ப்பங்களில் பட்டதாரிகளும்-சர்வகலாசாலை புரபொஸர்களும், இந்திய-எதிர்ப்பு ரேடியோவில் பதிவு செய்யும் பொய்ப் பிரசாரங்களை நான் கேட்டுக் கொண்டுதானிருக்கிறேன்.

எதிரிகளின் பிரசாரத்தில், உண்மையின் தலைமேல் ஏறிக் கொண்டு பொய்மை பேயாட்டமாடுவதைக் காட்டுகிறேன் பாருங்கள். "போஸ் சொந்த நாட்டில், ஜனுபிமான மற்றவன்; காங்கிரஸ் தலைமைப் பீடத்திலிருந்துஇறக்கப்பட்டவன். எனவே, நாட்டைவிட்டு வெளியேறும் நிர்பந்தம் ஏற்பட்டது". இது, இந்திய-எதிர்ப்பு ரேடியோ பிரசாரத்தின் பல புளுகுகளில் ஒன்று. 1939 ஜனவரியில் இந்தியாவில் நடந்த தேசீய காங்கிரஸ் அக்ராசனர் தேர்தலில் மகாத்மா காந்தியும், பண்டித நேருவும், என் எதிர் தரப்பில் நின்றார்கள். எனினும் பொது மக்களின் அபரிமிதமான வாக்குக்கள்கூடி என்னை அற்புத வெற்றியில் நிறுத்தியதா, இல்லையா? பழைய காரியக்கமிட்டியையே நியமிக்க நான் இசைந்திருந்தால், மகாத்மாஜியின் அங்கீகரிப்பிலேயே என் தலைமைப்பதவி,இன்னும் ஒருவருஷம் எளிதாக நீடித்திராதா? தேர்தலில் வெற்றிபெற்ற எனக்கு, புதிய காரியக் கமிட்டியை நியமிக்க உரிமையுண்டு. எனவே இதை நான் வற்புறுத்தினேன். இதுவே மகாத்மாவுக்கும் எனக்கு மிடையில் எழுந்த பிரச்னை. நான் என் வீட்டிலோ, அன்றி சிறையிலோ, பாதுகாப்புச் சட்டப்படி அடைபட்டுக் கிடப்பது எளிதில்லையா?

பிரிட்டிஷாரின் பெருத்த பாதுகாப்பிலிருந்து நான் தப்பியது ஆபத்தும்—கஷ்டமும் நிறைந்த காரியமில்லையா? இவையெல்லாம் இந்திய மக்களுக்கு தெரியாதிருக்க முடியாது. நான் எப்படியோ தப்பிவிட்டதைத் தடுக்கமுடியாததால், பல போலீஸ் அதிகாரிகளின் பதவிகள் போய்விட்டன. பிறகு, என்னைக் கைது செய்ய முடியாவிடில் கொலைசெய்து விடும்படி இரகசிய ஏஜெண்டுகளை அரசாங்கம் அனுப்பியது. இவை, இந்திய எதிர்ப்பு ரேடியோவுக்குத் தெரியுமோ, தெரியாதோ!

மேற்கூறியவைகள் நடந்தவை—நான் அநுபவித்தவைகள்! இதைத்தான் எதிரிகளின் ஓட்டைப்பிரசாரம் அப்படிக் கூறுகிறது. தவிர எதிர்ப்பிரசாரத்தில் இன்னும் பல ரகங்கள் உண்டு. அவைகள் இவ்வளவு கீழ்த்தர மற்றதாயினும், சுத்தமான—முதல்தரப் பொய் என்பதை ஆதாரத்தோடு சொல்லிவிடலாம். ஒரு நட்புப்:—1943ல் என் உலகசுற்றுப் பயணம் டோக்கியோவில் வந்து நின்றது. இச்செய்தி, பிரிட்டிஷாரின் முகங்களில் கவலைக் கோடுகளைக் கிழித்துவிட்டது. இதை மறைப்பதற்காக, ஒரு பொய்யைக் குழைத்து, கவலைக்கோடுகளின் மேல் பூசிக்கொண்டார்கள். "ஜெர்மன் சர்க்காருக்கும் எனக்கும் அபிப்பிராய வேற்றுமை ஏற்பட்டு, என்னை ஐரோப்பாவிலிருந்து அகற்றிவிட்டது". இதுதான் அவர்கள் குழைத்த பொய். பிறகு கிழக்காசியாவில் சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்கார் ஜெனித்தது; இதை ஜெர்மன் சர்க்காரும் அதன் மக்களும் அள்ளி அணைத்து ஆதரவூட்டினுர்கள். இச்செய்திக்காற்று, இங்கிலீஷாரின் பொய்க் குழையலைக் காயவைத்து விட்டது. லார்டு லூயி மௌண்ட் பாட்டன், பர்மாவைத் திரும்பக் கைப்பற்ற முயன்ருர்; இந்திய தேசீய ராணுவ முன்னேற்றத்தைத் தடைசெய்யப் பார்த்தார்; இரண்டிலும் படுதோல்வியுற்று, பெரிய தோல்வி நாமத்தைப்போட்டுக் கொண்டார். இதை அழித்து விடுவதற்காக, அவயவமில்லாத ஒரு அசல் புளுகை இந்திய எதிர்ப்பு ரேடியோ கக்கியது.

'இந்திய தேசீய ராணுவம் இந்திய எல்லைக்குள் பிரவேசித்த பிறகும், இந்தியாவில் புரட்சி பரவாதபடியால், நிப்பொன் அரசாங்கம் போஸை வெறுக்கிறது; இதனுல் போஸுக்கும் நிப்பொன் அரசாங்கத்திற்கும் அபிப்பிராய பேதம் உண்டாகிவிட்டது!' இதுதான் எதிரிகளின் புளுகு மூட்டையிலிருந்து

கொட்டிய சரக்குகள்! இங்கிருந்து நாம் உத்தரவு—சைகை கொடுக்கிற வரை, பெரிய அளவில் நாச வேலைகளும், பொது ஜனப் புரட்சியும் தோன்றவே கூடாதென்று, நான் என் தேச மக்களுக்கு வானொலி மூலம் அடிக்கடி எச்சரித்து வந்திருக்கிறேன். இவ்விபரம் என்னுடைய வானொலி பேச்சுகளைக் கேட்போருக்கு தெளிவாய்த் தெரியும். தவிர, இந்திய தேசீய ராணுவம் இந்தியாவிற்குள் வெகுதூரம் முன்னேறவேண்டும்; அங்கு இங்கிலீஷாருக்கு எதிராகப் புரட்சியைத் தோற்றுவிக்கும் நமது மக்களுக்குப் போதிய உதவிகளை சரளமாய் அனுப்புகிற நிலையில் நமது ராணுவம் நிற்கவேண்டும்; இவை ஒன்று கூடுவதற்குமுன் ஏற்படும் அழிவு வேலை, தற்கொலையை விலைகொடுத்து வாங்குவதற்கு ஒப்பாகுமென்பதை அவிவேகிகூட அறிவான். இவ்வித எதிர்ப்புப் பிரசாரத்தின் நளினங்கள், எவ்வளவு சாதுர்யமாக நாட்டியமாடினாலும் எனக்கு ஆச்சர்யத்தை ஊட்ட முடியாதென்பதை திரும்பவும் தெரிவிக்கிறேன். என்னைக் கொலை செய்வதினால் மகிழ்வு கொள்ளுவோர்களிடந்தான் இந்தப் பிரசாரத்திற்கு வரவேற்புக் கிடைக்கும். ஆனால் **1944**-ல் பல இந்தியர்கள் அற்ப வருவாயிடம் தம் மனிதார்த்தத்தை விற்றுவிட்டு, மகா கேவலமான தொண்டுகளை எதிரிகளுக்குச் செய்கிறார்கள். இதுதான் என் ஆச்சர்யத்தைக் கிளறுவதோடு பொது மரியாதையையும் குறைக்கிறது. பிரிட்டிஷார்கள் என்னை, கைப்பாவை—எதிரிப் - பிரதிநிதி—என்றெல்லாம் அழைத்து, திட்டுகிறார்கள். ஆனால் இது இயற்கை. எனினும் மீர் ஜாபர்கள்—உமிசாண்ட்கள் — போன்றோரைப் பொய்ப் பிரசாரம் செய்யக் கையாளும் வலிமை பிரிட்டானியருக்கு ஏன் ஏறவேண்டும்! நான் என்னை அல்லது என் தாய் நாட்டை, நிப்பொனுக்கோ அன்றி வேறெந்த அந்நிய நாட்டுக்கோ விற்றுவிடுவேனென்று நினைக்கும் ஒரு இந்தியன் கூட இருக்க முடியாது.

நிப்பொனியர் புரியும் செயல்களைப் பற்றி, குறிப்பாக இந்தியர்கள்மீது அவர்களின் அநீதம் பலமாய்ப் பாய்கிறதென்று, பிரிட்டிஷாரின் இந்திய தாஸர்கள் பிரசாரம் செய்கிறார்கள். இது அவர்களின் அபத்தத் தொண்டுகளின் ஒரு கிளை. நானும், கிழக்காசியாவில் மீந்து நிற்கிற என் தேசமக்களும், நிப்பானியர்களால் தொந்திரவுகள் செய்யப்பட்டிருந்தால், நிப்பொன் ராணுவத்தோடு ஒன்றுபட்டு இன்றையப்போரை நாங்கள் நடத்த முடியுமா? நிப்பானியர் தங்கள் முழு ஆதரவையும், இந்திய

சுதந்திர இயக்கத்திற்கும், தற்காலிக சர்க்காருக்கும் கொடுத்து விட்ட பிறகு, நமது தேசமக்கள், நமக்கெதிராகப் பிரசாரம் செய்வதை நிறுத்தலாம்; அல்லது ஒரு உதவியும் செய்யாமல் மௌனமாக இருந்துகொண்டு நடப்பைக் கவனிக்கலாம். ஆனால் உண்மை ஒருபுறமிருக்க, நமது தேச மக்களில் சிலர் எதிர்ப் பறையடிக்கிறார்கள். தவிர, பிரிட்டிஷாரின் கையால் நைவைத் தாளப்பொறுக்காது குமுறும் இந்திய மக்களை, இதர எந்த அந்நியநாடும் மிருகத் தொந்திரவைக் கொடுத்துப் பொறுக்க வைக்க முடியுமா? பொதுவாக கிராதகப் பிரசாரம், பிரிட்டிஷாரின் பிதுரார்ஜிதம். இப்பொழுது, அவர்களின் பிரசாரம் இந்திய மதங்களில், குறிப்பாக முஸ்லிம் மதத்தின் மீது விழுந்திருக்கிறது. ஜெர்மனிக்கும் சோவியத்திற்கும் ஒப்பந்தமொன்று இருந்ததல்லவா? அவ்வொப்பந்தம் அமுலிலிருந்த வரை, சோவியத்தின் வலிமை, இந்தியருக்கு பூரண உதவியளிக்குமென்று பிரிட்டிஷார் நெஞ்சில் உதித்துவிட்டது. உடனே அதன் பிரசாரம், வட-மேற்கு இந்தியாவில் வேலையைத் துவக்கியது. போல்ஷிவிக்காரர்கள் மதத் துரோகிகள்; இவர்களால் உங்கள் மதம் பங்கப்பட்டுவிடும், என்பதுதான் அப்பிரசாரத்தின் அடிப்படை. பிறகு வட-கிழக்கில் அபாயம் பிரவேசித்ததும், பிரிட்டிஷ் பிரசாரம், வட—கிழக்கிற்குப் பின்வாங்கியது. ஜப்பானியர்கள் மதத்துவேஷிகள்; குறிப்பாக இஸ்லாமிய எதிராளர்கள், என்று எதிரிகளின் பிரசாரம் பிதற்றுகிறது. மௌல்விகளுக்கும், பண்டிதர்களுக்கும் இந்தியர்களுக்குள்ளேயே பயிற்சி கொடுத்து, பல கண்டங்களுக்கும் அனுப்பி, பிறகு எங்கிருந்தோ கிழக்காசியாவில் இறங்கிய மகான்களாகப் பாவனை காட்டி, இந்திய துருப்புகளை மகிழ்விக்க பிரசாரம் புரிய வைத்தார்கள். நம்மால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட சிலரை, பிரிட்டிஷர்கள் பிடித்து கிழக்காசியாவில் ஜப்பானியர்கள், முஸ்லிம்களைத் தொந்தரவு செய்வதாய் பிரசாரம் செய்யும்படி நிர்ப்பந்தம் செய்தார்கள். ஆனால் நடப்பு வேறு. கிழக்காசியாவில் உள்ள முஸல்மான்கள், இந்துக்கள்—சீக்கிய—கிரிஸ்தவர்—முதலியோரோடு மன நிறைவுடன் இணைந்து, தாய்நாட்டு விடுதலைக்காக ஆர்வத்துடன் உழைக்கிறார்கள். இதுதான் நாம் நமது எதிரிகளுக்குக் கொடுக்கும் பதில். தவிர, இந்திய தேசிய ராணுவத்தில் அதிக அந்தஸ்தும், ராணுவத்தில் உயர்ந்த உத்தியோகஸ்தர்களாக இருப்பவர்களும் முஸ்லிம்களே அதிகம் என்பதை

யும் தெரிவிக்கிறோம். அவர்களெல்லாம் இந்தியாவில் உயர்தரக் குடும்பத்தில் பிறந்து, டேரா டூன் ராணுவ ஸ்தாபனங்கள் போன்ற பல இடங்களிலுமிருந்து வந்தவர்கள். எனவே, அவர்கள் இந்திய ராணுவ அனுபவத்தில் தேர்ந்தவர்கள் என்பதையும் தெரிவிக்கிறோம்.

எதிரப்பிரசாரம் செய்யும் இந்தியர்களில் சிலர், தங்கள் தொப்பைகளைச் சுருங்க விடாமல் பாதுகாக்கவே ஈனச்செயலுக்குத் துணிகிறார்கள். இவர்களின் மனதை எப்படியாவது மாற்றி விடலாமென்பதற்காக நான் இவைகளையெல்லாம் பேசவில்லை. ஆனால், அவர்களின் பொய்ப் பிரசாரம் உச்ச ஸ்தாயியில் அலறுகிறது. எனவே பொது விவகாரங்களில், இவ்வித அபத்தப் பிரசாரத்தை அறைகூவ விடுவது, தொடை நடுங்கித்தனமாகும். உண்மைக்கு இறுதியில் வெற்றி நிச்சயமென்பது இயற்கையாயினும், செய்வதைச் செய்தால் உண்மை, வெற்றிக்கு அழைத்துச் சென்றுவிடும். தவிர, ராணுவ பலத்தோடு, பிரசார பலமும் இன்றைய நவ உலகப் போருக்கு பிரதானத் தேவை. எதிரிகளின் பலத்த பிரசாரம், பொதுமக்களை கவரமுடியவில்லை என்பது எனக்குத் தெரியும். நமது சகாக்களும், பிரதிநிதிகளும் இந்தியாவில் செய்கிற பிரசாரம், எதிர்ப்பிரசாரத்தின் தொனியைத் தணித்துவிட்டது. இதனால்தான் கல்கத்தா ரேடியோவின் எச்சரிக்கை அடிக்கடி பொது மக்களிடம் போய் வர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. பிரிட்டிஷ் அதிகாரிகள் நமது இயக்க வேலைகளின் மீது அடங்காக் கோபம் கொண்டுள்ளார்களென்பதை, கடந்த சில மாதங்களாக இந்தோ—பர்மா முனையிலும், இந்தியாவிற்குள்ளு மிருந்தும் கிடைக்கும் செய்திகள் நிரூபிக்கின்றன. மேலும் தாயகத்திற்குள் புரட்சியைப் பரப்பிக் கொண்டிருக்கிற நமது சகாக்களின் வேலைகளைக் கலைப்பதற்காக புதிய புதிய சட்டங்களைச் சிருஷ்டித்து அமுலாற்றுவதாகவும் தெரிகிறது. இது இப்படியே இருக்கட்டும்.

இன்று இந்திய மக்களை முக்கியமாக நெருக்கி வருவது சுதந்திரப் பிரச்னை. நானும் என் சகாக்களும், போரிடும் தோழர்களும், இந்திய விடுதலையை அடைவதற்காக ஒரு பலமான திட்டம் போட்டிருக்கின்றோம். இத்திட்டம் நல்லதோ கெட்டதோ, இதற்கு மேம்பட்ட பலமான வேறு திட்டம் தயாராகிறவரையில்,

எங்கள் திட்டம் செயல் களத்திலேயேதான் இருக்கும். எங்கள் திட்டத்திற்கு மேம்பட்ட திட்டம் ஒன்று—இந்தியாவைவிட்டு வெளியேறு தீர்மானம்—மகாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் வெற்றி பெற்ருல் எங்கள் நடவடிக்கைகள் அவசியமில்லை. மகாத்மாவின் திட்டம் வெற்றிக்கு வந்துவிட்டால், ஆனந்த லாஹிரியில் அயராமல் சுழல்வது நாங்கள் தான். ஏனெனில் விடுதலைக்குக் குறுக்குப் பாதை, மகாத்மாவின் தீர்மானந்தான். ஆனுல், இந்தத் தீர்மானம் செயலற்றுவிட்டால், பிறகு இந்திய சுதந்திரத்தைப் பெறுவதற்கு அகில இந்திய ஆதரவும் எங்கள் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும். இதுவரை மகாத்மாவின் திட்டம் செயலுக்கு வந்து வெற்றியுறவில்லை. எனவே, இந்தியாவுக்கு உள்ளும் புறமும் உள்ள விடுதலை விரும்பும் இந்தியர்களுக்கு எங்கள் திட்டத்தோடு சேருவதைத் தவிர வேறு வழி இல்லை. நமது முயற்சிகளை, பிரிட்டிஷார் தடைசெய்ய விரும்பினுல், மகாத்மாவோடும், காங்கிரஸோடும் சேர்ந்து "இந்தியாவைவிட்டு வெளியேறு'' என்ற தீர்மானத்தை தளர்த்திக்கொள்ள சமாதானமாகி விடுவதைத் தவிர இதர வழியில்லை.

'கனவு காண்பவன்' என்று எதிரிகள் எனக்குப் பெயரிடுகிருர்கள். இதனுல் என் மதிப்பு சிதையுமென்பது அவர்களின் அபத்த புத்தியின் பகற்கனவு. எனினும் நான் இதை ஏற்கிறேன். ஆனுல் நான் இந்திய விடுதலையைப் பற்றி கனவு காண்பவன். இதை காணும்போது நான் ஒரு அருமையான துணைக் கூட்டத்தோடு இணைந்திருக்கிறேனென்பதை என் எதிரிகளுக்குச் சொல்ல விரும்புகிறேன். தவிர, உலகில் உயரிய காரியாதிகளைச் சாதித்த ஒவ்வொருவரும் கனவு கண்டவர்களாகவே தான் இருப்பார்கள். மனித சிருஷ்டியில் நெப்போலியன் ஓர் அபூர்வப் பிறவி; ஒரு மகா வீரனுங்கூட. ஆனுல், இவனை இப்படி ஆக்கியது ஆரம்பக் கனவுகள்! நான் சுதந்திரக் கனவுகளைக் காணுதிருந்தால் அடிமைச் சங்கிலி இயற்கையெனக் கருதி அதை யேற்றுக்கொண்டிருப்பேன். கனவுகளைக் காரியாம்சைக்கு மாற்றிவிட முடியுமா என்பதுதான் இப்போது தீர்க்கப்படவேண்டிய பிரச்னை. என் வரையில் நான் கொடுத்த வாக்குறுதிகளை, செயலில் உருவாக்கி உயிரோட்டத்தோடு நடமாடவிட்டிருக்கிறேன். நான் இந்தியாவை விட்டு வெளியேரியதை யாராலும் தடுக்க முடியவில்லை. கால முதிர்வில், திரும்பவும் நான் எல்லையைக் கடப்பதை எந்த சக்தி

யர்லும் தடுக்க முடியாதென்று பதினெட்டு மாதங்களுக்குமுன் நான் பிரகடனித்தேன். புளுகு—பிதற்றலில் நிகரற்ற லண்டன் கும்பலும்,டில்லி ரேடியோவும் என் பிரகட்னத்தை எள்ளிநகைக்க அன்று முயன்றன. ஆனால், இன்று நின்று விட்டன அவர்கள் அதிகார தோரணையில் அங்கீகாரம் செய்தாலும், செய்யாது போனாலும், இந்திய தேசிய ராணுவம் சொந்த எல்லையில் போரிடுகிறதென்பதை உலகம் தெரிந்திருக்கிறது. ஆனால், நாம் இன்னும் டில்லியை நாட்வில்லை என்ற குறை ஒன்றை எதிரிகள் நம்முன் நிறுத்தப் பார்க்கலாம். ஆனால், மணிப்பூருக்கும், இந்தியத் தலைநகருக்கும் இடையில் உள்ள மைல் கற்களை நான் எண்ணி வைத்திருக்கிறேன். தவிர இந்தியப் போருக்கு இரண்டு வருஷம் என்று கணித்துமிருக்கிறேன். கால நிலை நம் பக்கம் திரும்பினால், எனது கணிப்புக் காலத்திற்கு முன்பேயே விடுதலைப் போர் வெற்றியில் முடிந்தாலும் முடியலாம். ஆனால், வைசிராய் மாளிகை மீது நமது தேசியக் கொடியை ஏற்றுவதற்கு இரண்டு வருஷப் போருக்குத் தயாராக இருக்கிறோம். நமக்கு இந்திய எல்லையைக் கடப்பது எளிது; ஆனால், இந்தியாவிற்குள் பிரவேசித்த பிறகுதான் உண்மையான யுத்தம் ஆரம்பமாகும். இதை ஒரு வருஷமாகச் சொல்லி வந்திருக்கிறேன். இந்தியாவின் விடுதலைப்போராட்டம் என்றால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அழிவுப் போராட்டம் என்பதுதான் பொருள். எனவே, இப்போராட்டத்திலாவது அவர்கள் கடின போரை நடத்த வேண்டியது இயல்புதான். ஆனால், ஏகாதிபத்திய ஆட்சியின் மரண ஓலை கையெழுத்தாகிவிட்டது. இனி நிறைவேற்ற வேண்டியதுதான் பாக்கி.

தமது நினைவிற்கு மாறாக செயல்கள் இருந்தால், பிரிட்டிஷ் பிரசாரம் தந்திர முறைகளைத் தாறுமாறாகக் கையாள ஆரம்பிப்பது பகிரங்க ரகசியம். சொந்தப் போர் நிலை, தோல்வியில் அலைய ஆரம்பித்து விட்டால், எங்கோ ஓர் முனையில், அமெரிக்கரோ அன்றி ரஷ்யரோ அடைந்த சிறு சிறு வெற்றிகளை, பிரிட்டிஷ் பிரசார இயந்திரங்கள், பிரமாதமாகப் புகழ ஆரம்பித்து விடும். இதில் பயன்காண முடியாதபோனால், ரஸமான கதைகளைக்கட்டிவிட்டு, மொது மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கு முனைந்துவிடும். இந்நிலையில், இந்தியாவின் கிழக்கெல்லையில் பிரிட்டானியரின் நிலைமை அவலமாக அல்லாடியதல்லவா? அப்பொழுது அவர்களின் நளினம் செய்த லீலையைக்

க்வனியுங்கள். நாம், இந்தியாவுக்கு அனுப்பியவர்களில், பன்னிருவர் அவர்கள் சார்பில் சேர்ந்துவிட்டதாக ஒரு கதையைக் கட்டியதோடு, அவர்களில் அறுவரை நிப்பானியருக்கு எதிராக, டில்லி ரேடியோவிலிருந்து பிரசாரம் புரியவைத்தார்கள். இதனால், நாமனுப்பிய புரட்சியாளர்கள், நிப்பானியருக்குச் சாதகமாக—நிப்பானியராலேயே—அனுப்பப்பட்டவர்களென்ற மனோபாவத்தை, இந்திய மக்களிடம் நிறுத்திவிடலாமென்பது, பிரிட்டிஷாரின் எண்ணம். ஸ்தல முன்னணியில் தொண்டாற்றுவதற்காக நாமனுப்பியோரில் சிலர் துரதிர்ஷ்டவசமாகப் பிடிபட்டுவிட்டார்கள். ஆனால், பெரிய போராட்டத்தில், இச்சம்பவங்கள் இடைப்படுவது இயற்கை. என்றாலும், நமது எதிரிகளின், வட்டாரங்களில் தொண்டு செய்யும் இந்தியர்கள், இவ்விஷயத்தை ஒலி பரப்பும்படி, தங்கள் எஜமானர்களைத் தூண்டினார்களல்லவா? அதற்காக அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன். அதிக தூரத்திலுள்ள பலுசிஸ்தானத்துக்கே ஆள்களை அனுப்பும் சக்தியை நாம் பெற்றுள்ள போது இந்தியாவிற்குள் நாம் நுழைய முடியாத இடம் எதுவுமே இருக்க முடியாதென்று டில்லி வானொலி மூலம் இந்திய மக்கள் அறிந்தே இருப்பார்கள். இந்திய எதிர்ப்பு ரேடியோவிலிருந்து பேசிய ஐவரின் பேச்சும், நிப்பொன் எதிர்ப்பு மயமாக—ஒரே ரீதியில் இருந்தது நூதனமாகவே இருக்கிறது. ஆனால், பிறகு ஒன்றையும் காணோம். புதிய மோஸ்தரில் வெளிவந்த பிரசாரம், அற்பாயுளோடு அவிந்து போனதும் ஆச்சரியமாகவே இருக்கிறது. 1941-ல் ருடால்ப் ஹெஸ், ஜெர்மனியிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்றாரல்லவா? அப்பொழுது பிரிட்டிஷ் வானொலியின் ஓசை, உலகையே கலக்கியது; புதிய புதிய வார்த்தைகள், புதிய அர்த்தங்களைத் தாங்கமுடியாமல் அங்கம் சிதறின; ஆனால் அப்புறம் அனைத்தும் செத்துவிட்டன! ஒரே மௌனம். இதே முறையை இந்திய எதிர்ப்பு ரேடியோவும் கையாண்டதால், ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை. இப்பொழுது, இந்திய தேசிய ராணுவத்திலிருந்து பிரிந்தவர்களைப் பற்றி, ஒரு கட்டுக்கதையைக் கட்டும் கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. பொதுவாக, பிரசாரத்தில் பரபரப்பைக் கலப்பது கெட்டமுறை. எனவே, ஆரம்பக் குதூகலம், அந்தியில் அழுகையாக மாறிவிடுமென்பதை எதிர்ப் பிரசாரகர்களுக்கு எச்சரிக்கிறேன்.

பிரிட்டிஷ் ஜெனரல் மாண்ட்கோமரியின் வீரச்செயல்களைப் பற்றி இந்திய எதிர்ப்பு ரேடியோ இப்பொழுது பேசிவருகிறது. ஆனால், பின்வாங்குவதில் மேதைப்பட்டம் பெற்ற பீல்டு-மார்ஷல் லார்டு வேவல், ஜெனரல் ஆகின்லெக், லார்டு மௌண்ட் பாட்டன் முதலியோரைப்பற்றி ஒரு வார்த்தையாவது பேசவில்லை. இதற்காக நான் சந்தோஷிக்கிறேன். இப்போரில், பிரிட்டிஷார் தாமாகவே ஜெயித்த கட்டம் ஒன்றுமே இல்லையென்பதை, அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். ஆனால் அபிசீனியா—எரிட்ரியாவில் மாத்திரம், இத்தாலியரோடு போராடினார்கள். எனினும், ஜெனரல் மாண்ட்கோமரியின் வெற்றி முழுதும் அமெரிக்கத் துணையைப் பற்றியது. அமெரிக்கர் இதில் தலையிடாதிருந்தால், பிரிட்டானியர் வெற்றியென்ற பதத்தைக்கூட உச்சரித்திருக்கமுடியாது.

'பொம்மை ராணுவம்', 'நிப்பானியப் போருக்காக—நிப்பானியரால் பலாத்காரமாய் ஏவப்பட்ட ராணுவம்' என்ற பெயர்களால் இந்திய தேசிய ராணுவத்தை எதிரிகள் பல நாள்வரை அழைத்தார்கள். பிறகு ஓய்ந்து விட்டார்கள். தவிர, ஒரு பொம்மை ராணுவத்திடம் உயிருணர்ச்சி ஏது? உறுதி ஏது? என்ற கேள்விகள் இயற்கையாகவே எழுந்துவிட்டன. பிறகு, உடனே வேறு கற்பனை உதித்துவிட்டது. போர்ச் சாதனமும், போதிய உணவும் இல்லாத ஏழை ராணுவம் என்று இ. தே. ரா. வை உலகிற்கு அறிமுகம் செய்கிறார்கள். இந்திய விடுதலை ராணுவத்திற்கு, எதிரிகள் இடும் பெயர், இவ்வளவுதானா இன்னுமிருக்கிறதா என்று நான் ஆச்சரியப்படுகிறேன். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராணுவம், இந்திய உணவைத் தின்று கொழுத்து, இந்திய உடைகளை உடுத்திக்கொண்டு, பெரிய உருவில் காட்சியளிக்கின்றன. இதேமாதிரி நமது ராணுவம் சாதனம் பெற்றிருப்பதாக நான் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால், நம்முடையவைப் போன்ற புரட்சி ராணுவம் எந்த நிலையில் போரிட வேண்டுமென்பதை நமது ராணுவ வீரர்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்களென்பதை எதிரிகளுக்கு அறிவிக்கிறேன். பீர், ரம், பன்றி, மாட்டிறைச்சி முதலியவைகளின் உதவியால்தான் பிரிட்டிஷ் ராணுவம் போரிட முடியும். மிகக் கடிய நிலையில் நின்றுகொண்டு, உணர்ச்சியின் பலத்தால் போரிடும் பக்குவம் பெற்றது நமது ராணுவம். அயர்லாந்து, இத்தாலி, ரஷ்யா முதலிய தேசத்து புரட்சி

ரர்ணுவங்கள் இதே ரீதியில் போரிட்டுத்தான், முடிவில் வெற்றியைப் பெற்றிருக்கின்றன. அதேபோல்தான் நாமும். முடிவில் வெற்றி நமக்கே! ஆனால், முதலில் விடுதலைக்காக நாம் இரத்தத்தை கொட்டியாகவேண்டும்.

இந்திய தேசிய ராணும், மணிப்பூருக்குள் வந்துவிட்டது; ஆனால் டில்லியை அடையும் திறமை அதனிடமில்லை என்று பிரிட்டிஷார் இந்திய மக்களிடம் சொல்லிவருகிறார்கள். டில்லியை நாம் அடையும் தினத்தை நாம் வரையறுத்துக்கூறியதில்லை. அவ்விதம் கூறுவதும் விவேகமல்ல. ஆனால் நாம் டில்லியை நாடும் தேதியை, டில்லி ரேடியோதான் கற்பனை செய்து கூறுகிறது. நாம் குறித்த நாளில் டில்லியை அடையத் தவறி விட்டோமென்று கூப்பாடு போடுகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு சக்தி நிறைந்திருக்கிறது; போதாததற்கு இன்னும் பல நாட்டு சக்திகளையும் சேர்த்துக்கொண்டிருக்கிறது. இங்கிலையில்தான் கிட்டத்தட்ட ஐந்து வருஷங்கள் போரிடுகிறது. சாதித்தது என்ன? நாம் நமது சொந்த சக்திகளோடு இந்தியப்போரை நடத்துவதற்காகப் போட்ட இரண்டு வருஷ திட்டம் அதிகமா? **1946-**பிப்ரவரி-**4**-வரை இந்திய எதிர்ப்பு ரேடியோ காத்திருக்கட்டும். நாம் குறித்த நாள் விடியாத போனல் பிறகு குறைகூறலாம்.

இந்தப்போரின் வெற்றி பிரிட்டானியருக்கே யென்ற அபிப்பிராயத்தை பலப்படுத்த வேண்டும்; எங்கும் நிப்பொன் எதிர்ப்பு உணர்ச்சி இடம் பெறவேண்டும்—இந்த இரண்டு லட்சியங்களை ஊன்றிக்கொண்டுதான் பிரிட்டிஷ் பிரசாரம் நடமாடுகிறது. யுத்தத்திற்குப் பிந்திய புனருத்தாரணத்தைப் பற்றி பிரமாதமாகப் பேசுகிறார்கள். அதோடு நேச தேசங்களின் வெற்றியை மிகைப்படுத்தியும் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் கூறும் வெற்றியை அலசிப் பார்க்கிறபோது நமக்குத் தெரிவதென்ன? இத்தாலியில் நேச தேசங்கள் பெற்ற வெற்றி என்ன? அதிகப்படியான துருப்புகளையும், யுத்த சாதனங்களையும், விமானங்களையும், யுத்தக் கப்பல்களையும் அனுப்பினர்கள். ஆனால் இதே வேலையைச் செய்துகொண்டிருந்தால், இத்தாலியப் போரின் முடிவு எப்பொழுது? நேச தேசப்படைகள் பிரான்ஸைக் கடந்து ஜெர்மனிக்குள் நுழைவது எப்பொழுது! ஜெர்மனியின் எதிர்த்தாக்குதல் பிரான்ஸில் இன்னும் பூரண

ருபத்தோடு ஆரம்பிக்கவில்லை. ஏழு வருஷங்களாக அங்கு நேச தேசப்படைகள் என்னதான் செய்தன? நேச தேச நஷ்டம் கணக்குப் புத்தகத்தைக் கடந்துவிட்டது. அவர்கள் சேமித்த வெற்றித் தொகை எவ்வளவு? இத்தாலியிலும், பிரான்ஸிலும் நேச தேசங்களின் முன்னேற்றம் முழுதும், நமக்கு நன்மை யென்பது இந்தியர்களின் அபிப்பிராயம். பிரிட்டிஷார் கூறும் வெற்றிகள் நிஜ வெற்றிகளாகவே இருந் தாலும், அன்றி எதிர்காலத்தில் வெற்றி பெற்றாலும் அவர் களின் வலிமை, அபாய நிலைமைக்கு வந்து விடுவதைத் தடுக்கவே முடியாது. முடிவில் நேச நாடுகள் பிரான் ஸிலிருந்து பின்னேட்டப்பட்டு, இத்தாலியில் சிக்கிக்கொள் வதும் இயன்ற காரியமே. முதலில் ஐரோப்பிய போரை முடித்துக் கொண்டு, பிறகு நிப்பொனை முறிக்க கிழக்காசியாவுக்குத் திரும்பு வதாகப் பறையடிக்கும் வார்த்தைகளெல்லாம், அறியாப் பிள்ளைகள் காட்டும் பூச்சாண்டியே யன்றி, நடக்கக்கூடிய காரிய மல்ல. ஐரோப்பியப் போரில், ஆங்கிலோ-அமெரிக்கர் வெற்றி பெறமுடியாதென்று நான் எனது முந்திய பேச்சுகளில் சொல்லி விட்டேன். அப்படி அவர்கள் வெற்றியுடன் வெளிவந்தாலும், கிழக்காசியாவுக்கு வந்து, நிப்பனுக்கு எதிரில் நிற்பதென்பது நினைக்கவும் முடியாத விஷயம். அவர்களின் வலிமை அவ்வளவு வரை நிலைப்பதற்கு ஹேதுவில்லை. தவிர, நேச தேசங்களின் யுத்த சாதனஉற்பத்திகளும், ஆள் பலமும் அளவின் எல்லையில் நிற்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, இன்றைய நிலையைக் கவனிக்கிறபோது, நேச தேசங்களில் இருள் கவிந்திருப்பது நன்றாய்த் தெரிகிறது.

நான் மணிப்பூரைப்பற்றி விவாதித்தபோது, ஒரு விஷயத் தைக் குறிப்பிட மறந்துவிட்டேன். மணிப்பூரின் எளிய மஹா ராஜாவின் கதி என்ன? இன்று அவரின் இருப்பிடம் எங்கே? மஹாராஜாவும், அவருடைய குடும்பமும் எங்கே, எந்த நிலையில் வாழ்கிறார்கள்? எத்தனையோ மஹாராஜாக்களும், நவாப்பு களும், தேசம் முழுதும் திரிந்தலைந்து, ராணுவத்திற்கு ஆள் திரட்டும்போது, மணிப்பூர் மஹாராஜா மாத்திரம், யுத்த ஆரம் பத்திலிருந்து மௌனமாக இருப்பது ஏன்? காரணம் முழுதும் எனக்குத் தெரியும். மணிப்பூர் மஹாராஜாவும், அவருடைய பிரஜைகளும், பிரிட்டிஷாரோடு எவ்வகையிலும் தொடர்பு வைத்துக்கொள்ள மாட்டார்கள். மணிப்பூர் மக்களும்,

கோஹிமா பகுதியிலுள்ள நாகா மலே ஜாதியாரும், பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடியும் வந்துள்ளனர். இதனுல்தான் அவர்கள் நமது ராணுவத்துடன் ஒன்றுபட்டு உதவியும் செய்து வந்திருக்கின்றனர்.

சுதேச அன்பர்களே !

ஜப்பானியருக்கு எதிராக ஓயாமல் நடக்கும் பிரசாரத்தை கடந்த இரண்டரை வருஷமாக நீங்கள் கேட்டும், பார்த்தும் வருகிறீர்கள். ஆனுல், இன்னும் ஒரு கேள்வி பதில் பெருமலேயே தங்கி நிற்கிறது. இன்று நமது எதிரிகளோடு எதிராடும் நமக்கு துணைவரும் ஒரு நாடு ஆசியா முழுதிலும், நிப்பொனைத் தவிர வேருென்று உண்டா? சீன, ரஷியா, இன்னுமிதர நாடுகளிடம் நாம் காட்டும் அநுதாபம் சரிதான். ஆனுல், நமது அநுதாபம் முதலில் நம்மிடம் பரிணமிக்க வேண்டும். நமது விடுதலேக்கு நாம் முதலில் செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும். உலகில் பல நாடுகளின் சக்திகளேயும் பெற்று நிற்கும் ஒரு வலிமை மிக்க சாம்ராஜயத்தை எதிர்த்து, விடுதலேப் போரை நடத்தும் நமக்குப் பூரண உதவி யளிக்கும் நாடு, இவ்வுலகில் எங்காவது இருக்கிறதா? இந்தக் கேள்வியை, நாம் நம்மையே கேட்டுக்கொள்ளவேண்டும். நமது விடுதலேப் போருக்கு, பக்கத்தில் நின்று முழு மனதோடு உதவி செய்யும் நாடு வேருென்றுமே யில்லே. இது கிரியாம்சையில், நமது அநுபவத்தில் காணும் நடப்பு. 1930-ம் வருஷத்திய நிப்பொனேப் பற்றி நாம் சிந்திக்கத் தேவை யில்லே. நமது எதிரிகளோடு போரிடும் இன்றைய நிப்பொனேப் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும். நமது எதிரிகளின் பலத்தைத் தேய்த்து, நமது காரியத்தைச் சுலபமாக்கி, நமது தற்காலிக சர்க்காரை அங்கீகரித்து, இந்தியாவின் மீது கொண்டுள்ள நல்லெண்ணத்தை செயலில் காட்டும் இன்றைய நிப்பொனேப்பற்றி நாம் கவனிக்க வேண்டும். இன்றைய நிப்பொனேயும், அகில கிழக்காசியாவின் மீது அது கொண்டுள்ள புதிய கொள்கையையும், இங்குள்ள முப்பது லட்சம் இந்தியர்களும் நேரில் கண்டு, நவ நிப்பொனின் அன்பில் மூழ்கி உள்ளம் பூரிக்கிருர்கள். இதனுல்தான், நமது எதிரிகள் சாயும் வரை போரிட, நிப்பொனுடன் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்ற உறுதி நம்மிடம் ஊறி, நிறைகிறது. இந்தியாவிற்குள் நடக்கும் போர், இனி நிப்பொனுடையதல்ல. இந்தி

யாவின் சொந்த விடுதலைப் போர்! கிழக்காசியாவிலுள்ள நாம், சுயநலமற்று — உண்மையுடன் — பாத்யதைப் பற்றுடன் — செயலில் இறங்கினுல், வெற்றியுடன் வெளியேறுவோமென்பதில் சந்தேகமே இல்லை. நியதியான லட்சியத்தில், உண்மைப் பற்று கால் கோலிவிட்டால், ஏகாதிபத்திய சக்திகளெல்லாம் நாளடைவில் ஒவ்வொன்ருய், கடைசி மூச்சை விட்டுவிட்டுப் போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடும். நாங்கள் சண்டை யிட்டு வெற்றி காண உறுதி பூண்டுவிட்டோம். எங்கள் கடமையை எளிதாக்க முன் வந்து உதவுங்கள்.

ஜேய் ஹிந்த்!

அனுபந்தம் 20

"பொன் எழுத்துக்களால் பெயர் பொறிக்கப்படும்"

(மகாத்மாஜிக்கு நேத்தாஜி புகழ்மாலை)

1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந்தேதி பாங்காக்கிலிருந்து நேத்தாஜி செய்த ரேடியோ பிரசங்கம் :

"உலகெங்கும் இன்று இந்தியர் தங்களது மகத்தான தலைவர் மகாத்மா காந்தியின் 75-வது பிறந்த தினத்தை கொண்டாடுகிருர்கள். நாம் கௌரவிக்கிறவரின், அன்போடும் மரியாதை யோடும் நாம் வணக்கம் தெரிவிக்கிறவரின் வாழ்க்கை—அனுபவங்களை இதைப்போல சமயங்களில் ஞாபகப்படுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனுல் மகாத்மா காந்தியின் வாழ்க்கை, சாதனைகள் எல்லாம் இந்தியருக்கு நன்ருகத் தெரியுமாகையால், அவருடைய வாழ்க்கை உண்மைகளை நான் எடுத்துக் கூறுவது அனுவசியம். ஆனுல் இந்தியர்வின் சுயராஜ்யப் போரில் மகாத்மா வகிக்கும் ஸ்தானத்தைப்பற்றி மாத்திரம் நான் பேச விரும்புகிறேன். இந்தியாவுக்கும், இந்திய சுதந்திர லட்சியத்திற்காகவும் அவரது சேவை தனிப்பெருமை வாய்ந்தது; இணையற்றது. நமது தேசீய சரித்திரத்தில் சாசுவதமாக அவரது பெயர் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும்.

இந்திய சரித்திரத்தில் மகாத்மா காந்தியின் ஸ்தானத்தை சரியர்க் மதிப்பிடுவதற்காக, இந்தியாவை பிரிட்டிஷார் வென்ற வரலாற்றை சுருக்கமாக நம் கண் முன்னே கொண்டு நிறுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷார் காலடிவைத்த சமயத்தில், பாலும், தேனும் பிரவாகமாக இருந்த தேசமாக இந்நாடு இருந்ததென்பதும், வறுமையால் பீடிக்கப் பட்டிருந்த பிரிட்டிஷாரை இந்தியாவின் செல்வமே கடல்கடந்து வருமாறுச் செய்ததென்பதும் உங்களுக்குத் தெரியும். இந்தியர் அரசியல் துறையில் அடிமையாக்கப்பட்டு, பொருளாதாரத்துறையில் சுரண்டப்பட்டதின் விளைவாக இன்று பசியாலும் பட்டினியாலும் மாண்டு போவதைப் பார்க்கிறோம். ஒரு காலத்தில் ஏழையாக இருந்த பிரிட்டிஷார், இந்தியாவின் செல்வத்தாலும் சாதனங்களாலும் இப்பொழுது கொழுத்து, பணக்காரர்களாகியிருக்கிறார்கள். இழந்த சுதந்திரத்தை மீட்பதே, பல்வேறு கஷ்டங்களுக்குப் பரிகாரமென்பதை வறுமையின் மூலமும், துன்பங்கள் மூலமும், அவமதிப்புகள் மூலமும் அடக்குமுறைகளுக்கு ஆளானதின் மூலமும் இப்பொழுது இந்தியர் உணர்ந்துள்ளார்கள்.

இந்தியாவை எந்த முறைகளில் பிரிட்டிஷார் வென்றார்கள் என்பதை கவனிப்போம். இந்திய ஜனத்தொகை பூராவையும் எதிர்த்து நாட்டின் எந்தப் பகுதியிலும் சண்டை போட அவர்கள் முயற்சித்ததே கிடையாது. ஒரேயடியாக இந்தியா பூராவையும் வென்று ஸ்வீகரித்துக் கொள்ளவும் அவர்கள் முயற்சித்தது கிடையாது. இதற்கு மாறாக அவர்கள் ஜனங்களின் ஒரு பகுதியை லஞ்சம் கொடுத்து தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ளுவர்கள். பிற்பாடே ராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பார்கள். வங்காளத்தில் இவ்வாறு தான் நடந்தது. அங்கே சேனாபதி மீர் ஜாபரை வங்க சிம்மாசனத்தில் ஏற்றுவதாகச் சொல்லி அவரை தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டார்கள் பிரிட்டிஷார். அந்த சமயத்தில் இந்தியாவில் மதப்பிரச்னையோ அல்லது வகுப்புப் பிரச்னையோ கிடையாது. வங்காளத்தின் கடைசி சுதந்திர மன்னராகிய ஸிராஜி-உத்-தௌலா என்ற முஸ்லிம், மற்றொரு முஸ்லிமாகிய தனது சேனாபதியால் காட்டிக் கொடுக்கப்பட்டார். மோகன்லால் என்ற ஹிந்து கமாண்டர் தான் ஸிராஜ்-உத்-தௌலாவுக்கு தோளோடு தோள் நின்று கடைசிவரை போர் புரிந்தார். இந்திய சரித்திரத்தில் உள்ள

இந்த சம்பவத்தின் படிப்பினை என்ன? துரோகத்தை தடுக்கவும் தண்டிக்கவும் காலக்ரமத்தில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படா விட்டால் எந்த தேசமும் தனது சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. துர்ப்பாக்கிய வசதியாக, வங்க நிகழ்ச்சிகள் தக்க சமயத்தில் இந்திய மக்களின் கண்களைத் திறக்கவில்லை. ஸிராஜ்-உத்-தௌலாவின் வீழ்ச்சிக்குப் பிற்பாடுகூட, பிரிட்டிஷாருக்கு எதிராக இந்திய மக்கள் ஐக்கிய முன்னணியாக இருந்திருந்தால், விரும்பப்படாத அந்நியரை இந்திய மண்ணிலிருந்து சுலபமாக விரட்டியிருக்கலாம். இந்திய மக்கள் தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக போராடவில்லை என்று யாரும் சொல்லமுடியாது—ஆனால் அவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டுப் போராடவில்லை. வங்காளத்தை பிரிட்டிஷார் தாக்கியபோது அவர்களை யாரும் பின்னாலிருந்து தாக்கவில்லை. பிற்பாடு தென் இந்தியாவில் திப்பு சுல்தானை எதிர்த்து பிரிட்டிஷர் போர் புரிந்தபோது, திப்பு சுல்தானின் உதவிக்கு மத்திய இந்தியாவிலிருந்து மராட்டியர்களோ, வட இந்தியாவிலிருந்து சீக்கியர்களோ வரவில்லை. வங்காளத்தின் வீழ்ச்சிக்குப் பிற்பாடுகூட, தெற்கில் திப்பு சுல்தான், மத்திய இந்தியாவில் மராட்டியர்கள், வடக்கே சீக்கியர் ஆகியோர் ஒன்றுபட்டிருந்தால் பிரிட்டிஷாரை தோற்கடித்திருக்கலாம். நம் துரதிருஷ்டவசமாக அவர்கள் அவ்வாறு ஒன்றுபடவில்லை. எனவே ஒரு சமயத்தில் இந்தியாவின் ஒரு பகுதியைத் தாக்குவதும், கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் ஆட்சியை நாடு முழுவதிலும் பரப்புவதும் பிரிட்டிஷாருக்கு சாத்தியமாயிற்று. இந்திய சரித்திரத்தின் மனோவேதனை நிறைந்த இந்த அத்யாயத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் இது தான்: எதிரிக்கு முன்னால் இந்திய மக்கள் ஒன்றுபட்டு நிற்காவிடில் சுயராஜ்யத்தையடைய முடியாது; சுயராஜ்யத்தையடைந்தால் கூட, அதை பாதுகாத்துக் கொள்ளமுடியாது.

இந்தியரின் கண்கள் திறக்க வெகுகாலம் பிடித்தது. இறுதியாக, **1857**-ல் அவர்கள் விழித்துக் கொண்டார்கள்; நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒன்றுபட்டு, உறுதியுடன் தாக்கினார்கள். பிரிட்டிஷ் சரித்திராசியர்களால் "சிப்பாய்க் கலகம்" என்றும் "முதல் சுதந்திர யுத்தம்" என்று நம்மாலும் அழைக்கப்படும் அந்த சண்டையின் ஆரம்பத்தில் பிரிட்டிஷார் சுலபமாக தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் நமது இறுதித் தோல்விக்கு

இரண்டு காரணங்கள் உண்டு. இந்தியாவின் எல்லா பாகங்களும் சண்டையில் சேரவில்லை. இதைவிட முக்கிய காரணம், எதிரிப்படைகளின் கமாண்டர்களுக்குத் தெரிந்திருந்த நுணுக்க சாமர்த்தியத்தைவிட் மட்டமாகவே நமது கமாண்டர்களுக்குத் தெரிந்திருந்தது. 18-வது, 19-வது நூற்றுண்டுகளில் நவீனப் போர்க்கலையில் ஐரோப்பா பெரிதும் முன்னேறி யிருப்பதும், காலத்திற்கேற்ற முன்னேற்றத்தை இந்திய மக்கள் அடையாததும் மறுக்கமுடியாத உண்மையாகும். எனவே, இறுதியில் பிரிட்டிஷ் படைகளுடன் சண்டை ஆரம்பமானபோது, நமது ராணுவத் தலைவர்கள் திறமைக் குறைவாக இருந்தார்கள்.

வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும், குறிப்பாக போராட்டக்கலையில் இதர நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்துடன் இந்திய மக்கள் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே, 1857-ம் வருஷத் தோல்வியின் படிப்பினையாகும்.

1857-ல் இந்தியர் தோல்வியடைந்த பிறகு பிரிட்டிஷாரால் நிராயுதபாணிகளாக்கப்பட்டனர். அந்த சமயத்தில் இதற்கு இந்தியர் இசைந்தது மிகப் பெரிய தவருகும். அந்த சமயத்தில் இந்தியர் நிராயுதபாணிகளாக்கப் படாதிருந்தால், ஆயுதத்தை பறிகொடுத்து கதியற்ற நிலையை அடையாதிருந்தால், வெகு குறைந்த காலத்தில் மீண்டும் ஒரு முறை அவர்கள் சுதந்திரத்திற்காக போர் நடத்தி யிருக்கலாம். ஆயுதமில்லாத இந்தியர் ஆசியாவில் வீழ்ச்சியுற்று இருந்தார்கள். மனச்சோர்வுடன், சுமார் 30 வருஷகாலம் இருந்தார்கள். கடைசியாக, 1885-ல் இந்திய தேசீய காங்கிரஸின் உதயத்தின் மூலம் அரசியல் விழிப்பு ஏற்பட்டது. காங்கிரஸ் ஆரம்பத்தில் மிதவாத ஸ்தாபனமாகவே இருந்தது. பரிபூர்ண சுயராஜ்யம் கோரவும், பிரிட்டிஷ் தொடர்பு கூடாது என்று சொல்லவும் காங்கிரஸ் தலைவர்கள் ஆரம்பத்தில் அஞ்சினர். இருபதே வருஷகாலத்தில் காங்கிரசுக்கு புத்துயிர் ஊட்டப்பட்டது. 1905-ல் அரவிந்த கோஷ் போன்ற தலைவர்கள் இந்தியாவுக்கு பூரண சுதந்திரத்தைக் கோரினர்கள். இந்த கோரிக்கையுடன், சுதந்திரம் அடைய இன்னும் தீவிர முறைகளும் கையாளப்பட்டன. வங்க மாகாணப் பிரிவினைக்கு எதிர்த்தர்க்குதலாக அந்த மாகாணத்தில் பிரிட்டிஷ் சாமான்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. இந்த பகிஷ்கார முறை கொஞ்சம் கொஞ்சமாக இந்தியா முழுவதிலும் பர

வியது. பொருளாதார பகிஷ்காரத்துடன் திருப்தியடையாத இளைஞர்கள், அடுத்தபடியாக வெடிகுண்டு,ரிவால்வர் முறையை மேற்கொண்டார்கள். புரட்சிகர நாசவேலையை கற்பதற்காக அநேக இளைஞர் இந்தியாவுக்கு வெளியில் பாரிஸுக்கும், மற்றும் பல ஐரோப்பிய நகரங்களுக்கும் அனுப்பப்பட்டார்கள். இந்திய இளைஞர் எல்லாருமே, உலகின் இதர பாகங்களில், குறிப்பாக ரஷ்யாவிலும் அயர்லாந்திலும், கையாளப்பட்ட புரட்சிகர முறைகளை ஆராய ஆரம்பித்தார்கள்.

சென்ற மகாயுத்தத்தின்போது, நேர்மையற்ற பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் பொய்ப்புரட்டு வாக்குறுதிகளால் இந்தியத் தலைவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். இதன் விளைவாக பிரிட்டனுக்கு சேவை புரிவதற்காகவும், இந்தியாவின் அடிமைச் சங்கிலியை பலப்படுத்துவதற்காகவும் இந்தியாவின் ரத்தமும் பணமும் கொட்டப்பட்டன. ஆனால் பிரிட்டனின் ஏமாற்றுதலுக்கு ஆளாக மறுத்த இந்திய புரட்சிக்காரர்கள், நாட்டில் புரட்சியை உண்டாக்க தங்களால் இயன்றதை யெல்லாம் செய்து, வாடாப் புகழ்மாலையைப் பெற்றனர். ஆனால் இந்தியாவின் துரதிஷ்டம், அவர்கள் வெற்றி பெறவில்லை.

சென்ற உலக மகாயுத்தம் முடிவடைந்ததும், ஏற்கனவே வாக்களிக்கப்பட்ட சுதந்திரத்தை தருமாறு இந்தியத் தலைவர்கள் கேட்டபோதுதான், பிரிட்டிஷ் மக்களாலும் ராஜீயவாதிகளாலும் தாங்கள் ஏமாற்றப்படுவதை முதல் முதலாக உணர்ந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைக்குப் பதில், ரௌலத் சட்டம் என்ற கொடூர சட்டத்தின் மூலம் கிடைத்தது. கொஞ்சநஞ்சமிருந்த சுதந்திரத்தையும் அந்தச்சட்டம் பறித்து விட்டது.

அந்தச்சட்டத்தை அவர்கள் கண்டித்தும், நடந்தது ஜாலியன் வாலாபாக் படுகொலை. உலக யுத்தத்தின் போது இந்திய மக்கள் செய்த தியாகங்களுக்கெல்லாம் இரண்டு பரிசுகள் கிடைத்தன. ஒன்று ரௌத் சட்டம்; மற்றொன்று ஜாலியன் வாலாபாக் படுகொலை.

1919-ல் மேற்கண்ட துக்ககரமான சம்பவங்கள் நடைபெற்ற பிறகு, இந்திய மக்கள் தற்காலிகமாக பிரமித்து, ஸ்தம்பித்து, என்ன செய்வதென்று தெரியாதிருந்தார்கள். சுதந்திரத்தைப் பெற நடைபெற்ற முயற்சிகள் எல்லாவற்றையும் பிரிட்டிஷரும் அவர்களுடைய ராணுவப் படையினரும் ஈவு இரக்க

மின்றி நசுக்கி விட்டார்கள். சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சி, பிரிட்டிஷ் சாமான்கள் பகிஷ்காரம், ஆயுதப் புரட்சி—இவை எல்லாவற்ருலும் சுதந்திரத்தைக் கொண்டுவர முடியவில்லே. நம்பிக்கை கொஞ்சம்கூட இல்லே. இந்தியரின் உள்ளத்திலே ஆத்திரம் பொங்கிக்கொண்டிருந்தது. போராட்டத்திற்காக புதிய முறையையும் புதிய ஆயுதத்தையும் இருளில் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்பேர்ப்பட்ட தருணத்தில்தான் மகாத்மா காந்தி தமது ஒத்துழையாமை அல்லது சத்தியாக்ர ஹம் அல்லது சட்டமறுப்பு என்ற நவீன முறையுடன் அரசியல் வானில் தலேதூக்கினுர். சுயராஜ்யப் பாதையைக் காண்பிக்க கடவுளே அவரை அனுப்பியது போல இருந்தது. உடனடியாகவும், தானுகவும் தேசம் பூராவும் அவரது கொடியின்கீழ் திரண்டது. இந்தியா காப்பாற்றப் பட்டது. ஒவ்வொரு இந்தியனின் முகத்திலும் இப்பொழுது நம்பிக்கை—வெற்றி நிச்சய ஒளி தோன்றியது. இறுதி வெற்றி நிச்சயம்! உத்தரவாதம் கிடைத்துவிட்டது!!

இருபது வருஷ காலமாகவும், அதற்கு மேலாகவும் கூட காந்திஜி இந்தியாவின் விமோசனத்திற்காக உழைத்து வருகிருர். அவருடன் இந்திய மக்களும் உழைத்து வருகிருர்கள். 1920-ல் அவர் புதிய போராட்ட ஆயுதத்துடன் முன் வந்திராவிட்டால், ஒரு வேளே இந்தியா இப்பொழுதும் வீழ்ச்சி நிலேயிலேயே இருந்திருக்கக்கூடும் என்று கூறுவது மிகையாகாது. இந்தியாவுக்குஅவர் செய்துள்ள சேவைகள் தனிப் பெருமை வாய்ந்ததாகவும், இணேயற்றும் விளங்குகின்றன. இதேபோல சந்தர்ப்பங்களில் வேறு எந்த மனிதனும் ஒரே ஜீவியகாலத்தில் இதைவிட அதிகமாக செய்திருக்க முடியாது. சரித்திர பூர்வ சரிநிகரில் கிட்டத்தட்ட இவரது நிலேயில் இருந்தவர் முஸ்தாபா கமால் என்று சொல்லலாம். சென்ற மகா யுத்தத்தில் துருக்கி தோற்றவுடன் அந்நாட்டைக் காப்பாற்றியவர் அவர்தான். அவரை அப்பொழுது "காஜி" யாக துருக்கி மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள்.

1920-ம் வருஷத்திலிருந்து மகாத்மா காந்தியிடமிருந்து இரண்டு விஷயங்களே இந்தியர் கற்றுர்கள். சுதந்திரம் அடைய இரண்டும் பூர்வாங்க அத்யாவசியமாகும். அவர்கள் முதலாவதாக, தேசிய சுயமதிப்பையும், தன்னம்பிக்கையும் அடைந்

தார்கள். இதன் விளைவாக இப்பொழுது அவர்களின் உள்ளத்தில் புரட்சிக் கனல் கொழுந்துவிட்டு எரிகிறது. இரண்டாவதாக, இந்தியாவின் மூலை முடுக்குகளிளெல்லாம் உள்ள கிராமங்களில் கூட வியாபித்திருக்கும் அகில இந்திய ஸ்தாபனம் ஒன்றை அடைந்திருக்கிறார்கள். இப்பொழுது எல்லா இந்தியரின் உள்ளத்தினுள்ளேயும் சுதந்திர உபதேசம் ஊடுருவிச் சென்றுள்ளதாலும், தேசம் பூராவின் பிரதிநிதித்வ அரசியல் ஸ்தாபனம் ஒன்று அவர்களுக்கு இருப்பதாலும், இறுதி சுதந்திர போர்ரட்டத்திற்கு—கடைசி சுயராஜ்ய யுத்தத்திற்கு, இப்பொழுது அரங்கம் தயாரர்கிவிட்டது.

'விடுதலைப் போர்ராட்டம் நடக்கும் பின்னே, ஆத்மீக விழிப்பு ஏற்படும் முன்னே' என்பது இந்தியாவில் மாத்திரமே நிகழ்ந்ததாக எண்ணவேண்டாம். இத்தாலியில் "ரிஸ்ஒரிஜிமெண்டோ" இயக்கத்தில் இத்தாலிய மக்களுக்கு ஆத்மீக ஆவேசத்தை முதல்முதலில் உண்டாக்கியவர் மாஜினி. அவருக்குப் பிற்பாடு போர் வீரரும், சூரப்புலியுமாகிய கரிபால்டி தோன்றினார். இவர் 1000 தொண்டர்களுக்குத் தலைமை தாங்கி ரோம் நோக்கி முன்னேறிப் பிரவேசித்தார். நவீன அயர்லாந்திலும் 1906-ல் ஸின் பின் கட்சி தோன்றி, ஐரிஷ் மக்களுக்கு ஒரு வேலைத் திட்டத்தைத் தந்தது. இந்த திட்டம் மகாத்மா காந்தியின் 1920-ம் வருஷ ஒத்துழையாமை வேலைத்திட்டத்தைப் போன்றது. ஸின் பின் கட்சி தோன்றியதற்கு 10 வருஷ காலத்திற்குப் பிறகு, அதாவது 1916-ம் வருஷம், அயர்லாந்தில் முதல்முதலாக ஆயுதந் தாங்கிய புரட்சி நடைபெற்றது.

சுதந்திரத்திற்கு நேராகச் செல்லும் பாதையில் மகாத்மாஜி நமது கால்களை உறுதியாக ஊன்ற வைத்திருக்கிறார். அவரும் இதர தலைவர்களும் இப்பொழுது சிறைச்சாலைகளில் வாடிவதங்குகிறார்கள். எனவே, மகாத்மா காந்தி ஆரம்பித்த வேலை, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அவரது தேசத்தினரால் பூர்த்தி செய்யப்படவேண்டும். இறுதிப் போருக்கு அவசியமான எல்லாம் தாய்நாட்டிலுள்ள இந்தியரிடம் இருக்கின்றன. ஆனால் அவர்களிடம் ஒன்றே ஒன்றுதான் இல்லை—விடுதலை ராணுவமில்லை. அந்த விடுதலை ராணுவம், நாட்டுக்கு வெளியிலிருந்து வந்தாகவேண்டும்; வெளியிலிருந்துதான் வர முடியும்.

1920-ல் நாகபுரியில் நடைபெற்ற வருஷாந்திர காங்கிரஸ் மகாநாட்டின் மூலம் இந்தியாவுக்கு ஒத்துழையாமைத் திட்டத்தை மகாத்மா அளிக்கையில் பின்வருமாறு கூறியிருப்பதை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

“இந்தியாவிடம் இப்பொழுது வாள் இருக்குமானால் அதை உறுவியிருக்கும்.”

மகாத்மாஜி மேற்கொண்டு வாதம் செய்கையில், ஆயுதம் தாங்கிய புரட்சி சாத்தியமில்லாததால், தேசத்தின் முன் உள்ள ஒரே மாற்று, ஒத்துழையாமை அல்லது சத்தியாக்கிரஹம்தான் என்றார். அதற்குப் பிறகு காலம் மாறிவிட்டது. இப்பொழுது இந்திய மக்கள் வாளை உறுவுவது சாத்தியம். இந்தியாவின் விடுதலை ராணுவம் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும், நாளுக்கு நாள் அதன் பலம் அதிகமாகிவருவது குறித்தும் நாம் இப்பொழுது மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். நாம் ஏக காலத்தில் இரண்டு வேலைகளைச் செய்யவேண்டும். இந்த ராணுவத்திற்கு பயிற்சியை பூர்த்தி செய்து, கூடிய சீக்கிரத்தில் இதை போர்க்களத்திற்கு அனுப்பவேண்டும். அதே சமயத்தில், யுத்தகளத்திலுள்ள ராணுவத்திற்கு புதிய பலத்தை அளித்துக்கொண்டே வருவதற்காக புதிய ராணுவத்தை அமைக்கவேண்டும். இறுதி சுதந்திரப் போர் நீண்ட காலத்திற்கும், கடினமாகவும் நடைபெறும். இந்தியாவிலுள்ள கடைசி பிரிட்டிஷார் சிறையில் தள்ளப்படும் வரை அல்லது நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் வரை போராட்டம் நடந்துகொண்டேயிருக்கவேண்டும். நமது விடுதலை ராணுவம்—ஆஜாத் ஹிந்த் பௌஜ்—இந்திய மண்ணில் கால் வைத்தவுடன் இந்தியா முழுவதையும் பிரிட்டிஷ் பிடிப்பிலிருந்து விடுவிக்க குறைந்த பட்சத்தில் பன்னிரண்டு மாதங்கள் பிடிக்கும்; அதற்கு அதிகமாகக்கூட ஆகலாம் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன். எனவே நாம் கச்சத்தைக் கட்டி, நீண்டகால, கடுமையான போராட்டத்திற்கு தயாராவோமாக.

ஜேய் ஹிந்த் !

No. 109257

அனுபந்தம் 21

'நேத்தாஜீயின் திறமை பிறகே தெரிந்தது'

(மகாத்மாஜி பாராட்டு)

"ஸ்ரீ சுபாஷ் போஸுடன் எனது உறவுகள் எப்பொழுதுமே பரிசுத்தமாகவும், நன்றாகவும் இருந்து வந்திருக்கிறது. தியாகம் செய்ய அவருக்குள்ள சக்தி எனக்கு முன்பே தெரியும். ஆனால் அவருடைய சாமர்த்தியம், போர் வீரத்துவம், பலம் திரட்டும் திறமை ஆகியவை அவர் இந்தியாவிலிருந்து தப்பிய பிறகே எனக்கு பூர்ணமாகத் தெரிந்தது"—காந்திஜி (*15—1—46*).

ஜெய் ஹிந்த்!

---

130 chws